களம்

பதிப்பாசிரியர்

முனைவர் சி. சுந்தரேசன்

ஆ. கணேஸ்வரி

சு. தமிழ்வேலு

நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

களம்

(நாட்டுப்புறவியல் ஆய்வுகள்)

மாண்புமிகு துணைவேந்தர் அவர்களுக்கு
அன்புடன் வழங்கி
மகிழும்
26.3.04

பதிப்பாசிரியர்

முனைவர் சி. சுந்தரேசன்

ஆ. கணேஸ்வரி

சு. தமிழ்வேலு

நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

நவம்பர் – 1997

* களம்

* நாட்டுப்புறவியல் ஆய்வுகள்

* நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005.

* முதற்பதிப்பு: 1997 நவம்பர்த்திங்கள்

* பக்கங்கள்: 12+200

* விலை உருபாய் 60

* அச்சாக்கம்:
சபாநாயகம் அச்சகம்
கீழைத்தேர் வீதி,
சிதம்பரம் – 608 001

முனைவர் கி. கருணாகரன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 5

அணிந்துரை

தமிழகத்தில் நாட்டுப்புறவியல் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாட்டுப்புறவியல் ஆய்வு வீறு கொண்டுள்ளது. ஆய்வுகளில் மதிப்பு ஏற்பட்டதுடன் பல்கலைக்கழகங்களிலும் பாடப் பொருளாயும், ஆய்வுப் பொருளாயும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டுப்புறவியல் ஐம்பதுகளில் முகிழ்ந்து அறுபதுகளில் அரும்பி எழுபதுகளில் மொட்டாகி எண்பதுகளில் மலர்ந்து மலராகி மணம் பரப்பி வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக நாட்டுப்புறவியல் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளதோடு களங்களும் விரிந்துள்ளன. ஆய்வுகளும் அடிப்படை நூல்களும் பெருகியுள்ளன. இந்த நிலையில் நாட்டுப்புற ஆய்வாளர்களால் தொகுக்கப்பட்ட களம்-3 ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூல் பல்துறை இணைந்த ஆய்வின் புதிய தளத்தைப் புலப்படுத்துகிறது.

இத்தொகுப்பில் 29 கட்டுரைகள் அடங்கியுள்ளன. தமிழகத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வின் போக்கு எப்படியுள்ளது என்பதை இத்தொகுப்பு நூல் நன்கு புலப்படுத்துகிறது. நாட்டுப் புறவியல் கட்டுரைகளில் நாட்டுப்புறப் பாடல்கள், விடுகதை, நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறத் தெய்வங்கள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இத்தலைப்புகளில் நாட்டுப் புற மக்களின் நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் கலந்து வருவதையும் காண்கிறோம். ஊர்த்தெய்வ வழிபாட்டுக் கட்டுரைகள் கிராமங்களில் அமைந்துள்ள பக்தி முறைகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துகின்றது. நாட்டுப்புறவியலின் பல்வேறு அம்சங்களை விளக்கும் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப்புறக்களம் பரந்து பட்டது போல நாட்டுப்புற ஆய்வு நூலாகிய இக்களமும் ஆய்வு நிலையில் வளர்ந்து நிற்கிறது.

தமிழக நாட்டுப்புற ஆய்வின் எதிர்காலம் இவர்கள் கையில்தான் உள்ளது. இந்தக் களம் ஆய்வாளர்களுக்கு ஊக்கமூட்ட களம் விரிவுபட அனைவரும் உழைக்க வேண்டும். தேர்ந்த புலமை, தெளிவான சிந்தனை, சரியான உழைப்பு, கருதியதை முடிக்கும் ஆற்றல் ஆகியன, நாம் எப்போதும் பின்பற்ற வேண்டிய பண்பு களாகும்.

நாட்டுப்புறவியல் பன்முக நோக்கில் வளர வேண்டும் என எண்ணுபவன். நானே, நாட்டுப்புறவியல் துறையில் நூல் எழுதி யுள்ளேன். இந்நிலையில் இவ் எண்ணத்திற்கு விதையாகவும், வேராகவும் இந்நூல் நின்று சில, பல, கனிகளையும் தந்து நிற்கும் என நம்புகிறேன்.

புத்தம் புதிய ஆய்வு எண்ணங்களுக்கும், ஆராய்ச்சி உணர்வுகளுக்கும் தமிழகத்திலே என்றும் வரவேற்பு உண்டு. இவ்வாய்வு நூலைத் தமிழகம் வரவேற்பதன் மூலம் இத்தகைய நூல்கள் வெளிவர வாய்ப்புகள் இன்னும் பெருகும். புலமையும் ஆற்றலும் சலியாத உழைப்பும் கொண்ட இவ்வாய்வாளர்கள் பல்வகைச் சிறப்புகள் அடைவர் என்பது எனது நம்பிக்கை. இவர்களது பணி மேலும் மேலும் சிறக்க என் இதயக்கனிந்த வாழ்த்துக்கள்.

நாள்: 10—11—97 கி. கருணாகரன்

பேரா. சரசுவதி வேணுகோபால்
தலைவர், நாட்டுப்புறவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

வாழ்த்துரை

முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டுள்ள, முனைவர் பட்டம் பெற்றுள்ள இளைய நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களின் போற்றுதலுக்குரிய ஒரு கூட்டுமுயற்சியே 'களம்' என்னும் அமைப்பு. நிதி திரட்டிக் கருத்தரங்கு நடத்தி அதற்குப் பின்னர் கட்டுரைகளை அச்சு வடிவில் கொண்டுவரக்கூடிய மனத்திண்மை யுடைய இவ்விளைஞர்களை மனமுவந்து பாராட்டுகிறேன்.

நாட்டுப்புறக் கைவினைத் திறன்களை எடுத்துரைக்கும் தொழில்கள், வழிபாடுகளில் புதிய செய்திகள், விளையாட்டு, கூத்து, ஈமச் சடங்கு, நாட்டுப்புற வழக்குமன்றம் போன்ற வாய்மொழி அல்லாத வழக்காறுகளும், பழமொழி, விடுகதை, பாடல், கதைப் பாடல் போன்ற வாய்மொழி வழக்காறுகளும் பற்றிய நல்ல பயனுள்ள கட்டுரைகள் இத்தொகுப்பில் அடங்கி உள்ளன.

சில கட்டுரையாளர்கள் தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள ஆய்வுப்பொருள் தொடர்பான கலைச்சொற்களைக் கொடுத் திருத்தல் சிறப்பான செய்தி. காட்டாக, கைத்தறி நெசவுத் தொழிலில் காணப்பெறும் கலைச்சொற்கள், பனை ஓலைத் தொழிலில் உள்ள கலைச் சொற்கள் போன்றவை மிகச் சிறப்பாகத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. ஆய்வாளர்கள் மட்டுமல்லாது ஆர்வங்கொண்ட வாசகர்களுக்கும் இத்தகைய செய்திகள் பயன்தரக்கூடியவை ஆகும்.

ஆய்வுத் தலைப்புக்களைத் தேர்ந்தெடுப்பதிலும், ஆய்வு நோக்கில் சிந்தனை செய்வதிலும், ஏதேனும் புதிய செய்தி சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருப்பதிலும் வல்லவர்களாக விளங்கும் கட்டுரையாளர்களை வாழ்த்தி அமைகிறேன்.

மதுரை–21 சரசுவதி வேணுகோபால்
9–11–97

முனைவர் ஆறு. இராமநாதன்
இணைப் பேராசிரியர் .
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

வாழ்த்துரை

தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களின் சிந்தனைப் பகிர்வுக்கு ஏற்ற மேடையைக் 'களம்' அமைத்துத் தந்துள்ளது. சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டு, விவாதித்து, செப்பம் செய்து அவற்றை வெளியிடும் பணியையும் 'களம்' செய்து வருகிறது. அத்தகைய வெளியீடுகளில் இது மூன்றாவது. நாட்டுப்புறவியல் கல்வியாளர்கள் மகிழவேண்டிய செயல் இது

இத் தொகுப்பில் 29 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நாட்டுப்புற இலக்கியம் குறித்த கட்டுரைகளே எண்ணிக்கையில் அதிகமாக (ஆறு) உள்ளன. அடுத்த இடத்தைப் பெறுவது தொழில்நுட்பம் குறித்த கட்டுரைகள். பண்பாடு – பழக்க வழக்கங்கள், வழிபாடுகள், விழாக்கள், சடங்குகள், கூத்து, இசை, விளையாட்டு முதலான பொருள் குறித்த கட்டுரைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

கட்டுரையாளர்களுள் பலர் இத்துறைக்குப் புதியவர்கள். ஆர்வத்துடன் தரவுகளைச் சேகரித்துக் கட்டுரைகளாக்கியுள் ளார்கள். புதியவர்களை வரவேற்பதும் வாழ்த்துவதும் நம் கடமை அதே நேரத்தில் கட்டுரைகளை எழுது முன்னர் துறை குறித்த நூல்களைப் படித்து ஆழமாகச் சிந்தித்துக் கருத்துக்களை வழங்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். களம் அமைத்துத் தரும் மேடையைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது நம் கடமை.

களம் வெற்றிபெற உழைத்துவரும் நண்பர்கள் முனைவர் சி. சுந்தரேசன், ஆ. கணேஸ்வரி, ஒ. முத்தையா, மொ. இளம்பரிதி, சு. இராசரத்தினம், சு. தமிழ்வேலு ஆ. சண்முகம் உள்ளிட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களின் கூட்டு முயற்சி தொடர்ந்து வெற்றிபெற வாழ்த்து கிறேன்.

10—11—97 ஆறு. இராமநாதன்

பதிப்புரை

இக்'களம்' மூன்றாவது களத்தில் முகிழ்க்கப்பெற்ற முத்துக்கள். முத்துக்கும் மதுரைக்கும் மிகுந்த தொடர்பு உண்டல்லவா. இக்கோவையில் கோர்க்கப்பெற்றுள்ள இருபத் தொன்பது முத்துக்களும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சோதிக்கப்பட்டவை.

1997 – சனவரித்திங்கள் 17, 18–ஆம் நாட்களில் மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட கருத்தரங்கில் படித்தளிக்கப்பெற்று விவாதம் செய்த கட்டுரைகளின் தொகுப்பேயாகும்.

இக்கருத்தரங்கின் மையப் பொருண்மையாக "மரபு வழி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" என்பது எடுத்துக்கொள்ளப் பெற்றது. இத்தலைப்புச் சார்ந்து ஏழு கட்டுரைகள் உள்ளன. வழிபாடு தொடர்பானவை ஆறு; பழமொழி, விடுகதை தொடர் பானவை ஆறு; விளையாட்டு, தொடர்பானவை இரண்டு; இசை தொடர்பானவை இரண்டு; கூத்து, சடங்கு, கதைப்பாடல், வழக்குமன்றம், கோட்பாடு, பண்பாடு என ஒவ்வொரு கட்டுரை களும் இடம் பெற்றுள்ளன.

இத்தலைப்புகளில் பெரும்பான்மையும் அறிமுக நோக்கிலேயே செய்திகளைப் பகுத்தும் வகுத்தும் கொடுக்கும் போக்கில் அமைந்துள்ளன. இனி வரும் காலங்களில் களத்தின் ஆய்வுப் பரப்பு விரிக்கப் பெறுவதுடன் மேல்நிலைக்கும் செலுத்தப் பெறும்.

கலைத்துறை ஆய்வுகள் மக்களைச் சார்ந்தனவாக இருக்க வேண்டும் என்பர். அவ்வகையில் நாட்டுப்புறவியலில் எந்தச் செய்தியை எழுதினாலும் அச்செய்தியின் மூலமான மக்கள் வழக்காறுகள் ஆவணப்படுத்தப்படுவது இன்றியமையாக் கூறாக அமைகின்றது. இதில் களம் தன் கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

மூன்றாம் கருத்தரங்கை நடத்துவதற்கு அனுமதி நல்கியதோடு தொடக்கவிழாவில் சிறப்புரை நல்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர் கு. ஆளுடையப் பிள்ளை அவர்களுக்கும், தமிழியல் புலத்தின் தலைவராக இருந்து கருத்தரங்கினை நடத்திக் கொடுத்ததோடு நூலுக்கு வாழ்த்துரை நல்கிய முனைவர் சரசுவதி வேணு கோபால் அவர்களுக்கும் உடன் ஒத்துழைப்பு நல்கிய முனைவர் இ. முந்தையா அவர்களுக்கும் துறையின் ஆய்வாளர்களுக்கும் முதுகலை மாணவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

கருத்தரங்கில் கலந்துகொண்டு நிறைவு விழாப் பேருரை ஆற்றியதோடு நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பு செய்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பு நிறை முனைவர் கி. கருணாகரன் அவர்களுக்கும் மையக் கருத்துரை நல்கிய தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரிப் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் வாழ்த்துரைகள் கூறிய முனைவர் அ. சீனிவாசன், முனைவர் வை. தி. நடராசன் ஆகியோர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

களம் அமைப்பின் மதிப்புறு ஆலோசகராக இருந்து வழி நடத்திச் செல்லும் முனைவர் ஆறு. இராமநாதன் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை அளித்துச் சிறப்பு செய்துள்ளார்கள் அவர்களுக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலாக்கப் பணியில் பங்கு கொண்டு கட்டுரைகளைத் தொகுக்கவும் மெய்ப்புத் திருத்தவும் உதவி புரிந்த முனைவர் இரா. கலைவாணி அவர்களுக்கும் உரிய நேரத்தில் அச்சிட்டு வழங்குவதற்குப் பேருதவி புரிந்த அச்சக உரிமையாளர் திரு ஆர். கௌதம சங்கர் அவர்களுக்கும் அச்சகத் தொழிலாளர் களுக்கும் எமது நன்றி மலர்களைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

அன்புடன்,

சி. சுந்தரேசன்

நாள்: 11-11-97

பதிப்பாசிரியர் சார்பாக

பொருளடைவு

மோ. கோ. கோவைமணி 1
கைத்தறி நெசவுத்தொழில் – வழிபாடும் கலைச்சொற்களும்

இரா. சுதமதி 10
பனை ஓலைத் தொழில் – ஓர் ஆய்வு

முனைவர் சி. சுந்தரேசன் 21
மாட்டுத் திருட்டு – (மாடு பிடித்தல்)

சு. தமிழ்வேலு 31
செப்புத்திருமேனி வடித்தல்

வீ. நிர்மலா ராணி 38
சயம் பூசுதல்

எஸ். வி. எஸ். பாலமுருகன்
ஜி. எஸ். விஜயலட்சுமி 41
வேளாண் தொழில் நுட்பத்தில் மண்புழுவின் பயன்பாடு

வெ. அமுதா 45
முனியாண்டவர் வழிபாடு

சு. இராசரத்தினம் 53
தருமபுரி மாவட்ட அரியக்கா பெரியக்கா வழிபாடு

முனைவர் ஆறு. இராமநாதன் 58
தென்னிந்தியாவில் பொங்கல் (அல்லது
மகரசங்கராந்தி) திருநாள்

கு. கண்ணன் 63
விழாக் கலைச்சொற்கள்

முனைவர் ஆ. சண்முகம் 67
அண்டகுடையான் கிராமத் தேவேந்திர குல
வேளாளர் சமயநிலை

முனைவர். சி. பொன்னுத்தாய் 74
கருமாத்தூர் நல்லகுறும்பையர் தெய்வத்தின்
சாமியாடி, பூசாரி தேர்வு செய்யும் முறை-
ஒரு கண்ணோட்டம்

ஆ. கணேஸ்வரி 83
விடுகதையில் ''கண்மாய்'' தரும் குறியீட்டுச்
செய்திகள்

முனைவர் திருமதி மு. குருவம்மாள் 88
பழைய மொழியில் புதைந்துள்ள செய்தி

முனைவர் ப. பத்மநாப பிள்ளை 98
பன்மை வடிவப் பழமொழிகள்

சு. பிரியா 102
அமைப்பியல் நோக்கில் பழமொழி
விடுகதைகள்

தி. பெரியசாமி 107
விடுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இரா. மனோகரன் 113
கம்பம் பள்ளத்தாக்கில் வேளாண் பழமொழிகள்

முனைவர் இரா. வீ. அப்பாத்துரை 123
நாட்டுப்பாடல்களில் சூழல் பாதிப்புகள்

முனைவர் ச. இரவி 133
வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக்
கண்டறிதல்

இரா. கருப்பையா 141
குறும்பக்கூத்து

முனைவர் இரா. கலைவாணி 150
காவடிச் சிந்தும் பாரதியார் ஈடுபாடும்

முனைவர் பெ. சுப்பிரமணியன் 156
நகர்ப்புறங்களில் நாட்டுப்புறப் பண்பாடு

ஆ. சிவக்கொழுந்து 162
சமயவிழாவில் சல்லிக்கட்டு

முனைவர் அரங்க. மு. முருகையன் 167
நாட்டுப்புற மகளிரின் ஏழாம் காய்
விளையாட்டு

பெ. உடையப்பன் 173
கோனார்களின் மரணச்சடங்கு ஓர் அறிமுகம்

எஸ். ஜெயராணி 179
வரலாற்றுப் பார்வையில் வழக்குமன்றமும்
தீர்ப்புக் கூறலும்

கே. ஏ. ஜோதிராணி 188
தமிழரின் இசையும் நிலையும்

இராம. பாண்டி 193
கடல்சார் தொழிலாளர்கள் திசைகளையும்
நேரத்தையும் கண்டறியும் மரபுவழி
அறிவியல் முறை: (பாம்பன் வட்டாரம்)

கைத்தறி நெசவுத்தொழில் - வழிபாடும் கலைச்சொற்களும்

மோ. கோ. கோவைமணி
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

மனிதனின் மிக முக்கியத் தேவைகளில் ஆடையும் ஒன்று. இவ்வாடையைத் தயாரிப்பவன் 'நெசவாளி'. நெசவாளியின் தொழில் 'நெசவுத்தொழில்'. இத்தொழில் இன்று இருநிலைகளில் நடைபெறுகிறது ஒன்று கைத்தறி; மற்றொன்று விசைத்தறி. அண்மைக்காலமாக நெசவாளர்களிடையே விசைத்தறியின் மோகம் அதிகரித்து வருவதால் கைத்தறி செய்வோரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவே கைத்தறியில் வழங்கப்பெறும் கலைச்சொற்கள் இன்று பல மறையத் தொடங்கிவிட்டன. அச்சொற்களை நிலைநிறுத்தும் வகையாலும் அத்தொழிலில் நடைபெறும் வழிபாடு மற்றும் நம்பிக்கைகள் குறித்தும் இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரை தமிழ்நாடு, செங்கை எம். ஜி. ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டாரத்தில் இருக்கும் பொதட்டூர்ப்பேட்டையில் வழங்கக்கூடிய கலைச்சொற்களைத் தொகுத்தும் அங்கு நிகழ்த்தப்பெறும் வழிபாடான 'தறிபுகுவிழா' குறித்தும் இங்கு ஆராயப்பெறுகிறது.

தறிபுகுவிழா

ஒவ்வொரு தை மாதத்தின் இரண்டாம் வார நன்னாளில் தறியில் புகுதலே 'தறிபுகுதல்' என்பர். இந்நாளை நெசவாளர் அனைவரும் விழாவாகக் கொண்டாடுவர். இவ்விழாவே 'தறி புகுவிழா' எனப்படும். இத்தறிபுகுவிழா ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே நடத்தப்பெறுகிறது. தை மாதமே ஆண்டின் தொடக்க

மாகவும் இவர்கள் கருதுகின்றனர். ஆண்டுத் தொடக்கம் நன்றாக அமையவேண்டும் என்று கதிரவனை வணங்கித் தங்கள் தொழிலைத் தொடங்குகின்றனர். இவ்விழா பற்றி இங்குக் காண்போம்.

மார்கழி மாத இறுதியில் தங்கள் தொழிலை நிறுத்தும் நெசவாளர்கள் தை மாதம் முதல் வாரம் முழுவதும் தைப் பொங்கல் கொண்டாடுகின்றனர். இரண்டாம் வாரம் 'மயிலேறி' யைக் கழித்த ஒரு நல்ல நாளில் தறிபுகுகின்றனர். இந்நாளை ஊர்ப்பெரியோர் தண்டோரா மூலம் அறிவிப்பர். அறிவித்த நாளன்று நெசவாளர் அனைவரும் தங்களூரில் இருப்பர். வெளியூர் சென்றவர்களும் ஊருக்கு வந்துவிடுவர்.

குறிப்பிட்ட நாள் வந்தவுடன் அதிகாலையில் குடும்பத்தார் அனைவரும் குளித்துவிட்டு வீட்டைச் சுத்தம் செய்து தெருவில் கோலம் போடுவர். பின்னர் கைத்தறிப் பொருட்கள் அனைத்தை யும் நீர்விட்டுக் கழுவியும் துடைத்தும் சுத்தம் செய்வர். அதன் பின், விபூதி, சந்தனம், குங்குமம் மற்றும் பூ கொண்டு அலங்காரம் செய்வர். அன்று போட்ட பசுஞ்சாணத்தைக் கொண்டு சாணப் பிள்ளையார் செய்வர். இச்சாணப் பிள்ளையாரைச் சந்தனம், குங்குமம் மற்றும் அருகம்புல்லால் அலங்காரம் செய்வர். இச்சாணப் பிள்ளையாரைக் கைத்தறிக்குப் பக்கத்தில் கதிரவன் ஒளிபடுமிடத்தில் வைப்பர். இங்குப் படைப் தற்குப் பச்சரிசி, வெல்லம், தேங்காய் மற்றும் வாழைப்பழத்தைப் பயன்படுத்துவர். ஊற வைத்த பச்சரிசியுடன் வெல்லம் கலந்து ஒரு தட்டில் சாணப் பிள்ளையார்க்கு எதிரில் வைப்பர். அடுத்தத் தட்டில் பூ, பழம், வெற்றிலைப்பாக்கு, தேங்காய் மற்றும் மாவிளக்கு வைத்திருப்பர்.

ஊர்ப்பெரியோர்கள் குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் நெசவாளர் அனைவரும் மாவிளக்கேற்றி கதிரவனை நோக்கிச் சாணப்பிள்ளையாரின் எதிரில் ஊதுபத்தி, சாம்பிராணி, கற்பூரம் காட்டித் தேங்காய் உடைத்து வழிபாடு செய்வர். குடும்பத்தார் அனைவரும் இவ்வழிபாட்டில் கலந்துகொள்வர்.

இவ்வழிபாடு முடிந்தவுடன் குடும்ப உறுப்பினர் ஒவ்வொரு வரும் நெசவுத்தொழிலில் தங்கள் தங்களின் பணியைச் செய்யத் தொடங்குவர். முதலில், குடும்பத்தில் குடும்பத் தலைவியோ

அல்லது பெண்பிள்ளையோ பல்லைராட்டினம் கொண்டு பல்லையில் நூல் சுற்றிப் பின் தார் ராட்டினம் கொண்டு தார் சுற்றுவர். அடுத்து குடும்பத்தலைவரோ அல்லது ஆண்பிள்ளையோ புதியதாகத் திரித்த தாரை எடுத்துக்கொண்டு தறியில் புகுவர். புகுந்து புதியதாகத் திரித்த தாரால் நெசவு செய்வர். அதன்பின் ஒவ்வொருவராகத் தறியில் புகுந்து கொஞ்சங்கொஞ்சமாக நெசவு செய்வர். கூலியாட்கள் இருப்பின் அவர்களும் அன்று தறிபுகுவர். அதன் பின்னர் படைத்த பச்சரிசி, வெல்லம், தேங்காய் ஆகியவற்றைக் கலந்து குடும்பத்தார் அனைவரும் உண்டு சுற்றத்தார்க்கும் கொடுத்து மகிழ்வர். இம்மகிழ்ச்சி என்றும் நிலைக்க கதிரவனையும் முழுமுதற் கடவுளான சாணப்பிள்ளையாரையும் வணங்கி வழிபடுவதே இத்'தறிபுகு விழா' எனலாம்.

இதற்குப் பிறகு தாங்கள் நூல்பெறும் மளிகைக்குக் குடும்பத் தலைவர் சென்று புதிய கணக்குத் தொடங்கி நூல், பணம், பழம், இனிப்பு ஆகியவற்றைப் பெற்று வருவர். இவ்வாறு ஆண்டுத் தொடக்கத்தில் பெறுவதால் ஆண்டு முழுவதும் தொழில் மேன்மேலும் வளர்ச்சி பெற்று மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று எண்ணுகின்றனர்.

இவ்வாறு முதலில் பெற்றுவந்த நூலை இழைத்துப் பாவாக்குகின்றனர். இப்பாவைத் தெருவில் தோயும் போதும் சிறப்பு வழிபாடு செய்கின்றனர். தெருவில் போடும் ஒவ்வொரு குடும்பத்து முதற்பாவிற்கும் முன்னர் சொன்னது போல் கதிரவன்–சாணப்பிள்ளையார் வழிபாடு நிகழ்த்தப்பெறும். இவ் வழிபாடு நிகழ்த்தாமல் தைமாத முதல் பாவை எவரும் வீட்டிற்குள் எடுத்துச் செல்வதில்லை.

சில நம்பிக்கைகள்

1. எதிர்ப்பலகையில் தறியைவிட்டு ஏறக்கூடாது. எதிர்ப் பலகை என்பது படமரத்தின் குழியுள்ள பக்கம் நெசவாளிக்கு எதிர்ப்பக்கத்தில் இருப்பது. இப்பக்கத்தில் படமரம் இருக்கும் பொழுது எந்தவொரு சூழ்நிலை ஏற் பட்டாலும் தறியைவிட்டு ஏறக்கூடாது. அப்படி ஏறினால் குடும்பத்தில் பல தீங்குகள் நிகழும் என நம்புகின்றனர். எதிர்ப்பலகையில் ஏறக்கூடிய சூழ்

நிலை ஏற்பட்டது என்றால் படமரத்தின் பக்கத்தை மாற்றுப் பக்கத்திற்குத் திருப்பிவிட்டு ஏறவேண்டும் என்பர்.

2. குறை இழைட்டையில் ஒருநாள் பணியை நிறுத்தக் கூடாது. இழைட்டை என்பது இரண்டு அல்லது மூன்று கெஜம் நீளம் பாவை விரித்து நெய்வதற்காக இழைட்டைக் கம்பத்தில் கட்டி இருப்பர். இதனை முழுதாக நெசவு செய்து அன்றைய பணியை முடிக்க வேண்டும். குறையாகச் செய்தால் மறுநாள் நெசவு சரிவர நடைபெறாது என்ற ஒரு நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

3. காலை எழுந்தவுடன் கதிரவன் உதயத்திற்குமுன் அன்றைய பணியைத் தொடங்கினால் தான் நெசவு நன்றாக இருக்கும் முழுமையாக நடைபெறும் என்று நம்புகின்றனர். கதிரவன் உதயமாகி பலமணி நேரங் கழித்துப் பணியைத் தொடங்கினால் அன்றைய பணியில் நிறைவு ஏற்படுவதில்லை என்று கருதுகின்றனர்.

இக்கட்டுரையின் பின்னிணைப்பில் சில கலைச்சொற்கள் (கைத்தறி) மட்டுமே தொகுக்கப் பெற்றுள்ளன. இதுபோல் ஒவ்வொரு தொழிலுக்குமென பலகலைச்சொற்கள் மக்களிடையே காணக் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து வெளிப் படுத்துவதும் அத்தொழிலுக்கான வழிபாடுகள் நம்பிக்கைகள் குறித்து வெளிப்படுத்துவதும் நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்கு மேலும் வளம் சேர்க்கும் எனலாம்.

கலைச்சொற்கள் (அகர வரிசைப்படி)

நலிந்துவரும் கைத்தறித் தொழிலில் வழங்கப்பெற்று வரும் கலைச்சொற்கள் தொழிற்பெயராகவும், வினைப்பெயராகவும், பொருட்பெயராகவும், காரணப் பெயராகவும் அமைந்துள்ளன. இவற்றை இம்முறைப்படி ஆயின் கட்டுரை விரியும் என்பதால் அனைத்தையும் தொகுத்து அகரவரிசைப் படுத்தியுள்ளேன். அவற்றிற்கான விளக்கத்தையும் அச்சொல்லையடுத்துத் தந்துள்ளேன்.

அச்சு — இழையை(நூல்) ஒன்றுடன் ஒன்று இறுக்கும் ஓர் கருவி. இது, சம அளவு நீளம், அகலம், உயரம் கொண்ட இரும்புக் கம்பிகள். சம அளவு இடைவெளியில் இவை ஒன்றனை அடுத்து ஒன்றாக வைத்து இறுக்கிக் கட்டப்பட்டது. இழைகளின் நெருக்கத்திற்குத் தகுந்தவாறு இதன் இடைவெளி மற்றும் கம்பியின் நீள அகலங்கள் மாறும். **அச்சுஊசி** – அச்சுக்குள் இழையை இழுக்கும் ஓர் கருவி. **அச்சுக்குழாய்** – விழுதும் அச்சும் இணைந்த ஓர் அமைப்பு. இதனைப் பண்ணை என்றும் அழைப்பர். **அச்சுக்குழாய் போடுதல்** – அச்சுக்குழாயில் பாவை (பாவு)ப் போடுவது. இதனைப் பண்ணை போடுதல் என்றும் அழைப்பர். **அச்சுமரம்** – அச்சைத் தாங்கி நிற்கும் மரத்தாலான ஒரு கருவி. **அச்சுப்பலகை**–தறியில் அச்சை நிற்கவைத்து மேற்புறம் அழுத்தித் தாங்கும் மரத்தாலான குழியுள்ள ஒரு பலகை. **அச்சுமரம்** – அச்சு பொருத்தப் பெற்றிருக்கும் ஒட்டுமொத்த அமைப்பு. இதனுள் அச்சு, அச்சுமரம், தண்டவாளம், நாடாப்பெட்டிகள், கைப்பிடி, கைப்பிடிக்கயிறுகள் அடங்கும். **அருகி** – துணியின் இரு கரைகளிலும் (எல்லைகளிலும்) இரண்டிரண்டு இழைகளாய்ச் சேர்த்து இறுக்கமான இழைகளாக்கி 1–2செ. மீ. அகலம் கொண்டது. இதனை அரிகி என்றும் கரை என்றும் அழைப்பர். **அலகு** – பாவோடநிரைக்குமலகு. பாவை அகலப்படுத்த உதவும் ஒரு கருவி. இது மெல்லிய மூங்கிலை நெடுக்காகப் பிளந்து செய்யப்பட்டது. **அலகுபிடித்தல்** – பாவு தோயும் போது இழைகள் ஒன்றுடன் ஒன்று இணையாமலிருக்க இருவர் எதிரெதிராக அலகை மேலும் கீழும் அழுத்திவிடுதல்.

இரட்டைஊசி – இரண்டொன்றான ஊசி. விழுதுக்கண்களில் நூலிழுக்கும் ஓர் கருவி. **இழைத்தல்** – சிலப்பையில் உள்ள நூலைப் பல்லையில் சுற்றுதல். **ஊசி** – நூல் இழுக்கும் ஒரு கருவி. இது, அச்சு மற்றும் விழுதுக்கண்களில் நூலை இழுக்கப் பயன்படுவது. **ஊணி** – பாவைத் தெருவில் ஊன்றப் பயன்படும் ஓர் கருவி. இது, இரண்டு சிறுதடிகளைக் குறுக்காகக் கட்டப் பட்டது. இதனை ஊணித்தடி என்றும் அழைப்பர். **ஊணிக்கயிறு** – ஊணி கட்டும் கயிறு. இக்கயிறு ஊணியின் இரு பக்கங்களில் அமையும். ஒருபக்கம் அமையும் கயிறு நீளமாகவும் மறுபக்கம் அமையும் கயிறு இரண்டு பிரி(பிரிவு)களாகவும் இருக்கும். இது, பாவைச் சமநிலையில் இறுக்கமாக நிறுத்த பாவுக் கோலுடன்

இணைக்கப்படுவது. ஊணிக்கோல் - ஊணி அமைக்கப் பயன்படும் கோல்.

எதிர்ப்பலகை - மடமரத்தின் நான்கு பக்கங்களில் மடிக்கம் பியைப் பொருத்தும் குழியமைந்த பக்கம். எழட்டை - 2-3 கெஜ நீளம் பாவை உருவி நெய்வதற்குத் தகுந்தாற்போல் இழைகளை அட்டைபோல் பரப்பி சமன்செய்து இறுக்கிக் கட்டப்பட்ட ஓர் அமைப்பு. இது, இழைட்டை எழட்டையாகியது எனலாம். எழட்டைக்கம்பம் - இழைட்டை கட்டும் கம்பம். எழட்டைக்கயிறு - இழைட்டை கட்டும் கயிறு. இதனை வலிகயிறு என்றும் கூறுவர். எழட்டைகோல் - இழட்டை கட்டும் உருண்டைக்கோல். ஒத்தகுறி - ஒரு அடையாளம். ஒருபத்தை - துணி நெய்யும்போது மடி கிழிக்க விடப்படும் ஒரு இடைவெளி. கஞ்சிப்பை - பாவிற்குப் பசையூட்டும் போது பயன்படுத்தும் நீளமான பை. கட்டைத்தறி - மரத்தாலான தறி. இதனை அச்சுமரம் என்றும் அழைப்பர். கண்ணி - பாவில் எஞ்சிய இழைகளை ஒன்றாகச் சேர்த்துச் சுற்றிவைத்த சுருணை. கண்ணிகட்டுதல் - பாவில் பற்றாத (குறைந்த) இழைகளைக் கண்ணி கொண்டு நிரப்பி பாவுடன் தனியாகக் கட்டித் தொங்கவிடுதல். கால்மெருடி - கால்மிதியடி. இது, பண்ணையில் புணி அமைக்கக் காலால் மிதிக்கப்படும் மிதியடியின் மேல் சிறிய அளவில் பொருத்தப்பட்டது. உயரம் குறைந்தவர்கள் மெருடியின் மேல் கால்மெருடியைப் பொருத்திப் பயன்படுத்துவர். கால்மெருடி ஆணி - மிதியடியில் கால்மெருடியைப் பொருத்தப் பயன்படும் இரும்புக் கம்பி. கிட்டிஅலகு - நீளமான மூங்கில் தாங்கி. இது, இரண்டு அலகுகளைக் கயிற்றால் குறுக்காகக் கட்டப்பெற்றது. இதனைக் கெடை கிட்டி என்றும் அழைப்பர். கிட்டிக்கோல் - நூலிலுள்ள ஈரத்தைப் பிழியும் கோல்.

கீழ்த்தார் - கீழ்ப்பக்கமாகச் சுற்றப்படும் தார். கீறுகம்பி - பாவிலுள்ள இழைகளைச் சமனாகக் கீறப் பயன்படும் ஒரு கருவி இது. கீறுகின்ற கம்பியானதால் கிறுகம்பியானது. கீறுகுச்சி - காண்க: கிறுகம்பி. குச்சிராட்டினம் - சிலப்பை போடும் உருளை. குஞ்சம் - சிலப்பையின் ஒரு பகுதி; இது 120 இழைச்சுற்று கொண்டது. குழல் - துளையுடைய சிறிய உருளைக் கட்டை. குறி - அடையாளம். குறிகோல் - அடையாளமிடும் அளவுகோல். குறிவிடுதல் - அடையாளம் வைத்தல். கெடை - நீளமான மூங்கில். கெடைகிட்டி காண்க: கிட்டிஅலகு. கைப்பிடி - நெசவு -

செய்யும்போது நாடாவை இடம் மாற்ற வலது கையால் பிடிக்கப்படும் பிடி. **கைப்பிடிகயிறு** – கைப்பிடி அமைந்த கயிறு. **கொமக்கோல்** – குச்சிராட்டினம் வைக்கும் ஓர் கருவி.

சிம்பில் – மெல்லிய குச்சி. இது, பாவைச் சுற்றும் போது புணியில் வைக்கப் பயன்படுவது. **சிம்பில் கம்பி** – மெல்லிய கம்பி. இது, பாவைச் சுற்றும் போது புணியில் வைக்கப் பயன்படுவது. **சிம்பில்குச்சி** – காண்க: சிம்பில். **சிலப்பை** – ஏழு குஞ்சங்களைக் கொண்டது. **சிலப்பைக்கட்டு** – குஞ்சக்கட்டு. இது குஞ்சங்களை முறைப்படி அமைத்துக் கட்டப்பட்டது. **சீர்** – பண்ணைக்கோல் ஒழுங்கு. **சீர்க்கயிறு** – பண்ணைக் கோலை ஒழுங்கு செய்யும் கயிறு. **சீர்பாவு** – பலவண்ண இழைகள் ஒழுங்குடன் முறையாக ஒன்றனைத் தொடர்ந்து ஒன்று அமைந்தது. **சீர்வண்டி** – சீர்க்கயிறு உழலும் சக்கரம். **தக்கட்டை** – நாடாவைத் தள்ளும் ஒரு கருவி. இது, நாடாப்பெட்டியில் முன்பின் நகரும் அமைப்பில் இருக்கும். நாடாவிலுள்ள நாடாமுள் இத்தக்கட்டையில் உட்கார்ந்து எழுந்துவரும் நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். **தக்கட்டைக் கயிறு** – நாடாப்பெட்டியில் தக்கட்டையை இணைக்கும் கயிறு. **தண்டவாளம்** – நாடா செல்லும் இரும்புத் தகரத்தாலான பாதை. **தார்** – இழை சுற்றப்பட்ட குழல். **தார்ஊசி** – குழலைச் சுற்றப் பயன்படுத்தப்படும் ஓர் ஊசி. **தார்திரித்தல்** – பல்லையிலுள்ள நூலைத் தண்ணீரில் ஊறவைத்து தார்ராட்டினம் கொண்டு குழலில் சுற்றுதல். **தார்ராட்டினம்** – தார் சுற்றப் பயன் படுத்தப்படும் ஓர் உருளை. **திருகுபாவு** – பாவை இடப்பக்கம் தொடங்கி இணைக்கும் பொழுது நேருக்குநேர் இணைக்காமல் புணிமுடியைத் திசைமாற்றி இணைக்கப்படுவது.

நாடா – துணி செய்ய தாரின் மூலம் நூல்தரும் கட்டையாலான ஓர் கருவி. **நாடாக்கம்பம்** – நாடாவுள் அமைந்த கம்பம். இது, தார் பொருத்தப் பயன்படுவது. **நாடாக்கம்பி** – நாடாவுள் அமைந்த ஒரு கம்பி. இது, தாரைப் பிடித்துக்கொள்ளப் பயன்படுவது. **நாடாப்பெட்டி** – நாடா சென்றுவரும் பெட்டி. **நாடாமுள்** – நாடாவின் இருமுனைகளிலும் உள்ள கூர்மையான இரும்புப்பகுதி. **நுமுட்டு** – இரண்டு இழைகளை இணைத்தல். **நுமுட்டு வலித்தல்** – புதிய பாவையும் பழைய பாவையும் இணைத்துப் பிறகுப் புதியபாவை அச்சுக்குள் இழுத்தல். **நூலிழைத்தல்**–சிலப்பையாக உள்ள நூலைப் பல்லையில் சுற்றுதல்,

நூலூசி – பல்லையில் நூல் சுற்றும்போது நூலைத் தாங்கி வரும் ஓர் ஊசி. **நூல்** – இழை, பஞ்சிநூல். **நூல்ராட்டினம்** – பல்லையில் நூல் சுற்றும் உருளை. **நேர்பாவு** – பாவை நேருக்குநேர் இணைக்கும் பாவின் வலப்பக்கம்.

பஞ்சாடுதல் – பாவில் பசை குறைவாக இருந்து நெசவு செய்யும்போது நூலிலிருந்து பஞ்சு பிரிந்து உதிர்வது. **படமரக்கம்பி** – படமரத்தைச் சுற்றும் கம்பி. **படமரக்கால்** – படமரத்தாங்கி. **படமரம்** – மடி சுற்றும் மரம். இது நான்குப் பக்கங்களைக் கொண்டோ அல்லது உருளையாகவோ இருக்கும். **பண்ணை** – காண்க: அச்சுக்குழாய். **பண்ணைஊசி** – காண்க: அச்சுஊசி. **பண்ணைக்கோல்** – இரண்டு விழுதுக் கம்பிகளையும் சமநிலையில் நிறுத்திக் கட்டப்படும் கோல். **பண்ணை போடுதல்** – காண்க: அச்சுக்குழாய் போடுதல். **பத்தை** – காண்க: ஒருபத்தை. **பலகை** – மடமரத்தின் நான்குப் பக்கங்களில் ஒன்று. **பல்சக்கரம்** – உருளைப் பாவில் கயிறை விடுவிக்கும் (பாவை விடுவிக்கும்) சக்கரம். **பல்லை** – நூல் சுற்றும் ஒரு கருவி. **பாவடி** – தெருவில் பாவு போடுமிடம். **பாவு** – துணி நெய்வதற்குத் தகுந்தாற்போல் நூல்களைப் பக்குவப்படுத்திச் சுற்றப்பட்டிருக்கும் ஓர் அமைப்பு. இது, பாவுசுத்தியாலோ உருளை (ரோல்) யாலோ சுற்றப் பட்டிருக்கும். **பாவு ஓடுதல்** – பாவு ராட்டினத்தால் பாவை உருவாக்குதல். **பாவுக்கோல்** – பாவின் இரண்டு முனைகளிலும் வைக்கப்பெறும் கோல். **பாவுசுத்தி** – பாவு சுற்றப் பயன்படும் கெடை. **பாவுசுத்தும்ரோல்** – பாவு சுற்றும் உருளை. **பாவு தோய்தல்** – தெருவில் பாவைப் பக்குவப்படுத்துதல். **பாவு பொருணைத்தல்** – பாவை இணைத்தல், புதிய பாவையும் பழைய பாவையும் இணைத்தல் (நுமுட்டுதல்). **பாவுராட்டினம்** – பாவாக்கும் உருளை. **பில்லூறு** – வெட்டிவேரினாலான ஒரு கருவி. இது, பாவில் பசை போடப்பட்ட பின் இழைகள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்ளாமல் பிரிக்கப் பயன்படுவது. **பில்லூறுகட்டை** – பில்லூறை இழுத்துச் செல்லும் ஒரு கோல். **பீஸ்** – எட்டு கெஜத்துணி. இதனை மடி என்றும் அழைப்பர். **புணி** – இழை, மேலும் கீழும் என மாறிமாறி அமைந்த ஓர் அமைப்பு. **புணிக்கட்டுதல்** – புணியில் இழை அறுந்து சிக்குதல். **புணிக்கயிறு** – புணியில் உள்ள கயிறு. **புணிக்கோல்** – புணியிலுள்ள கோல். **புணிமுடி** – புணிமுடிச்சு; புணியை உருவாக்கி புணியில் இறுதியில் இடப்படும் முடிச்சு. **புணிமுட்டை** – புணிக்கோலை இழுத்துச்

சமநிலையில் வைத்திருக்கும் மணல்முடிச்சு. **பெரல்** – பண்ணைக் கோல் மற்றும் மிதியடி (மெருடி)யால் புணியை உருவாக்கும் உருளை. **பெரல்கயிறு** – பெரலுக்கும் பண்ணைக் கோலுக்கு மிடையே கட்டப்பட்ட கயிறு.

பேட்டு – துணியில் கூடுதலாக இழைகளைச் சேர்த்து வண்ண ஓவியங்கள் உருவாக்கும் ஓர் அமைப்பு. **பேட்டுக்கம்பி** – வண்ண ஓவியங்களை உருவாக்கும் இழைகள் செல்லும் விழுதுகளைக் கொண்ட ஒரு கம்பி. **பேட்டுக்கயிறு** – பேட்டுக் கம்பியை இழுக்கும் கயிறு. **பேட்டுமூட்டை** – பேட்டுக்கம்பியைச் சமநிலையில் வைத்திருக்கும் மணல்முடிச்சு. **பேல்** – நூல் கட்டுகள் 144 கொண்ட ஒரு கட்டு. **பொணைத்தல்** – இணைத்தல். பிணைத்தல். **பொந்து** – பத்து சிலப்பை கொண்ட ஒரு கட்டு நூல். **பொந்துகட்டு** – பத்து சிலப்பைகளையும் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து கயிற்றால் கட்டப்பட்டது. **பொறை** – துணி மடிப்பிலுள்ள அடுக்கு. **மடக்கு** – தார் வைக்கும் மண்ணாலான தட்டு. **மடி** – எட்டு கெஜத் துணி. **மடிக்கம்பி** – மடியிலுள்ள ஒத்தைபத்தையில் நுழைக்கும் ஒருகம்பி. **மடிக்குறி** – எட்டாவது கெஜத்தைக் குறிக்கும் மூன்று அடையாளம். இது முக்குறி எனப்படும். **மடிக்கோல்** – மடி சுற்றும் கோல். **மிந்தண்டு** – முன்தண்டு; பண்ணைக்கு முன்னால் பாவைத் தாங்கிவரும் ஒரு தண்டு. **மிந்தண்டுக்கால்** – முன்தண்டுத் தாங்கி. **முக்குறி** – மூன்று அடையாளம். **மெருடி** – மிதியடி. இது புணியை உருவாக்கக் காலால் மிதிக்கப்படுவது. **மெருடி ஆணி** – மிதியடித் தாங்கி. **மெருடிக்கம்பி** – இரண்டு மிதியடிகளையும் இணைக்கும் ஒருகம்பி. **மெருடிக்கயிறு** – பண்ணைக் கோலையும் மிதியடியையும் இணைக்கும் கயிறு. **மேல்தார்** – மேல் பக்கமாகச் சுற்றப்படும் தார். **ரெட்டு** – இரண்டிழை. **ரெட்டைபத்தை** – இரண்டு பத்தை. **ரோல்** – உருளை. **ரோல்கயிறு** – ரோலிலிருந்து பாவை விடுவிடுக்கும் கயிறு. இதனை வலிகயிறு என்றும் அழைப்பர். **ரோல்கால்** – உருளைத்தாங்கி. **வலிகயிறு** – பாவை விடுவித்து இழட்டையை சம அளவு இழுவிசை கொடுக்கும் கயிறு. **விசைமுள்** – நெய்யும் போது மடியின் இருமுனைகளையும் குத்தும் முள். **விசைக்குச்சி** – விசைமுள் பொருத்தப்பட்டுள்ள மெல்லிய குச்சி. **விழுது** – நூல் செல்லும் கண்ணுள்ள கம்பி. **விழுதுகண்** – விழுதுவிலமைந்துள்ள நூல் செல்லும் துவாரம். **விழுதுக்கம்பி** – விழுதுகள் கோர்க்கப் பட்ட கம்பி. **விழுதுக்கோல்** – விழுதுக்கம்பியின் மேலும் கீழும் சமனாகக் கட்டப்பட்ட கோல்.

பனை ஓலைத் தொழில் - ஓர் ஆய்வு

இரா. சுதமதி
தமிழ்த்துறை
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்

முன்னுரை

'பஞ்சம் போக்கி' என்றும், 'கற்பகத்தரு' என்றும் முன்னோர் களால் பாராட்டப்பட்ட சிறப்பினை உடையது பனைமரம். இன்று மேலை நாட்டு கலாச்சாரத்தின் விளைவால் பனை மரத்தின் அருமை பெருமைகளை உணராது பாரதத்தின் பண் பட்ட மரபுக்கலையின் ஒரு பகுதி அழிந்து வரும் நிலை ஏற் பட்டுள்ளது. பனையும் அது தரும் பொருட்களும் பெரிதும் பயன்தரக்கூடியன. குறைந்த செலவில் நிறைந்த பயனைத் தரும் தொழிலாகப் பனைப்பொருட்கள் செய்யும் தொழில் நடைபெறு கிறது. தொழில் நுட்பங்களோடு தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க மரபுக்கலையாகவும் இத்தொழில் தென்மாவட்டங்களின் சில இடங்களில் இன்றும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

கற்பகத்தரு

விரும்பியோர்க்கு விரும்பியதைக் கொடுக்கும் கற்பகத் தருவைப் போன்றதுதான் பனையும், பனைமரத்தின் குருத் தோலை முதல் அதன் வேர் ஈறாக உள்ள எல்லாப் பொருட்களும் மக்களுக்குப் பலவகையில் பயன்படுகின்றன. முந்தைய காலங் களில் தமிழகத்தின் தென்பகுதியினருக்குப் பெருமளவில் வாழ் வளித்து வந்த பனை ஏறும் தொழில் இன்று நசிவடைந்து வரும் நிலையில், பல கூட்டுறவு இயக்கங்கள் இணைந்து பனைத் தொழிலுக்கும் பனைப்பொருட்களைக் கொண்டு கலைப் பொருட் கள் செய்யும் தொழிலுக்கும் ஊக்கமளித்து மரபுக்கலையையும் தொழில் நுட்பத்தையும் வளர்ப்பதில் பேருதவி புரிந்து வரு

கின்றன. பனையிலிருந்து பதனீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு, நுங்கு, பனம் பழம், பனங்கிழங்கு போன்ற உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. பனையின் ஓலையை மூலதனமாக வைத்துச் செய்யப்படும் பொருட்களும் ஏராளம். பாய்கள், பெட்டிகள், விசிறிகள், தொப்பிகள், கூடைகள் அலங்காரப் பொருட்கள் என்று இதன் பயன்கள் நீண்டு செல்லும். பனை நார்கள் கட்டில் கட்ட, உறுதியான கயிறுகள் திரிக்க என்று பலவிதமான பயன் களைத் தருகின்றன. பனை மரக்கட்டைகள் வீட்டின் கூரைக்கு உறுதியான உத்தரங்களாகவும், குறுக்குச் சட்டங்களாகவும் பயன்படுகின்றன.

பனை ஓலைப் பொருட்கள்

பனை ஓலைகளைக் கொண்டு பழங்காலத்தவர் தமக்குத் தேவையான பல பொருட்களைச் செய்து கொண்டனர். ஓலைப் பொருட்கள் ஓலைப் பெட்டிகள், பிழாப்பெட்டிகள், நார்ப் பெட்டிகள், கொட்டான் என்று சொல்லப்படும் பெட்டிகள், படுத்துறங்கும் பாய்கள், பந்திப் பாய்கள், நகைப் பெட்டிகள், முறங்கள் ஆகிய அதிகச் செலவில்லாத எளிய வீட்டு உபயோகப் பொருட்களைப் பயன்படுத்தினர்.

கிணற்றில் தண்ணீர் முகக்கத் 'தோண்டிப் பட்டை'யை ஓலையினால் செய்து பயன்படுத்தினர். பனை ஓலையிலிருந்து கிழித்து எடுக்கப்பட்ட ஈர்க்குகள் வீடு, முற்றம் ஆகியவற்றைப் பெருக்கப் பயன்பட்டன. பனை ஓலைகளைக் கொண்டு 'செருவை' எனப்படும் வேலிகள் அமைத்தனர். குழந்தைகள் விளையாடும் 'இலுக்கு' பனை ஓலையில் சின்னஞ்சிறு பெட்டி போல் அமைக்கப் பட்டு, உள்ளே சிறிய கற்கள் இடப்பட்டு பயன்படுத்தப்பட்டது. கிளி, பூனை போன்ற பொம்மைகளும் குழந்தைகள் விளையாடி மகிழ உருவாக்கப்பட்டன.

மூலப்பொருட்கள்

பனை ஓலையினால் பொருட்கள் செய்வதற்கு மூலதனம் அதிகம் தேவையில்லை. பனை ஓலைகளில் குருத்தோலை, சாரோலை, ஈர்க்கு, புறணி ஆகியவையும், ஒரு சிறு அச்சும், சிறு கத்தியும் இருந்தால் போதுமானவை.

இவைதாம் பலவிதமான பொருட்கள் செய்ய அடிப்படைத் தேவைகள். ஓலைகளை ஒரே அளவில் வெட்ட ஒரு அச்சு

வேண்டும். இந்த அச்சு மரத்திலும், இரும்பிலும் செய்யப்படு வதுண்டு. ஒரு சிறு மரத்துண்டின் ஓரத்தில் எந்த அளவில் ஓலைத்துண்டுகள் வெட்டப்பட வேண்டுமோ அந்த அளவில் துளை அமைக்கப்பட்டு அத்துளைக்குள் சிறு பிளேடு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கும். பனை ஓலைகளை அத்துளையின் வழி யாக விட்டு வெளியே இழுக்கும்போது சீரான ஒரே அளவில் ஓலைத்துண்டுகள் கிடைத்து விடுகின்றன.

அடுத்து ஓலைப் பொருட்களைப் பின்னுவதற்குச் சிறு கத்தி பயன்படுகிறது. இக்கத்தியின் உதவியின்றிப் பனை ஓலைப் பொருட்களைப் பின்ன இயலாது. இக்கத்தியின் மேல் பகுதி தட்டையாகவும், ஓலைகளை நறுக்கச் சற்றுக் கூர்மையாகவும் இருக்கும். பின் கீழ்பகுதி அதிலிருந்து நீண்டு வந்து கீழ்முனை நன்கு கூர்மையான பெரிய ஊசி போல் காணப்படும். இக்கத்தி பின்னல் பகுதிக்குள் அழுத்தமாய்க் குத்தி ஓலைகளை உள்ளே விடவும், அழுத்தம் தரவும், விரித்துக் கொடுக்கவும் பயன்படுகிறது.

பனை ஓலைப் பொருட்கள் செய்யும் முறை

பனை ஓலை கொண்டு பொருட்கள் செய்ய அடிப்படைத் தேவையான குருத்தோலை, சாரோலை ஆகியவற்றைப் பனை மரத்திலிருந்து வெட்டி எடுத்து வந்தபின் அவை இரண்டு நாட்கள் வெயிலில் காய வைக்கப்படுகின்றன. பின்னர் அவற்றிலுள்ள ஈர்க்குகள் தனியாகக் கிழித்து எடுக்கப்படுகின்றன. இந்த ஈர்க்குகள்தான் பின்னலைத் தொடங்கவும் முடிக்கவும் அவசியமானவை. ஈர்க்குகள் எடுக்கப்பட்டதும் தனித்தனி இதழ் களாக இருக்கும் ஓலைகள் அச்சில் கொடுக்கப்பட்டுப் பின்னலுக்குத் தேவையான அளவுகளில் கிழித்து எடுக்கப்படு கின்றன. பின்னலை ஆரம்பிக்கும் முன் கிழிக்கப்பட்ட ஓலைகள் பத்து நிமிடங்கள் நீரில் ஊற வைக்கப்படுகின்றன.

ஓலைப் பெட்டிகளைத் தவிர அழகிய தட்டுகள் செய்வதற்கு நுணுக்கம் தேவை. இத்தட்டுகளுக்கு வடநாட்டிலும், பிற நாடு களிலும்பெரும் வரவேற்பு உள்ளது. இத்தட்டுகளின் அடிப்பகுதி யைக் குருத்தோலையின் இதழ்களாலும், ஈர்க்கினாலும் கட்டில் பின்னல் போல் வேண்டிய வடிவங்களில் (வட்டம், நீள்வட்டம், மாங்காய் வடிவம்) அமைத்து அதன் ஓரங்களில் இடைவெளி விட்டு, ஓலைகளால் நெருக்கமாய் வட்ட வடிவில் காசு போன்று சுற்றப்பட்ட நான்கு உருளைகளை வைத்து, அவற்றைப் புறணி

களைக் கொண்டு தட்டின் அடிப்பாகத்தோடு இணைத்துக் கட்ட வேண்டும். இவற்றின் மேலே ஓலைகளைச் சுற்றி நட்சத்திர வடிவில் முடிக்க வேண்டும். மீதி இருக்கும் இடைவெளிப் பகுதியில் மேலும் நான்கு உருளைகளை வைத்துப் பின்னும் போது தட்டின் உயரம் அழகான வடிவில் கிடைத்துவிடுகிறது. பின்னர் இதன் மீது ஈர்க்கைத் தட்டின் வடிவத்தில் வளைத்து அமைத்து மேலே ஓலையைச் சுற்ற வேண்டும். மூன்று அடுக்காய் ஓலைகளைச் சுற்றி முடித்த பின்பு நான்காவது அடுக்கில் வண்ணம் சேர்க்கப்பட்ட ஓலையைச் சுற்றிலும் அழகிய ஒரு சாண் அகலமுள்ள தட்டுத் தயாராகிவிடுகிறது. இதே அளவுள்ள தட்டுகளை ஒரு நாளைக்குக் குறைந்தது இருபத்து ஐந்து வரை செய்யலாம்.

தட்டுகள் செய்வதற்குக் குருத்தோலையும் ஈர்க்கும் மிக அவசியம். அதே போன்று பெட்டிகள் முனைய குருத்தோலையும், சாரோலையும், கூடைகள் செய்ய குருத்தோலை, சாரோலை, ஈர்க்கு இவையும் தேவை.

பிழாப்பெட்டிகளும் கூடைகளும் முனைய குருத்தோலையை வார்ந்து குறுக்கும் நெடுக்குமாக மாற்றி, மாற்றிப் பின்னி அடிப் பாகத்தை அமைக்க வேண்டும். அடிப்பாகத்தின் நான்கு ஓரப் பகுதிகளையும் தனித்தனியாய் இணைத்துச் சுற்றிப் பின்னிக் கொண்டே வர மேற்பகுதி விரிந்து பெட்டி வடிவம் பெறும். மேலே ஈர்க்கை வளைத்து வைத்துச் சாயம் ஏற்றப்பட்ட ஓலை களைக் கொண்டு சுற்றி முடிக்க வேண்டும்.

பெரிய அச்சில் வார்ந்து எடுக்கப்பட்ட ஓலைகளைக் கொண்டு பெரிய பெட்டிகளை முனையலாம்.

தவிர, பிழாப்பெட்டிகளைப் போன்றே தொப்பிகள், கிலுக்குகள், மூடியுடன் கூடிய கூடைகள் ஆகியவையும் செய்யப் படுகின்றன.

தொழில் நுட்பங்கள்

பனை ஓலைகளைக் கொண்டு பொருட்கள் உற்பத்தி செய்ய இயந்திரத் தொழில் நுட்பங்கள் அவசியமில்லை. ஆயினும் கை வேலை இன்றியமையாதது. இதைக் கற்றுக் கொடுப்பதற்குப் பல கிராமங்களில் பயிற்சி மையங்கள் அமைந்துள்ளன. கற்றுக்

கொடுப்பதோடு பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையும் வழங்குகின்றன.

இயற்கை, பனைப் பொருட்களுக்குத் தந்துள்ள உறுதியும், குளிர்ச்சியும், சுகாதாரமுமே பனைப் பொருட்கள் உற்பத்தித் தொழிலின் மிகப் பெரிய அறிவியல் நுட்பமாகும். பனை நாரால் செய்யப்படும் பெட்டி, நார்க்கட்டில் ஆகியவை பல வருடங்கள் உழைக்கக்கூடியவை. பனை நாரின் மேல்பகுதி பிளாஸ்டிக் போன்று வழுவழுப்பாக இருப்பதால் எளிதில் தண்ணீர் பட்டு அறுந்து போவதில்லை. இதனால் நீண்ட நாட்கள் தாக்குப் பிடிக்கின்றன.

நூலைப் போலவே பனை ஓலையிலும் விரும்பும் வண்ணங்களை ஏற்ற முடியும். ஒரு பெரிய பானையில் நீரைக் கொதிக்க வைத்து அதில் தேவைப்படும் நிறத்திலுள்ள சாயத்தூளை இட்டு, பனை ஓலை மடல்களை அந்நீரில் சற்று நேரம் ஊற வைத்து விட்டால் அச்சாயம் ஓலையில் நன்றாகப் பதிந்துவிடும். தனித் தனியாய்ச் சாயங்களை இட்டு நிறம் ஏற்றுவதோடு, இரு வண்ணங்களைக் கலந்து புதிய வண்ணத்தை உருவாக்கியும் ஓலைகளில் ஏற்றுவதுண்டு. இளஞ்சிவப்பு நிறத்தோடு மஞ்சளைக் கலந்து ஆரஞ்சு வண்ணத்தையும், அதே இரண்டு வண்ணம் அதிகமாய் சேர்க்கும் போது சிவப்பு நிறத்தையும், பச்சை வண்ணத்தோடு மஞ்சளைச் சேர்த்து கிளிப்பச்சை நிறத்தையும் பெற முடியும். இவ்வண்ணங்கள் ஏற்றப்பட்ட ஓலைகளால் பின்னப்பட்ட கலைப்பொருட்கள் கண்ணையும், கருத்தையும் கவரும் வியாபாரப் பொருட்களாகி விடுகின்றன.

பனை ஓலைத் தொழில் மையங்கள் ஓலைப் பொருட்கள் மட்டுமின்றிப் பனையிலிருந்து கிடைக்கும் பிற பொருட்களைப் பயன்படுத்திப் புதிய பொருட்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றன.

பனை மட்டையின் அடிப்புறத்தில் காணப்படும் 'பன்னாடை' என்ற பகுதி உறுதியான கம்பி வலை போன்றது. முன்னோர்கள் இதனைத் தேன், பதநீர் ஆகியவற்றை வடிகட்டப் பயன்படுத்தி வந்தனர். இன்று இப்பன்னாடை வேலைப்பாடுமிக்க தூரிகை செய்யப் பயன்படுகிறது. இத்தூரிகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

அதே போன்று 'பத்தை' எனப்படும் பனைப் பொருளி லிருந்து 'தும்பு' என்ற பகுதியினை எடுக்கிறார்கள். 'பத்தை' என்பது பனை மட்டையின் அடிப்பாகத்தில் இருபிரிவாகப் பிரிந்துள்ள பகுதி. இதனைத் தனியாக எடுத்து ஓரங்களை வெட்டிக் கம்பினால் அடிக்க அடிக்கத் தும்பு தனியாக வரும். இத்தும்பைத் தரம் பிரித்து அழகிய கால்மிதியடிகள், தரை விரிப்புகள், கயிறுகள் ஆகியவை செய்யப்பட்டு ஏற்றுமதியா கின்றன. இதற்கெனப் பனந்தும்புத் தொழிற்சாலைகள் உண்டு. அவை தும்புகளைத் தரம்பிரிப்பதிலும், தூய்மைப்படுத்துவதிலும், பதப்படுத்துவதிலும் சாயமிடுதலிலும் தனிக்கவனம் செலுத்தித் தரமான நிலையில் தொழிலை மேம்படுத்தி வருகின்றன.

பனை ஓலைகளைக் கொண்டு பெட்டிகளும், வீட்டு உபயோகப் பொருட்களும் செய்து கொண்டிருந்த நிலையானது, கால மாறுதலாலும், நாகரிகத்தின் விளைவாலும் பல மாற்றங் களை அடைந்து புதிய பொருட்கள் செய்ய வழி வகுத்துள்ளது. இன்று வீட்டு வரவேற்பறையை அலங்கரிக்கும் பொருட்களில் பனை ஓலையால் செய்யப்படும் அலங்காரத் தட்டுகளும், சுவரில் மாட்டும் வகையில் செய்யப்பட்ட பூ வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய வடிவங்களும் இடம் பெறுகின்றன. பெண்கள் வேலைக்குச் செல்லும்போது தமது பொருட்களை எடுத்துச் செல்லும் வகையில் அமைந்த கைப்பைகளும், சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பி அணியும் தொப்பிகளும் பனை ஓலைத் தொழிலின் புதிய நுட்பங்களாகும்.

பனை ஓலைகளைக் கிழித்து எடுத்தபின் கிடைக்கும் ஈர்க்குகள் உறுதியானவை. இந்த ஈர்க்குகள் உடையாமலும், சுருங்காமலும் நெளிந்து விடாமலும் இருக்கும் தன்மையினை உடையனவாதலால் இவையே பொருட்களைச் செய்ய அடிப்படையாக அமைகின்றன. கம்பியினைப் போன்ற உறுதியும் விரும்பிய வடிவில் வளைத்துப் பின்னிய பிறகு நெளிந்து விடாமலும் இருக்கும் இந்த ஈர்க்குகளே பனை ஓலைத் தொழிலின் முதுகெலும்பு என்றும் கூறலாம்.

ஓலைகளைக் கொண்டு இப்போது 'ஓலை வெடிகள்' செய்யப் படுகின்றன. அதிக விலை கொடுத்துப் பட்டாசுகளை வாங்க இயலாத ஏழை, எளிய குழந்தைகள் விலை குறைவான இந்த

'ஓலை வெடிகளை' வாங்கிப் பயனடைகின்றனர். ஆபத்தை விளைவிக்காத வெடிகள் இவை.

குடிசைத் தொழில்

தமிழகத்தில் பலரும் பனையை நம்பி வாழ்ந்த காலம் மறைந்து இன்று சிறுபான்மையினருக்கு மட்டுமே வாழ்வளிக்கும் குடிசைத் தொழிலாகப் பனைத்தொழில் மாறியது காலத்தின் கோலம் என்றுதான் சொல்லமுடியும். மதுரை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் போன்றவை 'பனைப்பொருள் உற்பத்தி மையங்கள்' அமைத்து சிறுபான்மையினருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருகின்றன. இவ்விடங்களில் பனை ஓலைப் பொருள் உற்பத்தியில் பெரும்பாலும் இளம் பெண்களே ஈடுபடு கின்றனர். இத்தொழில் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 25 முதல் ரூ. 30 வரை வருமானத்தை அடைகின்றனர். பனைப் பொருள் உற்பத்தியாளர் சங்கம் பல்வேறு வடிவமைப்புகளில் செய்யப் பட்ட பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கும் இதர வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்னிய செலாவணி ஈட்டுகிறது. கிராமங்களில் செய்யப்படும் பொருட் களைச் சிலர் வாங்கிச் சுற்றுலாத்தலங்களில் நேரிடையாகக் கொண்டு சென்று விற்பதன் மூலம் மாத வருமானமாக ரூ. 3000/- வரை பெறுகின்றனர்.

பனை ஓலைப் பொருட்கள் செய்யத் தேவையானவை போக மீதி உள்ள ஈர்க்குகள் நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. இரு கையளவு கொண்ட ஈர்க்குகள் இரண்டு ரூபாய் அல்லது மூன்று ரூபாய் வரை விலையாகின்றன. அது போன்று சாரோலையின் கழிவுகள் பாய் பின்னப் பயன்படுகின்றன.

'செட் பாக்ஸ்' என்று சொல்லப்படும் 3 அடுக்குகளைக் கொண்ட நகைப்பெட்டிகளுக்குச் சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பு உள்ளது. 'ட்ரே' எனப்படும் தட்டுகளுக்கும் மதிப்பு உள்ளது. பனை ஓலைத் தொப்பிகளை வெளிநாட்டவர் கள் அதிகம் விரும்பி வாங்குகின்றனர். இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர் போன்ற கடற்கரை சுற்றுலாத் தலங்களே பனை ஓலைப் பொருட்களின் விற்பனைத் தலங் களாகும். சிதம்பரனார் மாவட்டம் 'மணப்பாடு' என்ற சிற்றூர் பனை ஓலைப் பொருள் உற்பத்தியில் புகழ் பெற்றது.

பண்பாட்டுத் தொழில்:

தமிழகத்தின் கிராமியப் பண்பாட்டுக்கும், மரபுக்கும் சிறப்புத்தரும் தொழிலாகப் பனைஓலைத் தொழிலைக் கருதலாம். தமிழ்நாட்டுத் திருமணங்களில் பெரும்பாலான இடங்களில் பந்தியில் பரிமாறப் பனை ஓலைப் பெட்டிகளே பயன்படுத்தப் படுகின்றன. திருமணங்களின் போதும், விருந்துகளின் போதும் சோறு, முதலியவற்றைப் பரிமாற ஓலைப் பெட்டிகளும் பிழாப் பெட்டிகளும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இன்றும் கிராமங்களில் இதனைக் காணலாம்.

தென்மாவட்டங்களில் திருமணத்தின் போது மாப்பிள்ளை வீட்டார் மங்கலப் பொருட்களையும், பட்டுச் சேலையையும் நார்ப்பெட்டிகளில் வைத்து எடுத்து வருவது பல வருடங்களுக்கு முன் வரை மரபாகப் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் இன்று நாகரிகத்தின் காரணமாக எவர்சில்வர், ப்ளாஸ்டிக் போன்ற வற்றால் செய்யப்பட்ட தட்டுகளில் எடுத்து வருவது வழக்கமாகி விட்டது.

அதே போன்று திருமணத்தின் பின் மணமக்களை 'அரிசி பெட்டிக்கு அழைப்பது' என்ற வழக்கமும் உண்டு. அதாவது மணமக்களின் உறவினர்கள் அவர்களைத் தம் வீடுகளுக்கு அழைத்து விருந்து வைத்து நார்ப்பெட்டி நிறைய அரிசியும் அதன் மேலே தேங்காய், பழம், பூ ஆகியவற்றையும் வைத்து மணமக்களுக்குக் கொடுத்து அனுப்புவார்கள். பெட்டி நிறைய அரிசியைக் கொடுக்கும் வழக்கத்தாலேயே இச்சடங்கு முறைக்கு 'அரிசிப் பெட்டிக்கு அழைத்தல், என்ற பெயரும் ஏற்பட்டது. சீர் வரிசைகளும் 'நார்ப்பெட்டி' என்று சொல்லப்படும் சிறிய ஓலை மடல்களைக் கொண்டு பின்னப்பட்ட பெட்டிகளிலேயே கொடுத்துவிடப் பட்டன.

இனிப்பு, காரம் போன்ற பண்டங்களை வாங்கிச் செல்ல மிட்டாய்ப் பெட்டிகள், எனப்படும் ஓலைப்பெட்டிகளே முன்பு பெருமளவில் பயன்பட்டன. இப்பெட்டிகளைக் கையில் எடுத்துச் செல்வதும் சுலபம். பண்டங்களுக்கு இப்பெட்டிகளால் கெடுதலும் இல்லை.

மேலும் இன்று பலவகைப்பட்ட விசிறிகள் அறிமுகப்படுத்தப் பட்டாலும், பனை ஓலையினால் செய்யப்பட்ட விசிறிக்கு வேறு

எதுவும் ஈடாகாது. சுத்தமான அதிக காற்றைத் தரும் இப்பனை ஓலை விசிறிகள் இன்று குடிசைத் தொழில் மூலமாக மறுமலர்ச்சியடைந்து வண்ணங்களும் அழகிய ஓவியங்களும் வரையப்பட்டு விற்கப்படுகின்றன. சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இவ்விசிறி நாகரிகத்தின் சின்னம். அதுவே தமிழகத்தின் பண்பாட்டின் சின்னம்.

அது போன்று பக்தியிலும் வழிபாட்டிலும் பெயர் பெற்ற தமிழகத்தில் பூஜைக்குரிய பூக்களைப் பறிப்பதற்கும், அப்பூக்கள் பல மணி நேரம் வாடாமல் இருக்கவும், கோயில்களில் அர்ச்சனை செய்யக் கொண்டு செல்வதற்கும் பயன்படும் பூக்குடலை பனை ஓலையினால் செய்யப்படுவதும் அதன் சிறப்புக்குச் சான்று பகரும். கிராமங்களில் நடைபெறும் 'கொடை' விழாவில் அர்ச்சனைப் பொருட்களை வைத்து வழிபட 'பிழாப்பெட்டிகள்' பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

பூ வியாபாரிகளும், ஊர் ஊராகச் சென்று பூ விற்போரும் பனை ஓலையினால் செய்யப்பட்ட கூடைகளைத் தம் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றனர்.

வழக்குச் சொற்கள்

பனையின் குருத்து முதல் வேர் வரை உள்ள பொருட்களைக் குறிக்கும் சொற்கள் பல உண்டு. கிராம மக்களின் பேச்சு வழக்கில் இச்சொற்கள் பல மாற்றங்களோடு உச்சரிக்கப் படுகின்றன. உதாரணமாகச் சில சொற்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

காவோலை — காய்ந்த ஓலை

சாரோலை — சார்வோலை (முதிர்ந்த குருத்தோலை)

சில்லாட்டை — சில்லாடை (அல்) பன்னாடை (பனை மட்டையைச் சுற்றியுள்ள கம்பி வலை போன்ற பகுதி)

குரும்பல் — முற்றாத இளம் பனங்காய்

நெட்டு — பனங்காயின் மேல் உள்ள குழிந்த கிண்ணம் போன்ற பகுதி.

தோண்டி	—	நீரை முகந்து எடுக்க ஓலையைக் குழிவாக வைத்துச் செய்வது.
பட்டை	—	ஓலையைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்தவுடன், அப்பகுதிகளைச் சிறு கிண்ணம் போல் குழித்துப் பிடித்தல் (இதில் நீர், பதநீர், கஞ்சி ஆகிய வற்றைப் பருகலாம்).
கொலகாஞ்சி	—	பனங்காய்கள் விழுந்த பின் காய்ந்து நிற்கும் குலைப்பகுதி.
செருவை	—	பனை ஓலையினால் அடைக்கப்படும் வேலி
பிழாப்பெட்டி	—	ஓலைக்கலம்
புறணி	—	குருத்தோலையின் மேல் பக்கம் உள்ள மெல்லிய நரம்புப் பகுதி.
ஈர்க்கு	—	ஓலை மடல்களின் நடுவே உள்ள உறுதியான நரம்புப் பகுதி (ஈர்க்கு)
இலக்கு	—	ஓலை மடல்கள்
பத்தை	—	பனை மட்டையின் கீழ்ப்புறம் இரு பிரிவாக உள்ள பகுதி.
கருக்கு	—	பனை மட்டையின் ஓரங்களிலுள்ள கூர்மையான பகுதிகள்.

முடிவுரை

பனை எல்லாக் காலத்திலும் பயன்தரக்கூடியது. இப்பனை ஓலைத்தொழில் மூலம் பலர் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். பனை ஓலைத் தொழிலின் உற்பத்தியிலும், விற்பனையிலும் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி ஆக்கப்பூர்வமான பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்தினால் புதிய மாற்றத்தை இத்தொழிலின் காணமுடியும். பாரம்பரியம் மிக்க இம்மரபுத் தொழில் அறிவியல் தொழில் நுட்பத்தோடு கூடிய ஒரு கலை என்று கூடச் சொல்லலாம். வருமானத்தை ஈட்டித் தருவதிலும், எளிமையான முறையில் வீட்டுக்குத் தேவையான பொருட்களைத் தருவதிலும், கலைப்பொருளாய் பிற மாநிலத்தவரால் விரும்பப்படுவதிலும் இத்தொழில் சிறப்பு

பெற்று வந்துள்ளது. நாகரிகம் வாய்ந்த நகரிப்புறங்களில் வாழ்வோர் கூட கிராமியத் தன்மை வாய்ந்த இத்தொழிலின் பயன்களைப் பெரிதும் விரும்புவதால் இம்மரபுக் கலையை அழிந்து விடாது காப்பதிலும், இது குறித்த ஆய்வுகள் செய்வதிலும், பள்ளி, கல்லூரிகளில் பகுதிநேரத் தொழிற் கல்வியாய் வைப்பதிலும் பலர் முன் வந்தால் தமிழகம் தனது பண்பாடு மிக்க தொழில்நுட்பமுடைய மரபுக்கலையைப் பாரம் பரியச் சொத்தை இழந்துவிடாது பெருமையடைய வாய்ப்புண்டு.

மாட்டுத் திருட்டு - (மாடு பிடித்தல்)

முனைவர் சி. சுந்தரேசன்
நாடகக் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005.

தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கிடையில் புன்செய் நிலப்பரப்பில் சில ஊர்களில் வாழ்ந்து வருகின்ற கள்ளரின மக்கள் பல தலைமுறையாக இரவில் வெளியூர் சென்று மாடுகளைப் பிறருக்குத் தெரியாமல் ஓட்டி வந்து விடுகின்றனர். உரிமையாளர் வந்து கேட்கும்போது பணத்தைப் பெற்றுக் கொண்டு மாடுகளைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர். இவ்வழக்கம் பெருவழக்கில் குறைந்து ஒரு சில ஊர்களில் இன்றைக்கும் நடந்து வருகின்றது. இந்த மாட்டுத் திருட்டை, மாடு பிடித்தல் என்றே சொல்லி வருகின்றனர்.

மாடு பிடிக்கும் ஊர்கள்

இச்செயலைச் கோமாபுரம், புணக்குளம், மெய்குடிப்பட்டி, மஞ்சப்பேட்டை, அரணிப்பட்டி, ஆனைவிழுந்தான்கேணி, தச்சன் குறிச்சி, மருங்குளம், குருங்குளம், ஏழுப்பட்டி, தாழம்பட்டி, பகட்டுவான்பட்டி, முதலான கிராம மக்களில் சிலர் நடத்தி வருகின்றனர்.

மாடு பிடிப்பவர்கள்

புன்செய் நிலங்களாக உள்ள மேற்சொன்ன ஊர்களில் பெரும்பாலும் கள்ளர்களே வாழ்கின்றனர். இவர்களுடன் சிறுபான்மையாக வலையர்களும் ஆதிதிராவிடர்களும் இடம் பெற்றிருக்கின்றனர்.

கள்ளர்களே மாடு பிடிக்கும் செயலில் ஈடுபடுகின்றனர். துணைக்குச் சில நேரங்களில் வலையர்களை அழைத்துச் செல்வ

துண்டு. அப்பா – மகன், அண்ணன் – தம்பி இணைந்து போவ தில்லை. அவரவர்கள் ஒத்தவுணர்வுடையவர்களுடன் சேர்ந்து சென்று பிடித்து வருகின்றனர். சிறுவர்களும் முதுமையடைந்தவர் களும் செல்வதில்லை. வாரிசு அடிப்படையில் செல்வதில்லை. பரம்பரையாகவும் செல்வதில்லை. ஊரில் பத்து பதினைந்து பேர்கள் இச்செயலில் ஈடுபடுவார்கள். சேர்ந்து செல்வது அடிக்கடி மாறுபடுவதுண்டு. இதில் ஈடுபடுவதற்குப் பயிற்சியும் முன்அனுபவமும் தேவையில்லை. இதில் ஈடுபட அஞ்சுபவர்களை "குரும்பைப் பயல்" என்று ஏளனமாகப் பேசுவர். ஒருவர் மற்றொருவரை எந்த நிலையிலும் காட்டிக் கொடுப்பதில்லை.

காரணம்

ஆதிகாலத்தில் பிழைப்புக்காக இச்செயலைச் செய்து வந்திருக்கின்றனர். பிற்காலத்தில் வீரம் சார்ந்ததாக, தம்மால் முடியும் என்பதற்காகத் தம்மைநாடி வந்தவர்களுக்கு உதவு வதற்காக மேற்கொண்டிருக்கின்றனர். பணத்திற்காகத் திருடுவ தில்லை. அதே நேரத்தில் ஓட்டி வந்த மாடுகளைப் பணம் பெற்றுக் கொண்டுதான் திருப்பி அனுப்பியிருக்கின்றனர். அதேபோல் தொடக்கக் காலத்தில் கள்ளர் அல்லாத செட்டியார், உடையார், வெள்ளாளர், கோனார் முதலானவர்களின் வீட்டில் தான் மாடுகளைப் பிடித்து வந்திருக்கின்றனர். பின்னாளில் தம்மை வந்து அழைப்பவர்கள் யாரைக் காட்டுகிறார்களோ அவர் வீட்டில் ஓட்டி வந்திருக்கின்றனர். சாதிப் பாகுபாடு பார்ப்பதில்லை.

திருட்டு அல்ல

இரவில் தெரியாமல் மாடுகளை ஓட்டி வருதலைத் திருட்டாக அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தம்மிடம் வந்து உதவி கேட்பவர்களுக்காகச் சென்று அவர்கள் காட்டும் அவர்களின் பகையாளர் வீட்டின் மாடுகளை ஓட்டி வருகின்றனர். அம்மாடு களை அவர்கள் வந்து கேட்கும்போது அம்மாடுகளின் விலையில் சரிபாதியினை வாங்கிக் கொண்டு அவரிடமே ஒப்படைத்து விடுவதால் திருட்டு அல்ல என்கின்றனர். மேலும் மாடு ஓட்டி வருபவர்கள் நகை, நெல், மற்றும் பிற எந்தப் பொருளையும் திருடுவதில்லை; எவரையும் தாக்குவதில்லை.

தனக்கு வேண்டியவர்கள் தம்மை நாடி வருபவர்களுக்கு உதவுவதாகவே நினைக்கின்றனர். அவர்களுக்காகச் சென்று அடித்துவிடலாம் என்றால் இவர்கள் வந்தபின்னர் அவர்கள் இவர்களைத் தாக்கி விடுவார்கள் என்பதற்காக மறைமுகமாக அடிக்க வேண்டும் என்பதற்காக இச்செயலை மேற்கொள்வ தாகப் பலரும் தெரிவிக்கின்றனர். பிழைப்புக்காகத் திருடினால் அடிக்கடிச் செல்ல வேண்டும். மாட்டைவிட எளிதாகக் கவர்ந்து வரக்கூடிய பல பொருள்கள் இருக்க இச்செயலைச் செய்ய வேண்டியதில்லை. ஓட்டிவந்த மாடுகள் மகிழ்ச்சியோடு திருப்பிக் கொடுத்து விடுகின்றபடியால் இதனைத் திருட்டாகக் கொள்வ தில்லை. தமது திறமைக்குச் சவாலாக ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

மாடு பிடிக்கும் முறை

பெரும்பாலும் கோடைகாலத்தில்தான் மாடு பிடிக்கச் செல்வர். விவசாயப் பணிகள் முடிந்திருக்க வேண்டும். மாடுகள் அப்போதுதான் வளமாக இருக்கும். பெரும்பாலும் காளை மாடுகளையேதான் பிடிப்பர். வீம்புக்காகத் தவிர்க்க முடியாத நிலையில்தான் பசுக்களைப்பிடித்து வருவர். எருமை மாடுகளைப் பிடிப்பதில்லை. நிலவு வெளிச்சம், இருட்டு என்பதில் கவலைப் படுவதில்லை. ஆறு குறுக்கே இருந்தால் தண்ணீர் இல்லாமல் இருக்கும் நாளில் செல்வர்.

மாடு பிடிக்க இருவர் முதல் ஐவர் வரை செல்வர். எவ்வளவு தூரம் செல்கிறோம் என்பதில் கவலைப்படுவதில்லை. இரவு முடிவதற்குள் தம் எல்லைக்கு வந்துவிடுவர். வர முடியா விட்டால் தமக்கு வேண்டியவர் இடத்தில் கட்டி வைத்து விட்டு மறுநாள் இரவு வந்து சேர்ந்து விடுவர். முதல் நாளே சென்று மாடு கட்டியிருக்குமிடம் சூழல்களைப் பார்த்து விடுவர். அல்லது உள்ளூரில் துணையிருப்பவர்களின் மூலம் அறிந்து கொள்வர். சில நேரங்களில் மாட்டு உரிமையாளரின் வீட்டிலேயே போய் தண்ணீர் வாங்கி அருந்தி வருவதும் உண்டு. பிடிக்கத் தூண்டு பவரின் வீட்டிலே இரவு சாப்பிட்டு விட்டுப் படுத்திருந்துவிட்டு இரவு 11 மணியிலிருந்து 1.30 மணிக்குள் மாட்டைப் பிடித்து வந்து விடுவர். மாட்டுக்காரர்களின் வீட்டில் அசந்திருக்கும் நேரம் அறிய அவர்கள் வீட்டின் சுவர் ஓரம், வைக்கோல் போர், மாடு கட்டியிருக்கும் கொட்டகை முதலான இடங்களில் பதுங்கி

யிருப்பர். அப்போது கையில் ஒரு கல்லை வைத்திருப்பர், அந்தக் கல் எப்போது நழுவி விழுகிறதோ அப்போது நிச்சயம் எல்லாரும் தூங்கியிருப்பர் என்று கணக்கிட்டு விடுவர்.

சாமி கும்பிட்டுப் புறப்படுதல்

மாடு பிடிக்கப் புறப்படும்போது தமது தெய்வங்களான முனியய்யன், சப்பாணி அய்யன், காளியம்மன் முதலான தெய்வங்களைக் கும்பிட்டுவிட்டுப் போவார்கள்.

பயன்படும் கருவிகள்

மஞ்சள் பையில் கைக்கு அடக்கமான பத்து கல்லை எடுத்துக் கொள்வர். இடுப்பு அரைஞாண் கயிற்றில் மடக்குக் கத்தியும், இரண்டு ஊக்கும் போட்டிருப்பர். மரக் கலப்பையிலிருக்கும் கொழுவை ஒருபக்கம் கூராகவும் மறுபக்கம் தட்டையாகவும் அடித்து வைத்திருப்பர். கூரானப் பகுதியால் பூட்டைத் திறக்கவும் முடியாத நிலையில் தட்டையானப் பகுதியால் நெம்பி உடைக்கவும் பயன்படுத்துவர்.

மாடு அவிழ்த்தல்

ஒருவர் போய் மாட்டினை அவிழ்த்து விடுவர். கழுத்தில் மணி, சலங்கை இருந்தால் அறுத்து அங்கேயே போட்டு விடுவர் அல்லது துண்டில் முடிந்து வருவர். பெரும்பாலும் வீட்டின் பக்கமாக ஓட்டி வருவர். பின் பக்கம் வேலியிருந்தால் ஒரு மாடு செல்லுமளவிற்கு வேலியை வெட்டி வழி தயார் செய்வர். அதே போல் எத்தனை வேலியிருந்தாலும் வெட்டி, பாதை ஏற்படுத்தி அதன்வழியே வந்து விடுவர், முன் வாயில் வழியில் கதவு போட்டு பூட்டியிருந்தால் அப்படியே பெயர்த்து விடுவர். எத்தகைய பூட்டுப் பூட்டிருந்தாலும் திறந்தும் விடுவர். சிலர் மாடுகளுக்கு காலில் அல்லது கழுத்தில் சங்கிலியால் பிணைத்து பூட்டும் போட்டிருப்பர். சிலர் தனி அறையில் கட்டியிருப்பர். அனைத்தையும் மீறி ஓசைபடாமல் ஓட்டி வந்துவிடுவர். சிலர் மாட்டிற்கு முன்னர் கட்டில் போட்டு காவலுக்குப் படுத்திருப்பர். அவரைக் கட்டிலோடு எட்டித்தூக்கி வைத்துவிட்டு கால் மாட்டிலும் தலைமாட்டிலும் நிற்பர். விழித்துக் கொண்டு சத்தம்போடத் தொடங்கினால் அப்படியே அமுக்கி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டி அமைதியடையச் செய்துவிடுவர். சிலர் விழித்துக் கொண்டாலும் தூங்குவதுபோல படுத்து

கொள்வர். நான்கு புறமும் மதில் சுவர் உள்ள வீடாக இருந்து வாசலில் நிரம்பப்பேர் படுத்திருந்தால் சுவர் ஓரமாக வைக்கோல் கட்டு, துவரை மிலார்களை அடுக்கி. அவரைத் தாண்டி ஓட்டி வந்ததும் உண்டு. மாடு கட்டுத்தறியிலிருந்து வெளியே வந்து விட்டாலே, பிடிப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது. அந்த ஊர் எல்லையை விட்டு வந்து விட்டால் மாட்டையும் ஒன்றும் செய்ய முடியாது.

கட்டுத்தறியிலிருந்து ஓட்டி வந்த மாடுகளைத் தனித் தனியாயும் இணைத்தும் விரட்டி வருவார்கள். முட்டுகின்ற. உதைக்கின்ற. மாடுகள் இவர்களை ஒன்றும் செய்வதில்லை. ஊக்கினை எடுத்து வாலின் மேல் பகுதியில் குத்தி வைத்து விரட்டுவர். ஊக்கு இல்லாத நிலையில் காரமுள்ளை குத்திவைத்து அதன்மேல் கட்டை விரலை வைத்து அழுத்தினால் மாடு விரைந்து ஓடிக்கொண்டே இருக்கும். சிலநேரம் தொத்த மாட்டைப் பிடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் அதனை வழியில் தமக்கு வேண்டியவர்களிடம் கொடுத்து இரவுக்குள்ளே அறுத்து விடச் செய்வதும் உண்டு.

தப்பித்து வருதல்

ஓட்டி வரும்போது அந்த ஊர் எல்லைக்குள் ஆட்கள் வந்து தடுத்து விட்டால் மாட்டை விட்டுவிட்டு ஓடிவிடுவர். அவர்களுடன் சேர்ந்து கொண்டே திருடனைப் பிடிக்க ஓடிவிடுவர். பிடித்தவர் தம் எல்லைக்குள் வந்து விட்டால் எத்தனைப் பேர் வந்தாலும் தடுக்க முடியாது. பறிகொடுத்தவரே வந்தாலும் தன் மாடுதான் என்று நிரூபிக்க முடியாது. மாட்டைப் பிடித்து வெளியே வந்தவுடன் கழுத்தில், கொம்பில் உள்ள பழைய கயிறுகளை அவிழ்த்து மாற்றிவிடுவர். வழியில் யாராவது கேட்டால் புதுமாடு வாங்கி வருவதாகச் சொல்லிவிடுவர்.

காட்டில் மறைத்துக் கட்டுதல்

ஓட்டி வந்த மாடுகளை தம் பகுதியில் உள்ள முந்திரி மரக் காடுகளில் கட்டி விடுவர். முள்ளுக்காட்டு மரங்கள் உள்ள இடத்தில் மாடு நுழையக்கூடிய அளவிற்கு குடைந்து உள்ளே போய் கட்டி விடுவதும் உண்டு. பள்ளமாக உள்ள வாரியிலும் கட்டி வைப்பர். அடிக்கடி வந்து பார்த்து விட்டுச் செல்வர். இரவில்தான் தண்ணீர் காட்டுவதும் வைக்கோல் தழைகளை

அறுத்துப் போடுவதும் செய்வர். காட்டில் சில மாடுகள் பாம்பு கடித்து இறந்து விடுதலும் உண்டு. சொந்த வேலைக்காகப் பயன் படுத்திக் கொள்வதும் உண்டு.

மாடு இழந்தவர்கள்

உள்ளூர் பகையாளர் மூலம்தான் மாடு திருட்டுப் போயிருக் கிறது என்றறிந்தவுடன் முன்னர் மாடு திருட்டுப் போயிருப்பவர் களை அணுகி சிலரை அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட அந்த ஊர்ப் பக்கம் வருவர்.

பஞ்சாயத்துப் பேசுதல்

பறி கொடுத்தவர்கள் திருடப்படும் பகுதிக்கு வந்து அங்குள்ள தேநீர்க் கடையில் விசாரிப்பர். அங்கே மாடு பிடித்து வந்தவர்கள் முன்னரே எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். தாம் ஓட்டிவந்த மாட்டுக்காரர்கள் வந்து விட்டால் அவர்களுடன் பேச்சும் கொடுத்து டீயும் சாப்பிடுவர். வெற்றிலைப்பாக்கு வாங்கியும் கொடுப்பார்கள். ஒரு கூட்டம் கூடிவிடும். வந்தவர்கள் பணத்துடன் வந்திருக்கிறார்கள் என்றால் உடனே விசயத்துக்கு வந்து மாட்டு விலையில் பாதி கேட்பர். பணம் கொண்டு வரவில்லை என்றால் விசாரித்து வைக்கிறோம் பிறகு வாருங்கள் என்று அனுப்பிவிடுவர். மாட்டு விலையில் பாதியை வாங்கிய பின்னர் ஒரு திசையைக் காட்டி அந்தப் பக்கம் அனுப்பி வைப்பர். அதற்குள் அவர்கள் செல்லும் பக்கம் மாடு வந்து கொண்டிருக்கும். அல்லது அங்கே ஒரு மரத்தில் கட்டப்பட்டிருக்கும். சில நேரங் களில் கையில் கூட கொடுப்பதுண்டு. மாடு பெறும் வரை அங்கே நடக்கும் செலவுகளான தேநீர், வெற்றிலைப்பாக்கு, இட்லி, சாராயம், சாக்கனா போன்ற செலவுகள் எல்லாம் மாடு பறி கொடுத்தவரின் செலவுதான்.

மீள ஓட்டி வந்த மாட்டை உடனே விற்றும் விடுவர். வைத்திருந்தால் குடும்பத்திற்கு ஆகாது என்று கருதுகின்றனர். ஒருசிலர் திருடிச் சென்ற மாட்டை பணம் கொடுத்து மீட்டு வருவது ஏளனமாகக் கருதி மீட்க மாட்டார்கள்.

குரல்வலைக் காசு (பரிசப்பணம்)

மாட்டுக்காரரிடமிருந்து வாங்கும் தொகையைக் குரல் வலைக்காசு என்பர். பரிசப்பணம் என்றும் சொல்வதுண்டு.

அந்தப் பணத்தில் அங்கே கூடியிருப்பவர்கள் சாராயம் மற்றும் தேநீர் செலவிற்கு எடுத்துக் கொண்டு மீதியை மாடு ஓட்டி வந்தவர்களிடம் அப்படியே கொடுத்து விடுவர். சில ஊர்களில் கோவிலுக்கு என்று வரியாக 10, 50, 100 என்று உண்டியலில் போடுவதுண்டு. மீதத் தொகையைப் பங்கிட்டுக் கொள்வர். பங்கு பெற்றவர்கள் அந்தப் பணத்தில் குடும்பத்திற்கு வேண்டிய எந்தப் பொருளையும் வாங்குவதில்லை. பெருந்தொகையைக் குடிப்பதற்கே பயன்படுத்துகின்றனர். வைப்பாட்டி வீட்டிற்கும் செலவிடுவர். இப்பணத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதே கிடையாது.

ஊர்க்கட்டுப்பாடு

ஊருக்குள் பிடித்த மாடு வந்தவுடன் பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்துவிடும். மாடு தேடி வந்தாலும் தெரிந்து விடும். எந்தவொரு நிலையிலும் பிடித்து வந்த மாட்டையும் ஆட்களையும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். இச் செயல்கள் பிடிக்காவிட்டாலும் வேண்டாதவர்களாக இருந்தாலும் பகையாளியாக இருந்தாலும் காட்டிக் கொடுப்பதில்லை. ஊரால் அங்கிகரிக்கப்பட்டத் தொழிலாக இருக்கிறது. பெண்கள் இந்தச் செயலில் தலையிடுவதில்லை.

சந்தையில் விற்றல்

மாட்டுக்கு உரிமையாளர்கள் வராவிட்டால் இவர்களே மாடு பிடித்து வந்த ஊர்ப்பக்கம் சொல்லி அனுப்புவார்கள். அப்படியும் வராவிட்டால் மாட்டைக் கவனிக்க முடியாத நிலையில் பல நாட்கள் கழித்து சந்தைக்கு ஓட்டுவார்கள். சந்தைக்கு முன்பே "எதிர்சைட்" என்று சொல்லப்படுகின்ற எதிர்சந்தையில் விற்று விடுவர். பறிகொடுத்தவர் வந்து அடையாளம் கண்டு மாட்டைக் கேட்டாலும் பாதி பணம் பெற்ற பின்னர்தான் கொடுப்பர். ஒருமுறை புதுக்கோட்டை சந்தையில் மாட்டுச் சொந்தக்காரர் வந்து கேட்டு தகராறு ஏற்பட, காவல் துறையில் புகார் செய்து, நீதிமன்றம் சென்ற பின்னர் வழக்கு மாடு திருடியவர்க்கே வெற்றி பெற்றது. பெரும்பாலும் மாடுகள் சந்தைக்கு ஓட்டுவதில்லை. ஓட்டினாலும் இழப்பதில்லை.

காவல் கிராமங்களும் கப்பம் கட்டுதலும்

மாடுகள் அடிக்கடி பிடித்துக் கொண்டு செல்லப்படும் தொல்லையிலிருந்து தப்பிக்க, காப்பாற்றிக் கொள்ள சில

கிராமங்கள், மாடுகள் திருடும் கிராமங்களோடு ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். அதற்காக அந்த கிராமத்து மக்களுக்கு விளைபொருட்களை ஊரில் செல்வாக்குள்ளவர்கள் திரட்டிக் கொண்டுபோய் கொடுப்பதும் உண்டு. இவர்களே போய் வசூல் செய்து கொள்வதும் உண்டு. அப்படிக் கொடுக்காத காலங்களில் மாடுகளைத் திருடி அடையாளம் காட்டுவதுண்டு. பிறகு முறை யாகக் கொடுத்துவிடுவர் பெற்றப் பொருளை ஊர் முழுக்கப் பங்கிட்டுக் கொடுப்பர். இத்தகு கிராமங்களைக் காவலூர் என்பர். கிராமத்தோடு அல்லாமல் சில ஊரில் பணக்காரர்கள் மட்டும் உடன்பாடு வைத்துக் கொண்டு பொருளோ, பணமோ அனுப்பி விடுவர். ஊராக அல்லாமல் சிலர் தனிப்பட்ட முறையிலும் காவல்மேல் ஒப்புக் கொள்வதுண்டு. இவர்களைக் காவாண்டவர் என்பர். இந்த ஊர்களைக் காவல் கிராமம் என்றும், பணம், பொருள் செலுத்துவதைக் கப்பம் கட்டுதல் என்றும் சொல்வது உண்டு.

காவல் நிலையத்தில் படுத்தல்

முப்பதாண்டுகளுக்கு முன்னர் இரவில் குறிப்பிட்ட இந்த ஊர் மக்களில் குறிப்பேட்டில் உள்ளவர்கள் காவல் நிலையத்தில் தான் படுக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. தவிர்க்க முடியாத சூழலில் இவர்கள் வெளியூர் செல்ல வேண்டுமானால் தங்க வேண்டியிருந்தால் அந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் தங்கியிருந்து எழுதி வாங்கி வரவேண்டும். கந்தர்வக்கோட்டை, வல்லம், கோமாபுரம் முதலான காவல் நிலையங்களில் படுத்திருந்திருக்கின்றனர். சட்டம் இவ்வாறு இருந்தும் மாட்டுத் திருட்டு நடந்து கொண்டே இருந்திருக்கிறது. பின்னால் காவல் நிலையத்தில் படுக்கும் வழக்கம் நிறுத்தப் பட்டிருக்கிறது.

காவல்துறை அதிகாரி வீட்டு மாட்டுத் திருட்டு

பத்தாண்டுகளுக்கு முன்னர் தஞ்சாவூர் காவல் துறையில் பெரிய அதிகாரிக்கும் சிலருக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரியை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவரது பசுமாட்டினை, இத்தொழில் வல்லவர்களாகப் பார்த்து ஊருக்கு ஒருவராகச் சேர்ந்து மாட்டை இரவோடு இரவாக ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டனர். விடியலுக்குள் மாட்டை அறுத்து ஒன்றுமில்லாமல் செய்து விட்டனர். காவல் துறையினர்

எவ்வளவு முயன்றும் திருடியவர்களைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இத்தொழிலில் ஈடுபடும் எல்லாரையும் பிடித்துவந்து மொட்டையடித்து ஒரு பக்கம் மீசையை எடுத்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி நகரின் முக்கிய வீதிகள் வழியாக உள்ளாடையுடன் ஊர்வலமாக வரச் செய்திருக்கின்றனர். ஆனால் மாடு பிடித்தவர்களை இன்று வரை அறியமுடியவில்லை.

கோநகர் நாட்டுத் தாக்குதல்

கோநகர் நாடு என்னும் கோனூர் நாடு என்றும் சொல்லப்படும் பதினெட்டு கிராமங்களிலும் புணக்குளம் என்ற ஊர்க்காரர்கள் தான் மாடு பிடித்துக் கொண்டிருந்தனர். ஒருமுறை ஆத்திரம் கொண்ட இப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு இலாரிகளை எடுத்துக்கொண்டு புணக்குளத்திற்குச் சென்று அவ்வூர் மக்களைத் தாக்கியிருக்கின்றனர். ஊரையே கொள்ளையடித்திருக்கின்றனர். வைக்கோல் போர்களை தீயிட்டு கொளுத்தியிருக்கின்றனர். வண்டி மாடுகளைத் தம்மூருக்கு ஒட்டி வந்திருக்கின்றனர். ஆடுகளையும் தூக்கி வந்து வெட்டி சாப்பிட்டிருக்கின்றனர். இப்பகுதி மக்கள் இச்செயலை ஆளில்லாமல் இருக்கும் போது நடந்த பகற்கொள்ளை என்கின்றனர். இவ்விரு நிகழ்ச்சிக்கும் பிறகு மாடுபிடித்தல் குறைந்திருக்கிறது.

நிறைவு

மாடுபிடித்தல் வீரமாகவும் சமத்தன் என்று சொல்வதற்காகவும் செய்யப்படும் இச்செயலைப் பெருமையாக நினைக்கின்றனர். தன்னை நம்பி வந்தவர்களுக்கு உதவும் நோக்கத்தோடு செய்கிறார்களாம்.

காளைமாட்டைத்தான் திருடுகிறார்கள். சில சமயங்களில் பசு மாடுகளை திருடுகிறார்கள்.

நெல், நகை, மற்றப் பொருட்களைத் திருடுவதும் கொலை, கொள்ளையடிப்பதும் கிடையாது.

ஒட்டி வந்த மாட்டை விற்பதோ, திருப்பித்தர மறுப்பதோ இல்லை, மாட்டின் விலையில் பாதியை வாங்கிக்கொண்டு ஏமாற்றாமல் மாட்டை திருப்பி அனுப்பிவிடுவர். அந்தப் பணத்தில் நல்ல செயல்கள் செய்வதில்லை.

மாடு பறிகொடுத்தவர் காவல் துறையில் புகார் செய்வ தில்லை. காவல் துறையும் கண்டு கொள்வதில்லை.

தற்போது இவர்களாகவே நிறுத்திவிட்டனர். ஒரு சிலர் மட்டும் செய்து வருகின்றனர்.

மாடுபிடிக்கச் சென்றுவிட்டால் சும்மா திரும்புவதில்லை. சில நேரங்களில் கடிதம் போட்டோ, ஆள் மூலம் தகவல் கொடுத்தோ மாடுகள் பிடித்த நிகழ்ச்சி பல உண்டு.

பெரும்பாலும் பிடிபட்டதும் அடிபட்டதும் இல்லை. இவர் களும் தாக்கியதும் இல்லை.

சில ஊர்க்காரர்கள் சில பகுதியில் தான் திருடுவார்கள் என்ற சொல் வழக்கம் உண்டு. அந்தப் பகுதியில் ஏதாவது பொருள் காணவில்லை என்றால் இந்த ஊரின் பெயரைச் சொல்லி அங்கேயிருந்தா திருட வந்து விட்டான். நல்லா தேடுங்கள் இருக்கும் என்ற சொல் வழக்கு இருப்பதை கேட்க முடிகிறது.

இந்தப் பகுதி மக்கள் இச்செயலை ஒரு திருட்டுத் தொழிலாக ஏற்றுக் கொள்வதோ... நினைப்பதோ இல்லை.

செப்புத்திருமேனி வடித்தல்

சு. தமிழ்வேலு
அ. வ. அ கல்லூரி
மயிலாடுதுறை – 609 305

தமிழர்களின் வாழ்வு இலக்கியமானது போன்று அவர்களது செயல்கள் அனைத்தும் அறிவியலாக இருந்தன. அறிவியல் கூறு முழுமையானதாக இல்லாது போயினும் அடிப்படைக் கூறாக அறிவியலும் தொழில் நுட்பமும் சார்ந்ததாக இருந்துள்ளது. இவ்வறிவியலையும் தொழில் நுட்பத்தையும் தமிழர்கள் புதியனவாகவோ அரியனவாகவோ கருதவில்லை. ஆகையால் அதனை வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால் அவ்வடிப்படைக் கூறுகள் தந்தை – மகன், ஆசிரியன் – மாணவன் (குலமுறை, குருமுறை) என்ற முறையில் கடத்தப்பட்டு வந்துள்ளன. ஒவ்வொரு செயல்பாட்டிலும் உள்ள அறிவியல் கூறினையும் தொழில் நுட்பத்தினையும் மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும் என்பது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

தமிழர்கள் கலைகளைத் தோற்றுவிப்பதிலும் தோற்றுவித்த கலைகளைப் பாதுகாப்பதிலும் சீரும் சிறப்புமாக இருந்துள்ளனர். இவர்கள் தோற்றுவித்த, பாதுகாத்த கலைகள் இன்று சீரழியும் போக்கில் பெரும்பாலானவை போய்க்கொண்டிருக்கின்றன.

அவ்வகையில் கோயில்களில் வழிபாடு செய்யக் கூடிய, ஊர்வலமாக எடுத்துச் செல்கின்ற உற்சவ மூர்த்திகள் எனப் பெறுகின்ற செப்புத் திருமேனிகள் செய்கின்ற முறைகளைத் தொகுத்துக் காண்கின்றது.

வரலாற்றில் திருமேனிகள்:

உருவம் சமைத்தல், வழிபடுதல் என்பது சிந்துவெளி நாகரிகத்திலிருந்து நமக்குச் சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன.

ஆனால் செப்புத்திருமேனிகள் பல்லவர் காலத்தின் இறுதியில் தொடங்கி இன்றுவரை காலவரிசையில் ஏராளமாகக் கிடைக்கின்ற பொழுதிலும் சோழர்கள் காலத்திய செப்புத்திருமேனிகள் அழகிலும் அமைதியிலும் மதிப்பிலும் உயர்ந்திருக்கின்றன. அதற்குக் காரணம் அச்சிலைகளைச் செய்த சிற்பிகளே (ஸ்தபதி) ஆவார்கள் எனலாம். அவர்களுக்கு அன்றைய அரசு ஆதரவு இருந்தமையால் கலையை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் இருந்ததைக் கூறலாம்.

இலக்கியங்களில் செப்புத் திருமேனிகள்:

தமிழ் இலக்கியங்களில் தெய்வ உருவங்கள், செப்பு விற்றமை, அரக்கினால் செய்த சிலை என்பன போன்ற செய்திகளைக் காண முடிகின்றன. அச்செய்திகளின் தொகுப்பு வருமாறு:

வேதியர் இல்லங்களில் வழிப்படக்கூடிய தெய்வ உருவங்கள் (பெ. பா. ப. 298); திருமாலினை வணங்கிக் கையால் தொட்டு ஆணையிட்டான் (கலி. 108: 55); செம்பு, வெண்கலப்படிமங்கள் விற்பனை (சிலம்பு 14: 174); அரக்கால் செய்த பாவை வெயில் பட்டு உருகுவதைக் குறித்தல் (குறுந். 195:6) மணியை ஊற்றுவதற்கு உலைக்கண் வைக்கும் வழக்கம் (குறுந். 155: 3,4) பொன் செய் பாவை (ம. கா. 410; அகம் 127: 8) மதுரை அங்காடியில் செம்பினை நிறுத்து வாங்கியமை (ம. கா. 514).

இன்றும் செப்புத்திருமேனிகள் கோயில்களுக்கும் தனிப் பட்டவர்களின் வழிப்பாட்டிற்கும் செய்யப் பெறுகின்றன. ஆனால் செய்வோர் தமிழகத்தில் மிகக் குறைவாகவே உள்ளனர்.

செய்யுமிடங்கள்:

செப்புத்திருமேனிகள் தற்காலத்தில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம், சுவாமிமலை, புதுச்சேரி மாநிலம் உறுவையாறு, கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம், சிறுவந்தாடு முதலான ஊர்களில் மட்டும் செய்கின்றனர். இச்சிலைகளைச் செய்பவர்கள் விஸ்வகர்மா இனத்தைச் சேர்ந்த ஆசாரிகளில் ஒரு பிரிவினரான ஸ்தபதியார்கள் ஆவார்கள். இவர்களில் ஒரு சில குடும்பங்கள் மட்டுமே ஈடுபடுகின்றன.

ஆய்வுக்களம்:

களஆய்வுக் களமான மேல்பட்டாம் பாக்கத்தில் இரு குடுபங்கள் இத்தொழிலைச் செய்து வந்தன (கங்காதர ஸ்தபதி, ஆறுமுக ஸ்தபதி). இதில் முதலாமவர் இறந்துவிட அவர் குடும்பத்தினர் ஈடுபடவில்லை. அடுத்தவர் இன்றும் தொழிலில் ஈடுபடுவதோடு தம் மகன்கள் ஆறு பேர்களுக்கும் தனித்தனியே கடை வைத்தும் கொடுத்துள்ளார். இவர்கள் உறுவையாறிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்றனர்.

செப்புச்சிலை செய்கின்ற பணிகளில் முதன்மைப் பணிகள், தொழில் இரகசியம் உள்ள பணிகள் ஆகிய இரண்டினையும் தாங்களே தனித்துச் செய்கின்றனர். பிற பணிகளுக்கு வேற்றுச் சாதியினரையே பெரும்பாலும் பயன்படுத்திக்கொள்கின்றனர் தொழிலில் இரகசியத்தைக் கற்றுக் கொள்வர் என்ற காரணத்தினால் தம் சாதியினரைப் பணியில் வைத்துக் கொள்வதில்லை.

கட்டுரையாளர் இச்சிலைகள் செய்யும் பகுதியையே வாழ்விடமாகக் கொண்டமையால் இக்கட்டுரையில் தொகுத்த செய்திகள் அனைத்தும் உற்றுநேர்க்கல் அடிப்படையிலும் பங்கு பெறும் உற்றுநோக்கல் அடிப்படையிலும் செய்திகள் திரட்டப்பட்டுள்ளன.

செய்யும் முறைகள்:

செப்புத்திருமேனிகள் தமிழகத்தில் மூன்று முறைகளில் செய்கின்றனர். அவை:

1. முழுப்படிமமாக வடித்தல்.
2. உட்புறம் 'போல்' (டம்மி) வைத்துச் செய்தல்.
3 'டை' செய்து வார்த்தல்.

என்பனவாகும்.

'டை' செய்து வார்த்தல் என்பது சிறிய அளவில் செய்யக் கூடிய சிலைகளை இவ்வகையில் செய்கின்றனர். வேண்டிய உருவினை இரும்பு போன்ற கடினமானத் தனிமத்தால் இரு பகுதியாகப் பிரித்து உள்ளீடு செய்து வைத்துக் கொண்டு அதனுள் எந்தப் பொருளால் (தனிமத்தால்) வேண்டுமே அதனை உருக்கி வார்த்துச் சில நிமிடங்களில் சிலையாகத் தருவர்,

இத்தகைய முறையை இவர்கள் பின்பற்றுவது கிடையாது. ஆனால் தொழில்முறையில் ஊர் ஊராகச் சென்று இவ்வாறு செய்து வரக்கூடியவர்கள் உள்ளனர்.

உட்புறம் 'போல்' (டம்மி) வைத்துச் செய்தல் என்பதைப் பொள்ளல் முறை என்பர். பெரிய சிலைகளைச் செய்யும் பொழுதோ, வாகனங்கள், தலைவர்கள் உருவம் போன்றவை சமைக்கும் பொழுது இம்முறையில் செய்கின்றனர். இதனைக் கடினமான ஒரு பணியாகக் கருதுக்கின்றனர்.

மண்ணால் உருவம் சமைத்து அதன்மேல் மெழுகு பூசி, அதன் பிறகு மண் கொண்டு பூசி உருவம் சமைப்பர்' உலர்ந்த பிறகு தனிமங்களை உருக்கி ஊற்றி முழு உருவம் கொடுப்பர். இதில் முழு வடிவமும் தெளிவான உருவமும் கிடைக்கும் எனக் கருத முடியாது. ஓரளவு நல்லதாகக் கிடைக்கும்.

முழு வடிவமாக வார்த்தல் என்பது சிலையினை முழு வடிவமாகச் செய்தல். இதற்கு முதலில் மெழுகு பிடித்து அதன் மேல் மண் கட்டி, அதன் பின் மெழுகினை உருக்கி வெளியில் எடுத்துவிட்டு அதனுள் தனிமங்களை உருக்கி வார்த்து சிலையாக வடித்தெடுத்தல் என்னும் முறையாகும். இம்முறையினைப் பற்றி மட்டும் விரிவாகக் காணலாம்.

முழுப்படிவமாக வடித்தல்:

சிலை வேண்டுவோரின் எடைக்கு ஏற்ப ஸ்பதிகள் செய்து தருகின்றனர். அவ்வாறு கேட்கும் எடைக்கு ஏற்ப 10-க்கு1 என்ற விகிதத்தில் மெழுகினால் அந்த உருவினைச் சமைக்கின்றனர். மெழுகினால் சிலை செய்யும் பொழுது சில ஆகம விதிகளைப் பின்பற்றுகின்றனர். அவற்றுள் குறிக்கத்தக்கது மூலவரின் உயரத்தை விட உற்சவரின் (செய்யும் சிலை) உயரம் அதிகம் போகக்கூடாது என்பதாகும்.

அவ்வாறு மெழுகினால் (தேன் மெழுகினால்) உருவம் சமைக்கும் பொழுது முழு வடிவினைச் செய்தல் போன்றே அணிகலன்கள் போன்ற சிலவற்றையும் அதிலேயே செய்து விடுகின்றனர். இவ்வாறு மெழுகினால் உருவம் செய்தலை 'மெழுகு பிடிக்கிறது' என்று கூறுகின்றனர்.

மெழுகினால் செய்யப்பட்ட சிலை ஓரிரு நாள்கள் நீரில் மூழ்கவிட்டு வைக்கின்றனர். அதன்பின் மாட்டுச் சாணத்தையும் புற்றுமண்ணையும் நன்கு அரைத்து மெழுகு சிலையின் மீது விரல் கன அளவிற்குப் பூசுகின்றனர். அதனை அப்படியே நிழலிலேயே உலர்த்துகின்றனர். நன்கு உலர்ந்தபின் சில நாள்கள் கழித்துச் சாக்கினையும் மண்ணையும் அரைத்து மெழுகு சிலையின் மீது பூசுகின்றனர்-சில நாள்கள் உலர்ந்த பின் பெரிய சிலைகளாக இருந்தால் கம்பி கொண்டு கட்டும் வழக்கமும் உண்டு. இல்லாத பொழுது அதன்மேல் மேலும் மேலும் மண் கட்டுகின்றனர். மூன்றாவது முறை மண் கட்டும் பொழுது பானை ஓடுகளை அதன்மேல் பதிய வைப்பர். இதற்கு 'ஓடு குத்துதல்' என்பர். இதைப் போன்று ஐந்து முறை மண் கட்டிய பிறகு சிலையினை வார்ப்பதற்காகத் தயாராக இருப்பதாகக் கருதுவர்.

மெழுகு பொம்மையிலிருந்து மண் கட்டும் பொழுது ஒவ்வொரு படிநிலையிலும் துளை வைத்தே செய்கின்றனர். இதற்குத் 'தாள் கட்டுதல்' என்பர் சிலையின் அடிப்பாகத்தில் மெழுகு வடிய ஒரு துளையும் தனிமங்களை உருக்கி ஊற்றுவதற்கு ஒரு துளையும் காற்று போவதற்கு ஒன்றுமாக மூன்று தாள்கள் வைக்கின்றனர். இது சிலையின் அளவினைப் பொறுத்து அதிகப் படுவதுண்டு.

அவ்வாறு மண் கட்டப்பட்ட உருவத்தினைச் சிறு குழி வெட்டி அதில் இட்டு உள்ளே உள்ள மெழுகினை நெருப்புப் போட்டு உருக்கி வெளியில் எடுத்து விடுகின்றனர். இவ்வாறு மெழுகு வெளியில் எடுத்துவிட்டு உள்ள மண் பொம்மைக்குக் 'கரு' என்று கூறுகின்றனர்.

இதே நேரத்தில் தனிமங்களை (ஐம்பொன்னையும்) உருக்கத் தொடங்குகின்றனர். (செம்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி, தங்கம்) இத்தனிமங்களைக் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப் படையில் கலக்கின்றனர் முன்பெல்லாம் செம்பு அதிக அளவில் சேர்க்கப்பெறும் ஆனால் இப்பொழுதெல்லாம் பித்தளைதான் அதிக அளவில் சேர்க்கப் பெறுகின்றது. வெள்ளியும் தங்கமும் மிகச்சிறிய அளவில் தான் சேர்க்கின்றனர்.

அவ்வாறு உருக்கும் பொழுது ஐந்து அடி ஆழமுள்ள அடுப்பில் உருக்குகின்றனர், அடுப்பில் கரியினைக் கொட்டி

(லிக்கோ, மரக்கரி) அதன்மேல் 'மூசை' என்னும் உருக்குக் கலத்தினை அமைத்து அதனுள் பித்தளையை முதலில் வைத்து உருக்குகின்றனர். அதனுடன் சிறிது நேரத்திற்குப் பின் செப்பும், அதன்பிறகும் வெண்கலமும் உருக்குகின்றனர். வெள்ளியும் தங்கமும் இறுதியில் சேர்த்தலும் தனியாக உருக்குதலும் உண்டு.

உருக்கிய ஐம்பொன் குழம்பினைக் கிடுக்கியால் இருவர் பிடித்துக் 'கரு'வினுள் ஊற்றுவர். அவ்வாறு ஊற்றும் பொழுது காற்றுக்குழாய், மெழுகுக்குழாய் ஆகிவற்றின் மேல் ஏறாமல் பார்த்துக் கொள்வர்.

சிலை பெரியதாக இருக்கும் பொழுது இரண்டு தாள்கள் மூலமாக ஒரே நேரத்தில் ஊற்றுவர்.

தனிமங்களை உருக்கும் பொழுது திறந்த வெளியில் கரியினை மட்டுமே கொண்டு எரிக்கின்றனர். இதற்குக் 'காத்துப்பெட்டியினை' உதவியாகக் கொள்கின்றனர்.

தனிமங்களை உருக்கி ஊத்துகின்ற செயலுக்குச் 'சரக்கு ஊத்துறது', 'சிலை ஊத்துகிறது' என்று குறிக்கின்றனர்.

இவ்வாறு சிலை ஊற்றிய பிறகு ஓர் இரவு(அ) ஒரு நாள் கழித்து மேல் பகுதியிலுள்ள மண் ஓடுகளை உடைத்து விட்டு சிலைப்பகுதிகளைப் பார்ப்பர். அவ்வாறு உடைத்துப் பார்க்கும் செயலுக்குச் 'சரக்குச் சரியா பாய்ஞ்சுதா' என்கின்றனர்.

அதன்பின் சிலையின் வடிவினை அழகுப் படுத்துவதற்காக வெட்டு இரும்பினால் மேல் பகுதியினைச் செதுக்கி எடுப்பர். இவ்வாறு செதுக்கி எடுப்பதற்கானச் செயலுக்குச் 'செதா பௌத்தல்' என்று சொல்கின்றனர். அதன்பின் அறம் போட்டுச் சிலையினைச் சமன் செய்கின்றனர். அதே நேரத்தில் பளபளப்பும் ஏறுகின்றது. அதன்பின் சித்துளியினால் கோடு கட்டுகின்றனர். அதாவது அணிகலன்கள் முதலான அலங்காரப் பொருட்களை வடிவமைப்பர்.

சிலையினை முழுவதும் செய்து முடித்தப்பின் அந்த அளவிற்கேற்ப பீடம் தனியாகச் செய்து அதனுடன் வைத்துப் பொருத்தி மடக்குவர். இப்பொழுது சிலை உருவான பிறகு 'பட்டைச்சீலை' போட்டுத் தேய்ப்பர்.

அதன்பிறகு சிலையினைக் கழுவுவர். அதற்கு வைக்கோல் சாம்பல், புங்கங்கொட்டை, முதலான சில பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். அபிஷேகத்திற்குப் பின் கண் திறத்தல் நிகழும். இதற்கு வெள்ளி, தங்கம், இரும்பு ஆகிய மூன்று ஊசி களைப் பயன்படுத்துகின்றனர்.

கண் திறப்புக்குப் பிறகு படையல் போட்டு கண்ணேறு கழித்து முதல் ஊர்வலம் (கரிவோலம்) விடுவர். அதன்பின் கோயிலில் அமர்த்துவர். (பிரதிஷ்ட்டை செய்வர்).

இச்செய்கையைப் பெரும்பாலும் மரபு வழியாகவே செய்து வருகின்றனர். இதில் அவர்கள் அறியாமலேயே சில அறிவியல் நுட்பங்களைச் செய்தும் பின்பற்றியும் காத்தும் வருகின்றனர்.

மெழுகின் எடைக்கும் ஐம்பொன் எடைக்குமான விகிதாச் சாரத்தினைச் சரியாகப் பகுத்திருத்தல்.

பொம்மையினுள் உள்ள மெழுகினை வெளியேற்றும் முறையும் அவ்வாறு வெளியேற்றும் பொழுது பொம்மை உடைந்து நொறுங்கி விடாமலிருக்க அதற்குத் தக்க மண்ணைப் பதப்படுத்திப் பயன்படுத்தல்.

செம்பினை வார்க்கும் பொழுது காற்று வெளியேற காற்றுக் குழாய் அமைத்தல்.

தனிமங்களை உருக்கப் பயன்படுத்தும் பொருட்கள், முறைகள் (கரி, லீக்கோ கரி, மூசை, நவச்சாரம் முதலியன).

தகவல் உதவி:—

1. ஆ. யாகமூர்த்தி ஸ்பதி, வ. 50, விஸ்வகர்மா, மேல்பட்டாம் பாக்கம்
2. ஆ. சவுந்தரராஜன் ஸ்பதி, வ. 30, விஸ்வகர்மா, மேல் பட்டாம்பாக்கம்
3. இரவி வ. 35, வன்னியர், மேல்பட்டாம்பாக்கம்
4. சு. பழனிவேலு வ. 20, வன்னியர், மேல்பட்டாம்பாக்கம்,
5. து. சேகர் வ. 30, வன்னியர், மேல்பட்டாம்பாக்கம்,
6. வைத்தியநாதன் (மோல்டர்) வ. 35, விஸ்வகர்மா, மேல்பட்டாம்பாக்கம்.

ஈயம் பூசுதல்

வீ. நிர்மலா ராணி
தமிழ்ப்புலம்
கிராமியப் பல்கலைக் கழகம்
காந்திகிராமம்

1. தொன்று தொட்டு வரும் மரபு வழிப்பட்ட தொழில் நுட்பங்களில் ஈயம் பூசுதலும் ஒன்று. இத் தொழிலின் நோக்கம், திறன், மூலப் பொருட்கள், தொழில் செய்வோர் தொழிலின் தற்கால நிலை ஆகியவற்றை விளக்கியுரைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

2. பாலீயம் என்றழைக்கப்படும் 'வெள்ளியத்தை' (Sn), உருக்கி, சமையல் மற்றும் வீட்டு உபயோகத்திலுள்ள பித்தளைப் பாத்திரங்களின் உட்புறத்தில் பூசும் நுட்பத்திறனை ஈயம் பூசுதல் (Tinning) என்பர்.

3. இத்தொழிலுக்கு மூலப் பொருட்கள் பாலீயம் (Sn), நவச்சாரம் (அம்மோனியம் குளோரைடு – NH_4 Cl.) ஆகியவையும் உப பொருட்களான அடுப்புக்கரி, துருத்தி, கொரடு, பழைய துணி ஆகியவையும் அடிப்படையாகின்றன. அன்றாட, வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் வீட்டுச் சமையல் பாத்திரங்கள் (பித்தளை அண்டா, பானை, குடம், இட்லிச் சட்டி தாம்பளத்தட்டு, தம்பளர்...) ஈயம் பூசுவதற்கான பொருள் களாக அமைகின்றன.

4. ஈயம் பூசப்படாத பாத்திரங்களில் வைக்கப்படும் உணவுப் பொருள்களிலுள்ள அமிலங்கள் (Organic Acids) பாத்திரங்களின் உலோகப் பொருளோடு (பித்தளை) சிறிதளவு கலந்து விடு கின்றன. இதன் விளைவாக, உணவுப் பொருட்கள் நச்சுத் தன்மை அடைகின்றன. விரைவில் கெட்டும் விடுகின்றன.

இவ்வுணவை உண்டால் உடலில் பல நோய்களும் ஏற்படுகின்றன. பாத்திரங்களும் அமிலப் பொருட்களின் தாக்குதலால் களிம்பு போன்ற துர் நாற்றத்தை அடைவதோடு, விரைவில் பழுதும் அடைந்து விடுகின்றன.

5. இந்நிலைகள் ஏற்படாவண்ணம் பாத்திரங்களுக்கு ஈயம் பூசப்படுகின்றது. பூசப்பட்ட ஈயம், பாத்திரங்களிலுள்ள உலோகங்கள் உணவுப் பொருட்களுடன் கலப்பதைத் தடுக்கிறது உணவுப் பொருட்களின் தூய்மையையும், சுவையையும் நறுமணத்தையும் காக்கின்றது. இதனால் மனிதனின் உடல் நலம் காக்கப்படுகின்றது. அப்பாத்திரங்களும் நீடித்த உழைப்பிற்கும் பயன்பாட்டிற்கும் உரியவையாகின்றன. இங்ஙனம் மனித வாழ்விற்கு நன்மை பயப்பதே ஈயம் பூசும் தொழிலின் நோக்கமாகும்.

6. தொழிலைச் செய்யத் தொடங்கும்போது, அதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எளிதில் தீப்பற்றக்கூடிய வைக்கோல் படப்பு மற்றும் கூரை வீடு போன்ற பகுதிகள் இல்லாத இடமாக இருப்பது அவசியம். தொழில் செய்யும்போது தீப்பொறி பட்டு விரைவில் நெருப்பு பற்றக்கூடிய ஆடைகளையும் அணிதல் கூடாது. அடுப்புக்கரி கொண்டு பட்டறை அமைத்து, அதில் தூய்மையாக்கப்பட்ட பாத்திரத்தை வைத்து சூடேற்ற வேண்டும். சூடு ஏறுகின்றபோது பாத்திரத்தை இரும்புக் கொரடால் இசைவாகப் பிடித்துக்கொண்டு நவச்சாரப் பொடி (NH_4 Cl) சிறிதளவை உட்புறத்தில் தூவ வேண்டும். பாத்திரத்தின் உட்பகுதி பழுப்பு நிறம் அடையும். அந்நிலையில் பாலீயத்தைப் பாத்திரத்தின் அளவிற்கு ஏற்ப இடவேண்டும். பாத்திரத்தில் ஏற்றப்படும் குறிப்பிட்ட வெப்ப நிலையில் (பாலீயத்தின் உருகுநிலை 232°C) பாலீயம் உருகத் தொடங்கும். உருகிவரும் பாலீயத்தைச் சுருட்டப்பட்ட பழைய துணியைக் கொண்டு பாத்திரத்தின் உட்புறம் முழுவதும் நன்கு படியுமாறு அழுத்தமுறப் பூசவேண்டும். இவ்வாறு ஈயம் பூசப்பட்ட பாத்திரம் புதுப் பொலிவுடன் காணப்படும். பின்பு அதனை நமது தேவைக்கேற்ப உபயோகப்படுத்தலாம்.

7. இத்தொழிலைத் தங்கள் குலத் தொழிலாகச் செய்து வந்தவர்கள் ஆசாரி இனத்தவர் மட்டுமே. இவர்களை அடுத்து குறவர் இன மக்கள் இத்தொழிலைப் பெரும் பான்மையாகச் செய்து வருகிறார்கள். இம்மக்கள் இத்தொழில் காரணமாக

குடும்பத்தை விட்டு தனியாகவோ அல்லது குடும்பத்துடனோ ஊர் விட்டு ஊர் சென்று அல்லது மாநிலம் விட்டு மாநிலம் சென்று (தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம்) வாழ்க்கை நடத்துகிறார்கள். தற்போது இத்தொழிலைப் பிற இன மக்களும் குறிப்பாகக் குடும்பன், வள்ளுவன், வண்ணான் போன்றவர்களும் சிற்சில இடங்களில் செய்து வருகிறார்கள்.

8. இன்று காலச் சூழல் காரணமாக, மக்கள் பெருவாரியாக எவர்சில்வர் பாத்திரங்களை உபயோகித்து வருகின்றனர். இதனால் ஈயம் பூசும் நிலை தேவையற்றதாக உள்ளதால் ஈயம் பூசும் தொழில் நசிவடைந்துள்ளது இத் தொழிலின் வீழ்ச்சியால் தொழிலாளர்களின் பொருளாதார நிலை பின்தங்கியுள்ளது.

வேளாண் தொழில் நுட்பத்தில் மண்புழுவின் பயன்பாடு

எஸ். வி. எஸ். பாலமுருகன்
ஜி. எஸ். விஜயலட்சுமி
ஸ்ரீ பரமகல்யாணி சுற்றுச்சூழல் அறிவியல் மையம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
ஆழ்வார்குறிச்சி – 627 412

மனித இனம் தோன்றி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகி, பல்வேறு காலங்களைக் கடந்து வந்து தற்போது நவீன உலகில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் யில் மக்கள் தொகை பெருக்கம், உணவுப் பற்றாக்குறை, அடிப்படை வசதிகளின் தேவை போன்றவற்றிற்காகப் பல்வேறு நவீன அறிவியல் நுட்பத்தைக் கண்டறிந்து நவீன எந்திரத் தன்மையையும் உருவாக்கியிருக்கிறோம். இருந்த போதிலும் ஒரு சிலவற்றில் நம் முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அறிவியல் பின்னணியிலான பல்வேறு தொழில் நுட்பத்தை இன்றளவும் பயன்படுத்தி வருகிறோம். அதில் இன்றளவும் பயன்படுத்தப் படும் ஒரு மரபு வழி முறைதான் மண்புழுவின் பயன்பாடு.

கிரேக்க விஞ்ஞானி அரிஸ்டாட்டில் கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் பூமியில் வாழும் உயிரினங்களில் மண்ணின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிப்பது மண்புழு என்றார். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிவியல் மேதை சார்லஸ் டார்வின் இயற்கை விவசாயத்தின் தந்தை என்றழைத்தார். மசனபோ ப்யூக்கோகா என்ற அறிஞர் ஆழ உழும் ட்ராக்டரை விட மண்புழு மகத்தானது என்கிறார். எவ்வாற்றிற்கும் மகுடமாகப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தமது மனோன்மணியத்தில் மண்புழுவின் மகத்துவத்தை அறிவியல் அடிப்படையில் அழகாக விவரிக்கிறார்.

ஒகோ நாங்கூழ்ப் புழுவே
உன் பாடு ஓவாப் பாடே
உணர்வேன் உணர்வேன்
உழைப்போர்க்கெல்லாம் உழுவோர் தொழில் மிகும்
உழுவோர்க்கெல்லாம் விழுமாய் வேந்து நீ
உழுது உழுது உண்டு வேதித்து உருட்டி
வெளிக்கொணர்ந்தும் புகழ்வேண்டாற்போல
ஒளிக்குவை உன் குழியில்
விடுத்தனை இதற்கா எடுத்த உன் யாக்கை
எம்மண்ணாயிலும் நன் மண்ணாக்குவாய்!

இதிலிருந்து மண்புழு மரபு வழியாய் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது தெளிவாகிறது.

தற்போது விவசாயத்திற்காக மண்புழுவைத் திருச்சி அருகே குமரேசபுரத்தில் பேச்சிமுத்து என்ற ஒரு பொறியாளர், பயன்படுத்தி வருகிறார். இது தவிர தமிழகத்தில் காஞ்சிபுரம், கம்பம், புளியங்குடி, ஆழ்வார்குறிச்சி ஆகிய ஊர்களிலும் வண்டிப் பெரியார், பெங்களூர், பூனே ஆகிய இடங்களிலும் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

மண்புழு நிலத்தின் இவ்வளவு மாற்றங்கள் ஏற்படுத்துகின்றனவே. இதன் அறிவியல் பின்னணிதான் என்ன என்பது பற்றி பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மண்புழுவை விவசாயிகள் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை அவர்களைச் சந்தித்துக் கேட்டறிந்தபோது.

உதிர்ந்த மர இலைகள், சிறுசெடிகள், களைகள், காய்கறிக் கழிவுகள், கரும்புத் தோகை, சக்கை ஆகியவற்றை ஒரு குழியிலிட்டு மட்கச் செய்கின்றனர்.

பின்பு குழி அமைத்து அல்லது மண் (அ) சிமெண்ட் தொட்டி அல்லது பெட்டிகளை மண்புழு உரம் தயாரிக்க தேர்ந்தெடுக்கின்றனர்.

உரக்குழியின் முதல் அடுக்காகச் சிறு கற்களை இடுகிறார்கள். அடுத்து ஓரளவு மட்கிய கழிவுகளைச் சுமார் 10 செ மீ. அளவு ஓர் அடுக்காக இடுகின்றனர். அதன் மேல் நன்கு வளர்ச்சியடைந்த குறுகிய வாழ்க்கைச் சுழற்சியுடைய, எளிதில் இனப்பெருக்கம்

செய்யும் மண்புழு வகைகளைத் தேர்ந்தெடுத்துக் குழியில் கழிவு களுக்கு மேல் சுமார் 100 முதல் 150 புழுக்களை இடுகின்றனர். அதன் மேல் உலர்ந்த மாட்டுச் சாணத்தை ஓர் அடுக்கு போட்டு அதன் மேல் அடுத்த அடுக்காக மீண்டும் கழிவுகள் இடப்படு கின்றன. நிழல் வேண்டியும் மற்றும் பறவைகளிடமிருந்து புழுவைப் பாதுகாக்கவும், பனை அல்லது தென்னை ஓலை கொண்டு குழியை மூடிவிடுகிறார்கள்.

தினமும் குழி ஈரப்பதத்துடன் இருப்பதற்கு நீர் அல்லது சாணக் கரைசலைத் தெளிக்கின்றனர்.

வாரம் ஒருமுறை மண்புழுக்கள் சேதம் அடையாவண்ணம் மொத்த கழிவையும் கிளறி விடுகின்றனர். இக்கழிவுகள் சுமார் 45 முதல் 60 நாட்களில் நன்கு மக்கிய, கருமை நிறமுடைய மண்புழு உரமாகி விடுகிறது. (vermicompost).

அதனை எடுத்து நிழலில் உலர்த்தி அதிலுள்ள புழுக்கள், முட்டைகள் ஆகியவற்றைப் பிரித்தெடுத்து, உரக்கலவையைச் சலித்து தங்கள் நிலங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். புழுக்களை மீண்டும் உரம் தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர்.

எப்படி இந்த கழிவுகள் உரமாக மாறுகின்றன. பொதுவாக மண்புழுக்கள் தினமும் தமது எடை அளவு அங்கக் கழிவுகளை உணவுப்பொருளாக உட்கொண்டு பின் அவற்றில் பெரும் பகுதியைக் கழிவாக வெளித்தள்ளும் இயல்புடையவை எனவே தான் மட்கிய இலை, தழை மற்றும் அங்கக் கழிவுகளைத் தேர்ந் தெடுக்கிறார்கள். மேலும் மாட்டுச் சாணம் மண்புழுவிற்கு ஒரு சிறந்த உணவு. எனவே அதில் மாட்டுச் சாணமும் கலக்கின்றனர். எனவே மண்புழுவின் எடை அதிகரிக்க அதிகரிக்க அது உட்கொள்ளும் உண்வும் அதிகரிக்க அதிக அளவு உரம் கிடைக்கிறது.

இந்தக் கழிவுப்பொருட்கள் மண்புழுவின் உடலிலுள் சென்று அங்கு இருக்கும் நுண்ணுயிரிகள் microbes மற்றும் Enzymes ஆகியவற்றால் நொதிக்கப்பட்டுச் சேர்மங்கள் எளிய கனிமங்-களாகப் பிரிக்கப்படுகிறது. இதிலிருந்து மண்புழு அதன் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை எடுத்துக் கொண்டு மீதியைக்கழிவுகளாக வெளித்தள்ளுகிறது. ஆகவே 'நாங்கூழ் கட்டிகள்' (wormcost) என்றழைக்கப்படுகின்றது. இவ்வாறு

மொத்தக் கழிவு பொருள்களும் உண்ணப்பட்டுக் கழிவுகளாக வெளித் தள்ளப்பட்டு நமக்கு உரம் கிடைக்கிறது.

இவ்வாறு கிடைக்கும் இந்த உரத்தில் ஐந்து மடங்கு அதிகம் தழைச்சத்தும், ஏழுமடங்கு அதிகம் மணிச்சத்தும், ஒன்பது மடங்கு அதிகம் சாம்பல் சத்தும், மூன்று மடங்கு அதிகம் மெக்னீசியமும் மற்ற சாதாரண உரத்தைக்காட்டிலும் அதிகம் உள்ளது. மேலும் பயிர்களுக்குத் தேவையான பல நுண்உரங் களும், பயிர்களுக்கு நன்மை பயக்கும் பல நுண்ணுயிரிகளும் காணப்படுகின்றன. எனவே மற்ற நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களைவிட இங்கு அதிக விளைச்சலும் தானியங்களில் அதிகுத்தரமும் கிடைக்கிறது.

இவ்வாறு மண்புழுவைப் பயன்படுத்துவதால் பயன்கள் நிறைய உள்ளன. அவை,

மக்கள் தொகை அதிகரிப்பை ஈடுகட்ட விளை பொருட் களை அதிகம் பெற இரசாயன உரங்களைத் தற்போது பயன் படுத்துகிறோம். இதனால் மண் தனது தன்மையைப் படிப்படி யாக இழந்து வருகிறது. மேலும் இம்மண்ணில் விளையும் விளைபொருட்களும் விஷத்தன்மை கொண்டதாக மாறுகிறது. மண்புழு உரம் தயாரித்துப் பயன்படுத்துவதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் தரமான விளைபொருட்களையும் பெறலாம்.

தொழிற்சாலைகள் பெருகிவிட்ட இந்தக் காலகட்டத்தில் அதன் கழிவுகளையும், மற்ற அங்கக் கழிவுகளையும் நாம் எளிய முறையில், பெரிய முதலீடு இன்றி பயனுள்ள உரமாக மாற்றலாம்.

இது தவிர வியாபார ரீதியாகவும் இந்த மண்புழு உரம் தயார் செய்யப்பட்டு வருவதால் கிராமப்புறங்களின் பெண் களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

மாறிவரும் இந்தக் காலச் சூழ்நிலையில் மண்ணின் வளத்தைக் காப்பது நம் கடமை. எனவே மரபு வழியாய் நம் முன்னோர்கள் பயன்படுத்தி, பயன்பெற்று, இயற்கையைக்காத்து வர அவர்கள் பயன்படுத்திய மண்புழுவை என்றளவும் அனைத்து விவசாயிகளும் பயன்படுத்த நாமும் உதவுவோம்.

முனியாண்டவர் வழிபாடு

வெ. அமுதா
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

வழிபாடு

மனிதன் விலங்கு நிலையினின்று, மனித நிலையை எய்தி குழுவாகத் திரண்டு நின்றபோது, மெல்ல சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே வழிபாடு. வழிபாட்டின் தொடக்ககால அடிப்படை அச்சமே. தொடக்ககால மனிதரின் வாழ்வு பல்வேறு அபாயங்களால் சூழப்பட்டிருந்தது. அதற்கான காரண காரியங்களைப் புரிந்துகொள்ள இயலாத நிலையிலிருந்து மனிதன் தன் சொந்த உடலின் இயக்கத்தையே, பல்வேறு மாதிரிகளாகக் கொண்டு ஒவ்வொரு இயற்கைப் பொருளுக்குள்ளும் ஒரு சக்தி இருக்கிறது என்று எண்ணினான். இயற்கையை வழிபட்டால் அது தன்னை ஒன்றும் செய்யாது என்றும், நன்மை செய்யும் என்றும் நம்பினான். இயற்கை விளைவிக்கும் பல்வேறு தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவும், அதனைச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவும், மனிதன் தன் அறிவின் மூலம் பல்வேறு சாதனங்களைக் கண்டுபிடித்துவிட்டாலும். இயற்கைச் சக்திகளாகிய பஞ்சபூதங்களைத் (நிலம். நீர், காற்று, தீ, வான்) தெய்வங்களாக வழிபட்டு வந்து, மரபுவழிவந்த புராதனக் கடவுள் வழிபாட்டுக் கொள்கையில் தன்னுடைய பலமானச் சுவடுகளைப் பதித்துக் கொண்டிருப்பதனை இன்றைய நடைமுறையில் காணமுடிகிறது.

முனியாண்டவர் குலதெய்வ வழிபாடு

அருஞ்செயல் புரிந்திருந்த அல்லது அகால மரணமடைந்த குல முன்னோர்களை அவர்கள் வழிவந்த குடும்பத்தினர் தெய்வமாகக்

கருதி வழிபடுவதைச் சமுதாயத்தில் காணமுடிகிறது. குலதெய்வ வழிபாடு ஊர்த்தெய்வ வழிபாடாகவும், பிறகு பலரும் வணங்கும் சக்தியுள்ள தெய்வ வழிபாடாகவும் பரவிச் செல்வாக்குப் பெறுவது உண்டு''.

முனியாண்டவர், முனி, முனீஸ்வரன், முனியனார், முனியப்ப சாமி, முனியன், முனியப்பன் என்பன போன்ற பல்வேறு பெயர் களில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மிகுதியாக வழிபடப்படு கிறது. மதுரை மாவட்டத்திலும் மிகுதியாக வழிபடப்படுவதாக அறியமுடிகின்றது தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இத்தெய்வ வழிபாடு குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. சான்றாகத் திருச்சி மாவட்டத்தில் 104 இடங்களிலும், தஞ்சை மாவட்டத்தில் 242 இடங்களிலும் இத்தெய்வம் வழிபடப்படுவதாக அறியமுடி கிறது (தமிழ்ப் பல்கலைக்கழக ஊராய்வுத்திட்டத்தை அடிப் படையாகக் கொண்டு முனைவர். ஆறு. இராமநாதன் அவர்கள் அளித்த தகவல்). இவ்வாறு பரவலாக மக்களிடையே வழிபடப் படும் இத்தெய்வங்களுள் முனியாண்டவர் தெய்வமும் ஒன்று.

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டாரத்தில் தஞ்சைக்குத் தெற்கே 25கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமம் காராமணித்தோப்பு. இவ்வூரில் அம்பலக்காரர்கள் மட்டும் வாழ்ந்து வருகிறார்கள். இங்குள்ள முப்பது வீட்டார்கள் முனியாண்டவரைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகிறார்கள். வழிபடுவோர், வழிபாட்டிடம், தெய்வம் குறித்த வாய்மொழிக் கதை, தெய்வத் தோற்றத்தின் காலம், வழிபாடு, வழிபடக் காரணம், பழக்கவழக்கங்கள் முதலான செய்திகள் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றன.

காராமணித்தோப்பு கிராமத்தில் வசித்துவரும் சன்னாசி, சாமியப்பன் இவ்வூருக்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவிலுள்ள வாண்டையார் தெரு கிராமத்தில் வசித்துவரும் காசியம்மாள், கருப்பையன், ஆறுமுகம் என்ற ஐவரிடமிருந்தும் களஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் இக்கட்டுரைக்கு ஆதாரமாக அமைகின்றது.

முனியாண்டவர் குறித்த ஆய்வுகள் இதுவரை அதிகம் நடைபெறவில்லை 1985-ல் முருகேசன் 'புலமை' இதழில் எழுதிய 'இந்துமதத்தில் முனிகள் வழிபாடு' என்ற கட்டுரை முனிவழிபாடு

குறித்த செய்திகளை எடுத்துரைக்கின்றன. அக்கட்டுரையில் எடுத்தியம்பும் செய்திகளாவன:

1. சைவ சமயத்தினரால் மனிதன் பல பிறவிகளாகப் பிறப்பது குறிப்பிடப்படுகிறது. அந்தப் பிறப்புகளில் முனிகளாகப் பிறப்பதும் ஒரு நிலை என்று கூறப்பட்டுள்ளது.

2. முனிகள் வழிபாடு, நடுகற்கள் வழிபாட்டின் தோற்ற காலமாகிய சங்ககாலத்திற்குப் பிறகு, சமய இயக்கம் தோன்றிய காலத்திற்கு முன்பு தோன்றியது எனத் தெரிகிறது.

3. சைவ சமயம் முனிகள் வழிபாட்டை மிகுதியாக ஏற்றுள்ளதைக் காண்பிக்கிறது. இது வைணவ சமயம் முனிகள் வழிபாட்டைச் சிறிய அளவில் ஏற்றுள்ளதை உணர்த்துகிறது.

4. ஏறத்தாழ சங்ககாலத்தில் ஆண்வழிச் சமுதாயத்தில் தோன்றிய ஆண்தெய்வ வழிபாடே முனிகளின் வழிபாடு ஆகும்.

வழிபடுவோர்

"சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சிறு தெய்வத்தை வழிபடுகின்றனர்". இவ்வூரில் சைவசமயத்தைச் சேர்ந்தவர்களில் உழைக்கும் மக்கள் முனியாண்டவரை வழிபட்டு வருகிறார்கள். மேலும் இச்சமயத்தைச் சேர்ந்த ஏழுமலை வாண்டையார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் (கள்ளர்). தங்கள் விளைநிலங்கள் முனியாண்டவர் கோவிலுக்கு அருகில் இருப்பதனால் இத்தெய்வத்தினை வழிபடுகிறார்கள். மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்கள் இத்தெய்வத்தை வழிபடுவதற்கான செய்திகள் வேறு எங்கும் கிடைக்கப் பெறவில்லை.

வழிபாட்டிடம், உருவம்

இங்கு வழிபாட்டிற்குரிய உருவமான முனி மனிதவடிவில் காட்டப்படவில்லை. இத்தெய்வம் உறைந்திருப்பதாகக் கூறும் இடத்தில் ஒரு ஆலமரமும், அம்மரத்துக்குக் கீழே மூன்றடி உயரமுள்ள ஒரு வேலும் உள்ளது வழிபாட்டு இடத்தை அடிப்படையாகக் கொண்டு இங்கு வழிபடப்படும் முனியாண்டவர், காட்டில் உறைந்திருப்பதால் காட்டு முனி என்று அழைக்கப் படுகிறது.

இத்தெய்வம் குறித்த வாய்மொழிக் கதை

மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு முன்பு எங்கிருந்தோ செங்கமலம் என்ற பெண், கர்ப்பிணியாகக் காராமணித் தோப்பு என்ற கிராமத்திற்கு வந்தாள். கர்ப்பிணிப் பெண் என்பதனால் அவளுக்கு ஆதரவு அளித்து தங்கள் ஊரில் இருக்க இடமளித்து தங்கச் செய்தார்கள். சில மாதங்களுக்குப் பிறகு அப்பெண் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். வாண்டையார் தெரு என்ற கிராமம், காராமணித் தோப்பு என்ற ஊருக்குக் கிழக்கே அமைந்துள்ளது. அங்குள்ள விளைநிலங்களில் விதைக்கப்பட்ட வரகுக் கதிர்களை அறுவடை செய்தபிறகு, சிதறிக் கிடக்கும் கதிர்களைப் பொறுக்கி வருவதற்காக, செங்கமலம் மூன்றுமாதக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தாள். குழந்தையை வயலுக் கருகில் உள்ள ஆலமரத்து நிழலில் தொட்டில் கட்டி தூங்க வைத்துவிட்டு வரகுக் கதிர்களைப் பொறுக்குகிறாள். கதிர்களை எடுத்துக்கொண்டு வந்து குழந்தையைப் பார்க்கும்போது குழந்தையின் வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் இரத்தம் வருகிறது. குழந்தையின் நிலையைக் கண்ட தாய் ‘முனியாண்டவா, என் குழந்தையைக் காப்பாற்றிவிடு. இந்த வரகையெல்லாம் உனக்கே பொங்கல் வைத்து வழிபடுகிறேன் என்று வேண்டினாள். குழந்தை பிழைத்துவிட்டது. வேண்டிக் கொண்டபடியே வரகையெல்லாம் பொங்கல் வைத்து ஒரு சேவற் கோழி அறுத்துப் படையலிட்டு வந்திருந்தவர்களுக்கெல்லாம் பிரசாதம் வழங்கினாள். அவ்விடத்தில் அடையாளமாக ஆலம் போத்து ஒன்றை நட்டுச் சென்றாள். அடுத்துவரும் ஆண்டுகளில் அப்பெண் எதுவும் செய்யவில்லை.

அக்காலகட்டத்தில் வாண்டையார்களை விவசாயம் செய்ய விடாமல் சூறாவளி அழித்துவந்தது. விபரம் அறிந்த வாண்டையார்கள் செங்கமலத்திடம் வந்து “நீ பூசை செய்யாமல் இருப்பதனால் எங்கள் வெள்ளாமையை முனி அழித்துவருகிறது. நீ பூசை போட்டு முனியின் கோபத்தைக் குறைக்கவேண்டும்” என்று கூறினார்கள். “நான் பூசை போடுவது என்றால் நிறைய செலவாகும்; நான் மட்டும் என்ன செய்வேன்; என்னால் முடியாது” என்று செங்கமலம் கூற “பூசைக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும் நாங்கள் வாங்கித் தருகிறோம்” என்று வாண்டையார்கள் கூற அப்பெண் ஒப்புக்கொண்டாள். வரகரிசியைப் பொங்கல் வைத்து ஆட்டுக்கிடாவைக் கறிசமைத்து படையலிட்ட

பிறகு அப்பகுதியில் சூறாவளி என்பதே இல்லை. அன்றிலிருந்து வழிபாட்டிற்குரிய பொருள்கள் அனைத்தையும் வாண்டையார் தெரு என்ற கிராமத்திலுள்ள ஏழுமலை வாண்டையார் தெருவைச் சார்ந்தவர்கள்தான் கொடுத்துவருகிறார்கள். அம்பலக்காரரில் ஒருவர்தான் பூசை செய்பவராக இருந்து வருகிறார். தற்பொழுது சன்னாசி என்பவர் பூசாரியாக இருந்து வருகிறார்.

தெய்வத்தோற்றம்

தெய்வம் வழிபடுவதற்கான காரணம் கூறப்படுகிறதேயன்றி இத்தெய்வம் இவ்வூரில் தோற்றம்பெற்ற வரலாறு குறித்த செய்திகளை அறிந்து கொள்ள முடியவில்லை. ''முனிகள் வழி பாட்டிற்குரியவர்கள். ஆற்றலுடைய மக்களின் தலைவர்கள் என்பது தெளிவாகும். புத்தர் சிலையையும் முனிகள் வழிபாட்டோடு சேர்த்து தமிழக மக்கள் வழிபாடு செய்தார்கள். பழங்காலத்தில் தமிழக முனிகள் வழிபாட்டோடு பிரம்மனின் வழிபாடு கலப்புற்றது'' போன்ற முருகேசனின் கருத்திற்கான ஆதாரங்கள் இப்பகுதியில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

பழங்கால மக்கள் காற்று, இடி, மின்னல், மழை முதலான வற்றைக் கண்டு அச்சம் கொண்டிருந்தனர். சிறு குழந்தைகளையும், கர்ப்பிணிப் பெண்களையும் பேய்கள் பிடிக்கும் என்றும் பிசாசுகள் அடிக்கும் என்றும் நம்பும் பழக்கம் நாட்டுப்புற மக்களிடையே இன்றும் காணமுடிகிறது. வாய், மூக்கு வழியாக இரத்தம் வந்தால் மினியடித்துவிட்டது என்று நம்பும் பழக்கமும் தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கிறது. இப்பெண் இச்சமுதாயத்தைச் சேர்ந்தவள் என்பதால் 'குழந்தையை மினிதான் அடித்திருக்க வேண்டும் என்று நம்பியிருக்க வேண்டும். குளத்தங்கரை, ஆற்றங்கரை, ஆல மரம் போன்ற இடங்களை முனி தன் உறைவிடமாகக் கொண்டிருக்கும் என்பதால் ஆலமரத்துக்கடியில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை முனிதான் அடித்திருக்கவேண்டும் என்றும் எண்ணியிருக்கலாம்.

செங்கமலம் என்ற பெண் வேற்றூரிலிருந்து வந்தவள் என்ற செய்தியைத் தவிர அவளைக் குறித்த முந்தைய செய்திகள் எதுவும் தகவலாளர்களிடமிருந்து பெறமுடியவில்லை. அப்பெண் தன் குலதெய்வமான முனியைக்கூட அழைத்திருக்கலாம். அப்

பெண்ணைக் குறித்த தகவல்கள் கிடைக்குமாயின் இச்செய்தி விளக்கம்பெறும்.

தெய்வத் தோற்றத்தின் காலம்:

இந்த ஆய்வுக்குரிய முனியாண்டவர் குறித்த, எழுத்து மூலமான சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. வாய் மொழியாகக் கூறும் செய்திகளிலிருந்து காலத்தை உறுதிசெய்தல் இயலாது. ஆயினும் இத்தகவல்களைக் கொண்டு தோராயமான காலத்தினை அறிந்துகொள்ள இயலும். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாண்டையார்கள் நிலங்கள் அனைத்தும் காடுகளாக இருந்தது என்றும், வரகு மட்டுமே இந்நிலங்களில் பயிரிடப்பட்டு வந்தது என்றும் தகவலாளர் கூறினார். இக்கூற்றினைக்கொண்டு காலத்தை அறிய இயலவில்லை. மரபுவழியாக இத்தெய்வத்திற்குப் பூசைசெய்யும் பூசாரிகளாக செங்கமலத்திற்குப் பிறகு அப்பெண்ணின் வாரிசான மாரியப்பன் மன்னப்பன் என்ற இருவரும் மன்னப்பன் மகன் சன்னாசி ஆகியோர் பூசாரிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். சன்னாசிக்கு தற்போது வயது 68 இவர்களது வாழ்நாளைக் கணக்கில்கொண் டால், செங்கமலம் முனியாண்டவரை வழிபடத் தொடங்கி சுமார் இருநூறு ஆண்டுளுக்குள் இருக்கலாம் என்ற முடிவிற்கு வரமுடி கிறது. அப்பெண் வாண்டையார் தெருவில் முன்பிருந்தே இருந்து வந்த முனியை அழைத்திருப்பாளேயானால், இத்தெய்வம் இப் பகுதியில் வழிபடத் தொடங்கிய காலம் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம். மேலும் இதுகுறித்து தெளிவாக எதுவும் கூற இயலவில்லை.

வழிபாடு

சிவன்ராத்திரி அன்று புதுப்பானை எடுத்துவருவர். வாண்டையார்கள் கொடுக்கும் வரகு அரிசியையும், ஆட்டுக் கிடாவையும் சமைத்துப் பழங்கள், தேங்காய், சுருட்டு கஞ்சா முதலானவைகளுடன் படையலிட்டு அங்கு வந்துள்ள அம்பலக்காரர்களுக்குப் பிரசாதம் கொடுப்பர். அம்பலக்காரர் கைப்பட சமைத்தது என்பதனால் வாண்டையார்கள் சமைத்த உணவை எடுத்துக்கொள்ள மாட்டார்கள். சமூகப் படித்தரத்தில் அம்பலக்காரர்களைவிட வாண்டையார்கள் உயர்ந்தவர்கள் என்ற நிலை இவ்வூரில் இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

முனியாண்டவர்-வழிபடக் காரணம்

"முனிதல் என்றால் கோபம் கொள்ளல்" என்று பொருள்படும். அகத்தியன், வீரனார் முதலிய தெய்வங்களுக்குக் கூறப்படும் கதைகளில் இந்தக் குணம் மிகுந்திருக்கிறது. கோபம் கொள்ளல் மனிதனின் எண்வகைக் குணங்களுள் ஒன்றாகும்". நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுவதற்கான காரணங்களுள் அச்சமே முதன்மைபெறுகிறது. முனிமாதிரி பேசாதே! முனியாட்டம் ஆடாதே! என்ற நாட்டுப்புற மக்களின் பேச்சு வழக்கிலிருந்து முனி துஷ்டதெய்வம் என்றும், சீற்றம் உடையது என்றும், தீங்கு விளைவிப்பது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இத்தெய்வத்தின் உறைவிடங்களான ஆற்றங்கரை, குளத்தங்கரை, ஆலமரம் முதலான இடங்களை இம்மக்கள் தங்களது வேலைக்களமாகக் கொண்டுள்ளதால், வேளாண்மையில் நன்மை செய்யவேண்டும் என்ற நோக்குடனும், அத்தெய்வத்தை வழிபடவில்லையென்றால் தங்களைப் பழிவாங்கிவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவும் இத்தெய்வம் வழிபடப்படுகிறது.

நம்பிக்கையும், பழக்கவழக்கங்களும்

முனியாண்டவரை வழிபடுவதனால் சூறாவளி இப்பகுதிகளில் அடிப்பதில்லை என்றும், தங்கள் வீட்டுக் குழந்தைகள், பெண்கள் யாரும் முனியடித்து இறப்பதில்லை என்றும் நம்புகின்றனர். மேலும் தங்களுக்கு எந்த நோய் வந்தாலும் முனியாண்டவரை வேண்டி பூசாரி திருநீறு கொடுத்தால் குணமாகிவிடும் என்றும், செய்வினைக் கோளாறுகள் பூசாரியால் நீக்கப்படும் என்றும் நம்புகின்றனர்.

பொங்கல் திருநாளில் மாட்டுப்பொங்கல் அன்று தங்கள் வாழ்வில் வளம்சிறக்க வாழ்விக்கும் குலதெய்வத்திற்குப் பானக்கம் (சர்க்கரை, ஏலக்காய் கலந்த சுவைநீர்) கரைத்துவைத்து தேங்காய் உடைத்து வழிபட்டபின்னரே மாட்டுக்குச் சோறு ஊட்டவேண்டும் என்ற பழக்கத்தினைக் கொண்டுள்ளனர். வழிபாடு செய்வதற்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் வாண்டையார்களிடமிருந்து பெறுவதனைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வழக்கத்தினை மாற்றினால் தெய்வக் குற்றம் உண்டாகும் என்ற அச்சத்தின் காரணமாக இப்பழக்கம் மாறாமல் இருந்துவருகிறது.

மரபும், மரபுமாற்றமும்

இத்தெய்வத்திற்குப் படைக்கப்படும் பொருள்களில் வரகு தவறாது இடம்பெறவேண்டும் என்ற மரபு இருந்துவருகிறது. இத்தெய்வத்திற்குப் படைக்கப்படும் பொருள்களைப் பெண்கள் உண்ணக்கூடாது என்ற மரபு இருந்து வந்திருக்கிறது. நாகரிக வளர்ச்சிக் காரணமாக இம்மரபு மீறப்பட்டுப் பெண்களும் உண்ணலாம் என்ற பழக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முடிவுகள்

அச்ச உணர்வு அன்பாக மாற்றம் பெற்றுக் காலப்போக்கில் அருளாக வளர்ந்தமையினையே வழிபாட்டு நிலைகள் தெரிவிக்கின்றன.

முனியாண்டவர், முனி, முனீஸ்வரன் என்பன போன்ற பல்வேறு பெயர்களில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மிகுதியாக வழிபடப்படுகிறது.

இங்கு வழிபாட்டிற்குரிய உருவமான முனி மனிதவடிவில் கட்டப்படவில்லை. ஆலமரத்துக்குக் கீழே மூன்றடி உயர வேல் மட்டும் உள்ளது.

இவ்வூரில் முனியாண்டவரை வழிபடத் தொடங்கி சுமார் இருநூறு ஆண்டுகளுக்குள் இருக்கலாம் என்ற முடிவுக்கே வர முடிகிறது.

ஆற்றங்கரை, குளத்தங்கரை, ஆலமரம் முதலான இடங்களை முனி தன் உறைவிடமாகக் கொண்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

முனியாண்டவரை வழிபட்டால் நன்மை செய்யும் என்றும், தீங்கு விளைவிக்காது என்றும் நம்புகின்ற பழக்கத்தினைக் காண முடிகிறது.

தருமபுரி மாவட்ட அரியக்கா பெரியக்கா வழிபாடு

சு. இராசரத்தினம்
மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
கிருட்டிணகிரி.

தருமபுரி மாவட்டம் பல்வேறு வரலாற்றுச் சிறப்பும் பண்பாட்டுச் சிறப்பும் கொண்டு இலங்குகிறது. இம்மாவட்ட வன்னியர்கள் வணங்கும் அரியக்கா – பெரியக்கா வழிபாட்டை விளக்குவது கட்டுரையின் நோக்கம்.

இம்மாவட்டத்தில் வாழும் வன்னியர்கள் தென்னாற்காடு வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து இங்கு குடி பெயர்ந்தவர்கள். ''எங்களுடைய முன்னோர்கள் வட ஆற்காடு ஜோலார்பேட்டையிலிருந்தும் தென்னாற்காடு கள்ளக்குறிச்சி பகுதியிலிருந்தும் காட்டு நிலப் பகுதியாய் இருந்த இம்மாவட்டத்திற்கு விவசாயம் செய்வதற்குக் குடிபெயர்ந்து வந்தார்கள். இவர்கள் பாரதக் கோவில் அமைத்து வழிபடும் 'திரௌபதி' வழிபாட்டையும் குடிபெயர்ந்து வரும்போது கொண்டு வந்துள்ளனர்''. – என்று தகவலாளி ஒருவர் கூறுகிறார்.

வன்னியர் இப்பகுதியில் கால்கொண்டு பல ஆண்டுகள் கழித்தே அரியக்கா – பெரியக்கா என்ற குலதெய்வ வழிபாட்டை வழிபட்டு வருகின்றனர். வன்னியர்களுள் ஒரு பிரிவினர் சென்னராயப் பெருமாளைத் தனது குல தெய்வமாகக் கல்லாவிக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூரில் வழிபட்டுவருகின்றனர். சென்னராய சாமியை மாமன் மைச்சான் சாமி என்றும், அரியக்கா – பெரியக்கா சாமியை அண்ணன் தம்பி முறை உடையவர்கள் வணங்குவதால் ''அண்ணன் தம்பி சாமி'' என்றும் கூறுகின்றனர்.

கிருட்டிணகிரி பாப்பாரப்பட்டியில் வாழும் பதினெட்டுத் தலைக்கட்டுக்களைச் சேர்ந்த வன்னியர்கள் அரியக்கா – பெரியக்கா வழிபாட்டை முன்னின்று நடத்துகின்றனர். எட்டுப் பட்டி ஒடமங்களம், குடிமேனஉறள்ளி, அகரம் ஆவத்தவாடி, மருதேரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த வன்னியர்கள் இவ்விழா வில் பங்கேற்கின்றனர்.

இவ்வழிபாடு கிருஷ்ணகிரியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள அகரம் மருதேரி என்ற ஊரில் தென்பெண்ணை ஆற்றங் கரையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வழிபாடு நடை பெறுகிறது. தெலுங்கு வருடப்பிறப்பை அடுத்துவரும் அமாவாசையில் இவ்விழா நடைபெறுகிறது.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெரியண்ணன், கறுப்பண்ணன், பெரியக்கா, அரியக்கா, தஞ்சக்கா என்று ஐவருக்கும் நடக்கும் வழிபாடு இது. பெரியண்ணன், கறுப்பண்ணன் ஆகிய இருவருக்கும் பெரியக்கா, அரியக்கா தஞ்சக்கா மூவரும் தங்கைகள். இவர்கள் தென்பெண்ணை ஆற்றின் கரையில் வெள்ளத்தில் ஒதுக்கிய இடத்தில் நினைவாக வழிபாடு நடப்பதாகக் கூறுகின்றனர். இவர்கள் வழிவந்தவர்களே அரியக்கா பெரியக்கா வழிபாட்டை நடத்துகின்றனர். இவர்கள் எவ்வாறு இங்குவந்து சேர்ந்தார்கள் என்பதும் எப்படி இறந்துபோனார்கள் என்பது குறித்தும் எந்தச் செய்தியும் தெரியவில்லை.

செழிப்பு வேண்டியும், பேய், பிசாசு, பிணி நீக்கவும், பிள்ளைப்பேறு வேண்டியும் கும்மியடித்து வேண்டுதல் செய்கின்றனர்.

தெலுங்கு வருடப் பிறப்பிற்கு 15 நாட்களுக்கு முன் பௌர்ணமியில் சாமி உத்தரவு பெற்று இவ்வழிபாடு நடை பெறுகிறது. கிருட்டிணகிரியில் உள்ள பாப்பாரப்பட்டியில் அரச மரத்தடியில் 'செரப்புத்திருநாள்' அன்று மணலைப் பரப்பி பூக்களை விரித்துவைத்துள்ளனர். அன்று பாப்பாரப்பட்டி பெருமாள் கோவிலில் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். இரவில் மருதேரியில் உள்ளவர்கள் கொண்டுவரும் கோவில் மாட்டை பூக்கள் மீது மிதிக்கச் செய்து பெருமாள் கோயிலைச் சுற்றச் செய்து மருதேரிக்குத் திருப்பி அனுப்புகின்றனர்.

பாப்பாரப்பட்டியில் உள்ளவர்கள் தலைக்கட்டுக்கு இவ்வளவு என்று பணம் வசூல் செய்து அப்பணத்திற்கு வெள்ளிச் சந்தையில் கடாக்கள் வாங்கி வைத்திருக்கின்றனர். அமாவாசைக்கு முந்தைய நாள் இரவில் 12 மணிக்குப் பாப்பாரப் பட்டியிலிருந்து 400 கடாக்களுடன் மருதேரிக்கு வருகின்றனர்.

எட்டுப்பட்டியில் ஒரு குடிசையில் ஒருகல்லை நட்டு சாமியாக வழிபட்டு வருகின்றனர். அதற்கு முன்பாகச் சாமிப் பெட்டியை வைத்து வணங்கி பூசை செய்துவிட்டு சாமிப் பெட்டியை மருதேரி நோக்கித் தூக்கிக்கொண்டு வருகின்றனர்.

மருதேரியில் கோவில் என்று சொல்லுகின்ற வண்ணம் எந்தக்கட்டடமும் கிடையாது. ஒரு தென்னந் தோப்பில் அரச மரத்தடியில் ஊஞ்சல் கல் மட்டும் உண்டு. அமாவாசை அன்று காலையில் அனைவரும் ஆற்றில் குளித்துவிட்டு மருதேரியில் வழிபாடு செய்கின்றனர். அரச மரத்தடியில் விளக்கெண்ணெய் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. மணல் பரப்பப்பட்டு பூக்களை விரித்துவிட்டு இருக்கின்றனர். அரச மரத்தின் அடியில் மாலைகள் போடப்பட்டிருந்தன. பெட்டி வருவதற்கு முன்பே சிலர் அருள்வந்து சாமி ஆடுகின்றனர்.

பேய் பிடித்துள்ளது என்று எண்ணுகிற பெண்கள் ஆற்றில் குளித்துவிட்டு சாமியைக் கும்பிட்டவுடன் ஆடத் தொடங்கு கின்றனர். ஆடு ஆடு என்று ஓங்காரம் கொட்ட தலையை ஆட்டுகின்றனர். பேய் பிடித்தவர்கள் ''நான் போறேன்'' ''நான் போறேன்'' என்று சொன்னால் தலையில் மூன்று முடியை எடுத்து முடி போட்டு இரண்டு ஆட்கள் ஆளுக்கு ஒருபக்கம் பிடித்து தூக்கி வந்து ஆற்றில் மூன்றுமுறை ''முக்கி'' மாற்றுத் துணியைக் கொடுத்து உடுத்தச் செய்வர். பின்பு, கோவிலின் ஒரு பகுதியில் பேய் பிடித்தவர்களை இருக்கச் செய்கின்றனர். அவர்களுக்கு மறுநாள் காலையில் பிரசாதமாக வழங்கப்படும் உணவு தவிர வேறு உணவு கொடுப்பது இல்லை. பேய் பிடித்த பெண்கள் 200 முதல் 250 வரை அந்தத் தோட்டத்தில் வரிசையாக அமர்ந்திருப்பார்கள்.

சாமி அருள் கொண்டு ஆடுபவரிடம் குறி கேட்கின்றனர். குறி கேட்பவருக்கு அருள் கொண்டு ஆடுபவர் ''நல்லது செய் கிறேன்'' என்று கை போட்டு கூறவேண்டும், அதன்பின்பு சாமி

அருள் கொண்டவரிடம் 'நீர் வைத்தபின்' (திருநீர் பூசப்பட்டபின்) (அல்லது) தீர்த்தம் தெளித்தபின் (அல்லது) பூவும் பழமும் பெற்றபின் குறி சொல்பவரிடம் இருந்து விடைபெற்று வருவர்.

அன்று பிற்பகல் 3 மணியளவில் எல்லோரும் பெட்டியை எதிர்பார்த்து காத்து இருக்கின்றனர். பெட்டி வருகிற வழியில் கோவிலிலிருந்து 2 கி. மீ. தொலைவு வரை பெட்டியின் முன்பாக வரும்வழியில் சுத்பூரம் கொளுத்துகின்றனர். கோவிலில் எங்கேயும் மின்சார ஒளியமைப்பு இருக்கக்கூடாது. மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சம்கூட இருக்கக் கூடாது. கடைவைத்து இருப்பவர்கள் 'பெட்ரமாஸ் லைட்டைப்' பயன்படுத்துகின்றனர்.

பெட்டி வந்தபின் ஆற்றில் திரையைக் கட்டி சாமியை மணலில் அழுத்தி வைத்து கண்ணைக்கட்டிக் கொண்டு கழுவுகின்றனர். சாமி எப்படி இருக்கிறது என்று இதுவரை யாரும் பார்த்ததில்லை என்கின்றனர். ஒரு தகவலாளி மட்டும் ''செங்கல் வடிவ உலோகத்துண்டு ஒன்றில் சாமி வரையப்பட்டிருக்கிறது. இது ஆணும் இல்லை பெண்ணும் இல்லை. ஆனால் கண்ணால் பார்க்கவில்லை'' என்று கூறுகிறார். ''சாமி எவ்வாறு இருக்கிறது என்று பெட்டி திரும்பிச் செல்லும்போது பார்க்க முயற்சித்த சிலர் கற்களை எறிய பெரிய தகராறு ஏற்பட்டு, இப்பொழுது காவலர் பாதுகாப்புடன் சாமிப் பெட்டி எடுத்துச் செல்லப்படுகிறது. என்கிறார் மற்றொரு தகவலாளி; சாமியைத் தண்ணீரில் நீராட்டிய பின்னர் திரும்பவும் பெட்டிக்குள் வைத்து, அரசமரத்தடியில் கொண்டுவந்து வைத்தபின் பெட்டியைச் சிறிது திறந்து வைத்து வழிபாடு செய்கின்றனர்.

முதல் பூசை, பெட்டி அருகே இரவு 9 மணிக்கு நடக்கிறது. 10 நிமிட நேரம், தேங்காய் பழம், வெல்லம், எலுமிச்சம்பழம் வைத்து பூசை முடிப்பார்கள்.

இரண்டாவது பூசை அகரத்தில் குயவர் விட்டு முன், ஐந்து குதிரைகள் மீதும் – பெரியண்ணன், கறுப்பண்ணன், பெரியக்கா, அரியக்கா, தஞ்சக்கா, முறையே அமர்ந்திருக்க அலங்காரம் செய்யப்பட்டபின் மூன்று கடாக்களை முன்னிறுத்தி வெட்டி அவற்றைக் குயவருக்குக் கொடுத்து விடுகின்றனர். சிலைகளைத் தலைமேல் வைத்து கோவிலில் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

மூன்றாவது பூசை இரவு 12 மணிக்குத் தேங்காய் உடைத்து தீர்த்தம் தெளிக்கின்றனர்.

ஓடமங்கலம், குடிமோனஉறள்ளி சிறுபிள்ளைகள், திருமணம் ஆகாத இளைஞர்கள் கையினாலே 13 முட்டை அரிசியைக் குற்றி தீட்டு, துடக்கு, இன்றி அன்று இரவு கொண்டுவந்து சேர்க்கின்றனர். அடுப்பு அமைத்து பொங்கல் சோறு பொங்குகின்றனர் மூன்று மணியளவில் ஆடுகள் அறுக்கப்பட்டு குழம்பு தயார் செய்கிறார்கள். குழம்பு கொதித்துக் கொண்டு இருக்கும்போது சாமி அருள் வந்தவர்கள் கையை விட்டுத்துழாவி விடுகின்றார்கள்.

பின்னர் அனைவருக்கும் கறிச்சோறு கொடுக்கின்றனர். மீதம் இருக்கின்ற சோற்றை வாரி இறைக்கின்றனர். இறைத்த சோறு கிடைத்தால் போதும் என்று பிரசாதமாக உண்டு மகிழ்கின்றனர்.

இந்த வழிபாட்டில் கறுப்புத் துணி யாரும் அணியக்கூடாது. தாழ்த்தப் பட்டவர்கள். முஸ்லிம்கள் பங்கேற்கக்கூடாது போன்றவை தடைகளாக விதித்துள்ளனர். ஆனால் இப்பொழுது மாறிக்கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.

நரிக்குறவர்கள் தங்களுடைய வழிபாட்டில் எண்ணெய்ச் சட்டியில் பணியாரம் வெந்துவிட்டதா என்று பார்ப்பதற்கு விரலை விட்டு பார்ப்பது போன்றது. (நா. வானமாமலை 1993– பக்கம் 106) கறி வெந்து கொண்டு இருக்கின்ற பானையில் கையை விட்டு துழாவுவது. கோவிலின் ஊடே அகரம் என்ற ஊரை இணைத்து ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் அமைக்க முயற்சி செய்த முதன்மைப் பொறியாளர் மவுன நிலை அடைந்து அப்படியே உட்கார்ந்து விட்டதாகவும், பின்பு அவர் தன் எண்ணத்தை மாற்றி கோவில் அமைந்து இருக்கும் இடத்திற்கு வெளியில் பாலம் அமைத்துள்ளார் என்று கோவிலின் சிறப்பைக் கூறுவர்.

தகவலாளர்கள்

1. சி. முனுசாமி, வயது 70, வன்னியக் கவுண்டர், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர், பாப்பாரப்பட்டி, கிருட்டிணகிரி.
2. கே. ஆர். சின்னராஜ், வயது 65, வன்னியக் கவுண்டர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பாப்பாரப்பட்டி, கிருட்டிணகிரி.

தென்னிந்தியாவில் பொங்கல் (அல்லது மகரசங்கராந்தி) திருநாள்

முனைவர் ஆறு. இராமநாதன்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் – 613005

ஏதேனும் ஒரு நன்மை நிகழவேண்டும் என்று வேண்டிக் கொள்ளவோ நன்மைக்கு நன்றி தெரிவிக்குவோ தெய்வத்திற்குப் பொங்கலிட்டுப் படைக்கும் பழக்கம் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. அவற்றை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. ஒரு குடும்பம் மட்டும் பொங்கலிட்டு குலதெய்வத்தையோ இஷ்டதெய்வத்தையோ வழிபடுதல்.
2. ஒரு பங்காளிக் குழுவினர் தம் குலதெய்வத்துக்குப் பொங்கலிட்டு வழிபடுதல்.
3. ஒரு ஊரினர் தம் ஊர்த்தெய்வத்திற்கு விழாவெடுத்துப் பொங்கலிட்டு வழிபடுதல்.

பொதுவாக ஆண்டுக்கொரு முறை நிகழும் இத்தகைய வழிபாடுகள் ஒரு குறிப்பிட்ட தேதியில் நடைபெறுவதில்லை. குடும்பத்தினர், குலத்தினர் அல்லது ஊரினர் அவரவர் விருப்பப் படி – வசதிப்படி – பொங்கலிடும் தேதிகளை நிர்ணயித்துக் கொள்வர். இத்தகைய பொங்கல்கள் அவை கொண்டாடப்படும் மாதத்தை அடிப்படையாகக் கொண்டு மாசிப்பொங்கல், பங்குனிப் பொங்கல், சித்திரைப்பொங்கல் என்றும் வழிபடப்படும் தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டு மாரியம்மன் பொங்கல், காளியம்மன் பொங்கல் என்றும் சுட்டப்படுகின்றன.

தை மாதம் முதல்தேதி நடைபெறும் 'தைப்பொங்கல்' மட்டும் நிர்ணயிக்கப்பட்ட ஒரே தேதியில் ஒவ்வோராண்டும் தமிழகம் முழுதும் கொண்டாடப்படுகிறது. 'தமிழர் திருநாள்' என்று அழைக்கப்படும் இவ்விழா 'அறுவடைத் திருவிழா'வாகக் கருதப்படுகிறது. வேளாண் விளைபொருள்களை அளித்த மழை, சூரியன், கால்நடைகள், முன்னோர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக அடையாளப் படுத்தப்படுகிறது. தமிழகத்தில் அறுவடை ஒரேநேரத்தில் நிகழ்வதில்லை. வெவ்வேறு காலங்களில் நிகழ்கின்றன. மரபுப்படி அவ்வப்பகுதி மக்கள் தனித்தனியே விழா கொண்டாடியிருக்க வேண்டும். ஆனால் நன்றி தெரிவிக்கும் பொங்கல் விழா மட்டும் ஒரே நேரத்தில் (மார்கழி 30, தை-1-3) நடைபெறக் காரணம் என்ன? எவ்வளவு காலமாக இவ்விழா நடைபெற்று வருகிறது? முதலில் பொங்கல் விழா குறித்த செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம். மார்கழி மாத இறுதிநாளில் போகிப்பண்டிகையுடன் பொங்கல் விழா தொடங்குகிறது.

மேற்குறிக்கப்பட்ட பொங்கல் விழா கொண்டாடும் முறைகள் இடத்திற்கு இடம் சாதிக்குச் சாதி மாற்றம் பெறுகிறது. போகிப் பண்டிகை மற்றும் கரிநாள் தமிழகத்தின் தென்பகுதிகளில் நடத்தப்படுவதில்லை என்பது வேறுபாடுகளுள் குறிக்கத்தக்கது.

'போகி' மழைக்கடவுளான இந்திரனின் பெயர். 'மாரி' என்பது மேகம், மழை என்னும் பொருளுடையது மாரியம்மனை மழைத்தெய்வமாகக் கொள்ள இடமுண்டு. எனவே பண்டிகையின் முதல்நாளான 'போகி' மழை வழிபாட்டு நாள் என்று கருதலாம். அடுத்தநாள் சூரிய வழிபாட்டு நாள், அடுத்த நாள் கால் நடைகளும் முன்னோர்களின் ஆவிகளும் வழிபடப்படுகின்றன. இறுதிநாள் ஒய்வுநாள், கொண்டாட்ட நாள், மகிழ்ச்சியாகப் பொழுது போக்கும் நாள்.

ஆந்திர மாநிலத்தில் கொண்டாடப்படும் பொங்கல்விழா தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. போகியன்று வீட்டிலுள்ள தேவையற்ற பொருட்களை எரித்து அதில் வெந்நீர் போட்டுக் குளிப்பர். கட்டில் முதலான பொருட்களைக் கழுவுவர். அடுத்தநாள் பெத்தபண்டகா (பெரிய பண்டிகை) அன்று முன்னோரை வழிபடுவர். சைவ உணவு, புதுத்துணி வைத்துப் படைப்பர். அடுத்தநாள் 'பசுவுல பண்டகா,

விழா நாள்	விழா பெயர்	வழிபடப்படும் தெய்வம்	வழிபடும் முறை
மார்கழி 30 (சனவரி 13/14)	போகி (இந்திரன்) மாரியம்மன்	போகி (இந்திரன்)/ மாரியம்மன்	வேண்டாத பொருட்கள் எரிக்கப்படும். வயலின் சனி மூலையில் (வட கிழக்கு) வேப்பிலை போடப்படும். வீட்டின் கூரையில் வேப்பிலை செருகப்படும் மாரியம்மனுக்குப் படைப்பதுண்டு.
தை 1 (சனவரி 14/15)	பொங்கல் (பெரும் பொங்கல், சூரியப் பொங்கல்)	சூரியன்	அவரவர் வீட்டுக்கு வெளியே வெண்பொங்கல் மற்றும் சர்க்கரைப் பொங்கல் வைப்பர். பொங்கல் பொங்கும்போது பொங்கலோ பொங்கல் என்று கூவுவர் அல்லது குலவையிடுவர். கரும்பு. மஞ்சள், சமைத்த காய்கறிகள் வைத்து சூரியனுக்குப் படைப்பர்.
தை 2 (சனவரி 15/16)	மாட்டுப் பொங்கல்	மாடுகள்/ முன்னோர்	மாடுகள் அலங்கரிக்கப்படும். வெண் பொங்கலிட்டு மாடுகளுக்குப் படைப்பர். அசைவம் உண்பவர் அசைவ உணவு சமைப்பர். இறந்த முன்னோர் வழிபடப்படுவர். வேளாண் தொழிலாளர் சிறப்பு செய்யப்படுவர். புதுத்துணிகள் படைக்கப்படும். மாடுகள் விரட்டப்படும். சில பகுதிகளில் 'மஞ்சு விரட்டு' (ஜல்லிக்கட்டு) நடைபெறும்.
தை 3 (சனவரி 16/17)	கன்றுப் பொங்கல்/ காணும் பொங்கல்/கரிநாள்		பெண்கள் கும்மி, கோலாட்டம் அடிப்பர். ஆண்கள் மரபுவழி விளையாட்டுகளில் ஈடுபடுவர். தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்கப்படும்.

அல்லது 'கனுமா' என்று சுட்டப்படும். சூரியன் உதிக்குமுன் பொங்குவர். சூரியனுக்கும் மாடுகளுக்கும் தனித்தனியே படைக்கப்படும். மாடு விரட்டுதலும் உண்டு. ஆந்திரத்தின் சித்தூர் பகுதிகளிலும் ராயல்சீமா பகுதிகளிலும் கொண்டாட்ட முறைகள் மாறுபடுகின்றன. ஆயினும் முன்னோர் வழிபாடு, சூரிய வழிபாடு, கால்நடைகள் வழிபாடு போன்ற அடிப்படை நோக்கங்கள் தமிழகத்துடன் அப்படியே ஒத்துள்ளன.

கேரளா, கர்நாடகா, அஸ்ஸாம், மகாராட்டிரம் முதலான மாநிலங்களில் தை – முதல் தேதி (சனவரி 14 அல்லது 15) மகரசங்கராந்தி கொண்டாடப்படுகிறது. விரதமிருந்து, பூசை செய்து சூரியனை வழிபடுதல் மட்டுமே இங்கு நிகழ்வதாகத் தெரிகிறது. சூரியன் மாதம் ஒரு ராசியாக 12மாதங்களுக்கும் 12ராசிகளோடு சேருவான் என்றும் மகரராசியுடன் சேரும் நாளே மகரசங்கராந்தி என்றும் சுட்டப்படுகிறது. இந்நாளில் சூரியன் தெற்கிலிருந்து வடக்கே நகரத் தொடங்குவான் (உத்தராயணம்). இந்நாள் சிறந்த நாளாகக் கருதப்படுகிறது.

பொங்கல்விழா குறித்த பழைய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. மழை வழிபாடு, சூரிய வழிபாடு, முன்னோர் மற்றும் கால்நடை வழிபாடு குறித்த செய்திகள் காணப்படுகின்றன. ஆயினும் இவை தனித்தனியே சுட்டப்படுகின்றன. ஒரே விழாவின் அங்கமாக இவ்வழிபாடுகள் சுட்டப்படவில்லை. இந்த வழிபாடுகள் ஒரே விழாவாகப் பிற்காலத்தில் மாறியிருக்கவேண்டும்.

பொங்கல் விழாவில் சூரிய வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. தமிழகம், ஆந்திரா தவிர்ந்த இந்தியாவின் பிற பகுதிகளில் சூரிய வழிபாடு மட்டுமே அதேநாளில் நிகழ்த்தப்படுகிறது. இந்த வழிபாட்டோடு பொங்கல் விழா இணைக்கப்பட்டுள்ளதாகக் கருதமுடிகிறது. இந்த இணைப்பு நிகழ்ந்த காலம் குறித்து அறியமுடியவில்லை.

இங்கு இயேசுகிருத்துவின் பிறந்தநாள் குறித்த கருத்து ஒன்றை ஒப்பிடலாம். ரோமானிய நாட்காட்டியின்படி கி.மு. 7க்கும் 4க்கும் இடையே கிருத்து பிறந்திருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இதன்படி அவர் பிறந்த தேதி டிசம்பர் 25 அல்ல. ரோமானியர்கள் சூரியனை வழிபட்டு வந்தவர்கள்

குளிர்காலத்தின் நடுப்பகுதியில் சூரியன் வடக்குநோக்கி நகர ஆரம்பிக்கும் நாளை சூரியனின் பிறந்த நாளாக அவர்கள் வழிபட்டு வந்தனர். கிருத்துவர்கள் அந்நாளையே கிருத்து பிறந்தநாளாகக் கொண்டாடினர்(மங்கையர் மலர், டிசம்பர் 1996:11).

இதன்படி ரோமிலும் சூரியன் வடக்குநோக்கி நகரும்நாள் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை அறியமுடிகிறது. அத்தகைய கொண்டாட்டத்துடன் கிருத்துவின் பிறந்தநாள் இணைக்கப் பட்டதையும் அறியமுடிகிறது. அங்கு டிசம்பர் 25இல் இது நிகழ நமக்கு சனவரி 14 அல்லது 15ஆவது நாளில் இது நிகழ்வதாகக் கூறப்படுகிறது. இது விளக்கப்பட வேண்டிய பகுதி.

ஜப்பானின் மரபுவழிப் புத்தாண்டு தை-1இல் நடைபெறுவதாக சுசுமு ஓனோ (Susumu Ohno, 1985:15-48) குறிப்பிடுகிறார். தமிழ்மொழிக்கும் ஜப்பான் மொழிக்கும் உள்ள தொடர்புகளைச் சுட்டிக்காட்டும் இப்பேராசிரியர் தமிழகப் பொங்கல் விழாவுக்கும் ஜப்பானியப் புத்தாண்டு விழாவுக்கும் உள்ள ஒப்புமைக்கூறுகளை விளக்கியுள்ளார். சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட தமிழறிஞர்கள் சிலர் தை-1இல்தான் தமிழ்ப் புத்தாண்டு தொடங்குவதாகக் கருத்துரைத்துள்ளனர். இவை அனைத்தும் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை. இவற்றிற்கு சூரியன் வடக்குநோக்கி இயங்கத் தொடங்கும் நாளே காரணமாக இருக்கும் என்று கருதுவது பொருத்தமாகத் தெரிகிறது.

Susumu Ohno, Arunasalam Shanmugadas, Manonmani Shanmugadas, 1985 Worldview and Rituals Among Japanese and Tamil Gakushuin University, Mejiro, Toshima-Ku, Tokyo 171, Japan.

விழாக் கலைச்சொற்கள்

கு. கண்ணன்
தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

நாட்டுப்புறசாயலின் கூறுகளில், ஒன்றான, விழா என்பது சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது அறிவியல் முன்னேற்றத்தால் நவீனம் அடைந்து வரும் இன்றைய சூழலில் முன்னோர்கள் மரபாகச் செய்து வரும் சடங்குகள், விழாக்கள், போன்றவற்றில் பயன்படுத்தி வரும் சொற்களை வருங்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையிலும் நாட்டுப்புறவியல் சொற்களின் மரபு, பழமை அழியாமலும் சிதையாமலும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகிறது.

சொல்

மொழியின் இன்றியமையாத கூறு சொல்லாகும்

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்
பொருள்தரின் அது பதமாம்" (நன்னூல் – 128)

எனத் தனித்தும் தொடர்ந்தும் வரும் எழுத்துக்கள் பொருள் தருமானால் அது சொல் எனப்பெறும் என்கிறது மரபிலக்கணம். சொல் உலகப் பொருட்களைச் சுட்டவும் மனித எண்ணங்களை வெளிப்படுத்தவும் பயன்படுகிறது. எனினும் சொற்களின் பயன்பாட்டுச் சூழலால் சொற்பொருள் முடிவு செய்யப்படு கிறது. இவ்வாறு புதிய கருத்தையோ, பொருளையோ விளக்கக் கூடிய அந்தந்தப் பயன் பாட்டுச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு சொற்களைப் பொதுச்சொல், சிறப்புச் சொல்லென இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு சொல் மரபுரீதியாக

எல்லோருக்கும் தெரிந்த பொருளில் பயன்படுத்தப்படும்போது பொதுச் சொல்லாகிறது. இதே சொல் இப்பொதுத் தன்மையில் இருந்து வேறுபட்டுத் தொழில், தொழில் நுட்பம், கலை, இலக்கியம், இலக்கணம், அறிவியல் எனும் வரையறுத்த சூழல் களில் அவ்வத்துறை சார்ந்தோருக்கு மட்டுமே பொருள் விளங்கும் வகையில் அம்மொழிப் புலங்களில் மட்டுமே பயன் படுவதும் உண்டு. இத்தகைய சொற்களைச் சிறப்புச் சொற்கள் எனப்படுகின்றன. இங்கு இத்தகைய சிறப்புச் சொற்களே 'கலைச் சொற்கள்' எனக் குறிக்கப் பெறுகின்றன.

கலைச்சொல்

கலைச்சொல்லின் தந்தையாக உலகளவில் போற்றப் படுபவர் ஆஸ்டிரியா நாட்டைச் சேர்ந்த யூஜின் ஊஸ்டர். இவரே கலைச்சொல்லின் முன்னோடியாகவும் திகழ்கிறார். கலைச்சொல் என்பதற்கு "க்ரியாவின் தற்காலத் தமிழகராதி ஒவ்வொரு துறையிலும் வழங்கும் கோட்பாட்டுக்கான சொல் (பொதுவான பொருளில் வழங்காத) துறைச் சிறப்புச் சொல் Technical term word used in special fields என்று விளக்கம் கூறுகிறது.

கலைச்சொற்களின் தேவை

நாட்டுப்புறவியல் சொற்களைத் தொகுக்கும் பொழுது பிற மொழிச் சொற்கள் கலப்பின்றி தேர்ந்து எடுக்க வேண்டும். ஒவ்வொரு கூறுகளின் கலைச் சொற்களைத் தொகுக்கும் பொழுது பழமையான சிறப்பான கலைச்சொற்கள் கிடைக் கின்றன. அவற்றைக் கொண்டு அவற்றிற்கு இணையான புதிய கலைச் சொற்களை உருவாக்கவும் உதவி செய்கிறது. அறிவியல் அறிஞர்கள் புதிய கலைச்சொற்கள் படைக்கும் பொழுது நாட்டுப்புற வழக்காற்றுச் சொற்களை அடிப்படை யாகக் கொண்டு சொற்களைப் படைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் நாட்டுப்புறவியல் கலைச்சொற்களின் பொருள் தெரிந்து கொள்வதற்கும் புதிய சொற்களைப் படைக்கவும் கலைச்சொற்கள் தேவைப்படுகிறது.

விழாக்கலைச் சொற்கள்

விழா தொடர்பாகவும், விழா நடத்தப்பெறும் சடங்குகள் தொடர்பாகவும் பயன்படுத்தப்படும் சொற்கள் விழாக்கலைச்

சொற்களாகும் இலக்கியங்கள் விழாவினை விழா, விழாச்சாறு என்ற சொற்களில் குறிக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டம் பகுதிகளில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களை இவ்வாய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளது. அவற்றைக் காண்போம். சில கலைச்சொற்களுக்கு மட்டுமே விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பூச்சொறிதல்

திருவிழாவை நல்ல நாளில் நடத்தலாம் என்று முடிவு செய்வதற்குப் பூச்சொறிதல், நாள் குறித்தல், நாள் வைத்தல், பூக்கட்டுதல், என்று கூறுகின்றனர்.

கரகம் எடுத்தல்

கரகம் எடுத்தல் என்பது திருவிழாவின் முதல் நிகழ்ச்சியாக நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியினைக் கரகம் பாலித்தல், கரகம் சோடித்தல் என்று அழைக்கின்றனர். கரகத்தைக் கும்பம் எனவும் கூறுகின்றனர்.

கப்பரை எடுத்தல்

நாட்டுப்புற விழாக்களில் தீச்சட்டி எடுத்தலைக் கப்பரை எடுத்தல், சட்டி தூக்குதல் என்று பல்வேறு பெயர்களிட்டு அழைக்கின்றனர்.

மது காட்டுதல்.

மது காட்டுதல் என்பது ஆட்டின் இரத்தத்தையும் சோற்றையும் கலந்து புதுச்சட்டியில் எடுத்து வந்து அத்தெய்வத் திற்கென ஒதுக்கப்பட்ட ஊரின் எல்லையில் தூக்கி வீசுவர். அதனைச் சட்டியுடன் விழா தொடர்புடைய தெய்வம் பெற்றுக் கொள்ளும் என்பது மரபு வழியான நம்பிக்கை. இதனை எறி சோறு, மதுச் சோறு எனவும் வழங்குகின்றனர்.

பச்சைப் பரப்புதல்.

தெய்வங்களுக்குப் படையலிடுவதைப் பச்சைப் பரப்புதல் என்று கூறுகின்றனர். படையல், பள்ளயம் என்று திருச்சி மாவட்டத்தினர் கூறுகிறார்கள்.

கரை கூப்பிடுதல்.

கிராமப்புற கோயில்களில் கடவுள் வழிபாட்டின் போது வழிபாட்டிற்கு வந்துள்ளவர்களுக்கு மரியாதை செய்தலைக் கரை

கூப்பிடுதல் என்கின்றனர். இதனை மரியாதை செய்தல், காளாஞ்சி கொடுத்தல் என்று மதுரை மாவட்டத்தினர் குறிப்பிடுகின்றனர். இவ்வழக்கம் சரியாகச் செயல்படாத காரணத்தால் கொலை, வெட்டு, போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தஞ்சாவூர் பகுதி கிராமங்களில் கள்ளர்கள் வாழும் பகுதியில் இம்முறை இன்னும் நடைமுறையில் உள்ளது.

தளியல் போடுதல்.

காவடி எடுத்தலின் போது காவடியைக் கோவிலில் செலுத்திய பின் இறுதியாகக் காவடியை வைத்து ஓர் இடத்தில் கோவிலிலேயே சமைக்கப்பட்ட உணவினை வைத்து படையலிட்டு அனைவரும் சாப்பிடுவர். இதனைத் தளியல் போடுதல் என்கின்றனர்.

நாட்டுப்புறவியல் கூறுகளுக்குப் பொதுமையான சொல் படைத்தல் மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. ஒரு பொருள் பல சொற்கள் என்ற நிலையில் மிகுந்து காணப்படுகிறது.

சடங்குகளில் அந்தணர்களின் தலையீட்டால் வடமொழிச் சொற் கலப்பு ஏற்பட்டுள்ளன. அவற்றைக் கண்டு நீக்குதல் வேண்டும்.

புதிய கலைச்சொற்களைப் படைக்கும் பொழுது பல்வேறு சொற்களையும் தொகுத்து இணையானச் சொல்லைப் படைக்க வேண்டும்.

நாட்டுப்புற விழா சொற்களைத் தொகுத்து வழங்குவதால் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களுக்கு உதவுகிறது.

நாட்டுப்புறவியலின் அனைத்து கூறுகளுக்கும் ஒரு பொதுமையாள அகராதியை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் களப்பணி செய்து விழா பற்றிய கலைச்சொற்களைத் தொகுத்து செம்மைப்படுத்தி வழங்க வேண்டும்.

அண்டகுடையான் கிராமத் தேவேந்திர குல வேளாளர் சமயநிலை

முனைவர் ஆ. சண்முகம்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

முன்னுரை

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், மலையப்ப நல்லூர் ஊராட்சியில் கும்பகோணம் – நாச்சியார்கோயில் சாலையில் சாக்கோட்டைக்குக் கிழக்கே ஏறக்குறைய நான்கு கிலோமீட்டர் தொலைவில் அண்டகுடையான் என்னும் ஊர் அமைந்துள்ளது. தேவேந்திரகுல வேளாளர் மிகுதியாக வாழும் அவ்வூரில் அவர்கள் சமயநிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

அண்டகுடையானில் தேவேந்திரகுல வேளாளர்

அண்டகுடையான் நான்கு தெருக்களைக் கொண்டுள்ளது. அவற்றில் கீழத்தெரு, ஜீவாத்தெரு, காலனித்தெரு ஆகிய மூன்று தெருக்களில் முற்றிலும் தேவேந்திரகுல வேளாளர் இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மேலத்தெருவில் மட்டும் குடியானவர்கள் வாழ்ந்து வருகின்றனர். குடியானவர்களில் பெரும்பான்மையோர் நிலவுடைமையாளர்களாக விளங்குவதால் அவர்கள் நிலத்தில் நாள்தோறும் உழைத்து அதில் ஈட்டும் பொருளைக் கொண்டே உழைக்கும் வர்க்கமாகத் திகழும் தேவேந்திரகுல வேளாளர் வாழ்க்கை நடத்திவருகின்றனர்.

குலதெய்வம் – பங்காளிகள் முறை

அண்டகுடையானில் வாழும் தேவேந்திரகுல வேளாளர்கள் மூன்று பிரிவினர்களாக அமைந்துள்ளனர். அவர்கள் வாழ்வில்

நாட்டுப்புறச் சமயம் பெரும்பங்கு வகிப்பதால் நாட்டுப்புறத் தெய்வங்களின் அடிப்படையில் அப்பிரிவுகள் காணப்படுகின்றன. அய்யனாரைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் ஒரு பிரிவினராகவும் மற்ற இரு பிரிவினரும் வீரனார், பெத்தண்ணனைக் குல தெய்வங்களாகக் கொண்டவர்களாகவும் உள்ளனர். அங்கு மூன்று தெருக்களில் வாழும் எழுபத்துமூன்று குடும்பங்களில், கீழத்தெருவில் வாழும் முப்பத்திரண்டு குடும்பங்களில், இருபது குடும்பம் அய்யனாரையும், ஏழு குடும்பம் வீரனாரையும், ஐந்து குடும்பம் பெத்தன்னனையும் குலதெய்வங்களாகக் கொண்டு விளங்குகின்றன. ஜீவாத்தெருவில் வாழும் பன்னிரெண்டு குடும்பத்தினரும் அய்யனாரைக் குலதெய்வமாகக் கொண்டு உள்ளனர். காலனித்தெருவிலுள்ள இருபத்தொன்பது குடும்பத்தினரில் இருபத்து மூன்று குடும்பத்தினர் அய்யனாரையும், ஐந்து குடும்பத்தினர் வீரனாரையும், ஒரு குடும்பத்தினர் பெத்தண்ணனையும் குலதெய்வங்களாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

அவற்றுள் ஒரே பிரிவைச் சார்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுகின்றனர். அவர்களுக்குள் அண்ணன், தம்பி உறவு முறை திகழ்கிறது. ஒரே பிரிவினைச் சார்ந்தவர்கள் தமக்குள் திருமணம் செய்துகொள்வதில்லை. மாற்றுப் பிரிவைச் சார்ந்த குடும்பங்களுக்குள்ளேயே பெண் கொள்வினை – கொடுப்பினை நடைபெறுகிறது. "ஒரு இனக்குழு என்பது பல குழுக்களை, குலங்களைக் கொண்டு அமைந்திருந்தது. அவை தாய் வழியே இரத்த உறவுகள் கொண்டிருந்தன. இந்தக் குலங்கள் ஒவ்வொன்றும் தனக்குள்ளேயே மணம் செய்துகொள்ளாதபடி திட்டமாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஒரு குலத்தைச் சேர்ந்த ஆண்கள் தமது இனக்குழுவிற்குள்ளேயே பெண்களை மனைவியராகக் கொள்ளமுடிந்தது என்பார் எங்கெல்ஸ்" (அந்திரேயென்,கி.வி.,1985:144-145). "இதனைச் செட்டிநாட்டாரின் ஒன்பது கோயில்கள் வழி அறிய இயலும். ஒரு குறிப்பிட்ட தெய்வத்தைக் குலதெய்வமாகக் கொண்டோர் தம்முள் மணஉறவை ஒழித்து இருப்பர்" (செல்வராசு,நா:1991: 96-97). இம்முறையே அண்டகுடையானிலும் காணப்படுகிறது.

அய்யனார் வழிபாடு

அண்டகுடையானில் வாழும் தேவேந்திரகுல வேளாளரில் ஒரு கூட்டத்தினருக்குரிய குலதெய்வமாக விளங்கும் அய்யனார்,

அவ்வூரிலிருந்து நாச்சியார்கோயில் செல்லும் வழியில் நான்கு கிலோமீட்டர் தொலைவில் கருடச்சேரி அருகே பாதரக்குடியில் கோயில் கொண்டுள்ளார் மக்கள் அங்கு சென்று அய்யனாரை வழிபட்டு வருகின்றனர். ''மக்களின் வழிபாட்டு நோக்கங்கள் அனைத்துமே தங்கள் துன்பங்கள் நீங்கி உலக இன்பங்களைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன'' (இராமநாதன், ஆறு., 1991:308). எனவே வாழ்க்கையில் துன்பங்கள் சூழ்கையில், குடும்பங்களில் நல்ல நிகழ்வுகள் நடைபெறுகையிலும் அம்மக்கள் அய்யனாரை வழிபடச் செல்கின்றனர்.

அவர்கள் பாதரக்குடி செல்கையில் பால், இளநீர், நெல், அரிசி, தேங்காய், வாழைப்பழம், சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி மலர்மாலைகள் கொண்டு செல்வர். அய்யனாருக்குப் பால், இளநீர் முழுக்கு நடைபெறும். பால்சோறு பொங்கி இறைவனுக்குப் படைப்பர். வாழை இலையில் தேங்காய், பழம், நெல் வைத்து ஊதுபத்தி ஏற்றி, சாம்பிராணி இட்டு அய்யனாருக்கு மலர்மாலை அணிவித்துத் தீபாராதனை நடைபெறும். பால் சோறு வழிபாட்டிற்கு வருகைதந்தோர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். அய்யனாருக்கு ஆடு, கோழிகள் படைப்பதில்லை. அந்தணரே பூசகராகவும் உள்ளார்.

வீரனார் வழிபாடு

வீரனார் என்ற பெயரில் விளங்கும் தெய்வத்தை மதுரை வீரன் என்றும் குறிப்பிடுகின்றனர். அண்டகுடையான் கீழத்தெருவிலுள்ள ஒதியன்மரத்தை வீரன் சாமியாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். ''நன்மை நல்கும் மரங்கள் மீது மக்கள் கொண்ட நன்றியுணர்வும், நச்சுமரங்களைக் கண்டு அஞ்சியதால் ஏற்பட்ட அச்சவுணர்வும், தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனி நல்கும் மரங்களைக் கண்டபொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பு உணர்வும், இதுபோன்றே வளத்தை நமக்கு இவை நல்கும் என்ற நம்பிக்கையுணர்வும் மரங்கள் இடம்விட்டு இடம் பெயரும் மனிதனுக்கு உணவளிக்கும் தாயாகவும், ஓய்வுகொள்ளும் உறைவிடமாகவும் இருந்த நிலையும் மரவழிபாட்டின் அடிப்படைக் காரணங்களாகும்'' (நாகப்பா நாச்சியப்பன், 1991:34-35). அத்தகைய மர வழிபாட்டின் எச்சநிலையை இன்றும் அண்டகுடையான் சிற்றூரில் காணமுடிகிறது.

வீரனார் பிரிவைச் சார்ந்த மக்கள் கிழமைதோறும் செவ்வாய், வெள்ளி நாள்களில் வீரன் தெய்வத்திற்குச் சாம்பிராணி இட்டு விளக்கேற்றி வழிபடுவர். வீரன் சாமிக்கு உரிமையுடைய குடும்பத்தினர் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தும் போது சிவப்புத்துணியை மரத்தில் கட்டி, மாலையிட்டு, பழங்கள், சோறு, சாராயம் படைத்து வழிபாடு செய்வர். ஆடு, கோழி பலியிட்டு வழிபாடு நடைபெறுவதும் உண்டு. அவ்வூரில் குடியமர்ந்துள்ள வீரனைக் குல தெய்வமாகக் கொண்ட பிச்சை என்பவர் வீரனுக்குப் பூசகராகவுள்ளார்.

பெத்தண்ணன் வழிபாடு

அவ்வூரில் வாழ்ந்துவரும் தேவேந்திரகுல வேளாளரில் பெத்தண்ணன் சாமியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் திருவாரூருக்குத் தெற்கே நான்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாணாபுரம் என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள பெத்தண்ணன் சாமியை வழிபட்டு வருகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்கள் எவருக்கேனும் நோய் வந்தால் அல்லது திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் வந்தால் பெத்தண்ணனைக் குலதெய்வமாகக் கொண்டோர் சாணாபுரம் சென்று வழிபட்டு வருகின்றனர். இறைவனை வழிபட தனிக் குடும்பமாகவோ அல்லது பலர் சேர்ந்தோ சாணாபுரம் சென்று வருகின்றனர்.

அவ்வாறு செல்கையில் பால், இளநீர், தேங்காய், பழம், எலுமிச்சம்பழம், சூடம், ஊதுபத்தி, மலர்மாலைகள், நெல் அரிசி, ஆடு, கோழி முதலானவற்றை எடுத்துச் செல்வர். கொண்டு சென்ற அரிசியால் சர்க்கரைப்பொங்கல் செய்து இறைவனுக்குப், படைத்து வழிபடுவர். ஆடு, கோழி வெட்டி பெத்தண்ணன் சாமிக்குப் படைப்பதும் உண்டு. சமைத்துப் படையலிட்ட உணவை இறைவனை வழிபடச் சென்றோர் மற்றும் கோயிலுக்கு வரும் அன்பர்களுக்குப் பகிர்ந்தளிப்பர். ஆடு, கோழி, வெட்டி வழிபடும் வழக்கம் இருந்தாலும் பெத்தண்ணன் சாமிக்கு அந்தணர் பூசகராகவுள்ளார் என்று களப்பணியின்போது தொ, சிவபாக்கியம் தெரிவித்தார் (சிவபாக்கியம், தொ., 17-08-1995). சாணாபுரம் தொலைவிலுள்ளதால் அண்டகுடையானிலிருந்து பெத்தண்ணன் சாமியை வழிபடச் செல்வோர் இரண்டு – மூன்று நாள்கள் தங்கி வழிபட்டு வருவது வழக்கம்.

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு இடப்பெயர்வு செய்பவர்கள் தங்கள் குலதெய்வங்களை வழிபடுவதற்குச் சொந்த ஊருக்குச் செல்வதுண்டு. ஆயின் அண்டகுடையானிலிருந்து பாதரக்குடி, சாணாபுரத்திற்கு அய்யனார், பெத்தண்ணன் சாமியைக் குலதெய்வமாகக் கருதி வழிபடச் செல்பவர்கள் பாதரக்குடியிலிருந்தும், சாணாபுரத்திலிருந்தும் இடம் பெயர்ந்து அண்டகுடையானுக்கு வரவில்லை என்பது களப்பணியின்போது தெரியவந்தது. எனவே, அக்கிராம மக்கள் அவ்விரு தெய்வங்களையும் வழிபடுவதற்கு ஏன் வெளியூர் செல்கிறார்கள் என்ற வினாவிற்கு விடை கிட்டவில்லை. மேலும் அவர்கள் வழிபடும் நாட்டுப்புறச் சமயத்தைச் சார்ந்த சிறு தெய்வங்களாக விளங்கும் அய்யனார், வீரன், பெத்தண்ணன் மூன்றிற்குமுரிய வரலாற்றுச் செய்திகள் பற்றியும் அறியமுடியவில்லை.

இறந்தோர் வழிபாடு

அண்டகுடையான் தேவேந்திரகுல வேளாளரிடையே இறந்தோரை வழிபடும் வழக்கம் காணப்படுகிறது. ஆண்-பெண் குழந்தைகள், திருமணமான ஆண்-பெண், முதியவர்கள் இறந்தால் அவர்களை வீட்டில் தெய்வங்களாக வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது வீட்டின் சாமிக்கூடத்தில் மேற்கு பக்கச் சுவரில் ஒரு ஆணியை அடித்து அதனை இறந்தவர்களாகக் கருதுகின்றனர். திருமணமான பெண்களாக இருந்தால் ஆணியில் ஒரு மஞ்சள் கயிற்றைக் கட்டி வைப்பர். இக்காலத்தில் சிலர் இறந்தவர் புகைப் படங்கள் வைத்தும் வழிபடுகின்றனர்.

பொங்கல், தீபாவளி, ஆண்டுப்பிறப்பு, ஆடிப்பெருக்கு போன்ற நாள்களில் இறந்தோருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இறந்த ஆண்குழந்தையை வீரன் என்றும், பெண் குழந்தையை மகமாயி என்றும் குறிப்பிடுகின்றனர். ஆண்களுக்கு வேட்டி, துண்டு, சட்டை, கள், சாராயம் வைத்தும், பெண்களுக்கு மஞ்சள், பட்டு, பூ, பொட்டு வைத்தும் ஆணி அல்லது புகைப்படத்திற்கு மாலையிட்டுச் சாம்பிராணி காண்பித்து சோற்றுடன் கோழி, ஆடு, மீன்குழம்பு படைத்துவழிபடுகின்றனர். செவ்வாய், வெள்ளி போன்ற நாள்களில் பூ போட்டு வழிபடும் நடைமுறையும் அம்மக்களிடையே உள்ளது.

மரத்தின் உறுப்புகளுள் ஒன்றான 'பூ'வை வைத்தே இறைவனை வழிபடும் முறை திராவிடப் பூசைமுறை. பூ வழிபாடு திராவிடம் தவிர, ஆசியாவின் வேறு பகுதிகளிலும் ஆப்பிரிக்காவிலும் காணப்படவில்லை. எனவே, பூ வழிபாட்டின் தாயகம் திராவிடமாக இருப்பதால் அதன் மூலமான மரவழி பாட்டிற்குத் தாயகமும் திராவிடம் என்பார் டாக்டர் க. ப. அறவாணன் (நாகப்பா. நாச்சியப்பன், 1991:35).

ஊர் – எல்லைத் தெய்வ வழிபாடு

அச்சிற்றூரில் குடியானவர்கள் வசிக்கும் மேலத்தெருவில் மகா மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. மக்கள் ஊர்த் தெய்வமாக மகா மாரியம்மனை வழிபட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் சித்திரைமாதம் ஏதாவதொரு ஞாயிற்றுக் கிழமையில் அம்மனுக்குக் காப்புக்கட்டி அதனைத் தொடர்ந்த ஒன்பதாம் நாள் திங்கள் கிழமை தீமிதித் திருவிழா நடை பெறுகிறது. சிவபுரத்தைச் சார்ந்த கலியமூர்த்தி (வெள்ளாளர்) என்பவர் மாரியம்மனுக்குப் பூசகராகவுள்ளார்.

மக்கள், ஊருக்குப் புறம்பாக அமையப்பெற்று விளங்கும் கொடைகாளி, அய்யனார் தெய்வங்களை எல்லைத் தெய்வங் களாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். சிவபுரத்தைச் சார்ந்த சின்னதுரை (வன்னியர்) என்பவர் கொடைகாளிக்கும், சுந்தர மூர்த்தி (அந்தணர்) அய்யனாருக்கும் பூசகராகவுள்ளனர்.

சித்திரை மாதம் நடைபெறும் மாரியம்மன் திருவிழா தவிர்த்து, வேண்டுதல்களை நிறைவேற்றும்பொருட்டு அவ்வப் போது மக்கள் ஊர்–எல்லைத் தெய்வங்களுக்குச் சிறப்பு வழி பாடுகள் நிகழ்த்துவமுண்டு.

அவ்வூர் குடியானவர்கள் மட்டுமே ஊர்–எல்லைத் தெய்வக் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். தேவேந் திரகுல வேளாளர் கோயிலுக்கு வந்து வழிபட குடியானவர்கள் உடன்படாமையால் அவர்கள் அத்தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செலுத்த வேண்டுமாயின் கோயில் பூசகர்களிடம் கொடுத்தனுப்ப, அவர் தெய்வங்களுக்குப் பூசைசெய்து பிரசாதத்தை மட்டும் அம்மக்களிடம் கொண்டு கொடுக்கும் நிலையை இன்றும் அச்சிற்றூரில் காண முடிகிறது.

முடிவுரை

அண்டகுடையான் தேவேந்திரகுல வேளாளர்கள் நாட்டுப் புற சமயத்தைச் சார்ந்த அய்யனார், வீரன், பெத்தண்ணன், மகாமாரியம்மன், கொடைகாளி போன்றவற்றை வழிபட்டு வந்தாலும் ஊர்-எல்லைத் தெய்வக் கோயில்களுக்கு வந்து வழிபட உரிமையற்று வாழும் நிலையை அறியமுடிகிறது. எனவே, தமிழகத்தில் பல கிராமங்களில் காணப்படும் இத்தகைய புறக் கணிப்பு நிலைகள் மாறினால்தான் சமுகத்தில் கல்வி, பொருளாதார நிலைகளில் தாழ்ந்திருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் உண்மையிலேயே முழு விடுதலை உணர்வோடு வாழ முடியும்.

துணைநின்ற நூல்கள்

1. அந்திரேயென், இ.லி., 1985 'எங்கெல்சின் குடும்பம் தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'
2. இராமநாதன், ஆறு, 1991 'சிறுதெய்வ ஆய்வுமுறை: அறிமுகமும் திப்பாய்ந்தம்மன் வழிபாட்டு ஆய்வும்' நாட்டுப் புறவியல் ஆய்வுமுறைகள்', ப-ள். 273-377, இராமநாதன், ஆறு., (ப.ஆ.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. செல்வராசு, நா , 1991 'சமுக மானுடவியல் பார்வைகள் (நாட்டுப்புறவியலாய்வு) காரனேசன் பதிப்பகம், முத்தியால் பேட்டை, புதுச்சேரி.
4. நாகப்பா நாச்சியப்பன் 1991 'திருக்கோயில் வழிபாடு', மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கித்தெரு, சென்னை.

செய்திகள் வழங்கியோர்

1. பெயர்: கே. சம்பூரணம், முகவரி: கீழத்தெரு, அண்ட குடையான், வயது: 60 கல்வி: இல்லை, தொழில்: வேளாண்மை, சாதி: தேவேந்திரகுல வேளாளர், சந்தித்த நாள்: 16—8—1995,
2. தொ. சிவபாக்கியம், கீழத்தெரு, அண்டகுடையான், 70, இல்லை, தேவேந்திரகுல வேளாளர், 17—8—1995.
3. தி. ராசியம்மாள், கீழத்தெரு, அண்டகுடையான், 25, இல்லை வேளாண்மை, தேவேந்திரகுல வேளாளர், 17—8—1995.
4. கே. செல்வம், காலனித்தெரு, அண்டகுடையான், 22, இல்லை வேளாண்மை, தேவேந்திரகுல வேளாளர், 29—8—1995.

கருமாத்தூர் நல்லகுறும்பையர் தெய்வத்தின் சாமியாடி, பூசாரி தேர்வுசெய்யும் முறை - ஒரு கண்ணோட்டம்

முனைவர் சி. பொன்னுத்தாய்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

முன்னுரை:

மனிதன் எனும் நிலையிலிருந்து தெய்வம் என்னும் நிலைக்கு ஒருவரை உயர்த்துவதற்காகச் செய்யப்படும் சடங்குகளில் சாமியாடி, பூசாரி தேர்வு செய்யும் முறை ஒன்றாகும். கட்டுரையில் கருமாத்தூர் நல்லகுறும்பையர் தெய்வத்தின் சாமியாடி, பூசாரி தேர்வு செய்யும் முறை பற்றி விளக்கப்படுகிறது.

1. சாமியாடி, பூசாரி தேர்வு செய்யும் முறைகள்

நாட்டுப்புறச் சமயங்களில் சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வு செய்வதற்குப் பின்வரும் முறைகளைக் கையாண்டுள்ளனர். அவை:

1. உடுக்கு என்னும் இசைக்கருவியை அடித்து, அதன்மூலம் ஆடவர், பெண்டிர் ஆகியோருக்கு அருள்வரும்படி செய்து தேர்ந்தெடுக்கின்றனர்.
2. கொட்டு, தவுல், மேளம் போன்ற இசைக்கருவிகளை முழக்கி இருபாலருக்கும் அருள்வரும்படி செய்து தேர்வு செய்கின்றனர்.
3. குழுவின் தலைமைப் பொறுப்புடையவர் மூலம் இரு பாலருக்கும் நெற்றியில் திருநீறு வைத்து, தெய்வத்திற்குச் சமமாகக் கருதப்படும் பிரம்புக்கம்பினைக் கொண்டு

தலையில் அடித்து அருள்வரும்படி செய்து தேர்ந்தெடுக்கின்றனர்.

4. சாமியாடி அல்லது பூசாரியாக இருந்தவர் இறக்கும் தருவாயில் தன்னுடைய மனைவி, மக்கள் (அ) உறவினர்கள் இவர்களுள் யாரிடமாவது ஒரு கைப்பிடியளவு வேப்பிலையும், திருநீறும் கொடுத்து இறந்து விடுவர். இதைக் "குருவும் குலையும் கொடுத்தல்" என்று கூறுவர். சிறிது நாட்கள் கழித்து இறந்தவருக்குப் பதிலாகச் சாமியாடி அல்லது பூசாரி தேர்வு செய்வர். அன்றையநாள் குருவும் குலையும் வாங்கியவர் வந்து இருபாலருக்கும் திருநீறு வைத்து விடுவர். அவ்வாறு பிறரது நெற்றியில் வைத்துவரும்பொழுது அவருக்கே அருள் வரலாம் அல்லது மற்றவர்களுக்கு வரலாம். இந்த முறையிலும் தேர்வு செய்கின்றனர்.

மேற்கூறிய நான்கு முறைகளில் குலதெய்வத்திற்கும், ஊர்ப் பொதுத் தெய்வத்திற்கும் சாமியாடி, பூசாரி ஆகியோர் தேர்வு செய்யப்படுகின்றனர். மணமானவர், மணமாகாதவர் ஆகியோர் மட்டும் இடம் பெறுவர். விதவைகளுக்கு அனுமதியில்லை.

5. சிலருடைய குலதெய்வத்திற்குரிய சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென்று ஒரு பரம்பரையை நியமித்திருப்பர். அப்பரம்பரையில் நியமிக்கப்பட்டவர் மூலம் சாமியாடி, பூசாரி தேர்வு செய்யப்படுகின்றனர். இதில் மணமாகாத ஆண்கள் மட்டும் இடம் பெறுவர்.

மேற்கூறிய ஐந்து வகையில் சாமியாடி, பூசாரி ஆகியோர் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1.1. முறை வைப்புகள்

சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வு செய்வதில் சில முறை வைப்புகள் உள்ளன. அவை,

1. சுற்றி ஆண்டு வரும் முறை.
2. மூத்த வாரிசு ஆண்டு வரும் முறை.

இவை ஒவ்வொன்றும் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

1.1 1. சுற்றி ஆண்டு வரும் முறை

உடன்பிறந்தவர்கள் அனைவருக்கும் சாமியாடி, பூசாரியாகும் தகுதி வழங்கப்படுகின்றது. மூத்த வாரிசில் ஒருவர் சாமியாடியாகவும், இன்னொருவர் பூசாரியாகவும் இருந்து இறந்துவிட்டால் அவர்களுக்குப் பதிலாக இரண்டாவது வாரிசில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பர். மீண்டும் மூத்த வாரிசுக்குள் தேர்ந்தெடுக்கும் முறை கிடையாது. வரிசை முறையில் வாரிசுதாரர்கள் ஆண்டு முடித்தால் ஒரு சுற்று முடிந்துவிட்டது என்று கருதுவர். அதன் பிறகு முதல் வாரிசிலிருந்து அடுத்த சுற்றுமுறையைத் தொடங்கி வருவர். இம்முறையைச் "சுற்றி ஆண்டு வரும் முறை" என்று அழைக்கின்றனர்.

1.1.2. மூத்த வாரிசு ஆண்டுவரும் முறை

ஒருவருடைய நான்கு மகன்களுள் [சான்றுக்காக நான்கு மகன்கள் என்று குறிப்பிடப்படுகின்றன] மூத்த மகன் சாமியாடியாகவும், இரண்டாவது மகன் பூசாரியாகவும், மூன்றாவது, நான்காவது மகன்களுக்குக் கிடாய்வெட்டுதல், தோரணம் கட்டுதல், இதர பணிகளைச் செய்தல் என்ற முறையில் தேர்வு செய்கின்றனர். இதில் சாமியாடும் மூத்தமகன் இறந்ததும் அவருடைய மூத்தமகன் மீண்டும் சாமியாடியாகத் தேர்வுசெய்யப் படுவர். அதேபோல் பூசாரியாக இருந்த இரண்டாவது மகன் இறந்ததும் இவருடைய மூத்தமகன் மீண்டும் பூசாரியாகத் தேர்வு செய்யப்படுவர். இரண்டாவது மகனைத் தேர்வுசெய்ய மாட்டார்கள்.

2 சான்றாதாரங்கள்:

மதுரை மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் உள்ள கருமாத்தூர், அதனைச் சுற்றியுள்ள ஊர்களில் களஆய்வு மேற்கொண்டதன் வாயிலாகப் பெறப்பட்ட பேட்டித் தகவல்களாக நல்ல குறும்பையர் தெய்வத்தின் சாமியாடி, பூசாரி தேர்வு செய்யும் போது மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள், பஞ்சாயத்து முறைகள் போன்றவை ஆதாரங்களாகக் கொள்ளப் படுகின்றன.

இன்றைய நிலையில் கருமாத்தூரிலும் அதற்கு அடுத்துள்ள கிராமங்களிலும் உள்ள கழுவநாதர், ஆங்காளர், நல்லகுறும்பர் தெய்வங்களுக்கு மகாசிவராத்திரி சிறப்பு நாளன்று வழிபாட்டு

முறைகள் நடைபெறுகின்றன. இம்மூன்று தெய்வங்களுள் நல்ல குறும்பர் தெய்வம் பறையர்களுக்குச் சொந்தமானதாக விளங்கு கிறது. இந்தத் தெய்வ வழிபாட்டின்போது அய்யன்பிடிக்கி எனப் படும் சாமியாடி அருள்வந்து சாமியாடும்போது ''ஏழுபேரே நாலு பேரே'' என்று அழைப்பது வழக்கமாக உள்ளது. இதில் ஏழுபேர் என்பது மூனுசாமி தெய்வத்தை [மேற்கூறிய மூன்று தெய்வங்களை ஒரே சொல்லில் குறிப்பிடுதல்] வடநாட்டிலிருந்து கொண்டுவந்த எழுவன் என்ற பறையருடைய ஏழுமகன்களைக் குறிப்பதாகும். எழுவன் தன்னுடைய குடும்பத்தோடு கருமாத்தூர் தாழைப் பகுதியில் தெய்வங்களை வைத்துத் தங்கினான். அவ்வமயம் அப் பகுதியில் முன்பே வாழ்ந்து கொண்டிருந்த கள்ளர் ஒருவர் எழுவன் வீட்டுக் கோழியைத் திருட வந்து கண்பார்வையிழந்து மீண்டும் பெற்றார். இவருடைய நான்கு மகன்களைக் குறிப்பது நான்குபேர் என்பதாகும். மேலும் இந்தத் தெய்வத்திற்குப் பூசாரி கள்ளர் சாதியைச் சேர்ந்தவராகவும், அய்யன்பிடிக்கி பறையர் சாதியைச் சேர்ந்தவராகவும் இருக்கிறார்கள். தெய்வ வழிபாட்டினை இரு பிரிவினரும் சேர்ந்தே இன்றுவரை நடத்துகிறார்கள்'' என்று சி. பொன்னுத்தாய் என்பவர் தம்முடைய முனைவர் பட்ட ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார். [சி. பொன்னுத்தாய், தொன்மக்கதைகள்-ஓர் ஆய்வு (மதுரை இராமநாதபுரம் மாவட்டங்கள்) –1994:பக் 123-124]. இவருடைய கருத்துக்களும் இக்கட்டுரைக்குரிய ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

3. ஏழுபேர் நான்குபேர்-அறிமுகம்:

பறையன் ஏழுபேர் என்பதை ''ஏழுபேர் வகையறா'' என்றும், கள்ளர் நான்குபேர் என்பதை ''நான்குதேவர் வகையறா'' என்றும் இவ்வட்டார மக்கள் அழைக்கின்றனர்.

ஏழுபேர் வகையறா என்பது 1. குட்டிக் கூட்டம், 2. குறும்பன் கூட்டம் 3. சங்கரன் கூட்டம் 4. எழுவன் கூட்டம் 5. மாயன் கூட்டம் 6. பெரியாம்பிள்ளை கூட்டம் 7. வள்ளுவன் கூட்டம். போன்றவையாகும். நான்குதேவர் வகையறா என்பது 1. பெரியகுறும்பத்தேவர் கூட்டம் 2. ஒய்யான் கூட்டம் 3. உடையான் கூட்டம். 4. பேக்காத்தி கூட்டம் என்பதாகும். இதில் ஒய்யான் கூட்டம் சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றது. இக்கூட்டத்தில் வயதில் மூத்த சுமங்கலி ஆடவரைத் தேர்ந்தெடுப்பர். இவர்மூலம் நல்ல

குறும்பையர் தெய்வத்தின் சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வு செய்கின்றனர். மற்ற இருதெய்வங்களுக்குரிய சாமியாடி, பூசாரிகளை இவர் தேர்வுசெய்யமாட்டார். இச்சிறப்பினைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரையில் நல்லகுறும்பையர் தெய்வத்தின் சாமியாடி, பூசாரி ஆகியோரைத் தேர்வுசெய்யும் முறைமட்டும் விளக்கம் பெறுகின்றன.

4. அய்யன்பிடிக்கி தேர்வு செய்யும் முறை:

தேர்வுசெய்பவர் அய்யன்பிடிக்கித் தேர்வுசெய்வதற்குரிய நல்லநாளைக் குறிப்பிட்டு ஏழுபேர், நான்குபேர் வகையறா விற்குத் தெரிவிப்பார், அந்தக்குறிப்பிட்ட நாளில் அனைத்து வகையறா ஆண்களும் கோட்டைமந்தையில் கூடுவர். கோட்டை மந்தையில் கருப்புச்சாமி தெய்வம் உள்ளது. கருமாத்தூர் வட்டார மக்களும், எட்டுநாட்டுக்கள்ளர்களும் சாமியாடி, பூசாரி தேர்வு செய்தல், திருவிழா நிகழ்த்துதற்குரிய நாள் தேர்ந்தெடுத்தல், கோவில் மானியப் பொருட்களை ஏலம்விடுதல் போன்ற தெய்வத்தோடு தொடர்புடைய பஞ்சாயத்து முறைகளை நடத்தும் இடமாக கோட்டைமந்தையைப் பயன்படுத்துகின்றனர். கூட்டத்தார் மீண்டும் ஒரு நல்லநாளைத் தேர்ந்தெடுத்து தோட்டி என்பவர்மூலம் கருமாத்தூர் வட்டார மக்களுக்குத் தெரிவிப்பர்.

அன்றையநாளில் ஏழுபேர் வகையறாவில் மணமாகாத ஆண்கள் குளித்த ஈர வேட்டியுடன் கோட்டை மந்தையில் வந்து கூடுவர். சுமார் பதினைந்து வயதிலிருந்து இருபத்தைந்து வயதிற்கு இடைப்பட்டவராக இருக்கின்றனர். அனைத்து மக்களும் வந்திருப்பார்கள். ஈரவேட்டியில் இருப்பவர்களைக் கிழக்கு நோக்கி நிற்கவைக்கின்றனர். இவர்களுக்குத் தேர்வு செய்பவர் நெற்றியில் திருநீறு வைத்துவிட்டு எதிர்த்திசையில் பிரம்புக்கம்புடன் நிற்பார். பக்கத்தில் ஒருவர் ஒரு தட்டின்மேல் ஐந்துமுகக் கப்பரையில் விபூதி வைத்து நிற்பார்.

இவ்வட்டாரப் பகுதியில் வேலாயுதங் கூட்டம் என்ற வகையினர் தெய்வ வழிபாட்டுக் காலங்களில் கொட்டு மேளம் அடிக்கும் பணியைச் செய்துவருகின்றனர். வேலாயுதங் கூட்டம் பறையன் சாதியைச் சேர்ந்தவர். வடதேசத்து எழுவன் கருமாத்தூர் எல்லையில் தங்கியிருந்தபொழுது இப்பகுதியின் முன்பே வசித்து வந்த ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு

கொண்டிருக்கிறார். அதன் விளைவாக அப்பெண்ணிற்குப் பிறந்த பையனை வேலாயுதம் என்று பெயரிட்டு தெய்வத்திற்குப் பணி விடைகள் செய்யும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். இவருடைய வாரிசுகளை வேலாயுதங் கூட்டம் என்று அழைக்கின்றனர். [மொக்கராசு; நல்லகுறும்பையர் கோவில் காவல்காரர்; பிரமலைக்கள்ளர்: 1—6—93, வயது - 70].

வேலாயுதங் கூட்டத்தில் கொட்டுமேளம் அடிப்பவர்கள் வடக்குத் திசையில் வரிசையாக நின்று கொண்டு கொட்டு முழக்கம் செய்வார்கள், இதை "சாமி கொட்டு அடித்தல்" என்று அழைக்கின்றனர். "இக்கொட்டு முழக்கம் பிறசடங்கு களுக்கு முழக்குவதைப் போல் இருக்காது. அருள் வருவதற்கான முறையில் உடம்பை அசைத்துவிடுமாறு இருக்கும் என்று கூறிய மேற்கூறிய தகவலாளர் கொட்டின் முழக்கத்தையும் அதன் இசையில் பாடிக்காட்டினார். அதாவது "சிணுங் கிணுஞ்சா, சிணுங்கிணுஞ்சா" என்ற சொற்கள் இறுக்கமான உடம்பை தளர்ந்த நிலைக்குக் கொண்டு வரும் என்கிறார். இம்முறையில் கொட்டுமேளம் தொடர்ந்து முழங்கும்போது வரிசையில் நிற்கும் சிலருக்கு அருள்வரும் இதில் தேர்வு செய்பவ ருடைய கண்களுக்கு வெள்ளை வேட்டியைக் கோவணமாக அணிந்து, மார்பில் பூணூலும், காதில் வாளைக்கடுக்கனுமாக யார்மீது தெரிகிறதோ, அவரது கழுத்தில் வளைதடிக்கம்பி எனப்படும் பிரம்புக்கம்பை வைத்து, இழுத்துத் தன்னுடைய இருப்பிடத்திற்குக் கொண்டு செல்வார்.

அருள் வரப்பெற்றவர் ஐந்துமுகக் கப்பரையிலுள்ள திரு நீரை இருகைகளில் அள்ளி முகத்தில் பூசிக் கொள்வர். பின்பு தேர்வுசெய்பவர் கையிலிருக்கும் பிரம்புக்கம்பை வாங்கி இருகை களில் பிடித்து உயரமாகத் தூக்கிக் கொண்டு கன்னிகழியாத, காப்பு நூல் கட்டாத கடசாரி வந்திருக்கிறேன்" என்று ஆவேச மாகக் கூறிக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்காகவும், கிழக்கி லிருந்து மேற்காகவும் மூன்றுமுறை ஆடி, இறுதியில் தேர்வு செய்பவர் முன்பாக நிற்பார். இதன்பிறகு பாதரட்சக் கட்டையில் நடந்துவரும்படி செய்வார்கள் பாதங்களில் காயங்கள் இருக்கக் கூடாது. காயங்கள் இருந்தால் சந்தேகம் ஏற்பட்டு அய்யன் பிடிக்கித் தேர்வு செய்வதை நிறுத்திவிடுவார்கள். தேர்வு செய்பவரின் பார்வைக்கு அய்யன்பிடிக்கியின் தோற்றம்

தெரிந்து தேர்வு செய்தாலும், காலில் காயங்கள் இல்லாத வரைத்தான் உண்மையான அய்யன்பிடிக்கி என்று தேர்ந்தெடுக் கின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு முத்திரை பதிக்கின்றனர். முத்திரைபதித்தல் என்பது அய்யன்பிடிக்கியைத் தர்ப்பை ஊறிய நிறைகுடத்து நீரால் குளிப்பாட்டி தெய்வத்தின் பொருள்களாகிய வாளைக்கடுக்கன், பூணூல், மல்வேட்டி, ஆகியவற்றைத் தேர்வு செய்தவர் மூலம் அணிவிக்கப்படுகின்றன. மரிக்கொழுந்து மாலையை இருமார்புப்பகுதியிலும், கழுத்திலும் அணிவிப்பார். மார்புப் பக்கம் அணிவதை ''மாராடிமாலை'' என்று இவ் வட்டார மக்கள் கூறுகின்றனர். இதன்பிறகு பிரம்புக்கம்பு, திருநீறுகப்பரை ஆகியவற்றை அய்யன்பிடிக்கி கையில் கொடுக்கும்போது அருள்வரப்பட்ட நிலையில் கூட்டத்தை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றார் ''ஏழுபேரே நான்குபேரே இன்றிலிருந்து கோட்டைமந்தைக் கருப்புச்சாமி வாசலில் அவர் முன்னிலையில் மண்டு சாட்சியாக [மண்டு என்னும் சொல் பஞ் சாயத்தாரைக் குறிக்கும்], ஆகாயவாணி பூமாதேவி சாட்சியாக, நல்லகுறும்பையர் அய்யன்பிடிக்கிக்கு இந்த மந்திரக்கோலைக் கொடுக்கிறேன் (பிரம்புக்கம்பை மந்திரக்கோல் என்று கூறுகின்றனர்). இவர் தான் அய்யன்பிடிக்கி என்று என் மனப்பூர்வமாக முத்திரை பதித்துப் பிரமானம் செய்கின்றேன்'' என்று கூறிமுடிப்பார். அச்சமயம் பெண்கள் ஏழுமுறை குரவை யிட்டு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

இதன்பிறகு அய்யன்பிடிக்கி தன்னுடைய காலில் விழும் அனைத்து மக்களுக்கும் திருநீறு வழங்குவர். முடிவில் அனை வரும் சூழ்ந்துவர அழைத்துச் சென்று நல்லகுறும்பையர் இருக்கும் கோவிலுக்கு வருவார்கள். உடனே அய்யன்பிடிக்கி, நல்லகுறும்-பையர் தெய்வத்தைக் குளிப்பாட்டி வெள்ளைத் துண்டு கட்டி மரிக்கொழுந்து மாலை அணிவிப்பார். பின்பு வாழையிலையினால் வாயைக் கட்டிக்கொண்டு தேங்காய் உடைத்து, வாழைப் பழத்தைக் கண்திறந்துவைத்து, கற்பூரம் கொளுத்தி நைவேத் தியம் செய்வார். பிறகு அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவார்கள். இத்துடன் அய்யன்பிடிக்கித் தேர்வு செய்யும் முறை நிறைவு பெறுகின்றது.

"கடசாரி" என்ற பெயர் நல்லகுறும்பையர் தெய்வத்தின் மற்றொரு பெயராகும். மூன்று தெய்வங்களுள் கடைசித்தெய்வம் என்பதால் இப்பெயரிட்டு அழைக்கின்றனர். "கன்னிகழியாத காப்புநூல் கட்டாத" என்பது நல்லகுறும்பையர் தெய்வம் திருமணமாகாத கன்னித்தெய்வம் ஆகும். இதனால் மலர்ந்த மாலை அணிவிக்காது மரிக்கொழுந்து, மருள் ஆகிய இருமாலைகள் மட்டும் அணிவிக்கின்றனர். அய்யன்பிடிக்கி தேர்வுசெய்யும் முறை சுற்றி ஆண்டுவரும் முறையில் இடம் பெறுகின்றன.

5. பூசாரி தேர்வு செய்யும் முறை

அய்யன்பிடிக்கி தேர்வு செய்வதைப் போன்று பூசாரி தேர்வு செய்வதற்குரிய நல்ல நாளன்று கருமாத்தூர் வட்டார அனைத்து மக்களும் கோட்டை மந்தைக்கு வருவார்கள்.

கள்ளர் நான்குபேர் வகையறாவில் மூத்த வகையறாவான பெரியகுறும்பத் தேவர் கூட்டத்தைச் சேர்ந்த மணமாகாத ஆண்கள் ஈர வேட்டியுடன் கோட்டை மந்தையில் வந்து நிற்பார்கள். பூசாரி தேர்வு செய்வதற்குக் கொட்டுமேளம் ஆகிய வற்றைப் பயன்படுத்த மாட்டார்கள். மேலும் அய்யன் பிடிக்கியைப் போன்று நிற்கமாட்டார்கள். இவர்கள் கிழக்கு நோக்கி உட்கார்ந்திருப்பர். தேர்வு செய்பவர் இவர்களை எதிர்த்து அமர்ந்திருப்பார். இவர் அனைவருக்கும் திருநீறு வைத்து விட்டு நல்லகுறும்பையர் தெய்வத்தின் வரலாற்றைப் பாடலாகப் பாடி வருவார். அவ்வாறு பாடிக்கொண்டிருக்கும்பொழுது அதிகமான அருள்வரப் பெற்ற நிலையில் அவரது கண்களுக்கு வாளைக்கடுக்கனும், தலைப்பாகையும், காவியுடையுமாக யார் தெரிகின்றார்களோ அவர்களை வளைதடிக்கம்பினால் இழுத்து தன்னுடைய இருப்பிடத்திற்குக் கொண்டு செல்வார். இதன் பிறகு அய்யன்பிடிக்கிக்குச் செய்த சடங்குகள் போன்று பூசாரிக்கும் செய்வார்கள். இந்த முறையில் பூசாரி தேர்வு செய்யப் படுகின்றது. இவரைப் 'பூசாரி' என்று கூறாது "பெரியபூசாரி" என்று அழைக்கின்றனர். அதாவது பெரியகுறும்பன் கூட்டம் என்பதை உறுதிபடுத்துவதற்காகப் "பெரிய" என்ற அடை மொழியைச் சேர்த்துக் கொண்டு இருக்கின்றனர் என்று தெரிகிறது. பூசாரி தேர்வுசெய்யும் முறை முன்பு கூறிய மூத்தவாரிசு ஆண்டுவரும் முறையில் இடம் பெறுகின்றன.

6, அய்யன்பிடிக்கு, பூசாரி ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள்:

மேற்கூறிய இருவருக்கும் தேர்வு செய்த நாளன்று சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர்·

1. இறந்தவர் பெற்றோராக இருந்தாலும் பிணத்தின் அருகில் செல்லவோ பார்க்கவோ கூடாது.
2. திருமணத்தன்று மணவறை செல்லக் கூடாது. மணப் பெண்ணிற்குத் தாலிக்கட்டக் கூடாது.

இவ்விருவருடைய திருமணத்தில் பிரம்புக்கம்பிற்கு மாப்பிள்ளை [அலங்காரம் செய்து மணவறையில் மாப்பிள்ளை இடத்தில் வைக்கின்றனர். இவர்களது அக்கா அல்லது தங்கை மணப்பெண்ணிற்குத் தாலிகட்டுகின்றனர்.

3. தலைமுடி வெட்டுதல் கூடாது. ஆனால் முகச்சவரம் செய்து கொள்ளலாம்.
4. இவர்களுடைய மனைவிகளும் இறந்தவர் வீட்டிற்குச் செல்லக் கூடாது. மரிக்கொழுந்து, மருள் ஆகிய மலர்களை மட்டும் சூடிக்கொள்ள வேண்டும்.

7. முடிவுரை:

சாமியாடி, பூசாரி ஆகியோரை உடுக்கு, கொட்டு, மேளம் போன்ற இசைக்கருவிகளை முழக்கியும், நெற்றியில் திருநீறு வைத்து, தலையில் பிரம்புக்கம்பின் மூலம் அடித்தும், குல முன்னோர், சாமியாடி, பூசாரி ஆகியோர் மூலம் தேர்வு செய்யப் படுகின்றனர்.

சுற்றி ஆண்டுவரும் முறை, மூத்த வாரிசு ஆண்டுகொள்ளும் முறை என்ற வகையில் சாமியாடி பூசாரி ஆகியோர்களின் தேர்வுமுறை அடங்குகின்றன.

கருமாத்தூர் நல்ல குறும்பையர் தெய்வத்தின் அய்யன் பிடிக்கி பறையர் சாதியிலும், பூசாரி கள்ளர் சாதியிலும் தேர்ந் தெடுக்கின்றனர். இவர்கள் இருவருக்கும் மரபு ரீதியான கட்டுப் பாட்டை விதிக்கின்றனர்.

முன்னோர் மரபைத் தொடர்ந்து பின்பற்றிவருவதை அய்யன் பிடிக்கி, பூசாரி ஆகியோரிடமும் இவ்வட்டார மக்களிடம் காண முடிகிறது.

விடுகதையில் "கண்மாய்" தரும் குறியீட்டுச் செய்திகள்

ஆ. கணேஸ்வரி
நாட்டுப்புறவியல் துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

விடுகதை என்பது புதிர்த்தன்மை கொண்ட ஒரு பனுவல். ஒரு விடுகதை முழுமையும் உருவகமாகவோ உவமையாகவோ குறியீட்டுநிலையிலோ அமைந்து புதிர்த்தன்மையைத்தரவேண்டும் என்பதில்லை. விடுகதையின் புதிர்த்தன்மை என்பது அவ்விடுகதையின் ஒரு சொல்லிலோ அல்லது வாக்கியத்திலோ பொதி ந்திருக்கலாம். சந்த அமைப்பிற்காகவும் அமைக்கப்பட்டிருக்கலாம். அவ்வகையில் 'கண்மாய்'என்றசொல்விடுகதைகளில் எத்தகையபொருண்மையில் எடுத்தாளப் பட்டுள்ளது எனக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தி என்னவெனில் இக்கட்டுரையில் விடுகதையின் புறப்பனுவலில் இடம்பெறும் 'கண்மாய்' என்ற குறியீடும் அதற்கான விடையும் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. கண்மாய் என்ற குறியீட்டின் பொருண்மையைக் காணவேண்டிய அவசியம் என்னவெனில் தமிழர் பண்பாட்டில் பெண்ணை வருணிக்கப் பயன்படும் குறியீடுகள் பலவற்றுள் கண்மாய் என்ற குறியீடும் ஒன்றாகச் செயல்படுகின்றது. பொதுவாக பெண் பூ, கனி, கண்மாய் போன்ற வளமையோடு தொடர்புடைய புறஉலகப் பொருட்களின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கப் படுகிறாள். அதனால் பெண்ணைப் பற்றி உருவாக்கப் படும் வழக்காறுகளில் இவ் ஒப்புமை இயல்பாகவே இடம் பெற்று விடுகின்றன விடுகதை என்னும் வழக்காற்றிலும் இக்குறியீடுகள் இடம் பெற்றுள்ளன. அவை பற்றிச் சான்றுகளுடன் நாம்

காண்பதற்கு முன் 'கண்மாய்' என்ற சொல் "நீர் தேங்கி நிற்கும்" என்ற முதல்நிலைப் பொருண்மையைத் தரும் விடுகதை ஒன்றும் அதற்கான விடையும் முதலில் விளக்கம் பெறுகின்றது.

"மானாமதுரைக் கண்மாய்க்குள்ள
மான்மேயுது - அதை
ஒளிஞ்சிருந்து சுட்டவுகளுக்கு
ஓடனே கல்யாணம்"

என்ற விடுகதையில் இடம்பெற்றுள்ள 'மான்' என்ற சொல்லும் 'சுடுதல்' என்ற சொல்லுமே விடை காணப்படவேண்டியவை. மற்ற தொடர்கள் அனைத்தும் விளக்கமுறையில் அமைந்து முதல்நிலைப் பொருண்மையையே தருபவை, 'மான்' என்பது கண்மாய்க்குள் உள்ள செடிகளில் இருக்கும் 'விட்டில் பூச்சி' என்பதைக் குறிக்கின்றது இவ்விட்டில் பூச்சியை யாரும் எளிதில் பிடிக்கமுடியாது. இதுவே இவ்விடுகதைக்கான விடை ஆக இவ்விடுகதையில் இடம்பெற்றுள்ள கண்மாய் எவ்ற சொல் 'நீர் தேங்கி நிற்கும் இடம்' என்ற பொருண்மையையே விடையிலும் தருகின்றது. ஆனால் சில விடுகதைகளில் 'கண்மாய்' என்னும் சொல் குறியீட்டு நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'கண்மாய்' என்ற சொல் 'நீர் தேங்கி நிற்கும் இடம்' என்ற முதல்நிலைக் குறித்தலைக் குறிக்காமல் பெண்ணைக் குறித்து நிற்கிறது, அதிலும் குறிப்பாகப் பெண்ணினுடைய பாலுறுப்பைக் குறிக்கின்றது. சான்றாக,

"நெடுங்கொளத்துக் கம்மாய்க்குள்ள
விழுந்தவுக எந்திரிக்க முடியல"

(கட்டச்சி, பெண், 40, வண்ணாம்பாறைப்பட்டி, 12-6-94)

"இழுப்பக்குடிக் கம்மாய்க்குள்ள
விழுந்தவுக எந்திரிக்க முடியல"

(முக்கம்மாள், பெண், 38, சிட்டம்பட்டி, 18.1.93)

என்ற இவ்விடுகதைகளைக் கொள்ளலாம், இவ்விரு விடுகதை களுக்கும் நிகழ்த்துபவர்கள் பெண் என்றே விடை கூறினார்கள். நிகழ்த்துதல் சூழலில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் பெண்கள் என்பதால் 'நம்மதான்' என மொத்தத்தில் விடை கூறினர். மேலும் விளக்கம் கேட்டபொழுது "கம்மாய்க்குள்ள விழுந்தவுக எந்திரிக்க முடியல, ன்னா... பொம்பளை சுகத்தைக்

கண்டவகளாலத் திரும்பப் போகாம இருக்க முடியாது. பொம்பளை இருந்துருவா; ஆனால் ஆம்பளையால இருக்க முடியாது, அதனால தான் விழுந்தவக எந்திரிக்க முடியலன்றது; கம்மாய்-ன்னு பொம்பளையத்தான் சொல்றோம்'' என விளக்கம் கூறினார்கள். விடை பெண்ணாக இருந்தாலும் இங்குக் கண்மாய் என்ற குறியீடு பெண்ணின் பாலுறுப்பினைக் குறிக்கும் விதமாகவே எடுத்தாளப்பட்டுள்ளது, 'கண்மாய்க்குள் விழுதல்' என்ற இயக்கக் குறியீடு ''நீராடுதல் குளித்தல்'' என்பதாக அமைகின்றது. அஃது ஆண்பெண் உறவைக் குறியீட்டு நிலையில் வெளிப்படுத்துகின்றது.

''கனவு / படைப்பு இவற்றுள் படிமங்கள் வெளிப்பட்டுத் தோன்றும்போது குவிந்த வடிவில் (Convex) தோன்றினால் அவை ஆண் குறியையும் (Pennis / Phallic Images) குழிந்த வடிவில் (concave) தோன்றினால் குறிப்பாகக் குளம், குட்டை, கடல் நிலம் (தட்டை) போன்றவை தோன்றினால் அவை பெண் குறியையும் (Vegina / Gynaic Image) சுட்டும் என்கிறார் ப்ராய்ட். மேலும் இவர் இப்படிமங்கள் இயங்கும் இயல்புடன் (Flying movement) வெளிப்பட்டால் அது கலவிச் செயலையும் (Inter Course) குறிக்கும் என்றார் (அரங்க. நலங்கிள்ளி – 1992: 44)''. ப்ராய்ட் கூறியுள்ள கருத்துக்களின் அடிப்படையில் மேற் கூறிய விடுகதைகளில் இடம்பெறும் ''கண்மாய்'' என்ற குறியீட்டை நோக்கினால் அது பெண்குறியையே குறிக்கும் என முன்னர் நாம் தந்துள்ள விளக்கத்திற்கு வலுவூட்டுவதாகவே அமைகின்றது. இவ்விடத்தில் குலசேகர ஆழ்வார் பாடியுள்ள கீழ்க்காணும் பாடலை உளவியல் நோக்கில் அணுகியுள்ள அரங்க. நலங்கிள்ளி (இலக்கியமும் உளப் பகுப்பாய்வும் – 1992:42) தரும் விளக்கமும் இங்கு குறிப்பிடத் தக்கது. பாடலும் விளக்கமும் பின்வருமாறு அமைகின்றது.

> ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
> வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
> தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
> மீனாய்ப் பிறக்கும் விதியுடையெனாவேனே''.

என்ற பாடலில் வெளிப்பட்ட மீன்படிமம் ஆணுறுப்பையும் குளம் / சுனைப்படிமம் பெண் உறுப்பையும் சுட்டுகிறது எனக் கொள்ளலாம். அடுத்துச் சுனையில் மீன் எனும் போது சுனையில்

மீன் நீந்திக்களித்தல் என்பது கலவி இன்பத் தொழிலையே சுட்டுகிறது... சுனையின் இயல்பு தன்மையது. சுனையில் இறங்கி நீந்தினால் மகிழ்ச்சி (Pleasure) பெருகும் என்பது உண்மை. ஆண்மையின் வெம்மை பெண்மையின் தன்மையில் சங்கமிக்கும். பெண் தரும் கலவி இன்பம் மகிழ்ச்சியை உண்டு பண்ணும். அதாவது சுனையில் மீன் ஆடுதல் போல'' என விளக்கம் தருகிறார். இங்கு நாம் ஒப்பு நோக்கத்தக்கது 'சுனை/ குளம்' என்பன பெண்குறியையும், 'மீன் சுனையில் நீந்துதல் / குளத்தில் விழுந்து குளித்தல்' என்பன ஆண்பெண் உறவையும் குறிக்கின்றன என்பதேயாகும்.

திருப்பாவைக்கு வியாக்யானம் எழுதியுள்ள பெரிய வாச்சான் பிள்ளை, ''மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாள் / நீராடப் போதுவீர்...'' என்ற திருப்பாவை முதற்பாடலில் இடம் பெற்றுள்ள 'நீராட' என்பதைச் 'சுனையாடல்' என்கிறார். சுனையாடல் என்பதற்குப் பர்வதத்திலே தேங்கின சுனைகளிலே குளிக்கை (1991 : 27) எனப் பொருள் கொள்கிறார். 'நீராடல்' என்பதற்கு மேலும் விளக்கம் தரும்பொழுது க்ருஷ்ண விரஹத்தால் பிறந்த தாபம் ஆறும்படி போய்க் குளிக்கை இதனால் இவர்கள் நினைக்கிறது க்ருஷ்ண ஸம்ஸ்லேஷம்; தமிழரும் கலவியைச் 'சுனையாடல்' என்றார்கள் (1991 : 27) எனவும் அவர் பொருள் விளக்கம் தருவது இங்குச் சுட்டிக் காட்டத்தக்கது.

சீவகசிந்தாமணியிலும் பெண்ணுடன் கலத்தலை 'தடாகத் திலே படிதல்' என்று கூறும் மரபு பின்பற்றப்பட்டுள்ளது.

''வீணை வென்றிவள் வெம்முலைப் பூந்தட
மானை தோய்வதல்லாற் பிறன் வெளவுமேற்
... ...
கோனைப் போரிற் குளிக்குவம்...''

(சீவகசிந்தாமணி: காந்தருவதத்தை: ௬௪O)

என்ற இவ் அடிகள் ''யாழினால் வென்று இவள் விருப்பமூட்டும் முலைகளாகிய அழகிய தடாகத்திலே படிதல் அல்லது மற்றவன் கைப்பற்றுவானெனில் ஆணையாக மாறுபட்ட போரிலே குளிப்போம்'' என்பதாக அமைந்துள்ளது. 'தடாகத்திலே படிதல்' என்பது இங்கு பெண்ணுடன் கலத்தல் என்பதையே குறிக்கிறது. தடாகம் என்பது பாடலில் பெண்ணின் மார்பகத்தைக்

குறித்தாலும் அது பெண்ணையே குறித்து நிற்கிறது. இவ்வாறு விடுகதை உட்பட பல்வேறு இலக்கியங்களும் பெண்ணைத் தடாகம், குளம், சுனை எனவும் பெண்ணுடன் கலத்தலை 'தோய்தல், நீராடல்' எனவும் குறிப்பிடுகின்றன.

கண்மாய் என்பது பெண்ணின் பாலுறுப்பினைக் குறிக்கும் குறியீடாகவே முன்னர்க் கூறிய விடுகதைகளில் கட்டமைக்கப் பட்டுள்ளது என்ற கருத்தை உறுதி செய்வது போல் கீழ்க்கண்ட விடுகதை கட்டமைக்கப்பட்டுள்ளது. அஃதாவது

ஆளாத்தூர் கம்மாய்க்கு
அடிமடையாம் பாசானம்
முப்பது நாள் பெருக்கு
மூணு நாள் ஓட்டம்.''

—மாத விலக்காகுதல்

(க.நல்வி, பெண், 60, கிழவளவு, 5—4—93)

என்பதாகும். இவ்விடுகதைக்கு, 'மாதவிலக்கு' என்பது விடை இவ்விடுகதையில் இடம்பெற்றுள்ள 'கண்மாய்' என்ற குறியீடு 'பெண்ணின் பாலுறுப்பைக் குறிக்கின்றது; முப்பது நாள் பெருக்கு, மூணுநாள் ஓட்டம் என்ற தொடர்கள் குறியீட்டு நிலையில் மாதவிலக்குச் சுழற்சியைக் குறிக்கின்றன.

தண்ணீர் தேங்கி நிற்கும் பரப்பைக் கண்மாய் எனலாம். மழைக்காலங்களில் ஆற்றுநீரும் மழைநீரும் கண்மாயில் சேமிக்கப் படுகின்றது. பின்னர் மடையின் வழியாகத் தேவைப் படும் சமயங்களில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பயிர்வளர்ச்சிக்குத் தேவையான நீரைத் தேக்கி வைத்திருக்கும் கண்மாய், மனித இன உருவாக்கத்திற்கு இன்றியமையாத பெண்ணினுடைய கருப்பைக்குச் சமமாக ஒப்பிட்டுப் பார்க்கப். பட்டுள்ளது. மழை நீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த கண்மாய் உதவுவதைப் போல் பெண்ணின் கருப்பையும் மனித இன உருவாக்கத்திற்காக, வளரும் கருவிற்கு ஊட்டச் சத்தைக் கொடுத்துக் கருவளர்ச்சிக்குப் பயன்படு வதால் கண்மாய், கருப்பை இரண்டும் ஒப்பு நோக்கப்பட்டுள்ளன அதனால் விடுகதை உட்படப் பல்வேறு படைப்பாக்கங்களில் மரபுசார்ந்த இத்தகைய குறியீடுகள் இயல்பாக வெளிப்படுத்தப் படுகின்றன எனலாம்.

பழைய மொழியில் புதைந்துள்ள செய்தி

முனைவர் திருமதி. மு. குருவம்மாள்
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

சமூக பொருளாதார மானுட உளவியலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைத் தத்துவத்தின் வார்த்தை வெளிப்பாடே பழமொழிகள். பழகிய மொழிகளின் அடியாழத்தில் உள்ள செய்தி மனித குலத்தின் செவ்விய சிந்தனைக்குச் சான்று முது சொல்லின் முதிர்ந்த கருத்துக்கள் மனிதனை நெறிப்படுத்தும் மருத்துவக் கையேடு. இந்தக் கிராமத்துத் திருக்குறளில் சிலவற்றை மட்டும் பதம் பிரித்துப் பார்க்கிறது இந்தக் கட்டுரை.

1. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி கோயிலின் பெயரால் குழப்பங்கள், கடவுளின் பெயரால் கலவரங்கள், மதத்தின் பெயரால் பிரிவினை வாதங்கள் பெருகிவரும் இந்நாளில் இந்தப் பழைய மொழியில் புதைந்துள்ள செய்தியை அறிந்து கொள்வது அவசியமாகும்.

'கோ' என்றால் அரசன். ''இல்'' என்றால் வீடு. கோயில் என்றால் அரசனின் வீடு. எப்படி ஆண்டவனின் இருப்பிடமாகும்? அரசனின் வீட்டை அரண்மனை என்று தானே சொல்லுகிறோம்? ''அரண்'' என்றால்காவல், ''மனை'' என்றால் இடம். அரண்மனை என்றால் காவல் மிகுந்த இடம். அரசனின் இருப்பிடத்தை ''அரண்மனை'' என்றும் ஆண்டவனின் இருப்பிடத்தைக் ''கோயில்'' என்றும் வழங்கி வந்தனர் நமது முன்னோர்.

படித்தினைக்கு இடமிருந்தால் குடித்தனத்திற்கு விட்டு வாடகைக்கு வழி தேடும் காலமிது. கையகல இடத்தில் இருக்கும்

கருவறைத் தெய்வத்திற்கு இடம் அகன்ற பெரிய கோயில்கள் ஏன் மடைப்பள்ளிகள் ஏன் தானியக்கிடங்குகளும் ஏன்?

அக்காலத்தில் வணங்குவதற்கும் வழிபடுவதற்கும் தேர்த் திருவிழாக்களுக்கும் மட்டும் கோயில்கள் பயன்படவில்லை. மக்கள் கூடும் பொதுமன்றங்களாக ஐயம் அகற்றும் அறிவுத் திருக் கோயில்களாக, அறிஞர்களின் விவாத மேடைகளாக, வீரர்களின் விளையாடு களங்களாக, புலவர்களின் புலமை விளக்கம் பெறும் இடங்களாக, கலைஞர்களின் கலை வளர்க்கும் அரங்குகளாக கோயில்கள் விளங்கின. அரசர்களின் நிலையான அறிவிப்புகளைக் கொண்ட கல்வெட்டுகள் ஆவணங்களாகி நிற்பதும் கோயில்களில் தான். மக்களின் ஈரத்தையும் வீரத்தையும் கொடையாகவும் வெற்றியாகவும் பறைசாற்றி நின்றன 'கோயில்கள். மக்கள் தொண்டை. மகேசன் தொண்டாகக் கொண்டு சமூக சேவை மையங்களாகத் திகழ்ந்தன கோயில்கள். மக்களிடையே மனித நேயத்தையும் பாதுகாப்பு உணர்வையும் வளர்த்து வந்தவை கோயில்கள்.

பயிர்த்தொழிலை உயர்ந்த தொழிலாய்க் கொண்ட மக்கள்- விளை பொருட்களின் ஒரு பகுதியைத் தாங்களாகவே விரும்பி கோவிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வந்தனர். பொது மக்களின் பலவகைக் காணிக்கைப் பொருட்களும் ஆண்டவனின் கருவூலத்தைச் சென்றடைந்தன. நீர், நெருப்பு, காற்று ஆகிய இயற்கைக் காரணங்களால் வெள்ளம், புயல், பஞ்சம் வந்தபோது உணவும் உடையும் இருப்பிடமும் இழந்த மக்களின் பொது வீடாக விளங்கின கோயில்கள். போர்க்காலங்களில் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், நோயுற்றோர் போன்ற போர் செய்ய இயலாதவர்களின் புகலிடமாகின கோயில்கள். எனவே ஆக்கப் பூர்வமாகத் தங்களை வளர்த்துக் கொள்ளவும் அழிவுக் காலத்தில் அதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் உதவும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.

2. ஆத்துக்குள்ளே இருந்து அரஹரன்னாலும்
சோத்துக்குள்ளே இருப்பான் சொக்கப்பன்.

இந்தப் பழமொழி இப்போது சாப்பாட்டு ராமர்களை ஏசுவதற்காக மட்டுமே பயன்படுகிறது. கடவுள் நம்பிக்கை நிறைந்த நமது கிராமங்களில் ஏழ்மையும் நிறைந்திருந்தது.

ஊரெல்லாம் பட்டிதொட்டி, பேரெல்லாம் குப்பன், சுப்பன், சோறெல்லாம் கூழுங்கஞ்சி என்று ஔவையார் வருணித்த நேற்றைய கிராமங்களில் நித்தம் நித்தம் நெல்லுச்சோறுக்கு வாய்ப்பில்லை. உண்ண எதுவும் கிடைக்காதபோது உண்ணாமல் இருந்தால் பட்டினி உண்ணுவதற்கு இருந்தும் உண்ணாமல் இருந்தால் விரதம்; எப்போதும் பட்டினிக்குப் பழக்கப்பட்ட கிராமத்து மக்கள் சில நேரம் விரதம் இருப்பதும் உண்டு. நவீன எந்திரங்கள் இல்லாத அந்த நாட்களில் கிராமத்துப் பெண்கள் விலா எலும்பு தெறிக்க கல்லுரலில் நெல்லுக்குத்தி, நொறுங் காமல் புழுங்கல் அரிசி ஆக்கும்போது நொறுங்கி நொய்யத் தவிடாகிப் போவார்கள். இருப்பினும் விரத நாட்களில் வேலையை மெனக்கிட்டு வெள்ளைச் சோறாக்குவதில் மகிழ்ச்சி யோடு ஈடுபடுவார்கள். காலையிலிருந்து பச்சைத் தண்ணீர்பல்லில் படாமல் கடுமையான விரதம் இருந்து கடவுளின் பெயரைச் சொல்லி ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றிலோ குளித்துக் கரையேறுவதற்குள் சிறுகுடலைப் பெருங்குடல் தின்னும். இந்த நேரத்தில் கடவுள் நினைப்பை முந்திக்கொண்டு உணவு நினைப்பே ஓங்கி நிற்கும் என்பதை

''ஆத்துக்குள்ளே இருந்து அரஹரன்னாலும்
சோத்துக்குள்ளே இருப்பான் சொக்கப்பன்''

என்று சொல்லி இருக்கலாம், என்றாலும் இந்தப் பழைய மொழியில் புதைந்துள்ள செய்தி வியப்பானது.

''ஆத்துக்குள்ளே இருந்து அரஹர என்றால், உள்
சோதிக்குள்ளே இருப்பான் சொக்கப்பன்''

பழமொழியின் கடைசி வரியாகிய சோதிக்குள் இருப்பான் என்ற தொடர் சோத்துக்குள்ளே இருப்பான் என்றாகிவிட்டது. நிலம் நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்சபூதத்தின் ஒடுக்கம் ஆகிய இறைவனை எல்லா மதங்களும் ஒளி வழியாகக் காண் கின்றன. திருவண்ணாமலையில் தீபவழிபாடுதான். கார்த்திகை நாளில் சிவவழிபாடு, ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் இறைவன் உள் ஒளியாக விளங்குகிறான். உள்ளத்தில் உள்ளானடி சகியே! உள்ளத்தில் காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாயடி என்று சித்தர்கள் பாடுவதும் இதனைத்தான். இன்னும் ஆழமாக இந்தப் பழமொழியைச் சிந்தித்தால்

''அகத்தில் உள் இருந்து அரஹரா என்றால் உன்
சுகத்திற்கு உள் இருப்பான் சொக்கப்பன். என்றும்
அகத்திற்கு உள் இருந்து அரஹர என்றால்
உன் சுகத்துக்கம் அறுப்பான் சொக்கப்பன் என்றும்
வழங்கி வந்த தத்துவ சிந்தனை விளங்கும்.

கை ஒன்று செய்ய, வாய் ஒன்று சொல்ல, மனது ஒன்றை நினைக்க கடவுளுக்கும் கோவிலுக்கும் தொடர்பே இல்லாத காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது இன்றைய வழிபாடு, கடவுளின் பெயரை உதட்டளவில் மாத்திரம் உச்சரிக்காமல் மனதை ஒரு முகப்படுத்தி ஆண்டவனின் நினைப்பை உள்ளத்தின் உள்ளே நிலைநிறுத்துகின்றவர்களுக்கு இன்பம் துன்பம் இரண்டையும் கடந்த ஆனந்த நிலையாகிய முக்தி கிடைக்கும்.

**3. பொம்பளை சிரிச்சா போச்சு
போயிலை விரிச்சா போச்சு**

பொம்பளை சிரிச்சா போச்சு, போயிலை விரிச்சா போச்சு'' என்பது பழமொழி! போயிலை விரிச்சா ஈரம் போச்சு, காரம் போச்சு, மணம் போச்சு, குணம் போச்சு! பொம்பளை சிரிச்சா என்ன போச்சு? மானம் போச்சா மரியாதை போச்சா? இது பழைய மொழி! சொல்லப்பட்ட காலமும் பழைய காலம்.

பெண்கள் சிரிக்கக் காசுகேட்கும் காலமிது! பெண்களின் சிரிப்பைக் காசாக்கும் காலமிது, ஆடை அலங்கார அணி வகுப்புகளிலும் விமான நிலையங்களிலும், விற்பனைக் கூடங்களிலும் விளம்பரக் காட்சிகளிலும் வியாபார உத்திகளிலும் பெண்கள் சிரிப்பை மூலதனமாகக் கொள்ளும் காலமிது! இந்தக் காலத்தில் இப்படி ஒரு பழமொழியா?

வேட்டைச் சமூகத்திலும் விவசாயச் சமூகத்திலும், இடம் பெயர்ந்தும் நிலம் பெயர்ந்தும், ஓடி உழைத்துப் பொருள் கொண்டு வருவது ஆண்களின் வேலை. உணவாக்கித் தருவது பெண்களின் வேலை பழைய நிலவுடைமைச் சமூகத்து ஆண் மக்களுக்கு வீட்டிற்கு வெளியிலும் பெண் மக்களுக்கு வீட்டிற்கு உள்ளும்தான் பொறுப்புகள் அதிகம் உழைத்துக் களைத்து அலுத்து சலித்து வெளியில் இருந்து வருகின்ற கணவன், தகப்பன், சகோதரன், மகன், பேரன், மச்சான், கொழுந்தன், மாமன் ஆகிய உறவுகளைக் கொண்ட கூட்டுக்குடும்பத்தில் பாட்டி, தாய்,

சகோதரி, மனைவி, மகள், பேத்தி, மதினி, கொழுந்தி, மாமி, நாத்தி ஆகிய பெண் மக்கள் வீட்டிற்குள் சண்டை சச்சரவுகளின்றி வாழும்போது ஒற்றுமையும் நிம்மதியும் உருக்குலையாது அல்லவா? இதனை நோக்கமாகக் கொண்ட பழைய மொழி இது, "பொம்பளை சிரிச்சா .. துன்பம் போச்சு, துயரம் போச்சு, கவலை போச்சு, கஷ்டம் போச்சு, கண்ணீர் போச்சு.

4. மேல் மினுக்கியைக் கட்டினவன் கெட்டான்:

"மேல் மினுக்கியைக் கட்டினவன் கெட்டான்" என்பது பழமொழி. "மேல் மினுக்கி" என்ற சொல் அலங்கார மோகம் கொண்ட, சுய நலம் நிறைந்த பெண்ணைக் குறிப்பது. வெளித் தோற்றத்தில் அளவுக்கு அதிகமான கவனம் செலுத்தும் பெண்கள், கடினமான உடல் உழைப்பிற்குத் தயங்குவார்கள். குடும்பப் பொறுப்பின்றி இருப்பார்கள். எனவே குடும்பத்தின் மதிப்பில் குறைவு படும். வரவுக்கு மிஞ்சிய செலவும் வசதிக்கு மிஞ்சிய ஆடம்பரமும் மேல் மினுக்கிகளால் ஏற்படும். இதனால் குடும்பம் கடனுக்கு உள்ளாகும். மனதைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமல் உடம்பை மட்டும் அழகாக வைத்துக் கொள்ளும் பெண்களால் ஊரே அழுக்காகிவிடும், மேல் மினுக்கியைக் கட்டினவன் மனநோயாளி ஆகிவிடுவான்.

மேல் மினுக்கி என்பதை மினுக்கி என்றும் சிந்திக்கலாம். உண்ணுவது, உடுத்துவது, தங்குவது ஆகியவற்றில் உள் அழுக்கைக் கழுவாமல் வெளியிலே மட்டும் கழுவுவதால் சமையலும் சாப்பாடும் தூய்மையற்றதாகிறது. தூய்மையற்ற உணவு மூலமாகவும் உடை மூலமாகவும் இருப்பிடம் மூலமாகவும் நோய் பரவுகிறது. எனவே சுத்தத்தைப் பற்றிக் கவலைப் படாத மேலாக மினுக்கியை மனைவியாக அடைந்தவன் உடல் நோயாளி ஆகி விடுவான் என்பதை உணர்த்த வந்த இந்தப் பழமொழி, சுத்த மான பெண்களே சுகத்துக்கு ஆதாரமான பெண்கள் என்று அழுத்தமாகக் கூறுவதும் புரிகிறது.

5. மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்:

"மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்" என்று சொல்லிக் கொண்டே பிள்ளைகளைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளு கிறார்கள், அளவான குடும்பம்தான் அழகான குடும்பம் என்று சொல்லப் போனால் சாமி கொடுத்த வரம் என்று சொல்லி பதினாறும் பெற்று, படாத பாடு படுகிறார்கள்.

''மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான்'' என்றால் பாட்டன் வச்ச மரத்துக்குப் பாட்டனும் அப்பன் வச்ச மரத்துக்கு அப்பனும் மகன் வச்ச மரத்துக்கு மகனுமா தண்ணி ஊத்துவான்? சரித்திரப் பாடங்களில் எந்த அரசரைப் பற்றிய வரலாறாக இருந்தாலும் சாலை ஓர மரங்களை நாட்டினார். என்ற வரிகள் கட்டாயமாக இடம் பெறக் காணலாம். நிழலுக்காவும் மாசுக் கட்டுப்பாட்டுக் காகவும் மழை வளம் பெருக்கவும் அரசர்கள் காலத்தில் மரம் வளர்த்திருக்கிறார்கள். மாதம் மும்மாரி மழை பொழிந்து வளம் செழித்திருக்கிறது. இன்று புகை வனத்தின் பகை என்று சொல்லியும் கேளாமல் காடுகளைக் கரியாக்கி விட்டோம். புகை வனத்திற்கு மட்டுமல்ல வானத்திற்கும் பகை என்பதை ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைகள் உணர்த்துகின்றன. நிலமும் நீரும் காற்றும் அழுக்கடைந்து வறட்சிக்குள்ளாகிறது.

புறஊதாக் கதிர்களால் பாதிக்கப்பட்டவர்கள் தோல் நோய்க் குள்ளாகின்றனர். மண்ணும் மக்களும் நலத்தோடும் வளத்தோடும் வாழ வேண்டுமென்ற தீர்க்க தரிசனம் தான் மரத்தை வைத்தால் தண்ணீர் ஊற்றும் என்ற பழமொழியாகியது. மழை வளம் பெறவும் பூமியின் பசுமையைத் தக்க வைக்கவும் மண் அரிமானத்தைத் தவிர்க்கவும் காடுகளைப் பெருக்கவும் மரம் வளர்ப்பதன் அவசியத்தை நன்கு உணர்ந்தவர்கள் நமது முன்னோர்கள். மரம் வச்சா தண்ணி ஊத்தும் என்ற அன்றைய பழமொழியை இன்று மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான் என்று மாற்றி விட்டோம்.

6. அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாள்:

அரசனை நம்பி புருசனைக் கைவிட்டாளா? அரசனே இல்லாத குடியாட்சிக் காலத்தில் இப்படியொரு பழமொழியா? ''புருஷனைக் கைவிடுதல்'' வளர்ந்துவிட்ட நாடுகளில் நாகரிக மாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் கணவனால் கைவிடப்பட்ட பெண்களே அதிகம்.

காலங்காலமாக இந்த மண்ணில் கலாச்சாரத்தைக் கண் எனக் கொண்டும் பண்பாட்டைக் பாதுகாத்தும் தலை நிமிர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களின் குலமானம் இந்தப் பழமொழியால் கொள்ளைபோகிறதே? மன்னர்கள் இந்த மண்ணை ஆண்டுவந்த காலத்தில் அரசனின் வீரத்திற்கு அடையாளமாக அந்தப்

புரங்கள் நிரம்பி வழிந்தன. பெண்களைப் போகப் பொருளா கவும் உடைமைப் பொருளாகவும் கருதியது முடியாட்சிகாலம், வெற்றிபெற்ற அரசர்கள் போரில் தோற்ற மன்னர்களின் நாட்டைச் சூறையாடினர். எதிரிநாட்டு மக்களை அடிமைப் படுத்தினர் குறிப்பாகப் பெண்களை அலங்கோலப் படுத்தினர். போர் வீரர்களால் களங்கப்பட்டும் புலவர்களால் கீழ்த்தரமாக வருணிக்கப்பட்டும் பெண்கள் சின்னா பின்னமாகினர். அரசர் களை மகிழ்ச்சிப்படுத்த பேனைப் பெருமாளாக்கியும் தூணைத் துரும்பாக்கியும் புலவர்கள் பாடினர். இந்தப் பழமொழியும் அரசனை மகிழ்ச்சிப்படுத்தவே தோன்றி இருக்கலாம். எனினும் "அரசனை நம்பி புருஷனைக் கை விட்டாள்" என்பதே இந்த பழமொழியின் உண்மையான வடிவம்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்தது நமது சமுதாயம். தூய நீரும் தூய்மையான காற்றும் உடற்பயிற்சியும் கடவுளின் பெயரால் நமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிரிக்க முடியாத அங்கமாகி இருந்தது. அதிகாலையில் குளித்து முடித்தவுடன் வணங்குவதற்கு வசதியாக ஆற்றங்கரைகளிலும் குளத்தங்கரைகளிலும் அரசமரத்துக்கடியில் விநாயகரை வைத்து வழிபட்டு வந்தனர். குழந்தைவரம்வேண்டிய சுமங்கலிப் பெண்கள் கணவனைக் கவனிக்க நேரமின்றி அரச மரத்தைச் சுற்றுவதையே நோக்கமாகக் கொண்டதனை விளக்குகின்றது "அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டாள்"

7. நாற்பது வயதில் நாய்க்குணம்:

நாற்பது வயதில் மனிதனுக்கு எப்படி நாய்க்குணம்? பண்டிதரோ பாமரரோ ஆண்களோ பெண்களோ அவரவர் நிலைகளுக்கேற்ப பொறுப்புகளை ஏற்றுத் திறம்பட நடத்த வேண்டிய வயது நாற்பது. உள் உறுப்புகளில் பழுதும் வெளித் தோற்றத்தில் முதுமையும் இடம்பெறும் வயது நாற்பது. குடும்பச் சூழலும் சமூகச் சூழலும் பொருளாதாரச் சூழலும், பணிச் சூழலும் ஒரு மனிதனை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வயது நாற்பது. குழந்தைகளின் ஏக்கங்களையும் பெற்றோர் களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற வேண்டிய வயது நாற்பது. இந்த வயதில் பொறுமையும் நிதானமும் மிக மிக அவசியமாகிறது. தனது உடல்நலத்தையும் பாதுகாத்துக் கொண்டு தன்னைச் சுற்றி இருப்பவர்களிடமும் பண்போடு

நடந்துகொள்ளவேண்டியது கட்டாயமாகிறது. எனவே ஒவ்வொருவரும் நாற்பது வயதை அடையும்போது உணவைக் கட்டுப்படுத்த நாக்கையும் உணர்வைக் கட்டுப்படுத்த வாக்கையும் தேவைக்கு அளவாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தில் அமைந்தது.

''நாற்பது வயதில் நா குணம்''

என்ற பழமொழி, நாளடைவில் பேச்சு வழக்கில் ''நாற்பது வயதில் நாய்க்குணம்'' என்று மாறிவிட்டது

8. ''பந்திக்கு முந்து படைக்குப் பிந்து''

பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்று ஒரு பழமொழியா? பந்திக்கு முந்துவதா?... மரணத்தை வெல்லுகின்ற சக்தி வாய்ந்த அமுதமே கிடைத்தாலும் தானாகவும் தனியாகவும் உண்ண விரும்பாதது நமது சமுதாயம் உழைக்காமல் உண்பவன் பாவத்தைத் தின்கிறான் என்பது அண்ணல் காந்தியடிகளின் வாக்கு. இப்படிப்பட்ட இந்திய மண்ணில் ஓசிச்சோற்றில் உடம்பை வளர்க்கும் யோசனையா?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி என்று முழங்கும் தமிழ்ச் சமுதாயத்தில் படைக்குப் பிந்துவதா... புண்ணோ அதுவும் புகழின் கண்ணே என்று தனது முகத்தில் தொண்ணூற்றி ஒன்பது விழுப்புண் களைப் பெற்ற விஜயாலயச் சோழன் போன்ற வீர மறவர் பிறந்த மண்ணில் கோழைகளை உருவாக்கும் யோசனையா?

தன்னைக் காக்க உணவும் மண்ணைக் காக்கப் படையும் அவசியம். அறுசுவை உணவை கவளமாக்கி உண்ணவும் உண்ணும் போது வாயருகில் கொண்டு செல்ல முன்னோக்கி வருவதும் கட்டைவிரல் போரிடும்போது அம்பை எடுத்து வில்லின் நாணில் சேர்த்து விசையோடு இழுத்து இயக்குவதற்குப் பின்னோக்கிச் செல்லுவதும் கட்டைவிரல். (துரோணாசாரியாரை மானசீகக் குருவாகக் கொண்டு பயின்ற ஏகலைவனிடத்திலிருந்து குருதட்சணையாகக் கேட்டுப்பெற்றதும் கட்டைவிரல்தானே?) எனவே பந்திக்கு முந்தும் படைக்குப் பிந்தும் என்று கட்டைவிரலுக்காக வழங்கி வந்த பழமொழி காலப்போக்கில் பந்திக்கு முந்து படைக்குப்பிந்து என்று மாற்றம் பெற்றது. ஒரே ஒரு எழுத்தைப் பழமொழி இழந்ததால் தமிழ்ச்சமுதாயத்தின்

தலை எழுத்தே மாறிவிட்டது. ஒரு பெரிய வீர சமுதாயமே இன்று வெறும் சோற்றுப்பட்டாளமாகவும் கோழைச் சமுதாய மாகவும் கருதுவதற்குக் காரணமாகிவிட்டது.

9. குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படு:

குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படு என்று ஒரு பழமொழியா? குட்டுப்படுவதென்பது தலையில் அடிபடுவது என்று பொருள். குட்டுப்படுவதற்கென்று ஒரு பிறவியா? மோதிரக் கையால் குட்டுப்படுவது ஒரு கௌரவமா? இருப்பவன்இல்லாத வனைக் குட்டுவதைச் சமுதாயம் ஆதரிப்பதையும் அங்கீகரிப் பதையும் ஆனந்தப்படுவதையும்தானே வெளிப்படுத்துகின்றது இந்தப் பழமொழி? இன்றைய சூழ்நிலையில் பட்டம், பதவி பணம், அந்தஸ்து, ஆட்சி, அதிகாரம் என்று உயர்மட்டத்தில் இருப்பவர் களின் வாயடியையும் கையடியையும் சகித்துக் கொண்டு, அடி வாங்குவதில் ஆனந்தமடைந்து சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது நியாயம்தானா? ஏன் குட்டுப்பட வேண்டும்? அதுவும் மோதிரக்கையால் ஏன் குட்டுப்பட வேண்டும்?

குட்டுப்பட்டாலும் மோதுகிற கையால் குட்டுப்படு என்று இருந்திருக்கலாமே? ஒருகோழையை எதிர்த்து வெற்றி பெறுவதை விட ஒரு வீரனை எதிர்த்துத் தோல்வியடைவது சிறந்தது என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது இந்தத்தொடர். மோதுகிற கை என்பது மோதிரக் கை என்று மாற்றம் பெற்றிருக்கலாமோ? ஒரு பெரிய மாவீரனை எதிர்த்துத் தோற்றாலும் – ஆற்றலும் போற்றலும் மிக்கவனேயானாலும் ஏன் பிறரிடத்தில் குட்டுப்பட வேண்டும்? இந்தக் கருத்திலும் உடன்பாடில்லை.

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்று சொல்லுவார்கள் சிரம் என்பது தலையைக் குறிக்கும் சொல். தலை நிமிர்ந்து நடப்பதையும் தலைக்கணம் என்று ஏசுவதையும் தலை குனிவு என்று நாணுவதையும் வாழ்க்கையாகக் கொண்டவர்கள் தலையில் குட்டுப்படுவார்களா? தலையிலே அடியும் காயமும் தோல்வியின் சின்னங்கள் அல்லவா? தலையைச் சிரைத்துக் கழுதை மேல் ஏற்றுவது கடுமையான தண்டனை அல்லவா? இளையவர்களின் தவறு திருத்தும் முயற்சியாக– மூத்தவர்கள் செல்லமாகவும் சினந்தும் வலதுகை விரல்களை மடக்கிக்கொண்டு–உச்சந்தலையில் ஓங்கி ஒரு குத்து அழுந்த

வைப்பதற்குப் பெயர்தானே குட்டு! இளையவர்களின் தவறு திருத்தும் மூத்தவர்கள் தங்களது சொந்த வாழ்க்கையில் தவறே செய்வது கிடையாதா? அப்படித் தவறு செய்கின்ற மூத்தவர் களைத் திருத்த இளையவர்களுக்கு அதிகாரம் கிடையாதே? தங்களது தவறைத் தாங்களே ஒப்புக்கொண்டு தங்களுக்குத் தாங்களே தண்டனை வழங்கிக்கொள்ளுகிற இடம் ஒன்று உண்டு. எதற்கெடுத்தாலும் அடுத்தவரைக் குட்டிக் கொண்டிருப்பவர்கள் தங்களைத் தாங்களே குட்டிக் கொள்ளுகிற இடம், மோதகம் கையில் ஏந்தி பிள்ளையார் இருக்குமிடம். முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் பாவத்துக்குப் பரிகாரம் தேடுகின்றவர் களுக்காகக் குட்டுப்போட்டாலும் மோதகக் கையானுக்குப் குட்டுப்போடு என்று வழங்கி வந்த பழமொழி இன்று குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படு என்று மாற்றம் பெற்றது.

கேள்வி மாத்திரத்தில் எதார்த்தமாகத் தோன்றினாலும் சிந்தனையாழத்தில் சிறந்த தத்துவக் களஞ்சியமாக விளங்குபவை பழமொழிகள். இன்றைய நோக்கில் அன்றைய பழமொழிகள் கடந்த காலக் கருவூலங்கள். இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் நமது சுவடுகளின் ஆழத்தை அளக்கும் கோலாகப் பழமொழிகளைக் கொள்ள இடமுள்ளது.

பன்மை வடிவப் பழமொழிகள்

முனைவர் ப. பத்மநாப பிள்ளை
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

1. முன்னுரை

நாட்டார் வழக்கிலுள்ள சொற்கள் இடத்திற்கு இடம் வேறு படுகின்றன. தோசையைத் திருப்ப உதவும் கருவியைக் குமரி மாவட்டத்தார் சட்டாப்பை (தட்டாப்பை) எனவும் மதுரை மாவட்டத்தார் தோசை கரண்டி எனவும் வட மாவட்டத்தார் தோசை திருப்பி எனவும் குறிப்பிடுகின்றனர். இதே போன்று ஒரே பொருளை உணர்த்த பல பழமொழிகள் வழக்கில் உள்ளன. காட்டாக, எவ்வழியில் சென்றாலும் துன்பம்தான் என்பதைக் குறிப்பிட "உப்பு விக்கப் போனா மழை பெய்யுது, தவிடு விக்கப் போனா காத்தடிக்குது", "உப்பு விக்கப்போனா மழை பெய்யுது, மாவு விக்கப்போனா காத்தடிக்குது" என்ற இரண்டு பழமொழிகள் உள்ளன. இவ்வாறு ஒரே பொருளைத் தரும் ஒன்றிற்கு மேற்பட்ட பழமொழிகளைப் பன்மை வடிவப் பழமொழிகள் என்று இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. இக்கட்டுரை பன்மை வடிவப் பழமொழிகள் தோன்றுவதற்கான காரணத்தை ஆராய்கின்றது.

2. இடப்பின்புலம்.

1. நாட்டார் வழக்காறுகள் இடத்திற்கு இடம் மாறுபடும் தன்மையன. இதற்குப் பழமொழிகளும் விதி விலக்கல்ல. மற்றவர்களுக்கு இடைஞ்சல் தரும் வண்ணம் பேசிக் கொண்டிருப்பதைக் குமரி மாவட்டத்தார்

"பனை ஓலைக்கிடையிலே நாய் மோண்டது மாதிரி"

எனவும் மதுரை மாவட்டத்தினர்

"ஓலைப் பாயிலே நாய் மோண்டாப்லே"

எனவும் தஞ்சை மாவட்டத்தினர்

"வெங்கலக் கடையிலே யானை நுழைஞ்சது போல"

எனவும் குறிப்பிடுகின்றனர். தென்மாவட்டங்களில் பனை மரம் அதிகம் இருக்கின்ற காரணத்தால் அது அவர்கள் பழமொழியில் இடம் பெற்றுவிட்டது.

2. ஒருவர் மற்றவரிடம் கோபப்படும்போது அதனால் ஏற்படும் துன்பம் மற்றவரைப் பாதிக்காமல் கோபப்பட்டவரையே பாதிக்கும் நிலையைக் குமரி மாவட்டத்தினர் "குளத்திலே கோபப்பட்டுகிட்டு குண்டி கழுவாம போனானாம்" எனவும் மதுரை வாழ் மக்கள் "ஆத்துலே கோபப்பட்டுகிட்டு குண்டி கழுவாம போனானாம்" எனவும் செங்கல்பட்டு மாவட்டத்தினர் "ஏரியிலே கோபப்பட்டுக்கிட்டு குண்டி கழுவாம போனது மாதிரி" எனவும் குறிப்பிடுகின்றனர். இங்கு குளம், ஏரி, ஆறு என்ற மூன்றையும் பயன்படுத்துவதன் காரணம் அம்மக்கள் அவற்றை நாடுவதால்தான். கண்மாய், கிணறு பயன்படுத்தப் பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை.

3. ஒரு செய்தி இரகசியமாக இருக்க வேண்டுமென்றால் ஒருவருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். அச்செய்தி இன்னொருவருக்கும் தெரிந்து விடும் என்பதைக் குமரி மாவட்டத்தினர்,

"ஒருத்தருக்கு தெரிஞ்சா ரகசியம். மேலே போனா பரசியம்"

எனவும் ஆடலூர் (பன்றிமலையில்) வாழும் பளிய இன மக்கள்,

"உதடு தாண்டினா ஒன்பது மலை" எனவும் குறிப்பிடுகின்றனர். இங்கு மலை என்பது ஊரைக் குறிப்பிடுகின்றது. அவர்கள் ஒவ்வொரு ஊரையும் (நாம் பட்டி எனக் குறிப்பிடுவது போன்று) மலை என்றே குறிப்பிடுகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட பன்மை வடிவப் பழமொழிகள் தோன்றுவதற்கு இடப் பின்புலம் காரணமாக அமைந்துள்ளன.

3. சமுதாயப் பின்புலம்

பன்மை வடிவப் பழமொழிகள் தோன்ற சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் காரணமாக அமைகின்றன,

சமுதாயத்தின் அடித்தள மக்கள் விலக்கப்பட்ட சொற்களை (taboo) எவ்வித கூச்சமுமின்றி பழமொழிகளில் பயன்படுத்து-வதைக் காண முடிகிறது. ஆனால் மேல்தட்டு மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாற்று வடிவங்களைப் பயன் படுத்துகிறார்கள்.

1. சமுதாயத்தின் அடித்தள மக்கள் பயன்படுத்தும் "வெட்டி ஒளு நித்திரைக்குக் கேடு" என்பதிலுள்ள ஒரு சொல்லை நீக்கிவிட்டு மேல்தட்டு மக்கள் "வெட்டி வேலை நித்திரைக்குக் கேடு" எனப் பயன்படுத்துகின்றனர்.

2. ஒருவன் இல்லாமை / துன்பத்தின் உச்சகட்டத்தில் இருக்க மற்றொருவன் அதற்கு நேர் மாறான ஒன்றை விரும்புவதை,

> "தகப்பன் தாச்சீலை இல்லாம இருந்தானாம், மகன் கண்டந்துப்பட்டி கேட்டு அழுதானாம்"
>
> தாய் தவிட்டுக்கு அழுதாளாம், புள்ள இஞ்சிப்பச்சடி கேட்டு அழுதுச்சாம்"
>
> "எரும ஈனிகிட்டு இருந்துச்சாம், கிடா புளுத்திக்கிட்டு நின்னுச்சாம்"

என்ற மூன்று பழமொழிகள் உணர்த்துகின்றன. இங்கு தாச்சீலை என்பது கோவணத்தைச் சுட்டுகின்றது. தாய் தன் பசியைப் போக்க தவிடாவது கிடைக்காதா என ஏங்க, பிள்ளை நன்கு உண்டுவிட்டு அது சீரணமாவதற்கு இஞ்சிப்பச்சடி கேட்ட நிலை உணர்த்தப்பட்டுள்ளது. இறுதியில் வரும் பழமொழி அடித்தள மக்களால் பயன்படுத்தப்படுகின்றது.

சமுதாய ஏற்றத்தாழ்வுகளாலும் பன்மை வடிவப் பழ மொழிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதுமேலே காட்டப்பட்ட சான்றுகளின் வழி அறிய முடிகின்றது.

4. புதுமையாக்கம்

புதுமையாகப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் பன்மை வடிவப் பழமொழிகள் உருவாகின்றன. இதற்குச் சான்று மாணவர் வழக்காறுகளில் காணக் கிடைக்கின்றது. காட்டாக,

"கடவுளே கைமுட்டி அடிச்சிகிட்டிருக்கப்போ பூசாரி புண்ட வரம் கேட்டானாம்" என்ற பழமொழிக்குப் பதிலாக மாணவர்கள்

"கடவுளே கட்டை வண்டியில் போறப்போ பூசாரி புல்லட் வரம் கேட்டானாம்" என்று படைத்துள்ளனர்.

5. மேல்நிலை ஆக்கமும் பழமொழிகளும்

கீழ்ச் சாதியினர் மேல் சாதியினரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி மேலே போக முயல்வதை மேல்நிலை ஆக்கம் என்பர். ஆனால் இங்கு விலக்கப்பட்ட சொற்கள் (taboo) இடம் பெற்றிருக்கும் பழமொழிகளுக்குப் பதிலாகப் புதிய பழமொழிகள் தோன்றியுள்ளதால் முன்னதன் மேல்நிலை ஆக்கமாகப்பின்னதைக் கொள்ளலாம். இங்கு அடித்தள மக்கள் மேல் தட்டு மக்களின் பழமொழிகளைப் பயன்படுத்தவில்லை. அடித்தள மக்களின் பயன்பாட்டில் இருக்கும் பழமொழிகள் மேல்தட்டு மக்களுக்காக மேல்நிலை ஆக்கம் பெற்றுள்ளன என்ற முடிவிற்கு வரலாம் இது மேலும் ஆராய்தற்குரியது.

6. முடிவுரை

ஒரே பொருளை உணர்த்தும் ஒன்றிற்கு மேற்பட்ட பழமொழிகளைப் பன்மை வடிவப் பழமொழிகள் எனக் குறிப்பிட்டு அவை தோன்றுவதற்கான காரணங்களாக இடப் பின்புலம், சமுதாயப் பின்புலம், புதுமையாக்கம் என்ற மூன்றையும் இக்கட்டுரை குறிப்பிடுகின்றது. மேலும் பழமொழிகளுக்கும் மேல்நிலை ஆக்கத்தைப் பொருத்திப் பார்க்க முடியும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளது.

அமைப்பியல் நோக்கில் பழமொழி விடுகதைகள்

சு. பிரியா
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்

முன்னுரை

வாய்மொழி வழியாக வளர்ச்சி பெற்ற பழமொழி, விடுகதைகள் செவிவழி செழித்தோங்கி, பின் எழுத்திலக்கியத்தில் ஏற்றம் பெற்று இன்று ஆய்வு நோக்கில் ஆராயப்பட்டு வருகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறத்திலும், விடுவிக்க வேண்டிய பொருளை வினா முறையில் கேட்டு பின் விடையளிக்கும் பாங்கிலும் முறையே பழமொழி, விடுகதைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன.

சங்க காலந்தொட்டு இக்காலம் வரை இலக்கிய வடிவில் இவை இரண்டும் திகழ்கின்றன. உளவியல், தத்துவம், உயிரினங்கள், கல்வி, பொருளாதாரம், மக்களின் நம்பிக்கை, அங்கதச் சுவை, சாதி, வேளாண்மைத்துறை, மருத்துவம், நுண் கலை, இயற்கை போன்ற பல்வேறு வகைகளில் வாழ்வியலோடு பிணைந்துள்ளன.

காலம், இடம், சூழமைவில் அமைப்பியல் நோக்கில் மேனாட்டறிஞர்களின் கருத்துக்களை ஒப்பிட்டு நாட்டுப்புற வியலாளர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

அமைப்பு நோக்கில் பழமொழி, விடுகதைகள்

பழமொழி, விடுகதைகள் காலம், இடம், சூழல் மற்றும் உடன்பாட்டு, எதிர்மறையில் விளக்கப்படுகிறது. மக்கள் தம்

எண்ணங்களையும் கருத்துக்களையும் தெரிவிப்பதற்குப் பழமொழி விடுகதைகள் பெரிதும் உதவுகின்றன. முன்னோர் கூறிய மொழி களைப் பொன்னே போல் பாதுகாத்து அவை எந்த இடத்தில், எம்முறையில், யாரிடம், எப்படி கூறப்படுகின்றன என்பதைப் பொறுத்து பழமொழி அமைகின்றது.

காரண காரிய அடிப்படையிலும், உவமை உருவகத்தாலும், எதுகை மோனை முறையிலும் பழமொழி, விடுகதைகள் அமைகின்றன.

''பழமொழிகளை உலகிலுள்ள அனைத்து சமுதாயங்களும் பயன்படுத்துகின்றன. முன்னேறிய சமுதாயமும், முன்னேற்ற மில்லாப் பழங்குடி சமுதாயமும் பழமொழியைப் பயன்படுத்து கின்றன.

அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை எனப் போற்றப்படும் ரஷ்ய நாட்டுப் பேரறிஞர் விளாடிமிர் பிராப், லெவிஸ்டிராஸ், ஆலன்டண்டிஸ், கென்னத் கோல்ட் ஸ்டெயின், ரோஜர் ஆப்ரகாம், ஆண்டி ஆர்னே, ஸ்டித் தாம்சன் போன்றோர் பழ மொழி, விடுகதை, நாட்டுப்புறக் கதைஆகியவற்றைத் தொன்ம கதை அமைப்பிலும், உளவியற் பகுப்பாய்வு முறையிலும் ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்க நாட்டில் இக் கோட்பாடு 1960 ஆம் ஆண்டளவில் மிக்ச் சிறந்த முறையில் விளங்கிய கோட்பாடாய் திகழ்ந்தது. புராணக் கூறுகளை நாட்டுப்புறக் கதைகளுடன் ஒப்பிட்டு அவற்றின் மூலம் அமைப்பியலுக்கு வழி வகுத்தனர்.

''தமிழில் முதன் முதலில் அமைப்பியலாய்விற்கு வித்திட்ட பெருமை டாக்டர் பா. ரா. சுப்பிரமணியம் அவர்களைச் சாரும். இவர் தாலாட்டிற்கும் ஒப்பாரிக்கும் இடையில் அமைப்பியலாய் வினைப் பயன்படுத்தினார்''.

பழமொழி அமைப்பு விளக்கம்

பழமொழிக்குத் தலைப்பு, முடிவுரை இருக்கவேண்டும் என்கிறார் ஆலன்டண்டிஸ். தலைப்பு ஒரு காரணத்தைக் கொண்டும், அதற்கிணையான முறையில் முடிவு காரியம் அல்லது விளக்கத்தை அளிக்க வேண்டும்.

தலைப்பு	முடிவுரை
1. மனமிருந்தால்	மார்க்கமுண்டு
2. மலிந்த சரக்கு	சந்தைக்குத் தானே வரும்
3. தொட்டில் பழக்கம்	சுடுகாடு மட்டும்

பழமொழிகள் உடன்பாடு, எதிர்மறை, உடன்பாட்டு எதிர் மறை, சமநிலை, வினாநிரல் அமைப்பில் விளக்கப்படுகின்றன.

1. உடன்பாட்டுப் பழமொழிகள்

(Non-Oppositional Riddles)

எ. கா. "பணம் பத்தும் செய்யும்"
"மன்னன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி"
"தற்பெருமை தாழ்வு உண்டாக்கும்"

இப்பழமொழிகள் உடன்பாட்டு முறையில் எதிர்மறையின்றி வருகின்றன.

2. எதிர்மறைப் பழமொழி

"முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா"?
"ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா"?

என்ற பழமொழிகள் வினா-விடை முறையில் அமைந்திருப்பினும் "எதிர் மறைப் பொருளில்" (Negative Form) இலங்குகின்றன. "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது; ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்காது என்ற முறையில் அமைகின்றன.

3. காரண காரிய பழமொழிகள்

"பதறிய காரியம் சிதறிப் போகும்"
"துஷ்டனைக் கண்டால் தூர விலகு"
"தினை விதைத்தவன் தினை அறுப்பான்"
"வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

மேற்கண்ட பழமொழிகளின் மூலம் காரணமாய் முறையே பதற்றத்துடன் செய்யும் செயல்கள் சிதறிப்போகும், துஷ்டனைக் கண்டவுடன் தூரம் விலகல், தினை, விதைத்தால் தினையும் அதாவது நன்மை செய்தால் நன்மையும், தீமை செய்தால் தீமையும் விளைகின்றன.

4. சமநிலைப் பழமொழிகள்

"தற்பெருமை தாழ்வு உண்டாக்கும்"

"அகத்தினழகு முகத்தில் தெரியும்"

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

மேற்கூறிய பழமொழிகள் சமநிலை கொண்டு (Equivalent base) வருகின்றன.

5. வினாநிலைப் பழமொழி

"அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவார்களா?

"அமாவாசைக் சோறு எப்போதும் கிடைக்குமா?

இவை போன்ற பழமொழிகள் வினாநிரல் அமைப்பில் அமைகின்றன. இவ்வாறு பழமொழிகளின் பல அமைப்புக்களைக் காணமுடிகிறது.

விடுகதை அமைப்பு முறை விளக்கம்

பழமொழியைப் போல் விடுகதைகளையும் பல வகைகளில் பிரிக்கலாம். வாழ்வியற் கூறுகளனைத்தும் இவ்விடுகதையின் வழி அறியலாம். உடன்பாடு, எதிர்மறை அமைப்பிலும் விடுகதை களை நாம் காண முடியும்.

விடுகதையின் அமைப்பினை மூன்று நிலைகளில் பகுக்கலா மென டாக்டர் சு. சக்திவேல் கூறுகிறார்.

1. தனிநிலை விடுகதை அமைப்பு
2. கூட்டுநிலை விடுகதை அமைப்பு
3. இணைநிலை விடுகதை அமைப்பு என்பன.

1. தனிநிலை விடுகதை அமைப்பு

1. "உலகுக் கெல்லாம் ஒரே துப்பட்டி" (வானம்)
2. "திரி இல்லாத விளக்கு" (சூரியன்)

இதில் "துப்பட்டி" என்ற பொருளை விடுகதையின் விளக்கக் குறிப்பாகக் (clue) கொண்டு "உலகுக்கெல்லாம்" என்ற முறையில் ஒப்பிட்டு பார்த்துக் கேட்பதாகும்.

"விளக்கு" என்பதை விடுகதையின் பதிலைப் பெறுதற்குத் தூண்டு கோலாய்க் கொண்டு அறியலாம்.

2. கூட்டுநிலை விடுகதை அமைப்பு

1. "கருப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன்" (பூட்டு)

2. அறிவின் மறுபெயர் இரவில் வருவது (மதி)

இவற்றில் "கருப்புச் சட்டை", "காவலுக்குப் பாது காவலன்' 'அறிவு', 'இரவு', என்ற 2 விளக்கக்குறிப்புக்களைக் கொடுத்து விடையளிக்கும் பாங்கில் அமைவது கூட்டு நிலை விடுகதை அமைப்பாகும்.

3. இணை நிலை விடுகதை அமைப்பு

இவ் அமைப்பில், ஒவ்வொரு வரியிலும் அவ்விடுகதையின் பொருள் மறைமுகமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட மறைபொருள் அவ்விடுகதையில் இருக்கும்.

"அப்பன் சொறியன்
ஆத்தாள் சடைச்சி
குழந்தைகள் சக்கரைக்கட்டி" (பலாப்பழம்)

உடன்பாடு, எதிர்மறை மூலமும் விடுகதையினை நோக்கலாம். ஆதலால் பழமொழியைப் போல் விடுகதையும் தலைப்பு, முடிவுரை கொண்டிருக்கும். ஒரு தலைப்பு பல கருத்துரைகளையும், பல தலைப்பு ஒரு கருத்துரையினையும் கொண்டு வரும்.

மேற்கண்ட நிலையினை அடிப்படையாகக் கொண்டு விடுகதை, பழமொழி பகுத்து விளக்கலாம்.

முடிவுரை

பழமொழி, விடுகதை இவையிரண்டிற்கும் காலம், இடம், சூழல் ஆகியன உறுதியாய் வேண்டும். எச்சூழலில், எவ்விடத்தில், எந்தக் காலத்தில் பயன்படுத்தப்பட்டன என அறிதல் அவசியம். வாய்மொழியாக வளர்ச்சிப் பெற்று இவ்விரு இலக்கியங்கள் எழுத்திலக்கிய வடிவில் உருப்பெற்று, இன்று மொழியியல், அமைப்பியல் நோக்கோடு முன்னேற்றம் அடைந்து வருகின்றன. சிந்தனை ஆற்றலுக்கும், அறிவின் மேம்பாட்டிற்கும் இவ்விரு இலக்கியங்கள் உதவுகின்றன.

பழமொழி, விடுகதைகள் இரண்டும் உடன்பாடு, எதிர்மறை, காரணகாரிய, தனிநிலை, இணைநிலை, கூட்டுநிலை முறைகளில் அமைப்பியல் நோக்கோடு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அமைப்பிய லாய்வில் மட்டும் நில்லாமல் உளப்பகுப்பாய்வு, தொன்மக்கதைக் கூறினடிப்படையிலும் விளக்கலாம்.

இதன்வழி பழமொழி, விடுகதைகளை அமைப்பியலாய்வின் மூலம் காணமுடிகிறது.

விடுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தி. பெரியசாமி
தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை-46

நாட்டுப்புற இலக்கியங்களை நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், பழமொழிகள் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றில் விடுகதையும் ஒரு பிரிவாகும். உலகில் மனிதர்கள் என்று அறிவுபூர்வமாகப் பேச ஆரம்பித்தார்களோ, அன்றே விடுகதைகள் தோன்றிவிட்டன எனலாம்.

விடுகதைகள் எளிமையும் எதுகை மோனையும் அமையப் பெற்று இலக்கிய நயங்கொண்டு விளங்குவன. கிராமியக் கலைகளுள் ஒன்றான இவ்விடுகதைகள் பெரும்பாலும் கிராமங்களில் தோன்றியதாகும்.

விடுகதைகள் பொழுதுபோக்கு விளையாட்டு என்றாலும் அறிவு வளர்ச்சிக்கும் சிந்தனை வளத்திற்கும் வழிவகுக்கும் நல்லதொரு இலக்கியம்.

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது மறை பொருளின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதை ஆகும்.

சிக்மண்ட் பிராய்டு என்னும் உளவியல் அறிஞர் ''அடிமன உணர்வுகளே கனவுகளின் பிறப்பிடம்'' எனக் கூறுகிறார். அவரது மாணவர் யுங் மேலும் நுணுகி ஆராய்ந்து மனிதனின் புராண வியல் படைப்பிற்கு மனதின் கனவுகளே அடிப்படையாக அமைகின்றன என்றும், அவைகள் புராணங்களாகவும் விடுகதைகளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் கூறி உள்ளார்.

பல்வேறு பெயர்கள்

விடுகதைகளுக்கு அழிப்பான்கதை, நொடிக்கதை, பிசி, வெடிபோடுதல், அவிழ்க்கும் கதை என்று பல்வேறு பெயர்கள் உள்ளன.

இக்காலத்தார் புதிர் என்றும் 'Puzzle' என்றும் 'Quiz' அழைப்பது ஒரு வகையில் விடுகதையே எனலாம், இவற்றுள் புதிர் என்னும் சொல் பிசி என்னும் பண்டைச் சொல்லிலிருந்தே பிறந்திருக்கவேண்டும் என்று அறிஞர் கி.வா.ஜ. குறிப்பிடுகின்றார்.

1. பிசி

தமிழில் புதிர் என்பது மிகத் தொன்மையான இலக்கிய வடிவமாகும். தொல்காப்பியத்தில் இதனைக் குறித்துப் பின்வரும் நூற்பா கூறுகிறது.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்

(தொல் செய் 79)

பிசி எனப் பேசப்படுவது விடுகதை ஆகும்.

2. நொடி

நொடி என்னும் சொல் பழமை வாய்ந்தது. படிப்பறிவில்லாப் பாமரனும் நொடிப் பொழுதில் இதைச் செய்து முடித்துவிட வேண்டும் என்று கூறுகிறார். மாத்திரையின் கால அளவைக் குறிக்கும்போது கைநொடித்தல் நேரத்தையும் கண்ணிமை நேரத்தையும் மாத்திரை என்றும் நொடி என்றும் கூறப்படுகிறது.

சிறு கணக்குகளையும் கதைகளையும் நொடிக்கதை நொடிக் கணக்கு என்று கூறலாம். நொடியை ஐரோப்பிய மொழிகளில் 'க்விஸ்' என்றும் (Malhor) தமிழில் நொடி என்றும் வழங்கப் பட்டு வருகின்றது.

3. வெடி

திருச்சி, சேலம், தர்மபுரி, தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில் விடுகதையை வெடி என்று கூறுகின்றனர்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடுச் என்னும் வட்டாரத்தில் நான் விடுகதை போடுகிறேன் நீ அதை வெடிவை என்று கூறுகின்றனர்.

வெடி என்னும் சொல் விடுவி என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். அந்த வட்டாரப்பகுதியில் உள்ள பெரியவர்கள் விடுகதை போடுகிறேன் விடுவி என்று கூறுகின்றனர். அதனால் 'வெடி' என்பது விடுவி என்பதில் இருந்து வந்திருக்கலாம்.

4. அழிப்பான் கதை

அழிப்பான் கதை எனும் தொடரில் அழிப்பான், கதை எனும் இருசொற்கள் உள்ளன.

பென்சிலால் எழுதியதை அழிக்கும் ரப்பரை அழிப்பான் என்றோ அழி-ரப்பர், அழிப்பு-ரப்பர் என்றோ வழங்குகின்றோம்.

எழுதியதை அழிப்பது போன்று ஒருவர் சொன்னதைச் சரியான விடையால் அழிப்பதை அழிப்பாங்கதை என்று கூறலாம்

விடுகதை பிறக்கும் சூழல்

விடுகதைகள் இங்கிருந்துதான் முதன்முதலில் தோன்றின என அடையாளம் காட்ட இயலாது சமுதாயத்தில் மனிதன் கொண்ட தொடர்பால் காலந்தோறும் விடுகதைகள் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அவை அனைத்திற்கும் சூழல்களே முக்கியக் காரணம்.

விளையாடுதல், உழைத்தல், வேளாண்மை, வியாபாரம் பிறருடன் பழகுதல், காதல் போன்ற பல்வேறு சூழல்களில் தோன்றிய அனுபவச் சிந்தனைகளாகவே விடுகதைகள் வழங்கி வருகின்றன.

சான்றாக

ஊளமூக்கன்
சந்தைக்குப் போறான்
அது என்ன? (விடை: நுங்கு)

கரகரயா ஓடுமாங்குருவி
கங்கணம் கட்டுமாங்குருவி
மூக்கு சிவக்குமாங் குருவி

முன்னூறு முட்டையிடுமாங் குருவி

அது என்ன?

கரகரயா ஒடுமாங்குருவி என்றால் — நீர் கரை வழியாகச் செல்லுதல். கங்கணம் கட்டுமாங்குருவி — பயிர்கள் வளர்ந்து பூக்கும் நிலைக்கு வருதல். மூக்கு சிவக்குமாங்குருவி — சோளப் பயிர் வளர்ந்து அண்ணம் (பால் பிடித்தல்) பிடித்து முதிர்ச்சியடைவது. முன்னூறு முட்டையிடுமாங்குருவி — பூட்டையில் முன்னூறுக்கு மேற்பட்ட அண்ணம் பிடிப்பது

சமுதாயத்தில் வேளாண்மை முதன்மையான இடத்தில் இருந்து வந்த சூழலில் இவ்விடுகதை பிறந்துள்ளது.

நீ நீட்ட

நான் மாட்ட

அது என்ன?

பெண்கள் வளையல் அணிதலைக் குறித்து இவ்விடுகதை அமைந்துள்ளது. பழங்காலம் முதல் பெண்கள் அணிகலன்கள் அணிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர் என்ற செய்தியையும் இந்த வழக்கத்தையொட்டி இவ்விடுகதை தோன்றியதை அறியமுடிகிறது.

இதுபோல் அறிவுரை கூறுதல், பாலியல், கேள்வி கேட்டல், பிறரைப் பழித்தல் போன்ற பல்வேறு சூழல்களில் விடுகதைகள் வழங்கி வருகின்றன.

இலக்கியத்தில் விடுகதைக் கூறுகள்

ரிக் வேதத்தில் விடுகதைத் தன்மையுடைய பாடல்கள் பல உள (சம் கிதை 1. 164).

சங்க இலக்கியத்தில் விடுகதைக் கூறுகள் காணப்படுகின்றன.

ஐ தேய்ந்தன்று
பிறையும் அன்று
மை தீர்ந்தன்று மதியுமன்று
வேயுமன்றன்று மலையுமன்று
பூவுமன்றன்று சுனையுமன்று
மெல்ல அசையும் மயிலுமன்று
சொல்லத் தளரும் கிளியுமன்று

என்ற கபிலரின் கலித்தொகைப் பாடல் விடுகதை அமைப் பினைத் தன்னுள் கொண்டதாக விளங்குகின்றது.

திருக்குறள் தந்த திருவள்ளுவர் விடுகதைக் கூறுகள் கொண்ட குறள்கள் பலவற்றைத் தந்துள்ளார். காமத்துப் பாலில்

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு

இதில் ஒன்றிற்கு விடை கூறிவிட்டார். மற்றொன்றிற்கு விடையை ஊகிக்குமாறு விட்டிருக்கின்றார். முகைமொக்கில் இருப்பது நாற்றம் (மணம்) மற்றொன்று "பேதையான அப் பெண்ணின் சிரிப்பிற்குள் அடங்கியிருப்பது" என்கிறார். அது என்ன? என்று வினவினால் 'காதல்' என்று விடை காண முடியும்.

சிலப்பதிகாரத்தில் விடுகதை வடிவங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. வரிப்பாடல்களில் பல விடுகதைகளின் அமைப் பினைப் பெற்றிருத்தல் கண்கூடு.

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே

கோவா மலையாரம் என்பது சந்தனத்தையும், கோத்த கடலாரம் என்பது கடல் முத்தினையும் குறிக்கும். 'ஆரம்' என்ற சொல் விளையாட்டு நமக்கு சிலப்பதிகார காலத்திலும் விடுகதைப் பாங்கு சிறப்புற்று இருந்தது என உணர்த்துகின்றது.

ஔவையார் "தனிப்பாடல்கள்" என்னும் நூலில் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. சோழன் அவையில் புலவர் பெரு மக்கள் பலரும் குழுமியிருந்தனர். ஔவையாரைப் பார்த்துக் கம்பர் ஒரு விடுகதை போட்டார்.

ஒரு காலடீ
நாலிலைப் பந்தலடீ

அதற்கு விடையாக எதிர்வெடி போட்டார் ஔவையார்.

எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது

அவலட்சணமே! எமனின் வாகனமான எருமையே? மூதேவியின் வாகனமான கழுதையே! முழுவதும் மேற்கூரை இல்லாதுபோன வீடாகிய குட்டிச்சுவரே! ராமனின் தூதனாகிய அனுமனின் இனமே! அடே! ஆரைக்கீரையைச் சொன்னாயடா! என்பது பாடலின் பொருள்.

இந்த விடுகதையில் கம்பர் அவ்வையாரைக் கேலி செய்ய வேண்டும் என்ற தன் உளப்பாங்கை விடுகதை என்ற வடிகால் வழியாக வெளிப்படுத்துகிறார். அவ்வையார் தன் மனதில் உள்ள எண்ணங்களை விடுகதை என்ற கூறுகளின் வழியாக வெளிப் படுத்துகிறார்.

தொகுப்புரை

1. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே விடுகதைகள் வழங்கி வந்துள்ளன.

2. கி.பி. 2-ம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் விடுகதைகள் நூல் வடிவம் பெற்றது எனலாம்.

3. விடுகதைகள் சிந்தனைகளைத் தூண்டவும், பொழுது போக்காகவும், பயன்படுகிறது.

4. ஒருவனது உளப்பாங்கை வெளிக்கொணரும் வடிகாலாக உள்ளது.

5. வேதங்களிலும் இதிகாசங்களிலும் சங்க இலக்கியங் களிலும் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் தற்கால இலக்கியங்களிலும் விடுகதைகளுக்கான கூறுகள் காணப்படு கின்றன.

கம்பம் பள்ளத்தாக்கில் வேளாண் பழமொழிகள்

இரா. மனோகரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

முன்னுரை

நாட்டுப்புற இலக்கிய வகையில் சிறந்தது பழமொழி. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரியாறு மற்றும் வைகை ஆறு உருவாகி அதனால் பாசனம் பெறும் பகுதியில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதி பாசனப் பயிர்கள் நெல், கரும்பு, வாழை, தென்னை போன்ற பயிர்கள் நன்செய்ப் பகுதி எனவும் தோட்டக்கால் பயிர்கள் மற்றும் வானம் பார்த்து நிற்கும் மானாவாரிப் பயிர்கள் புன்செய்ப்பகுதி எனவும் ஏறக்குறைய அனைத்து வகைப் பயிர்களையும் கொண்ட செழுமையான பகுதியாக சிறந்து விளங்குகின்றது. கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் வழக்கிலுள்ள பழமொழிகளில் வேளாண் சார் பழமொழிகளை இனங்கண்டு அவைகளை இன்றைய அறிவியல் வேளாண் கருத்துக்களுடனும் செய்முறை களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து அனுபவ அறிவினடிப்படையில் இன்றளவும் எவ்வாறு அதன் பயனை அறிந்து கடைப்பிடித்து வருகின்றனர் என்பதனைக் கண்டறிந்து இக்கட்டுரையாக அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டுப்புற இலக்கியங்களில் பல அரிய செய்திகளை வெளிப்படுத்தினாலும் மூத்தோர் சொல், முதுசொல், பழஞ்சொல் என்றெல்லாம் பழமொழி அழைக்கப்படுகின்றது. "பழ-மொழியைக் குறிக்க முப்பத்தி நான்கு சொற்கள் இருப்பதாக"

வ. பெருமாள் தனது 'பல நோக்கில் பழமொழிகள்' என்னும் நூலில் கூறியுள்ளார்.

பழமொழியானது உண்மையான அனுபவ அறிவால் விளைந்த அனுபவ வெளிப்பாடாக உள்ளது. "பழமொழி பலரின் அறிவையும் ஒருவரின் உண்மைத் தன்மையையும் உணர்த்துவன வாகும்" என்ற ஜான்ரஸ்ஸல் கருத்தினைச் சு. சக்திவேல் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது.

வேளாண்மை:

வேளாண்மைத் தொழில் அனைத்துத் தொழில்களுக் கெல்லாம் முந்தியது. மனித இனம் தோன்றிய நிலையில் அவனுக்குக் கிடைத்த இயற்கை விளைவித்த பொருட்களை உண்டு வாழ்ந்து வந்தான். அதன்பின்பு அது கிடைக்கப் பெறாத சூழலிலும் பற்றாக்குறை ஏற்பட்ட நிலையிலும் நாடோடி வாழ்க்கை முற்றுப்பெறும் கால கட்டத்தில் ஓரிடத்தில் இருந்து தனக்குத் தேவையான உணவு வகைகளைப் பட்டறிவால் பயிரிட கற்றுக்கொண்டான். அதனையொட்டி தனக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்ய உதவிக்கு கால் நடைகளைப் பயன்படுத்தினான். புதிய முறையில் செய்திட கருவிகளைப் பயன்படுத்தினான். மேலும், நீர்த்தேவை அதனால் ஏற்படும் சிரமங்கள் அறிந்து பருவங்கள், நீர் பாசனப் பராமரிப்பு, குறைந்த நீர்த்தேவைப் பயிர்கள் போன்ற அனுபவ அறிவினைப் பெற்றான். இவ்வாறு வேளாண் தொழிலின் படிப்படியான வளர்ச்சியினால் அனுபவ அறிவால் சிறந்த முறையில் இருந்த மனிதன் சமூகத்தின் பயன்பாடுகருதி அதனை மற்றவர்களும் பயன்படுத்துமாறு பேச்சு வழக்கில் தொல்காப்பியர் காட்டும் பழமொழி விளக்கமான 'நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய இயல்புகளுடன் வேளாண்மைத் தொழிலில் கண்ட அனுபவ அறிவு பழமொழியாக்கப்பட்டுள்ளது "காலங்காலமாக வேளாண்மைத் தொழில் போற்றப்பட்டு வந்தது. அவற்றுள் நின்று நிலைத்த அனுபவங்களே பிற்கால மக்களால் மரபுகள் என்று போற்றப் பெற்றன" என்ற இல. செ. கந்தசாமியின் கருத்துப்படியே நாட்டுப்புற மக்களால் பழமொழி வடிவமாக்கி அதனை இன்றளவும் போற்றிக் காத்து வரப்பட்டுள்ளது.

மழை

மழை இயற்கையின் பெறற்கரிய செல்வம். இம்மழையானது அனைத்துப் பயிர்களுக்கும் தேவையானது. நீர்ப்பாசனம் உள்ள பயிர்களுக்கும் நீர்ப்பாசனம் அற்ற மானாவாரிப் பயிர்களுக்கும் மழை அவசியமானதொன்று. இதில் பருவத்தில் பெய்தால் எல்லாப் பயிர்களும் எதிர்பார்க்குமளவு மகசூலைத்தரும். இல்லையென்றால் மழையின்றிப் பயிர்கள் கருகி மகசூல் பாதிப்படையும் இது குறித்து, பண்டைய தமிழர்கள் பழமொழி கள் வாயிலாக நமக்கு அறிவியல் அறிவினைத் தந்துள்ளனர்.

'காலத்தில் பேஞ்ச மழை போல' என்ற பழமொழியானது பருவத்தில் மழையின் தேவை கருதி கூறப்பட்டதாகும். பயிர் களுடைய வளர்ச்சிக் கட்டங்களான முளைப்புப்பருவம், வளர்ச்சிப்பருவம், மகசூலுக்கான காரணி உருவாகும் பருவம் அதாவது கரு உருவாகும் பருவம் போன்ற நிலைகளில் பயிர் களுக்கு நீர் அத்தியாவசியமானது. விதைப்புப் பருவத்தில் அளவிற்கு அதிகமான மழை பெய்தாலும், அறுவடைப் பருவத்தில் மழை அதிகமாக பெய்தாலும் பயிருக்குப் பாதிப்பேற்படும். இந்நிலையில் மழை தேவையான கட்டங்களில் பெய்யாது தேவையற்ற கட்டங்களில் பெய்யுமேயானால் விளைவுகள் விபரீதமாகி விடும். இச்செய்தியினைத்தான் பண்டைச் சான்றோரால்

'காஞ்சுங் கெடுத்துச்சு பேஞ்சும் கெடுத்திச்சு'

என்ற பழமொழியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே நிலையில் சரியான பக்குவத்தில் வளர்ச்சிப் பருவத்தில் பயிர் வாடி வதங்கி கருகிவிடும் சூழ்நிலையில் பெய்யும் மழையானது

'தீயும் பயிருக்குப் பேயும் மழை போல'

என்ற பழமொழியின்படி அமிழ்தத்தைப் போன்றதாகக் கருதி போற்றப்படுகின்றது. இவ்வறிவியல் அறிவு இயற்கையாகவே முன்னோர்கள் அனுபவத்தின் வழியாகப் பெற்றுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

பாசனப் பராமரிப்பு

'நீரின்றி அமையாதிவ்வுலகு'

என்பதற்கொப்ப நீரின்றி இவ்வுலக வாழ்க்கை சிறப்படையாது. இயக்கங்களும் நடைபெறாது. அதனால் நீர் நிலைகளை

நமது முன்னோர்கள் பராமரித்து வந்துள்ளனர். அது அவர்கள் கூறியுள்ள பழமொழிகளின் வாயிலாக அறியலாகின்றது. நீர் பராமரிப்பு என்ற வகையில் நன்செய் எனப்படும் நீர்ப்பாசனப் பயிரும் புன்செய் எனப்படும் மானாவாரிப் பயிரும் அடங்கும். சமீப காலத்தில் ஏற்பட்டதுதான் தோட்டக்கால் பயிராகும். நீர்ப்பாசனத்தை தேவைக்கேற்ப உருவாக்கி கிணறு வெட்டி அல்லது ஏற்றம் அமைத்து முறைப்படுத்தி பாசனம் செய்வதை தோட்டக்கால் நிலமாகக் கருதுவர். நன்செய்ப்பயிர் குளம், ஏரி, வாய்க்கால், ஆறு போன்ற நீர்ப்பாசனத்தில் அமையும். புன்செய்ப் பயிர் மழையை எதிர்நோக்கி வானம் பார்த்த பயிராக (மானாவாரிப் பயிர்) இருக்கும்.

சிறந்த நிலம் எவ்விடத்தின் அமைய வேண்டும் என்பது வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

'மதகடி நஞ்சையும் மலையடிப் புஞ்சையும் சிறந்தது' என்ற பழமொழியின் வாயிலாகக் கடைமடையில் நிலம் இருப்பதைவிட மதகடியில் நஞ்சைநிலம் அமைவது சிறந்தது எனவும் மலை அடிவாரத்தில் எப்பொழுதும் மழை பொய்க்காது அதனால் மலையடிப் புன்செயும் சிறந்த நிலம் என்று கூறியுள்ளதன் வாயிலாக விளங்கும்.

இது போன்ற அனுபவ கருத்து

'ஆத்த அடுத்த வயலும்
அரசனையடுத்த குடியும் முன்னுக்குவராது'

என்ற பழமொழியினால் ஆற்றை அடுத்த வயலில் அவ்வப்போது ஆற்றில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பயிர்கள் நாசமாகும் என்ற கருத்தமைந்துள்ளது. இக்கருத்தை மேலும் வலுவேற்ற

'அட மழையில் நாத்து நட்டா ஆத்தோட போகும்'

என்று மழைக்கால ஆற்றுப்பெருக்கை நினைவுபடுத்துவதுடன் மழைக்காலத்தில் நாற்று நடவு செய்யப்படுவதில்லை என்பதும் விளங்குகிறது.

குளம் பழைய காலத்திலே அமைக்கப்பட்டு அதுவும் பராமரித்து வரப்பட்டுள்ளது அந்தக் காலத்திலிருந்து குளங்களில் நீர் சேமித்து வைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நீரைச் சேமித்து வைக்கும் செயலன்றி தேவையான அளவு நீரை வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும் என்ற பண்பினை வளர்க்க காவல் ஆள் அமர்த்தி (நீராத்தான்) அந்த காவலாள். மூலமாக நீர்ப்பாசனத்தை ஒழுங்குப்படுத்தி அக்குளத்தின் கட்டுப் பாட்டில் வரும் நிலங்களுக்குத் தேவையான நீரை முறைப்படுத்தி விடுவது என்ற பணி முறைப்படுத்தப் பட்டுள்ளது. அதுதான் குளத்தின் முறைவீதமாகும். இக்காலத்தில் நமது அரசு இப்பணி யைச் செய்து வருகின்றது. முறைப்பாசனத்தை முறைப்படுத்தி ஒவ்வொருவரும் பாய்ச்ச வேண்டிய நீரின் அளவைக்கூட குறிப்பிட்டு அதனைக் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்துள்ளது. அனைவரையும் பயனடைய வைக்கிறது. இதனையொட்டிய பழமொழியாகக் குளம் உடைந்த சூழ்நிலையில் இதுபோன்ற முறைவீதம் வைத்து பாசனப் பராமரிப்பு செய்ய இயலாது என்ற கருத்து விளங்க

'கொளம் உடஞ்சு போற போது முற வேறயா?'

என்ற கூற்று அமைந்துள்ளது.

பாசனப் பராமரிப்பு பயிர்நிலைக்கேற்ப பராமரிக்கப்பட்ட செய்திகளும் பழமொழியால் நமக்குக் கிடைக்கின்றன. நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டியதன் அவசியம் உணர்ந்து அனுபவ அறிவால்

'வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர்ந்தால், சொல் உயரும்'

என்ற கூற்று விளக்குகிறது. நெல வயலில் வரப்பு உயரமாக வைத்து அதன்மூலம் தேவையான அளவு நீரினை நிறுத்தி வைத்தோமேயனால் நெல்லில் மகசூல் அதிகரிக்கும் என்றும் நெல் மகசூல் குறைவின்றி கிடைக்கும் நிலையில் பற்றாக்குறையின்றி நாட்டு மக்களின் சொல் உயர்வடையும் சொன்ன சொல் மாறாது என்ற கருத்தினை விளக்கி நிற்கிறது இம் முதுமொழி.

நீர் பராமரிப்பு செய்வது பற்றி இன்றைய வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டு எந்தெந்த பயிருக்கு எவ்வளவு நீர் எந்த நாட்களில் பாய்ச்ச வேண்டும் என்று பட்டியலே தயார் செய்து வைத்துள்ளது. அந்த அட்ட வணைப்படி செய்யாது நீர் அதிகம் பாய்ச்சினால் மகசூல்

குறையும் என்றும் வேளாண் அறிஞர்கள் கண்டுள்ளனர். அதில் எடுத்துக்காட்டுக்களாக நெல் மற்றும் நிலக்கடலைப் பயிரினைப் பார்க்கும் போது நெல்லுக்கு 37–39 நாட்களில் நீர் பாய்ச்சுவதை மிகவும் குறைத்து சுத்தமாக நீர் பாய்ச்சுவதை நிறுத்தி காய்ச்ச லுக்கு விடவேண்டும். இப்பருவம் தூர்கட்டும் பருவம் அதனால் அதிக எண்ணிக்கையில் சிம்பு வெடிக்கும் அதனால் பயிர் மகசூல் அதிகமாகும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதுபோலவே நிலக்கடலைப் பயிருக்கு முதல் பாசனம் விதைத்தவுடன் உயிர் தண்ணீர் இரண்டாம் பாசனம் முளை வெளிவந்தபின்பு (கங்களவு) முளை மூழ்காத அளவிற்கு நீரை நிறுத்தும் அளவு 8ஆம் நாளில் பாசனம் செய்ய வேண்டும். அதன் பிறகு 35 நாட்களுக்கு பாசனத்தை நிறுத்திவிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் காயவிடாமல் நீர்ப்பாசனம் செய்தால் பயிர் மகசூல் பாதிப்படையும் எனக் கண்டறிந்துள்ளனர். இதனை இந்த அறிவியல் உண்மையை

'பாச்சலும் வேணும் காச்சலும் வேணும்'

இப்பழமொழியின் மூலமாக நம் முன்னோர் சுருக்கமாகக் கூறி யுள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலும், நீர் பராமரிப்பில் நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்யும் வாய்க்காலில் நீர் நிறைந்து செல்லும் பொழுது வாய்க்கால் முழுதும் புற்கள் முளைத்து நீர் போவதைத் தடுத்தபடி இருக்கும். இதனைச் சீர் செய்ய நீர் பாய்ச்சும் பொழுது வாய்க்காலைச் சுத்தம் செய்து புற்களை வெட்டி அப்புறப்படுத்துவர். இன்றைய அறிவியலில் இதனைத் தடுக்க சிமெண்டினால் வாய்க்கால் அமைத்து பாசன முறை ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. இதனை பண்டைய தமிழர் உணர்ந்து நம்மை எச்சரிக்கும் விதமாக

'நெல்லுக்குப் பாயற தண்ணி புல்லுக்கும் பாயும்'

எனக் கூறியதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

உழவு

இன்றைய அறிவியல் வேளாண்மை உழுவது பற்றி ஆழ உழுவதால் மேல் மண் கீழ் மண்ணாவதுடன் களைகள் புரட்டி யெடுக்கப்பட்டு கீழே மண்ணுக்கடியில் சென்று மக்குவதற்கு ஏதுவாகிறது எனக் கண்டறிந்து கூறுகின்றது. பண்டைத்

தமிழர்கள் உழவு பற்றிய பழமொழிகள் வாயிலாக இதனை முன்னமே உணர்ந்துள்ளது விளங்குகிறது.

'அகல உழுறத விட ஆழ உழுறதே மேல்'

'அடர விதச்சு ஆழ உழு'

'ஆழ உழுதாலும் அடுக்க உழு'

போன்றவைகள் ஆழ உழுவதன் அவசியம் குறித்து முன்னோர்கள் கொண்டிருந்த அனுபவ அறிவினை வெளிப்படுத்துகின்றன. ஆழ உழுவதிலும்கூட அடுக்கஉழு அதுவே நல்லது என்று கூறப் பட்டுள்ளது. அடுக்க உழு என்பதன் பொருள் முன்னேர் வழி பின்னேர் செல்லும் பொழுது அடுக்கடுக்காய் உழுது நிலம் இடைவெளியின்றி உழப்படும் இதனால் சிறப்பான மகசூலைப் பெற இயலும் என்ற கருத்து விளங்குகின்றது.

பட்டந்தப்பி பயிர் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்த முன்னோர்கள்

'பருவத்தில் பயிர் செய்யு'

'பட்டந்தப்புனா நட்டம்'

என்று காட்டும் வேளாண் பழமொழிகளுடன் உழவில் கூட எந்தப் பருவத்தில் எந்த மாதத்தில் எவ்வாறு உழவேண்டும் என்பதையும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அதன் பயனையும் பழமொழி வழியே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'சித்திர மாசப் புழுதி பத்தர மாத்துத் தங்கம்'

என்றும்

'தையுழவு அஞ்சாட்டுக்கிட'

என்ற பழமொழிகளில் உழவு செய்யும் மாதங்களுடன் அவ்வக் காலங்களில் நிலம் உழுது இருப்பதனால் ஏற்படும் பயனை அறிய முடிகிறது. சித்திரையில் கோடையுழவு செய்வது மிகவும் அவசியம் என்பதனை வேளாண் அறிஞர்கள் ஆய்வில் கண்டு கூறியுள்ளனர். கோடையுழவு மூலமாக நிலத்தில் உள்ள தீமை செய்யும் பூச்சிகளின் முட்டைகள் அழிவதுடன் களைகளின் பெருக்கமும் குறைகிறது. நன்கு ஆழ உழுது வைத்திருக்கும் நிலையில் மழை பெய்தால் நிலத்தின் மழை நீரை சேமிக்கும் தன்மை அதிகரிக்கிறது. இதனால் மகசூலும் அதிகரிக்கிறது. இதனை வலியுறுத்தும் முதுமொழியாகச் சித்திரை மாதப்

புழுதி பத்தரை மாற்றுத் தங்கம் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆடுகளைக் கிடை வைப்பது வேளாண்மைத் தொழிலில் மரபு. அதனால் ஆட்டின் சிறு நீரும் அதனுடைய கழிவாகிய புழுக்கையும் நிலத்தின் தரத்தை மேம்படுத்தி விளைச்சலை அதிகரிக்கச் செய்யும். ஐந்து ஆட்டுக் கிடை வைத்தால் என்னென்ன சத்துக்கள் நிலத்திற்கு கிடைக்குமோ அந்தளவிற்கு தை மாத உழவு பயனளிக்கும். அதற்குக் காரணம் தை மாதம் அனைத்துப் பயிர்களின் அறுவடைக் காலம். அந்த நேரத்தில் பயிர்கள் அவற்றின் கழிவுகள் பண்ணைக் கழிவுகள் அனைத்தும் நன்கு உழப்படும். அதனால் நன்கு மக்கி நிலத்திற்கு வளத்தினைச் சேர்க்கும்! என்ற கருத்தினை தையுழவு ஐயாட்டுக் கிடை வலியுறுத்தியுள்ளது விளங்கும். அதுபோல நன்செய்ப்பயிர் எப்பொழுதும் நீர்நிறைந்து இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதற்கு நன்கு மண்ணை உழுது நீர் நிலையாக நிறுத்துமளவிற்கு உழுது நட்டால் அதிக மகசூல் கிடைக்கும். ஆனால் புன்செய்ப் பயிருக்கு நான்குழவு செய்தாலே போதும். இப்பொருளமைய பழமொழி வாயிலாக

'நஞ்செய்க்கு ஏழு உழவு புஞ்செய்க்கு நாலுழவு'

எனக் கூறியுள்ள அனுபவ அறிவு அறியலாகிறது.

நடவு விதைப்பு

விதை விதைத்தவுடன் பயிர் நன்கு வளரத் தேவையான செய்முறைகள் செய்ய வேண்டியது அவசியம். விதைத்த பின்பு முளை வெளிக் கிளம்புமே அந்நிலையில் அதன்பின் வரும் பலனைப் பண்டைச் சான்றோரால் கண்டறியப்பட்டுள்ளது. வீரியமில்லா விதையிருப்பின் அது உறுதியாக வளர்ச்சி குன்றி மகசூலும் குறைந்து இருக்கும். அதனை உறுதிப்படுத்தும் விதமாக விதைக்கு விடுகின்ற காயினையும் தரம் பிரித்துக் கூறியுள்ள செய்தி தெரிகின்றது. அது

'வெளயும் பயிர் முளையில விதக்கா பிஞ்சில'

என்ற பழமொழியின் வழி அறிய முடிகின்றது.

நடவு இடைவெளி

'முடி முடியா நட்டா பிடி பிடியா விளயுமா?'

என்ற பழமொழி நடவு செய்யும் போது பயிருக்குப் பயிர் தேவைப்படும் இடைவெளியை மனதில் கொண்டு கூறப்பட்ட

தாகும். நடவு இடைவெளி பராமரிக்காவிட்டால் பயிர் மகசூல் பாதிப்படையும் என்று வேளாண் துறையின் ஆய்வு முடிவின்படி பரிந்துரைக்கப்படுகின்றது. இதனை மேலும் உறுதி செய்யும் பழமொழியாகப்

'பிடி பிடியா நட்டா பொதி பொதியா விளயுமா?

என்று வினாமுறையில் கேட்டு சிந்திக்கத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. இதனுடன் இடைவெளி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை,

'நண்டுர நெல்லு நரியோட கரும்பு
வண்டியோட வாழ தேரோட தென்ன'

நடவேண்டும் என்ற வழக்காறு வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

களை

பயிர்களுக்குக் களையெடுத்தல் மிகவும் அவசியம் என்பதால் இன்றைய வேளாண் அறிவியல் செய்முறைகளில் களையெடுத்தல் பற்றி வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதனை அனுபவ அறிவினால் கூறும் பாங்கு பழமொழிகளின் வழி அறிய முடிகின்றது.

'கள பிடுங்கா பயிரு காப்பயிரு'
'கள யெடாதவன் விளை வெடான்'

என்ற பழமொழிகளிலிருந்து களை எடுக்கவில்லையென்றால் பயிர் வளர்ச்சியும் பாதிக்கப்படும் பயிர் விளைச்சலும் பாதிப்படையும் என்பதனைப் பட்டறிவால் கூறியுள்ளது தெளிவாகின்றது.

அதுபோன்றே

'அருகங்காட்டை விட்டவனுங் கெட்டான்
ஆன மாட்டை விட்டவனுங் கெட்டான்'

என்பதிலிருந்து அருகம்புல் முளைத்து அடர்ந்து விடும் அளவிற்கு நிலத்தைப் பண்படுத்தாமல் களையெடுக்காமல் இருந்தவன் கெட்டான். நல்ல மாட்டினைப் பராமரிக்காமல் விட்டு விட்டவனும் கெட்டான் என்று அறியலாகின்றது.

முடிவுரை:- "இலக்கியங்களின் பின்னணியில் அறிய இயலாத மக்களின் சமுதாய நம்பிக்கைகள் வழக்குகள், பழக்க வழக்கங்களைப் பழமொழி மூலம் அறியலாம். சுருக்கமாகக் கூறின் வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் பழமொழி மூலம் அறியலாம்" என்ற சு. சக்திவேல் கூற்றிலிருந்து சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்களையும் வாழ்வில் நிகழும் அனைத்து அனுபவக் கருத்துக்களையும் சுருங்கக்கூறி விளங்க வைக்க பழமொழி என்னும் இலக்கிய வடிவம் பயன் பட்டுள்ளது. விளங்குகிறது. வேளாண்மைத் தொழிலை முக்கிய தொழிலாகக் கொண்ட கம்பம் பள்ளத்தாக்கில் வேளாண் சார் பழமொழிகள் அனுபவ அறிவுடன் காலங்காலமாக கடை பிடிக்கப்பட்டு வந்துள்ள தன்மை இக்கட்டுரை வாயிலாக வெளிப்பட்டுள்ளது.

நாட்டுப் பாடல்களில் சூழல் பாதிப்புகள்

முனைவர் இரா. வீ. அப்பாத்துரை
அரசு கலைக்கல்லூரி
மேலூர்

'சூழல் கோட்பாடு' என்பது மானிடவியல் அறிஞர் மாலினோவ்ஸ்கி என்பாருடன் சேர்ந்து ரேமாண்ட்ஃபிர்த் உருவாக்கிய ஒரு சிறந்த கோட்பாடாகும். மாலினோவ்ஸ்கி 1930 களிலேயே இக்கோட்பாட்டைப் பற்றித் தம் கட்டுரைகளில் விவாதித்துள்ளார் ஃபிரித் 1957–ல் இது பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அவர்

'ஒரு தொடரின் – பேச்சின் – அர்த்தம், வெறும் மொழி சார்ந்தது மட்டுமல்ல, பண்பாட்டோடு மிகத் தொடர்புடையது' என்கிறார். 'பண்பாட்டுச்சூழல்' என்ற தொடரை ஃபிரித் பயன் படுத்துகிறார் பண்பாட்டுச்சூழல் என்பது.

'வேறுபடுத்தத் தக்க, சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நிகழும் ஒரு கருப்பை ஆகும்' என்று ஃபிரித் வலியுறுத்துகிறார். ஃபிர்த்தும் அவருடைய வழியில் ஆய்வு செய்த 'கிரைஸ்' போன்ற அறிஞர்களும்.

'மொழியில் உள்ள கூற்றுக்களை, மற்ற சமூக நடவடிக்கை போலக் குறிப்பிட்ட பண்பாட்டோடு பொருத்திச் சூழல் மயமாக்காமல், விளக்கமுடியாது' என்பதையே வலியுறுத்தி யுள்ளனர். ஃபிர்த் 'இணைவமைதி' என்ற செய்தியை அறிமுகப் படுத்தித்தான் ஒரு சிறந்த சிந்தனையாளர் என்பதை நிறுவி யுள்ளார்.' இணைவமைதி' என்பது சூழல் அமைதிக்கும் இலக்கண ஆய்வுக்கும் இடைப்பட்ட ஒன்றைப் பற்றியதாகும்.[1]

ஆர்வமும் ஆற்றலும் வாய்ந்த நாட்டுப்புறவியல் இளைய தலைமுறை அறிஞர்கள் என்று ரிச்சர்ட் எம். டார்சன்

வருணிக்கும் ரோஜர் ஆபிரகாம்ஸ், டான். பென். ஆமாஸ், ஆலன் டண்டிஸ், இராபர்ட் ஏ. ஜார்ஜஸ், கென்னத் கோல்ட்ஸ்டெயின் ஆகியோர் நாட்டுப்புற வழக்காறுகளின் ஆய்வில் சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதை 1960-களிலே ஒரு இயக்கமாகவே வளர்க்கத் துவங்கினர்.

நாட்டுப்புற வழக்காறுகள் அவைகளின் மொழிச்சூழல், ஒழுக்கச்சூழல் (Behaviour), தகவல் தருசூழல் (Communication), வெளிப்படுத்தப்படும் சூழல் (Expression), நடத்திக் காட்டப்படும் சூழல் (Performance) ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தப்பட்டுத் தனியாக ஆய்வு செய்யப்படுவதை அவர்கள் வன்மையாக எதிர்த்தார்கள். அப்படிப்பட்ட தேக்கநிலை ஆய்வுகளை அவர்கள் நிராகரித்து சூழல் ஆய்வை மிகவும் வலியுறுத்தினார்கள்.

அவர்கள் தங்கள் எண்ணங்களை முரணற்ற – ஒருமித்த – ஒரு கொள்கையாக வெளியிடாமல், தங்களது நோக்கங்களை அதிக பட்சம் கோட்பாட்டுவழி ஆய்வுக்கட்டுரைகளாகத்தான் வெளி யிட்டனர். அவர்கள் முப்பரிமாணமுள்ள சூழலை வலியுறுத்தியதை

ரோஜர் ஆபிரகாமின்

'சிறு குழுக்களில் தொடர்பு கொள்ளும் முறைகளின் இயைபு;' (Ceremonial communicative interaction of small groups).

இராபர்ட் ஏ. ஜார்ஜஸின்

'சிக்கலான தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சி' (Complex communicative event).

ஆலன் டண்டிஸின்

பாட அமைதி, பாடம், சூழல் (Texture, Text and context).

டான். பென். ஆமாஸின்

'தொடர்பு கொள்ளும் முறையின் பண்பாட்டு வகைகள்' (Cultural Categories of Communication)

'ஒரு திட்டவட்டமான – யதார்த்தமான – கலையுணர்வுடைய தொடர்பு கொள்ளும் முறை' (a definite – realistic artistic and communicative process) ஆகிய தொடர்கள் தெளிவுபடுத்து கின்றன.

'நாட்டுப்புறவியலின் பொதுக் கொள்கை, அவ்வழக்காறு களுக்குப் பொருந்தாது. அவ்வழக்காறு மேற்கொள்ளப்படுகின்ற அல்லது தகவல் அளிக்கின்ற நேரத்தில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்கே பொருந்தும்' என்று இவர்கள் மேலும் மேலும் வலியுறுத்தியதே இந்த அறிஞர்களைப் பிறநாட்டுப்புறவியல் அறிஞர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டியது.[2]

சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயன்படுத்துவது பற்றிய எண்ணத்தை மாலினோவ்ஸ்கியிடமிருந்து பெற்றாலும், அதையே இக்கோட்பாட்டாளர்கள் மறுபடியும் சொல்லவில்லை. மாலினோவ்ஸ்கியின் பண்பாட்டுச் சூழலும் சூழல் பற்றிய கொள்கைகளும்

'பண்டைய புராதன மொழிகளின் பொருளைப் புரிந்து கொள்வதிலும், அவற்றை மொழிபெயர்ப்பதிலும் உள்ள சிக்கல் களைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்டவை'

ரோஜர் ஆபிரகாம்ஸ் முதலான சூழல் கோட்பாட்டாளர் களின் கருத்துக்கள்

'நாட்டுப்புற வழக்காறுகளுக்குச் சூழல் ஆய்வைப் பயன் படுத்துவது' ஆகும்.

தகவல் தருவதை ஆதாரமாகக் கொண்ட சூழல் அணுகு முறை அதைப் பாடுபவரின் நோக்கம், அதைக் கேட்பவரின் கவனிப்பவரின் போக்கு முதலியவற்றின் அடிப்படையைப் புரிந்து கொள்ள உதவுவது மட்டுமன்றி,

'வெளிப்படுத்தப்படுகின்ற பொருளும், தகவல் தருகின்ற நிகழ்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன'[3] என்றும் கருதவைக்கின்றன. நாட்டுப்புற வழக்காறுகளின் சூழல் என்பது

'அந்த வழக்காறுகள் பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலை ஆகும்'[4] ஒரு நிகழ்வோ தகவல் அளிக்கும் செயலோ கட்டாயம் முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம், மாலினோவ்ஸ்கி

'நாட்டுப்புற வழக்காறுகள் உண்மையிலேயே மிக மிக முக்கியமானவைதான். ஆனால் சூழல் பற்றிய விவரங்கள் இல்லாவிட்டால் அவை உயிரற்றவையாகத்தான் இருக்கும்'[5]

என்று சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். லாரிஃகோங்கோ

'வழக்காறுகளின் பொருள்கள் சூழலில் தான் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. சூழல் இல்லாத வாக்கியங்கள் வெற்று வாக்கியங்களே'[6] என்று சூழலின் இன்றியமையாமையை எடுத்துக் கூறுகிறார்.

பாடல்களும் சூழலும்

கதைகள் அளவுக்கு அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப மாற்றமடைகின்ற சூழல் பாடல்களுக்கு இல்லை. ஏனெனில் பாடல்கள் பாடப்படுகின்ற சூழல்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. கதை அப்படியல்ல. ஒரே கதையைத் தாத்தாவில் இருந்து பேரன் வரைக்கும், உறவினரல்லாத தெரிந்தவர்கள் கூட யாரும் யாரிடமும் சொல்கின்ற வாய்ப்பு இருக்கிறது.

சூழல் கோட்பாட்டு ஆய்வு மிகவும் அருகியே காணப்படுவதாலும், அப்படிக் காணப்படுவதும் கூட பழமொழிகளையும் கதைகளையுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தியிருப்பதாலும், நான் சேகரித்த சிவகங்கை வட்டார நாட்டுப் பாடல்களைச் சூழல் கோட்பாட்டு ஆய்வுக்கு உட்படுத்தி அதன்மூலம் நான் கண்டறிந்த சில உண்மைகளை உங்களுடன்பகிர்ந்து கொள்ள முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இயற்கைச் சூழலின் இன்றியமையாமை

நாட்டுப்பாடல்களை இயற்கைச் சூழலிலும், செயற்கைச் சூழலிலும், தோற்றுவிக்கப்படும் இயற்கைச் சூழலிலும் சேகரிக்கலாம். இயற்கைச் சூழலில் சேகரிப்பதில் இடர்ப்பாடும், காலத்தேவையும் அதிகமாக இருந்தாலும், அந்தப் பாடல்களில் உள்ள உணர்ச்சி வேகமும் உயிர் நிலையும், அழகியல் திறமும், குழப்பமற்ற தெளிவும் செயற்கைச் சூழல் சேகரிப்பில் இல்லை என்பது அனுபவம் உணர்த்தும் உண்மை.

பாடல்களைப் பொதுவாகத் தாலாட்டு, ஒப்பாரி, தொழிற் பாடல், தெய்வப்பாடல், வாழ்த்துப் பாடல், பொழுது போக்குப் பாடல், தெம்மாங்கு என்று அறிந்து கொள்ள மட்டுமே செயற்கைச் சூழல் சேகரிப்பு உதவமுடியும். ஆனால்

'எந்தச் சூழலில் ஒவ்வொரு பாட்டும் பாடப்படும்'? 'எந்தெந்தச் சூழல்கள் பாடலில், பாட அமைதியில், பாடுபவர் களில் மாற்றம் ஏற்படுத்தும்'? 'யாருடைய வருகை அல்லது வராமை, உடனிருப்பு அல்லது உடனில்லாமை பாடல்களில் மாற்றம் ஏற்படுத்தும்'? என்பனவற்றையெல்லாம் அறிந்து கொள்ள இயற்கைச் சூழல் சேகரிப்பு மட்டுமே பயன்பட முடியும். சூழல் ஆய்வினைக் கூர்மையாக மேற்கொள்ளும்போது மேற்கண்ட கேள்விகட்கு 'புதிய, வியத்தகு, பயன்படு செய்திகள்' விடை களாகக் கிடைக்கின்றன.

சமூகப் பழக்க வழக்க மாறுபாடுகள் பாடலை மாற்றுதல்

டான் - பென் - ஆமோஸ் போன்றோர் 'சூழல் கூறுகளால் நாட்டுப்புற வழக்காறுகள் மாறுபடுகின்ற நிலையை, சமூகப் பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்ற நிலையுடன் ஒப்பிட்டு, வேறுபடுத்தும் முறையை வலியுறுத்துகிறார்கள்'[7]

நடுகை சமயத்தில், வயலுக்குச் சொந்தக்காரர் வயலுக்கு வரும் சூழலில், பாடப்படுகின்ற பாடல் பகுதி ஒன்று எனக்குக் கிடைத்தது. ஒரே வீட்டில் உள்ள மாமியாரும் மருமகளும் அந்தப் பகுதியைப் பாடியுள்ளார்கள்.

மாமியார் எஸ். கே. பழனியம்மாள். 75 வயதானவர். பறையர் சாதியைச் சேர்ந்தவர். வையகளத்தூர் காலனியைச் சேர்ந்தவர். மருமகள் அமராவதி அழகேசு 30 வயதானவர். அதே சாதியைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்தவர்.

மாமியார் பாடிய பாடல் பகுதி:

"வட்டக் குடபிடிச்சே – எங்க ஆண்ட
வயப்பாக்க வாராக
வயலுங் கருதாகும் – அவுக
வந்தெடமுந் தோப்பாகும்
நீளக் குடபிடிச்சே – எங்க அய்யா
நிலம்பாக்க வாராக
நிலமுங் கருதாகும் – அவுக
நின்னெடமுந் தோப்பாகும்"

மருமகள் பாடிய பாடல்பகுதி

"வட்டக் குடபுடிச்சே
வயப்பாக்க வாராக – அவுக
வயலுங் கருதாகும்
வந்தெடமுந் தோப்பாகும்
நீளக் குடபுடிச்சே
நிலம்பாக்க வாராக – அவுக
நிலமுங் கருதாகும்
நின்னெடமுந் தோப்பாகும்"

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரிடையே உள்ள இந்த வேறுபாட்டுக்குக் காரணம் சூழலே என்பது கள ஆய்வில் வெளிப்பட்டது.

மாமியார் 75 வயதானவர் – பழைய மரபுகளில் ஊறிப் போன அவர் வயலுக்குச் சொந்தக்காரரை

'எங்க ஆண்ட' 'எங்க அய்யா'

என்று பயபக்தியோடு பணிவோடு விளித்துப் பாடுகிறார். அவர் வளர்ந்த – வாழ்ந்த சூழலின் பாதிப்பு இது.

மருமகள் 30 வயதானவர் – சாதிகள் குறித்து சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சிந்தனைகள் – விழிப்புணர்வு, அவருக்கு

'எங்க ஆண்ட' 'எங்க அய்யா'

என்று பாடவேண்டிய தேவையில்லை என்ற உணர்வை ஏற்படுத்தி உள்ளது. கள ஆய்வில் திருமதி அமராவதி அழகேசுவைச் சந்தித்து இது பற்றிக் கேட்டபோது

'ஆண்ட அப்புங்கிற காலமெல்லாம் மலையேறிடுச்சிங்க சார்' என்று சுணீரென்று பதிலளித்தார். அருகிலிருந்த அவரது மாமியார்

'இந்தக் காலத்துப் பொண்டுகளுக்கு
மட்டு மருவாதி தெரியலிங்க, சாமி'

என்றார். தலைமுறை இடைவெளியும், சமூகச் சிந்தனை மாற்றங்களும் நாட்டுப் பாடல்களை மாற்றுவது இதன்மூலம் தெளிவாகிறது.

அதேபோல வயல் சொந்தக்காரர் வருகின்ற போது அவரிடம் நடுகைப் பாட்டு பாடுவதற்குக் குலவைக் காசை எதிர்பார்க்கும் சூழலில், காசு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு முதியவர்களால் பாடப்படுகின்ற பாடல் பகுதியைத் தனக்குத் தெரிந்திருந்தும் இளைய தலைமுறை திருமதி அமராவதி அழகேசு பாடவில்லை.

"சட்ட மேல் சட்ட போட்டு
சருகச் சட்ட மேப் போட்டு - அவுக
எடது கய்யத் திருப்பிப் போட்டு
எடுத் தருவாக சில்லறய"

மேற்கண்ட பகுதியைப் பாடாததோடு மட்டுமல்ல, முதிய தலைமுறையினர் அப்படிப் பாடுவதையும் - எதிர்பார்ப்பதையும் இளைய தலைமுறையினர் அவமானமாகக் கருதுகிறார்கள்.

இவற்றிலிருந்து தலைமுறை இடைவெளியும் சமூக அமைப் பில் ஏற்பட்டுள்ள புறச்சூழல் மாற்றங்களும் பாடல்களைப் பாதிப் பதையும் - மாற்றுவதையும் - சூழல் ஆய்வு நுணுக்கமாக தெளிவாக - வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

ஒருவரின் வருகை / அந்தஸ்து பாடலை மாற்றுதல்

நாட்டார் பாடல்கள் ஒரு சூழலில் பாடப்படும் பயன்பாட்டு இலக்கியங்கள் ஆகும். ஆதலின் அவை பாடப்படும் சூழ்நிலை அப்பாடலைப் பாதிக்கிறது.[8]

டாக்டர் தே. லூர்து அவர்கள் தனது நூலில் 'சில வேளை களில் நாட்டுப்பாடல்களைப் பாடும் கலைஞன் தன் பாடல்களைச் சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிப் பாடுவான்'[9] என்றும், டாக்டர் சரசுவதி வேணுகோபால் தனது நூலொன்றில் 'சூழல் பாடத்தை மாற்றி அமைக்க வல்லது. சிலபொழுது பாட அமைதியையும் மாற்றி அமைக்க வல்லது. அதாவது சொல்லக் கூடாத ஒரு சொல் ஒரு சூழலில் சொல்லப் பெறும், ஒரு சூழலில் சொல்லப் பெறாது[10] என்றும் கூறியுள்ள கருத்துக்களைக் களத்திலே மேற்கொண்ட சூழல் ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

தர்மப்பட்டி எனும் ஊரைச் சேர்ந்த திருமதி து. அடக்கம்மாள் என்பவரிடம் பாடல் சேகரித்தபோது, முதலில் தான் பாடிப் பார்த்துக் கொள்வதாகவும், அடுத்தமுறை தான்

பாடும்போது பதிவு செய்து கொள்ளும்படியும் வேண்டினார். ஒலிப்பதிவு செய்வதற்கு முன் பாடிப் பார்த்தபோது "சோளப் பயிருபோலே கன்னியிள மானே சொரணக்கிளி நானிருக்க தன்னேனன்னா னானே சொரணகெட்ட அத்த மவங் கன்னியிள மானே சொறிநாய ஆசவச்சாந் தன்னேனன்னோ னானே" என்று பாடிய பாடகர் ஒலிப்பதிவு செய்யப்படும்போது அதையே "சொந்தமுள்ள அத்தமவங் கன்னியிள மானே வண்ணாத்திய ஆசவச்சாந் தன்லேனன்னா னானே" என்று மாற்றிப் பாடினார். அவர் பாடி முடித்த பிறகு இப்படி மாற்றிப் பாடியுள்ளீர்களே என்று கேட்டபோது 'பொசுக்குன்னு அத்த மவனே வந்துட்டாக அவுக இருக்கும்போது எப்புடி அப்பிடிப் பாடுறது அதான் மாத்திப்புட்டேன்' என்றார் அத்தை மகனின் வருகை அவர் சம்பந்தப்பட்ட வன்மையான சொற்களை விலக்க வைப்பதைச் சூழல் ஆய்வு சுட்டிக் காட்டுகிறது இதே போலத் திருக்கோஷ்டி–யூரில் திருமதி வீரம்மாள் பாடிய பாடலைப் பதிவு செய்யும்போது அந்தப் பாடகர் "நாட்டரசங் கோட்ட காட்டுக்குள்ளே நல்ல நாட்டிய மாடுற ஆட்டக்காரி ஒக்கூரு நாட்டாரு ஒய்யாரத் தேவரு ஒன்ன வரச்சொல்லி ஒலதந்தார்" என்று பாடினார்' எனது அருகில் இருந்த அந்த ஊர்க்காரப் பெண்மணி ஒருத்தர் 'பாட்ட மாத்திட்டா' என்று முணுமுணுத்தார். இதைக் கவனித்த நான்' பாடல்களெல்லாம் பாடி முடிக்கப்பட்ட பின்னர் பாடகரிடம் இதுபற்றிக் கேட்டதும் 'நாட்டாம இருக்கும்போது அதெல்லாம் பாட முடியுமா?' என்று கூறினார். நாட்டாமை சென்றபிறகு அந்தப் பாடலை "நாட்டரசங் கோட்டத் தெருக் களையே நல்லா நாற அடிக்கிற தேவடியா என்று தான் பாடுவது வழக்கம் என்று கூறினார். இந்த மாற்றத்திற்கு நாட்டாமையின் வருகையைவிட அவரது சமூக அந்தஸ்து தான் முக்கிய காரண மாகியுள்ளது. எத்தனையோ ஆண்கள் கேட்டுக் கொண்டிருந்த சூழலில், பாடல் மாறியதற்கு நாட்டாமையைக் காரணமாகக் கூறியதிலிருந்து இது தெளிவாகிறது. டாக்டர் தே. லூர்து அவர்கள் தனது நூலொன்றில் 'தன்னுடைய மரியாதைக்குரிய சிலர் அருகில் இருக்கும்போது சிலவகை வழக்காறுகளைத் தகவலாளி வெளியிட மாட்டான்'[11] என்று கூறியிருப்பதைக் கள ஆய்வும் சூழல் ஆய்வும் உறுதிப்படுத்தியுள்ளது.

இடம் ஏற்படுத்தும் பாதிப்புகள்

இங்கு குறிப்பிடப்படுவது வசிக்கும் இடமாகும். இயல்பாகப் பாட்டு கட்டுகிறவர்கள் அவரவர்கள் ஊருக்கும் ஏற்றாற்போல் பாட்டை அமைப்பார்கள். அதே பாடல் பிற ஊர்களுக்குப் பரவும் போது, அந்தந்த ஊர்களுக்கேற்பச் சில மாற்றங்களைப் பெறுகின்றது. எடுத்துக்காட்டாக நாகர் வழிபாட்டுப் பாடல் ஒன்று பாடப்படும் ஊர்களுக்கேற்ப "மம்பட்டி தோள்போட்டு ஆத்தங்கரப்பட்டி நாட்டார்கமட தொறக்க வாராக வடத்த ஒதுக்கி வழி உடுவார் நாகரு" என்றும், மம்பெட்டியுந் தோள் போட்டு வய்யகளத்தூர் நாட்டார் வயப்பாக்கப் போறாக வடத்த ஒதுக்கி வழி உடுவார் நாகரு என்றும் மாறியிருப்பதைக் காண முடிகிறது.

சமூகச் சூழல்

பாடல்கள் மாற்றத்துக்கு டாக்டர் லூர்து குறிப்பிடும் மூன்று காரணிகளுள் சமூகச் சூழலும் ஒன்று "நாட்டார் வழக்காற்றுச் சேகரிப்பின் போது தகவலாளி தான் இருக்கும் சமூகச் சூழலுக்கு ஏற்பச் செய்திகளை வெளியிடுவான்"[12] என்பதற்கேற்ப இந்தியச் சமூகத்தில் பேராட்சி செலுத்தும், 'சாதிகள்' நாட்டுப்பாடல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன தெய்வங்களுக்குப் பயன்படுத்துகின்ற பாடல் பகுதி சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களால் தங்கள் முதலாளிகளைப் பற்றிப் பாடுவதற்கேற்ப மாற்றப்படுகிறது.

"கிள்ளுக் கொசுவங்களாம் வள்ளிக்குக் கீமடி வெத்திலயாம் அள்ளிக் கொடுத்தாரோ சுப்பய்யா வள்ளி மனங்குளிர" என்ற பாடல் பகுதி, தாழ்த்தப்பட்டவர்களால் நடுகைப் பாடலில் குலவைக் காசை எதிர்பார்த்து "கிள்ளுக் கொசுவங்களாம் கீமடி வெத்திலயாம் அவுக அள்ளிக் கொடுப்பாக ஆபரணக் கையால" என மாற்றம் பெறுகிறது. தெய்வங்கள் குடை பிடித்து வருவதாகப் பாடுகின்ற பாடல்கள் இவர்களால் நில முதலாளி களுக்கு ஏற்ப மாற்றிப் பாடப்படுகின்றன.

முடிவுரை

சூழல்கள் பாடலில் / பாடுபவர்களில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டோம். மேலும் தங்களிடத்தில் புதிதாகப் பரவுகின்ற பாடல்களைத் தங்கள் ஊருக்கேற்ப சூழலுக்கேற்ப காலத் தேவைக்கேற்ப மாற்றியும், தங்கள் தெய்வங்களின்

பெயர்களை இணைத்தும் பாடுகின்ற போக்கும் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் டாக்டர். ஆறு. இராமநாதன்

> "சூழலுக்குத் தக்கவாறு பாடலை மாற்றிக் கொள்ளும் உத்தி முறையாலும் மக்கள் தங்கள் பாடல் தேவையை எளிதில் நிறைவு செய்து கொள்கின்றனர்"[13]

என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

துணை நூற்பட்டியல்

1. *சரசுவதி வேணுகோபால்* **"நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள்"**, *தாமரை வெளியீடு, மதுரை*, 1991 பக். 151-154.
2. Richard M. Dorson, **"Folklore and Folklife; An Introduction"**, The University of Chicago press, 1972, p 45.
3. Dan Ben Amos and Kenneth Goldstein (Eds.), **"Folklore, Performance and Communication"**, N. V. Publications, The Hague, 1975, p. 3.
4. Alan Dundes, "Texture, Text and Context," **"Essays in Folkloristics"** Folklore Institute, Meerut, 1978, p. 36.
5. Malinowski, B (1926) "Myth in Primitive Psychology" in Oxford University Dictionary, New York, 1955.
6. Edson Richmond (Ed.) Lauri Honko, "Empty Texts, Full Meanings," **"Journal of Folklore Research"** Vol. 22, No. 1, April, 1985, Indiana University Folklore Institute Bloomington, IN. 47405 pp. 39 & 41.
7. Richard M Dorson, 1972, p. 46.
8. லூர்து, தே. **"நாட்டார் வழக்காற்றியல், ஓர் அறிமுகம்"** 56/பி/2 எஸ். ட்டி. சி. ரோடு, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, 1976, ப. 107.
9. மேலது, ப. 84.
10. *சரசுவதி வேணுகோபால்*, 1991, ப. 160.
11. லூர்து, தே. **"நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு"**, *பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி–7*, 1986, பக். 128-129.
12. மேலது, ப. 128.
13. இராமநாதன், ஆறு., **"நாட்டுப்புறவியல் ஆய்வுகள்"**, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1986, ப. 151.

வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக் கண்டறிதல்

முனைவர் ச. இரவி
தமிழ் விரிவுரையாளர்
பூ. சா. கோ கலை அறிவியல் கல்லூரி
கோவை.

முன்னுரை:

வரலாற்றுக் கதைப்பாடல்கள் போர்கள், போர்களுக்கான காரணங்கள் பற்றிப் பேசுகின்றன. இப்போர்கள் முரண்பட்ட இருவேறு அரசுகளுக்கிடையே ஏற்படுகின்றன. இம்முரண்பாடுகளுக்குக் காரணமான மன்னர்கள் மற்றும் போர்களில் நேரடியாக ஈடுபட்ட வீரர்கள் அனைவரையும் வரலாற்றுக் கதைப் பாடல்கள் பாராட்டுகின்றன. எனவே இவ்வகைக் கதைப்பாடல்களில் தலைவர்களைக் காண்பதில் பெரும் இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. இவ்விடர்ப்பாட்டைக்களைய வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களுக்கான வாழ்க்கைப் படிவம் ஒன்றைத் தயாரித்து அதன்மூலம் இராமய்யன் அம்மானைக் கதைப் பாடலில் கதைத்தலைவனைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்கள் பற்றிய இலக்கணத் தேவை:

காப்பியங்கள் போன்ற ஏட்டிலக்கியத் தலைவர்களுக்கு இலக்கணம் கூறப்பட்டிருப்பதுபோல், வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களுக்கு இலக்கணம் வகுக்கப்படவில்லை. காப்பியத் தலைவர்கள் ஏட்டிலக்கியத் தலைவர்களாகையால் இவர்களுக்குக் கூறப்படும் இலக்கணம் வாய்மொழி இலக்கியத் தலைவர்களாகிய வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களுக்குப் பொருந்துவதில்லை.

எடுத்துக்காட்டாகக் காப்பியத்தலைவன் "ஒப்பாரும் மிக்காருமில்லாத் தன்னேறில்லாத் தலைவனாக விளங்க வேண்டும்". இக்கருத்து வரலாற்றுக் கதைப்பாடல்களுக்குப் பொருந்துவதாக இல்லை. எனவே வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் இலக்கணத்தைக் கண்டறிய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

2. வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக் கண்டறிவதில் ஏற்படும் சிக்கல்:

வரலாற்றுக் கதைப்பாடல்களில் நடுநாயகமாகத் திகழும் தலைவன் திட்டமிட்டுப் படைக்கப்பெறவில்லை இக்கதைப் பாடல்கள் பல இடங்களில் வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்தன. அந்நிலையில் அக்கதைப்பாடல்களைப் பாடிய கலைஞர்கள், பாடப்பட்ட இடங்களில் சூழ்நிலைக்கேற்பவும் கேட்போர் மனநிலைக்கேற்பவும் கதைப்பாடல்களில் மாற்றத்தைச் செய்து வந்தனர். எனவே கதைத் தலைவனுக்குரிய பண்புகள் பெரும்பாலும் எல்லாத் தலைமைப் பாத்திரங்களுக்கும் கிடைத்துவிடுகின்றன, கதை மாந்தர்களை மேலாண்மைச்சக்தி மேலாண்மை எதிர்ப்புச் சக்தி எனப் பிரித்தறிந்து எவருடைய செயல்கள் அறவழிப்பட்டவை எவருடைய செயல்கள் அறத்துக்கு மாறுபட்டவை என்று பார்க்கும் திட்டமிட்ட பார்வை வாய்மொழிக் கவிஞர்களிடம் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் அதற்கு மாறாக அனைவரையும் சமரசப்படுத்திக் கேட்போரை இன்புறுத்தும் போக்கு காணப்படுகிறது. எனவே வரலாற்றுக் கதைப்பாடல்களில் தலைவர்களைக் காண்பதில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

3. சிக்கலுக்கான தீர்வு:

இச்சிக்கலுக்குத் தீர்வு காணும் பாடல் முறையில் வரலாற்றுக் கதைத்தலைவர்களுக்கான பொதுவான வாழ்க்கைப்படிவம் ஒன்றைவரைந்து கொண்டு அதன் மூலம் தலைவர்களைக் கண்டறிய முயல்வது சால்புடையதாகும்.

வான்கான் (Van-Hahn), ரேங்க் (Rank),[1] ரகலன் (Raglan)' ஜான்-டி-விரைஸ் (Jan de vries)[2] போன்றவர்கள் இந்தோ-ஐரோப்பியக் கதைத் தலைவர்களின் வாழ்க்கைப் படிவத்தை வரைந்துள்ளனர்.

கிரேக்க, உரோமியத் தலைவர்களை மையமாகக் கொண்ட இவ்வாழ்க்கைப்படிவ அளவுகோல் (Hero patten scale) இந்தியப் புராணத்தலைவர்களையே அளக்க உதவுமென்றும் உள்ளூர்த் தலைவர்களை (Local Heroes) அளக்கப் பொருந்தாதென்று பிளாக்பர்ன் குறிப்பிடுவார்.[3]

சரசுவதி விஜயவேணுகோபால் வாழ்க்கைச் சட்டத்தை மீறும் தலைவர்களின்(Out lawed) வாழ்க்கை வரலாற்றை ஒரு கூட்டமைப்புக்குள் அமைத்து அது உலகளாவியதாக அமையக்கூடும் என நிறுவியுள்ளார்.[4]

ஜான் – டி – விரைஸ் வடித்துக் கொடுத்துள்ள தலைவர் களது வாழ்க்கைப் படிவத்தைப் பிரண்டா ஈ பெக் 'அண்ணன் மார் சாமி கதை' யோடு பொருத்திப் பார்த்து அவர் எடுத்துக்கூறிய பத்துக்கூறுகளில் 3– 6, 8, 9 ஆகிய மூன்று கூறுகள் மட்டும் பொருந்தவில்லை என்கிறார்.[5]

ரகலனது தலைவர்களது வாழ்க்கைப் படிவம் பற்றிய கூறுகளைத் தமிழ் நாட்டு உள்ளூர்த் தலைவனான (Local Hero) முத்துப்பட்டனோடு பொருத்திப் பார்த்து அதில் ஒரு கூறு கூடப் பொருந்தவில்லை என வானமாமலை குறிப்பிடுகின்றார்[6]

அவரே மேலும் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களின் வாழ்க்கைப்படிவம் ஒன்றை வரைந்து கொடுத்துள்ளார். ஆனால் இவ்வாழ்க்கைப்படிவம் நாட்டுப்புறக் கதைப்பாடல் தலைவர் களைத் தேசிய வீரர்களாக இனங்காணும் நிலையில் பயன் படுத்தப் பட்டுள்ளதே அன்றித் தலைவர்களைக் கண்டறியப் பயன்படுத்தப் படவில்லை.

அவ்வகையில் யாரையெல்லாம் தலைவர்களாக ஐயப் படுகின்றோமோ அவர்களிடம் காணப்படும் பொதுமையான கூறுகளைப் பின்வரும் ஒன்பது கூறுகளாக வகைப்படுத்தி வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைப் பற்றிய வாழ்க்கைப் படிவம் ஒன்று தயாரிக்கப் படுகிறது. இக்கூறுகளில் யாருக்கு மிகுதி யான கூறுகள் பொருந்துகின்றனவோ அவரையே வரலாறறுக் கதைப்பாடல் தலைவராக ஏற்றுக் கொள்ளலாம்.

4.0 வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக் கண்டறிய உதவும் வாழ்க்கைப் படிவக் கூறுகள்:

1. வரலாற்று மாந்தர்களாக இருத்தல்
2. உயர்குடியில் பிறந்திருத்தல்
3. உயர்பதவியில் இருத்தல்
4. சராசரி மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப் பெற்றிருத்தல்
5. தங்களைப் பணிய வைக்க நினைக்கும் மேலாண்மைச் சக்திகளை எதிர்த்தல்
6. நாட்டுக்காகவும் தங்கள் மன்னர்களுக்காகவும் வீரப்போர் புரிந்து மடிதல்.
7. போர் வீரத்தில் அல்லது தந்திரத்தில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தல்.
8. வலிமை வாய்ந்த சக்தியை எதிர்ப்பதன் மூலம் இறப்பு முன்னரே உறுதியாக்கப்படுதல்
9. மக்களால் உயர்நிலையில் வைத்துப் போற்றப்படுதல்

ஆகிய கூறுகளை வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக் கண்டறியப் பயன்படுத்தலாம்.

5.0 இராமய்யன் அம்மானையில் தலைவனைக் கண்டறிவதில் ஏற்படும் இடர்ப்பாடுகள்

இக்கதைப்பாடலில் பேரரசனாகப் பெரும் படையை வைத்திருக்கும் வலிமை படைத்த திருமலை நாயக்கர் கதைத் தலைவனா? அல்லது எந்த நோக்கத்திற்காகத் திருமலை நாயக்கர் படைக்குத் தலைமை ஏற்றுப் படையை நடத்திச் சென்றானோ அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொடுத்த இராமய்யன் கதைத் தலைவனா? அல்லது மேலாண்மைச் சக்திக்குப் பணியாது எதிர்த்த மறவன் சேதுபதி கதைத் தலைவனா? அல்லது அனைத்துப் போர்களிலும் வெற்றியைத் தேடித்தந்து வீரப்போர் முடித்து மடிந்த சேதுபதியின் படைத் தளபதி வன்னியத் தேவன் கதைத்தலைவனா? என்ற சிக்கல் எழுகின்றது.

6.0. வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களது வாழ்க்கைப் படிவத்தைப் பொருத்திப் பார்த்தல்

6.1. வரலாற்று மாந்தர்கள்

இக்கதைப்பாடலில் வருகின்ற திருமலைநாயக்கர், சேதுபதி, இராமய்யன், வன்னியத்தேவன் ஆகிய நால்வருமே வரலாற்றில், உண்மையில் தோன்றி வாழ்ந்து மறைந்த வரலாற்று மாந்தர்கள் ஆவர்.

திருமலைநாயக்கர் மதுரையைக் கி.பி. 1623-க்கும் கி.பி. 1656-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தவன் ஆவான்.[8] கி.பி. 1635-இல் குட்டன் சேதுபதி இறந்ததையடுத்து இவரது மகன் சேதுபதி இரண்டாம் சடைக்கத்தேவர் மறவர் சீமைக்குத் தலைவனாக்கப்பட்டான். இவன் நாயக்கருக்குப்பணிய மறுக்கின்றான். இதனால் சேதுபதியைத் தண்டிக்க நாயக்கர் கி.பி. 1637-இல் இராமய்யனது தலைமையில் பெரும்படையை அனுப்பி வைக்கின்றான். இப்படையை எதிர்ப்பதற்குச் சேதுபதி தன் மைத்துனன் வன்னியத் தேவனைத் தன் படைக்குத் தளபதியாக்கி அனுப்பிவைக்கின்றான். இவ்விருபடைகளுக்கும் இடையே நடைபெற்ற வரலாற்றுச்சிறப்புமிக்க இப்போர்களையே இக்கதைப்பாடல் விளக்குகிறது.

6.2. உயர்குடிப்பிறப்பு

நால்வருமே உயர்குடிப்பிறப்பை உடையவர்களாக இருக்கின்றனர்.

சேதுபதியும் அவனது மைத்துனன் வன்னியத் தேவனும் 'தேவர்' குலத்தைச் சேர்ந்தவர்களாகவும் இராமய்யன் 'பிராமணர்' குலத்தைச் சேர்ந்தவனாகவும் திருமலைநாயக்கர். தெலுங்கு நாயக்கர் குலத்தைச் சேர்ந்தவனாகவும் காணப் படுகின்றனர்.

6.3. உயர்பதவி வகித்தல்

நால்வரும் உயர் பதவியில் இருக்கின்றனர். இராமய்யன் படைத்தளபதி மற்றும் அமைச்சன் ஆகிய இரு பதவிகளை வகிக்கின்றான். வன்னியத்தேவன் படைத்தளபதியாக இருக்கின்றான் திருமலைநாயக்கர், சேதுபதி ஆகியோர் மன்னர்களாக இருக்கின்றனர்.

6.4. சராசரி மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப் பெற்றிருத்தல்

திருமலைநாயக்கர் தவிர மற்ற மூவரும் மீவியல் ஆற்றல் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

வீரத்திற் சிறந்து விளங்குகின்ற வன்னியத்தேவனைப் போர் முனையில் வெற்றிக்கொள்ள முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட இராமய்யன் மந்திர, மை வேலையினால் வன்னியத் தேவனுக்கு அம்மை நோயை உண்டாக்கி அவனைக் கொல்ல முற்படுவதும் இதற்குப் பதிலடி கொடுக்கும் நிலையில் சேதுபதி தன் மீவியல் ஆற்றலைக்கொண்டு இராமய்யனுக்குப் பிளவை நோயை ஏற்படுத்துவதும்[9] சிறை வைக்கப்பட்ட சேதுபதியின் கால்விலங்கைத் தெய்வமே வந்து உடைத்தெறிந்து அருள் புரிவதும்[10] தன் சிறு படைக்குத் தலைமை வகித்த வன்னியத் தேவன் பெரும்படையுடன் வந்து இராமய்யன் படையை அனைத்து இடங்களிலும் வெற்றிகொண்டு புறமுதுகிட்டு ஓடச் செய்வதும், தன் மன்னனும், படைகளும் சிக்கலுக்குள்ளாகி யிருக்கும் நிலைகளில் வன்னியத்தேவன் வீரப்போர் புரிந்து மன்னனைக் காப்பாற்றுவதுமாகிய இம்மூவரது செயல்கள் அனைத்தும் சராசரி மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றலை இவர்கள் பெற்றிருக்கின்றனர் என்பதையே இக்கதைப்பாடல் காட்டுகின்றது.

6.5. தங்களைப் பணிய வைக்க நினைக்கும் மேலாண்மைச் சக்திகளை எதிர்த்தல்

திருமலை நாயக்க மன்னனும் அவனது தளபதியுமாகிய இராமய்யனும் மேலாண்மைச் சக்தியாகவும் அவர்களை எதிர்த்துப் போராடுகின்ற இராமநாதபுரம் சேதுபதியும் அவனது படைத் தலைவனான வன்னியத்தேவனும் மேலாண்மை எதிர்ப்பு சக்தியாகவும் விளக்குகின்றனர்.

6.6. நாட்டுக்காகவும் தங்கள் மன்னர்களுக்காகவும் வீரப்போர் புரிந்து மடிதல்

வன்னியத்தேவன் ஒருவனே நாட்டிற்காகவும் மன்னர்களுக் காகவும் போராடி அவல முடிவைப் பெறுகின்றான்.

6.7. போர் வீரத்தில் அல்லது தந்திரத்தில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தல்

இக்கதைப்பாடல் தலைவர்களாகக் கருதக்கூடிய அனைவரும் போர்களில் ஈடுபடுகின்றனர். எனினும் வன்னியத்தேவன் ஒருவனையே இக்கதைப்பாடல் வியந்து பெருமையோடு பாராட்டுகின்றது.

6.8. வலிமை வாய்ந்த சக்தியை எதிர்ப்பதன் மூலம் இறப்பு முன்னரே உறுதியாக்கப்படல்

இராமநாதபுரச் சிற்றரசன் சேதுபதியும் அவனது படைத் தளபதி வன்னியத்தேவனும் பேரரசனாகிய திருமலைநாயக் கனின் பெரும்படைக்குத் தலைமை ஏற்று வருகின்ற இராமய் யனை எதிர்க்கின்றனர். சேதுபதியின் எச்சரிக்கையை மீறியும் வைசூரிநோய் கண்ட நிலையில் போர் செய்து உயிருக்கு ஆபத்து என்று தெரிந்திருந்தும் போர்க்களம் செல்லும் வன்னியத் தேவன் சிறப்புப்பெறுகின்றான்.

6.9. மக்களால் உயர்நிலையில் வைத்துப் போற்றப்படுதல்

வன்னியத்தேவனின் வீரத்தையும், சேதுபதியின் ஆதிக்க எதிர்ப்பையும் பாராட்டிப் பாடுகின்ற கதைப்பாடல் அதே வேளையில் இராமய்யன் தலைமையில் நாயக்கரது பெரும் படை, பாம்பன்பாலம் கட்டியதிறன், சேதுபதியைச் சிறைப் பிடித்தது போன்ற செயல்களுக்காகக் கதைப்பாடல் இராமய் யனைப் புகழ்ந்து பாராட்டுகின்றது. இதேபோன்று திருமலை நாயக்கரின் வலிமையையும் பெருந்தன்மையையும் கதைப் பாடல் உயர்த்திப் பாராட்டுகிறது.

மேற்கூறப்பட்ட ஒன்பது கூறுகளில் வன்னியத்தேவன் ஒருவனுக்கே அனைத்துக் கூறுகளும் பொருந்துகின்றன. திருமலை நாயக்கர் மற்றும் இராமய்யனுக்கு ஐந்து, ஐந்து கூறுகளும் சேதுபதிக்கு ஆறு கூறுகளும் பொருந்துகின்றன. இம் மூவரும் ஏதேனும் ஒரு வகையில் சில கூறுகளைப் பெறாததால் இவர்கள் இக்கதைப்பாடலின் தலைமையை இழக்கின்றனர். அனைத்துக் கூறுகளும் பொருந்துகின்ற வன்னியத்தேவன் செல்வாக்குப் பெற்ற தலைவனாகக் கதைப்பாடலில் வருகின்றான்.

0.2 முடிவுரை

ஏனைய இலக்கியத் தலைவர்களை இனம் கண்டுகொள்வது போல் வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களைக் கண்டறிதலில் பெரும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இச்சிக்கலுக்கான தீர்வாக வரலாற்றுக் கதைப்பாடல் தலைவர்களுக்கான வாழ்க்கைப்படிவம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

இவ்வாழ்க்கைப் படிவத்தின் மூலம் இராமய்யன் அம்மானையில் வன்னியத்தேவனே கதைத்தலைவன் என உணர்த்தப்பட்டுள்ளது.

சான்றாதாரங்கள்

1. Alan Dundes, Essays in Folkloristics, Rajkaal Press, Delhi, 1978, pp. 232–234.
2. Brenda E. F. Beck, 'The Hero in a Contemporary Local Tamil epic' Journal of Indian Folkloristics, Vol. 1 No. 1, Mysore, January–June, 1978, p. 28.
3. Staust H. Blackburke, 'The Hero and class interests in Tamil Heroic Bellads', New Diamensions in Tamil Studies p. 72.
4. Saraswathi Venugopal, 'Hero – A study in traditions Legend' Paper Presented in the National Seminar on Common Motids in Indian Folklore C.J.J.L. Mysore & Manipur University, in Published, June 1985.
5. Brenda E. F. Beck, op. cit., p. 28.
6. N. Vanamamalai, 'The Model of Hero' Interpretation of Tamil folk creations, D. L. A. Trivandriam 1981, p. 182.
7. Ibid.,
8. அ. கணபதி, தமிழக வரலாறு, மல்லிகைப் பதிப்பகம், மதுரை 1980, ப. 39.
9. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (ப.ஆ), இராமய்யன் – அம்மானை, தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை. 1978, பக். 49–51.
10. மேலது, ப. 88.

குறும்பக்கூத்து

இரா. கருப்பையா
குறிஞ்சி கலைக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி

தமிழகத்தில் கவுண்டர் சாதியினரின் ஒரு பிரிவினரான குறும்பர் எனப்படுபவர்கள் குறும்பக் கவுண்டர் என அழைக்கப் படுகின்றனர். இவர்கள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பெரும் அளவிலும் பிற இடங்களில் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் கன்னடமும் தமிழும் பேசுவர். தங்கள் உறவினர்களிடம் கன்னட மொழியிலும் பிறரிடம் தமிழ் மொழியிலும் தொடர்பு மொழியாகப் பயன் படுத்திக் கொள்வர். ஆந்திர, கருநாடகப் பகுதிகளிலிருந்து தமிழகப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து வந்துள்ளனர். முதன்மைத் தொழில் ஆடு வளர்த்தலும் விவசாயம் செய்தலுமாகும். பெரும் பாலும் ஆடுகளை விரும்பி வளர்ப்பதைக் காணமுடிகிறது. இவர்களின் ஆட்டிற்குக் 'குறும்பாடு' என்று பெயர் வழங்கப் படுகிறது. ''குருப என்பது கன்னடத்தில் ஆட்டைக் குறிக்கும் 'குரி' என்னும் சொல்லிலிருந்து வந்துள்ளது'' என்று குருபர சரித்திரம் குறிப்பிடும்.[1]

குறும்பக் கவுண்டர்கள் தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற் கேற்ற இட அமைப்பினைக் கொண்டுள்ள பகுதிகளிலேயே குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டுள்ளனர். கூட்டுக்குடும்ப முறையில் குடியிருப்புக்கள் அமைந்திருக்கும். உறவினர்களைக் 'கரைகள்'[2] என்று பெயர் வைத்து அழைத்துக் கொள்கின்றனர். புத்தாம்பூர், நமுனை, செல்லுகுடி, பழியீஞ்சி, மேட்டுப்பட்டி, மாங்குடி, செந்துறை, பேராம்பூர், ஆண்டிப்பட்டி, நிலையப்பட்டி, மகாநாதபுரம், துவரங்குறிச்சி ஆகிய ஊர்களில் வாழ்ந்து

வருகின்றனர். தங்களது குலதெய்வமாக வீரலெட்சுமியை வழிபடுகின்றனர்.

வணங்கும் தெய்வங்கள்

வீரபத்திரர், வீரலெட்சுமி ஆகியவர்களைத் தலைமைக் கடவுளாகக் கொண்டுள்ளனர். பிற தெய்வங்களாக மகா லெட்சுமி, வெள்ளாளப்பன், ஊரக்கரை ஒட்டப்பன், கனகப்பன், வாழையூர் வள்ளாளப்பன், உலிபுரம் மல்லம்மாள், ஆண்டியப்பன் கொண்டயமல்லிச் சிற்றண்ணம், பாப்பாத்தியம்மாள், சென்னப்பன், முத்தையன், ஈசுவரன், முத்துக்கவசன், புருட நாயக்கன், ராவளஈசுவரன் முதலியத் தெய்வங்களைத் தங்கள் குலத்துக்குரிய கடவுள்களாக வழிபடுகின்றனர்.

கோயில்களில் சுதைசிற்பமோ அல்லது கற்சிற்பமோ இல்லை. செப்புச்சிலைகளை வைத்துள்ளனர். புத்தாம்பூரில் உள்ள வீர லெட்சுமி கோயிலில் இருபத்திமூன்று செப்புச் சிலைகள் வைத்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை வட்டத்தில் புத்தாம்பூரில் நூறு குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்கள் ஊர்ப் பொது தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்வ தோடன்றித் தங்களின் குலதெய்வமான வீரலெட்சுமிக்கு ஒவ்வொரு ஆண்டும் விழாவெடுப்பர். விழாவில் தங்கள் இனக் கூத்தாவ குறும்பக் கூத்தை நேர்த்தியோடு நிகழ்த்துவர்.

ஆடிப்பதினெட்டு, தைப்பூரம், சிவன்ராத்திரி ஆகிய மூன்று நாட்களில் சிறப்பான வழிபாடுகளைச் செய்கின்றனர். இருப் பினும் ஆடிப்பதினெட்டாம் நாளன்று மிகப் பெருமளவில் விழா வெடுக்கின்றனர் விழா எடுப்பதற்கு முன் பெரியவர்கள் கூடி முடிவெடுப்பர். முடிவில், விழாவில் கூத்து நிகழ்த்துதல் என்பது பற்றியும், அதன் தொடர்பான சில பொறுப்புக்களையும் குறிப்பிட்ட சிலரிடம் ஒப்படைத்து, அதன்படி குறிப்பிட்ட நாளில் தங்கள் பொதுவிடத்தில் பச்சைக் கூடாரமிடுவர். இக் கோயில் விழாவின்பொழுது கரகம் பாலித்து வைக்கின்றனர். கரகம் பாலித்தவுடன் தங்கள் தெய்வத்தை அழைப்பர். அப்பொழுது பூசாரிக்கு அருள் வந்தாடுவார். அவர்மேல் தங்கள் தெய்வம் வந்துவிட்டதாக நம்பிக்கைக் கொள்கின்றனர். பின்னர், பூசாரித் தலையில் கரகம் வைத்து ஊர்ப்பொது தெய்வமான சொக்கநாச்சியம்மன் கோயிலில் வைத்து வணங்கி வருவர். பிறகு, பச்சைக்கூடாரத்தில் வைத்து வணங்குவர்.

வழிபாட்டு முறை

கரகம் பாலித்து வழிபடுவது விழாவின் தொடக்கமாக இருப்பினும், வழிபாடு தங்கள் கோயிலிலேயே தொடங்குவதாகக் கொள்கின்றனர். கோயிலில் உள்ள தெய்வத்திருமேனிகளைத் தூய்மை செய்து அலங்கரிப்பர். கோயிலில் ஏற்றப்படும் விளக்கை நல்ல விளக்கு என்றழைக்கின்றனர். விளக்கேற்றி, சூடம், பத்தி ஏற்றி வைத்து வணங்குவர். பின்னரே, கோயிலில் வைக்கப்பட்டுள்ள நெய்ப்பந்தம், தோரண விளக்கு, தீவட்டி, குடை, ஆலவட்டம் ஆகியப் பொருட்களுடன் கூத்துக் கருவிகளை எடுத்து வைத்து வணங்குவர். இவ்வழிபாடுகள் முடிந்த பின்னரே தலைக்காய் உடைத்தல், கூத்து நிகழ்த்துதல். ஆட்டிற்கு வழிபாடு செய்தல் முதலிய வழிபாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

பந்தம் புறப்படுதல்

ஐந்தடி நீளமுள்ள இரும்புக் கம்பியில் இருபுறமும் துணிப் பந்தம் சுற்றி அதில் நல்லெண்ணெய் ஊற்றுவர். ஆலவட்டம் புறப்படும்பொழுது பந்தத்தைப் பற்றவைப்பர். இதனை நெய்ப் பந்தம் என்றழைக்கின்றனர் ஆலவட்டம் என்பது பட்டுத் துணியால் தைக்கப்பெற்று இரண்டு பக்கமும் பிடித்துச் செல்லுமளவிற்குக் குச்சியில் கட்டியிருப்பர். இத்துணியில் பிறை (பிறைச்சந்திரன்) வடிவத்தில் வெள்ளைத் துணியால் தைக்கப் பட்டிருக்கும், இரண்டு குச்சியிலும் கிளுகிளுப்பைக் குத்தப் பட்டிருக்கும். இதனை இருபுறமும் அடித்துக் கொண்டு முன் செல்வர்.

குறும்பக்கூத்து

குறும்பர்கள் தங்கள் விழாவின்பொழுது கூத்து நிகழ்த்திக் கொண்டாடுவர். கூத்தின்றி இவர்கள் வழிபாடு நிகழ்த்துவதில்லை. திருவிழாவானது துவங்குவதற்கு ஏழு நாட்கள் முன்பே ஆட்டத்தைப் பயிலுகின்றனர். கூத்தின் அடிமுறைகளைக் கற்றுத் தருபவர் வாத்தியார் என்று அழைக்கப்படுகிறார். இவர் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும் பாடல்களைப் பாடிக் காட்டக் கூடியவராகவும் இருப்பார். ஆசிரியராக இருப்பவர் பயிற்சி நாட்களில் புதியவர்களுக்கு ஆட்ட முறைகளைக் கற்றுத் தருவார். ஆட்டக் கலைஞர்கள் ஆடுகளத்தில் இறங்கியதும்

ஆசிரியரை வணங்குவர். ஒவ்வொரு நாளும் ஆட்டத்தைத் தொடங்கும் முன்பு கோயிலாட்டம் என்று ஆடிய பின்னரே மற்ற ஆட்டங்களை ஆடுவர். முடிக்கும்பொழுது சாமிக்கூத்து என்றொரு ஆட்டத்தினை ஆடி வணங்கி முடிப்பர்.

இக்கூத்துக் கலைஞர்கள் இருக்கும் ஊர்களில் விழாவின் பொழுது தாங்களே முன்னின்று ஆடுவர் ஆனால் இக்கலைஞர்கள் இல்லாத ஊர்களில் விழா நடைபெறும்பொழுது அழைப்பின் பெயரில் இக்கூத்துக் கலைஞர்கள் சென்று ஆடுவர். ஆடும் கலைஞர்கள் ஒரே இனத்தவராயினும் முறையாகப் பாக்குவைத்து அழைப்பர். ஆட்ட வாத்தியார் பாக்கினைப் பெற்றுக் கொண்டு ஆட்டக் கருவிகளோடு சென்று ஆடி வருவர். இக்கூத்து மற்ற தெய்வங்களுக்கு விழா நடைபெறும்பொழுது நிகழ்த்தப் படுவதில்லை. வெளியூர் சென்று நிகழ்த்தும் பொழுதும் வருவாயாகப் பணம் முதலானப் பொருட்களைப் பெறுவதில்லை. வழிபாடுகளில் மட்டுமே இக்கூத்து நிகழ்த்தப் பெறுகிறது.

கலைஞர்கள்

இக்கூத்தில் இடம்பெறும் கலைஞர்கள் குறும்பர் சாதியினராக இருக்க வேண்டும் வயது வேறுபாடு கிடையாது. வீட்டிற்கு ஒருவர் என்று விதி முறையோ அல்லது வேறு எந்தக் கட்டுப்பாடோ இல்லை. இருப்பினும் தெய்வ நம்பிக்கையின்பாற் இளைஞர்கள் இக்கூத்தில் பங்கு கொள்கின்றனர். ஒன்பதிலிருந்து பன்னிருவர் வரையில் ஒரு குழுவாக நடனமிடுவர்.

ஒப்பனை

கலைஞர்கள் நீரில் தலை முழுகி வந்து கோயில் வாசலில் ஒப்பனை செய்வர் பூசாரி இறைவனை வணங்கி கலைஞர் களுக்குத் திருநீற்றினைப் பூசிவிடுவர். அதன் பின்னர் தத்தம் ஆடை அணிகலன்களை அணிந்துகொள்வர். சுருக்கம் வைத்து தைக்கப்பட்ட சிகப்பு வண்ணப் பாவாடையை இடுப்பில் கட்டிக் கொள்வர். பாவாடையின் மேல் மணிச் சதங்கையைக் கட்டிக் கொள்வர். இதனை வீரமணி என்கின்றனர். நீலவண்ணத்தில் 3 செ. மீ. அகலமும் 30 செ. மீ. நீளத்தில் அகலத்துணி இடுப்பி லிருந்து தொங்கவிட்டிருப்பர். மேலாடையாக வெள்ளைச் சட்டை அணிந்து கொள்வர். சிகப்புத் துணியுடன் இணைக்கப் பெற்றுள்ள கவரிமான் முடியைத் தலையில் கட்டியிருப்பர். காலில்

காற்சிலம்பு அணிந்திருப்பர். இதில் ஒருவர் கோமாளியாக வேடம் புனைந்திருப்பார். அவர் பல வண்ணங்களில் தைக்கப் பெற்ற பாவாடை அணிந்துகொள்வார். தலையில் குல்லாவும், கையில் தடியையும் இடையில் மணியையும் அணிந்துகொள்வார். இவ்வகையில் இக்கலைஞர்களின் ஒப்பனைகள் முடிந்ததும் தத்தம் கருவிகளை எடுத்துக் கொள்வார்கள்.

இசைக்கருவிகள்

இசைக்கருவிகளுக்கு வழிபாடு நிகழ்த்தப்படும். சாம்பிராணி புகைத்து சூடம், வெற்றிலை பாக்கு, தேங்காய் பழம் வைத்து வணங்குவர். குறிப்பாக இதனைக் கலைஞர்கள் முன்னின்று செய்வர். இசைக்கருவிகளாகச் சேர்வை சால்ரா, புல்லாங்குழல், கிளுகிளுப்பை ஆகிய இசைக்கருவிகளை இக்கூத்தில் பயன்படுத்து கின்றனர்.

“சேர்வை எனும் கருவியை ஒற்றைப்பறை என்கின்றனர். ஆனால், இச்சேர்வை மாட்டுத் தோலினால் செய்யாமல் ஆட்டுத் தோலினால் செய்யப்பட்டதாகும். இப்பறையைத் தங்கள் கோயில் விழாக்களில் பலியிடப்பெறும் ஆட்டின் தோல்களைப் பதப்படுத்தித் தாங்களே இப்பறையைச் செய்து கொள் கின்றோம்”[7] என்கின்றார். “மாட்டுத் தோலினால் தயாரிக்கப் பெற்ற சேர்வையை எங்கள் கோயிலில் பயன்படுத்தமாட்டோம். அப்படிப் பயன்படுத்தினால் எங்கள் தெய்வம் எங்களைக் கெடுத்துவிடும். எங்களில் பறை செய்யத் தெரிந்தவர்களைக் கொண்டு நாங்களே செய்து கொள்கின்றோம். ஆனால், தொழிலாகச் செய்வதில்லை. பறை உடைந்துவிட்டாலோ, அல்லது இசைக்கும்பொழுது வெளிப்படும் ஒலி குறைவாக இருந்தாலோ அதை உடனே அகற்றிவிட்டு அவ்வருட விழா விற்குள் மற்றொரு பறையைச் செய்துவிடுவோம். ஆட்டுத் தோலைப் பதப்படுத்தி, செம்புரான் கட்டையை உலர்த்தி வளைத்து பொருத்தி ஆட்டுத்தோலை இணைத்துப் பறையைத் தயார் செய்துவிடுவோம். எங்களால் தயாரிக்கப்பட்ட இப் பறையைக் குறும்பப் பறை என்று பெயரிட்டு அழைத்துக் கொள் கின்றோம்”[8] என்று குறிப்பிடுகிறார். இதனைச் சேர்வை என்றும் சேர்வையை இசைத்துக் கொண்டு ஆடுவதால் சேர்வை யாட்டம் என்றும் அழைப்பர். குறும்பர்களால் ஆடப்படுவதால்

குறும்பக்கூத்து என்றும், குறும்பராட்டம், குறும்பாட்டம் என்றும் இவ்வாட்டத்தைக் குறிக்கின்றனர்.

கோயிலாட்டம்

ஒப்பனைகள் செய்து கொண்ட ஆட்டக் கலைஞர்கள் ஆடுவதற்குத் தயாராக நிற்பர். ஊர்த்தலைவர் முன்னிலையில் வாத்தியார் இறைவனை வணங்கி நிற்பர். இறைவனை வணங்கியதும் ஆடத் தொடங்குவர். முதலாட்டத்தைக் கோயிலாட்டம் என்றழைக்கின்றனர். கோயிலுக்கு முன் சிறிது நேரம் ஆடுவர். அங்கிருந்து ஆலவட்டம் முன் செல்ல கரகம் தூக்கிக் கொண்டு பச்சைக்கூடாரம் செல்வர். கூத்துக் கலைஞர்கள் பின் தொடர்ந்து ஆடிச்செல்வர்.

பச்சைக்கூடாரத்தில் வழிபடுதல்

பச்சைக்கூடாரத்தின் அருகில் தங்களின் ஆடுகளை நிறுத்தி வைத்திருப்பர். அங்கு அனைத்து ஆடுகளுக்கும் காய்ச்சிய பாலைப் புகட்டுவர். பொங்கல் வைத்து வழிபடுவர். "எங்கள் தெய்வத்திற்கு வழிபாடு நடக்கும்பொழுது ஒரே குடும்பமாகவே இருப்பதாகக் கொள்வோம், அதன் காரணமாக நூறு குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரே அடுப்பில் பொங்கல் வைத்து பால் காய்ச்சி வழிபடுவோம்"[9] என்கிறார். காய்ச்சியப் பாலைத் தங்கள் கால்நடைகளுக்கு ஊற்றுவதனால் பீடை கழியும் என்று நம்புகின்றனர். தங்கள் கால்நடைகள் நோய் இன்றி இருந்திடவும், குறைந்துவிடாமல் மேலும் மேலும் பெருகிடவும் இவ்வழிபாட்டைச் செய்கின்றனர். கால்நடைகளை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இவர்கள் தங்கள் ஆட்டைப் பலியிட்டும் வழிபடுகின்றனர்.

சினையாடு பலியிடுதல்

பூசாரி ஆவேசக்குரல் எழுப்பி ஆட்டைச் சுற்றி வருவார். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டில் குறிப்பாக இவருடைய ஆடு என்றில்லாமல் ஒரு சினையாட்டைப் பிடித்திருப்பார். அப்பொழுது பூசாரி கையில் ஈட்டியைக் கொடுப்பார். ஈட்டியைப் பெற்றுக்கொண்டு பிடித்திருக்கின்ற ஆட்டை நோக்கிச் செல்வார். ஆட்டைப் பிடித்திருப்பவர் தயார் நிலையில் நிற்பார். பூசாரி சினையாட்டு வயிற்றில் ஈட்டியால் குத்தி குடலோடு குட்டி தொங்குமளவிற்குக் குத்துவார் குத்திய ஈட்டிலிருந்து குட்டியைத்

தொங்கவிட்டு ஆடுகளைச் சுற்றி மூன்றுமுறை இழுத்து வருவார். இதனை ஒரு ஆட்டை பலியிட்டு மற்ற ஆடுகளைக் காப்பாற்றுவதாகக் கொள்ள முடிகிறது. "மேற்கு ஆப்பிரிக்காவில் நிலங்களில் விதையிடுவதற்கு முன்பாக ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் மண்வெட்டிகளாலும் களைக்கொத்திகளாலும் அடித்துக் கொன்று, அவர்களின் பிணங்களைப் புதிதாக உழுத நிலத்தின் நடுவில் புதைப்பர். இதனால் அந்த நிலம் உயிர்ப்புச் சக்தி மிக்குற்று அதிக விளைச்சலை நல்கும் என உறுதியாக நம்பினர்"[10] என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடும். இதனை மேற்படி சினையாட்டைப் பலியிட்டு மற்ற ஆடுகளின் வளர்ச்சியினை பெருக்குவதற்குச் செய்யப்படும் பலியாடாகக் கொள்ள முடிகிறது.

தீர்த்தமடித்தல்

பலியிட்ட ஆட்டை ஆடுகளைச் சுற்றி இழுத்ததும் புனித நீராகக் கருதி, கொண்டு வரப்பட்டுள்ள தண்ணீரை வேப்பந் தழையால் நனைத்து ஆட்டின் மேல் தெளிப்பர். இதனைத் தீர்த்தமடித்தல் என்கின்றனர். சித்திரை, வைகாசி, மாதங்களில் வெப்பு நோய் கண்டு ஆடுகள் பல உயிர்சேதம் அடைந்துவிடும். அதனைப் போக்கவே வேப்பிலை நோய் தீர்க்கும் மருந்தாகவும், தண்ணீர் குளிர்ச்சியை ஏற்படுத்துமென்றும் கொண்டு இதனை மந்திரச் சடங்காக நிகழ்த்துவதாகக் கொள்ள முடிகிறது. தெய்வ வழிபாட்டில் இடம் பெற்ற புனித நீரை ஆட்டின் மேல் தெளித்தால் ஆடுகள் நோயின்றி வாழும் என்று நம்புகின்றனர்.

குறும்பர்கள் தங்கள் ஆடுகளைக் 'கிடை', என்று சொல்லப்படும் ஆட்டுப்பட்டியில் அடைப்பர். இது கோடைக்கால இரவுகளில் தங்கள் வயல்களில் ஆடுகளைக் கிடையிடுவதால் ஆட்டின் எச்சங்கள் உரமாகப் பயன்படும். இப்படி ஆட்டைப் பட்டியிலிட்டு வைப்பதைக் கிடை போடுதல் என்பர். இவ்வாறு கிடை போடுங்காலங்களில் இரவில் நரி முதலிய விலங்குகள் ஆட்டுக் குட்டிகளை உணவிற்காகக் கொன்றுவிடும். தங்கள் ஆடுகளைத் தொல்லை கொடுக்கும் விலங்குகளை அருகில் விடாமல் இருப்பதற்கு இரவு நேரங்களில் கூச்சலிடுவர். இதனை வழிபாட்டில் நிகழ்த்துகின்றனர் என்று கருத முடிகிறது. வழிபாட்டில் சினையாட்டைப் பலியிடுவதும் பலியிட்ட ஆட்டை ஆடுகளைச் சுற்றி இழுத்து வருவதும் மந்திரச் சடங்காகும். "இதனைப்

போலச் செய்தல் அல்லது ஒத்த மந்திரம் என்பர்''[11] நரியிடமிருந்து பல ஆட்டுக் குட்டிகளையும், ஆடுகளையும் காப்பாற்றவே சினையாட்டைப் பலியிட்டு குட்டி தொங்க இழுத்து வருவதை நரியின் செயலுக்கு இங்கு ஒப்பிட்டுக் காண முடிகிறது. குறும்பர்கள் இதனைத் தெய்வக் காணிக்கையாகக் கொள்கின்றனர். "சினையாட்டைப் பலியிடுவது தங்கள் கால்நடைச் செல்வங்களுக்கு நோய்கள் வராமலும் கொடிய மிருகங்களிடமிருந்து காப்பாற்றவுமே சினையாட்டைப் பலியிடுகின்றோம்''[12] என்று குறிப்பிடுகிறார். ''தனி மனிதர்களின் துன்பங்களைப் போக்கிக் கொள்வதற்காக மட்டுமின்றி ஊரவர் அனைவரது நன்மைக்காகவும் தீமையை மாற்றியமைக்கும் சடங்கு நிகழ்வதுண்டு. இதில் பயன்படுத்தப்படும் பொருளைப் பொதுப்பலியாடு என்று பிரேசர் (1976:170) குறிப்பிடுகிறார்''

கூத்தாடுதல்

குறும்பக்கூத்தை ஒன்பது அடவுகளாகக் கொண்டு ஆடுவர். பச்சைக் கூடாரத்தில் வழிபாடுகள் செய்து கொண்டிருக்கும் பொழுது ஆட்டக்கலைஞர்கள் ஒரு பக்கம் ஆடிக்கொண்டிருப்பர் பன்னிரெண்டு நபர்களும் நால்வராகப் பிரிந்து நிற்பர். நின்றாடுதல், சான்றாடுதல், வட்டமாக ஆடுதல், எதிரணியாக நின்றாடுதல் முதலிய அடவுகளில் இவர்களின் ஆட்டம் நிகழ்த்தப்பெறும். தரையில் தலை வைத்து ஒருமுகமாகப் படுத்து ஆடுதல், ஆட்டின் நடுவில் நின்று ஆட்டை ஓடவிட்டு ஆடுதல், முதலிய நிலைகளில் ஆட்டம் நீண்டு செல்லும். இக்குழுவின் வாத்தியார் ஆட்டத்தின் அடவுகளைக் கன்னட மொழியில் கூறுவார். ஆட்டை நரி விரட்டுவது போன்று ஆட்டின் நடுவே ஓடி ஓடி ஆடுவர். ஆடு ஓடுவது போலவும், மருட்சியாகப் பார்ப்பது போலவும் ஆடுவது ஆட்டக் கலைஞர்களின் தனித் திறமையைப் புலப்படுத்துகிறது. "இச்சடங்கு அல்லது நடனம் போலச் செய்யும் ஒத்த மந்திரமாகவே விளங்கின என்றும் இன்றைய திராவிடப் பழங்குடியினரான குறும்பரிடையே நரிக்கூத்து நடைபெறும். நரிக்கூத்து என்பது எல்லோரும் சேர்ந்து வலைகளையும், ஈட்டிகளையும் எடுத்துக் கொண்டு காட்டுக்குள் போய் நரியைப் பிடிப்பதுதான். நரியைப் பிடிக்கக் கூச்சல் போட்டு வலைவீசிக் கூத்தாடுவர்'' என்று கா. சுப்பிரமணியம் குறிப்பிடுவார். குறும்பர்கள் தங்கள் கால்நடைகளைக் பேணுவதி

லிருந்து மேற்கூறிய செய்தியோடு ஒப்புநோக்க முடியும். இருப்பினும் குறும்பர்கள் தொடக்க காலத்தில் குறிஞ்சி நிலப் பகுதிகளிலே வாழ்ந்தவராகையால் தங்களது வழிபாட்டையும் இன்றளவும் காடு சார்ந்த பகுதிகளிலே நிகழ்த்துவதாகக் கொள்ளலாம். தற்காலங்களில் மின்விளக்கு வசதிகள் இருப்பினும் தங்களது நிகழ்ச்சிகளைத் தீப்பந்த ஒளியைக் கொண்டு பயன் படுத்துவது பழங்கால மரபின் தொடர்ச்சியாகக் கருதலாம். இங்குத் தற்காலிகப் பச்சைக் கூடாரமாக இருப்பது அவர்களின் தொன்மையான வாழ்விடத்தை நினைவூட்டுவதாகக் கொள்ளலாம்.

கலைக்கூறுகள்

குறும்பர்கள் என்ற இனத்தவர்கள் மட்டும் ஆடும் கூத்தாகையால் குறும்பக்கூத்து என்று பெயர் தாங்கியுள்ளது. இக்கூத்து வழிபாட்டில் நிகழ்த்தப்பட்டாலும் இயல்பாகவே கலைஞர்கள், ஒப்பனை, இசைக்கருவி, ஆடுகளம் முதலியனக் கொண்டு தனிப்பெருங்கலையாகத் திகழ்கிறது. சடங்கு சார்ந்த இக்கலையில் வண்ணத்துணிகளை ஆடைகளாகக் கொண்டு உள்ளனர். இவ்வழிபாட்டுக்கூத்தில் பல சடங்குகள் இரண்டறக் கலந்துள்ளன. இச்சடங்குகளும் கூத்தில் இடம்பெற்றுள்ள ஆட்டவகைகளும், குறும்பர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பறை, கிளுகிளுப்பை, புல்லாங்குழல், ஜால்ரா ஆகிய இசைக் கருவிகளைக் கொண்டு தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் வீரபத்திரர், வீரலெட்சுமி முதலான கடவுளர்களைப் பாடியாடும் தன்மையினை இக்கூத்து பெற்றுள்ளது. எனவே, குறும்பக் கூத்து வழிபாட்டுக் கூத்துக்க்ளில் ஒன்றாகத் திகழ்கின்றது எனலாம்.

காவடிச் சிந்துப் பாரதியார் ஈடுபாடும்

இரா. கலைவாணி
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 5

முன்னுரை

'நாட்டுப்புற நாயகன்' என்று போற்றுமளவிற்கு நாட்டுப்புறப் பாடல் வடிவங்களிலும் இசையமைதிகளிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் கொண்டவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அத்தகைய ஈடுபாட்டின் காரணமாகப் பாரதியார் பல பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களாக இயற்றியுள்ளார். அவற்றில் பாரதியார் இயற்றியுள்ள காவடிச்சிந்துப் பாடல்களின் இசைப்பற்றியும் பாரதியாரின் ஈடுபாடு குறித்தும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

காவடிச் சிந்து

நாட்டுப்புற இசைப்பாடல்களாகிய அம்மானை, ஊசல் குறவஞ்சி, கும்மி, தெம்மாங்கு, பள்ளு போன்ற பல சிற்றிலக்கியங்களில் சிந்துப்பாடல்களும் ஒன்றாகும். 'சிந்து' என்னும் சொல்லின் இலக்கணத்தைப் பின்பற்றிச் சிந்துப் பாடல்கள் முதலில் பாடப்பட்டாலும் காலப்போக்கில் பாடு பொருளைக் கொண்டு அவை பலப் பெயர்களைப் பெற்றன. அவ்வாறு காவடி எடுக்கும்போது பாடப்பட்டவையே காவடிச் சிந்து. 'காவடிச்சிந்து' எனும் புதியதொரு இசை வடிவைத் தோற்றுவித்தவர் அண்ணாமலை ரெட்டியாராவார் (1984:76) ஊற்றுமலை ஜமீன்தார் இருதயாலய மருதப்ப தேவர் கழுகு மலைக் கந்தனுக்குக் காவடி எடுத்தபோது அவர் அவைப் புலவராகிய அண்ணாமலை ரெட்டியார் வழியில் களைப்புத்

தோன்றாமல் இருப்பதற்காகப் பல புதிய வகைச் சிந்துகளைப் பாடினார். அச்சிந்துகள் பிறவகைச் சிந்துகளிலிருந்து மாறு பட்டு முடுகு அடிகளைக் கொண்ட புதுவகைச் சிந்தாக இருந்த தால் பொதுமக்களிடத்தே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துகளைப் பின்பற்றி பல இயலிசைக் கலைஞர்கள் காவடிச் சிந்துகளை இயற்றி அவ்வடி விற்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர்.

காவடிச்சிந்துகளில் பாரதியாரின் ஈடுபாடு

காவடிச்சிந்துகள் பிரபலமான அக்காலக்கட்டத்தில் ஒருவரின் திறமையைச் சோதிக்க "அண்ணாமலை ரெட்டியாரைப் போல் காவடிச்சிந்து பாட முடியுமா" என்று கேட்பது வழக்கம். ஒரு முறை எட்டயபுர அவையில் இருந்த புலவர்கள் பாரதியாரிடம் "காவடிச்சிந்து பாட முடியுமா?" என்று வினவ மறுநாள் அவையில் பாரதியார் காவடிச்சிந்தியற்றிப் பாடினார் என்னும் சுவையான செய்தியைப் பாரதியாரின் வாழ்க்கைப் பின்னணி யினின்று அறிய முடிகின்றது. (1986:16). பாரதியார் அவர் திருமணத்தின் போது மனைவி செல்லம்மாவை நோக்கி "தேடக் கிடையாத சொர்ணமே" என்று பாடி அனைவரையும் மகிழ்ச்சி யில் ஆழ்த்தியுள்ளார். பாரதியார் பல காவடிச்சிந்துப் பாடல் களைப் பாடியிருப்பினும் அவை ஆசுகவியாகப் பாடப்பட்டதால் ஒரு சில பாடல்களே இன்று கிடைத்துள்ளன. காவடிச்சிந்துப் பாடல்களின் மேல் இளம் வயதிலேயே பாரதியாருக்கு ஏற்பட்ட ஈடுபாடு அவரைப் பல பாடல்களை இயற்றத் தூண்டியுள்ளது.

பாரதியார் இயற்றியுள்ள காவடிச் சிந்துகள்

பாரதியாரின் இரு பாடல்களில் "காவடிச்சிந்து" எனும் குறிப்பு காணப்படுகின்றது.

'எங்கள் தாய்' எனும் தலைப்பிலமைந்துள்ள "தொன்று நிகழ்ந்த தனைத்தும்" எனும் பாடல் அண்ணாமலை ரெட்டியாரின் 'ஆறுமுகவடி வேலவனே' எனும் மெட்டில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் பாரதத் தாயின் பெருமையைப் பாடியுள்ளார் பாரதியார். பாடலின் மூலஇசை பைரவி இராகத்தில் ஆதி (திச்ர நடை) தாளத்தில் அமைந்துள்ளது. பாடலின் இசையமைதி வருமாறு.

பாச்சா	ச்சாச்சா	தாச்சா	ரி²மகரி²ச்சா ।
தொன்று	நிகழ்ந்த	தனைத்தும்	உணர்ந்திடும் ।
ச்தச்த நப	பாத²ாநீ ।	த²ாமாபா	; பாபா ॥
சூழ்கலை	வாணர்க ।	ளும் . .	. . இவள் ॥
பாரிச்சா	ரிநீதா ।	மாமதபம	காரிரீ ।
என்றுபி	றந்தவள்	என்றுண	ராத ।
கரிகரி	ரிமாகரி ।	சா ; ;	; ; ; ॥
இயல்பின	ளாம்எங்கள் ।	தாய்.	. . . . ॥

'காலமாம் வனத்திலண்ட' எனத் தொடங்கும் பாடலில் 'மகா காளியின்' புகழைப் பாடியுள்ளார் பாரதியார். 'காவடிச் சிந்து' எனும் குறிப்புடன் இராகம் ஆனந்த பைரவி, தாளம் ஆதி ஆகியவையும் குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் அண்ணாமலை ரெட்டியாரின் 'பாளைவாய் கமுகில் வந்தூர்' எனும் காவடிச் சிந்தின் சந்தத்தில் அமைந்துள்ளது. இசையமைதி வருமாறு.

,ச்ச் ச்ாநித	பாதா மாபா ।	, ச்ாச் ச்ாநித ।	பாதா மாபா ॥
கால மாம்வ	னத்தி லண்ட।	, கோல மாமர ।	த்தின் மீது ॥
மாபா த¹ாபா	நிபச்நி ச்ாநீ ।	பா ; பா ; ।	; ; ; ; ॥
காளி சக்தி	என்ற பெயர் ।	கொண்டு . ।	. . . . . ॥
மா ; பாபா	தாமா நிபச்நி ।	பா ; பா ; ।	; ; ; மம ॥
ரீங் கார	மிட்டுலவுமொரு ।	வண்டு	. . . தழல் ॥
,பதநி தாநீ	, பதநி தாநீ ।	, ச்ாரி ச்ாச்ா ।	, ச்ாச் நிதபா ॥
காலும் விழி	. நீல வண்ண।	. மூல அத்து ।	. வாக்கனெனும் ॥
மாபா தாபா	நிபச்நி ச்ாநீ ।	பா ; பா ; ।	; ; ; மம ॥
கால்க ளாறு	டைய தெனக் ।	கண் டு ।	. . . . மறை ॥
மா ; பாபா	தாமா நிபச்நி ।	பா ; பா; ।	மா; ; ; ॥
கா ணு முனி	வோரு ரைத்தார் பண்டு. ।		. . . . ॥

எட்டயபுர அரசவைப் புலவர்கள் செருக்கை அடக்கப் பாரதியார் பாடிய காவடிச்சிந்து கவிதைத் தொகுப்புகளில் இடம் பெறவில்லை. "பச்சை மயில் தீரன்" எனத் தொடங்கு கின்ற அப்பாடல் அண்ணாமலை ரெட்டியாரின் 'என்னடி நான் பெற்ற மங்கை' எனும் பாடலை ஒத்துள்ளது. மூல இசை பைரவி

இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது. இசையமைதி வருமாறு.

ச்ாச்நீா	சாநீத^{2}ா	பாதா ; ; பாநீ	பாதா ; ; பாநீ |	
பச்சைத்தி	ரு மயில்	வீரன்	அலங் காரன்	.கௌ
			; பாதா ; பாபா ||	
			மாரன் .ஒளிர் ||	

மாமாதா	நித பாமா	பாபா;	;மாமா |
பன்னிரு	திண் புயப்	பாரன்	. அடி |
பத^{2}நீத^{2}நி	பத^{2}நீத^{2}நி |	தநிச்ாச்ச்	நிச்நிதபம ||
பணிசுப்பிர	மணியர்க்கருள் |	அடிமிக்குயர்	தமிழைத்திரு ||
ச்ாச்ாநீ	நிசநீதா	பாதா ;	; மாமா |
பக்தர்க்	கௌியசிங்	காரன்	. எழில் |
பதாநீத	தநீதபா |	மாமா ;	; ; ; ||
பண்ணு	மணாசலத் |	தூரன் .	. . . . . ||

'வில்லினை யொத்த புருவம்' எனும் பாடலில் காவடிச்சிந்து எனக் குறிப்பிடப்பெறவில்லை. பாரதி குடும்பவழி வந்தவர்களால் இப்பாடல் 'காவடிச்சிந்து தான் என உறுதி செய்யப் பட்டுள்ளது. இப்பாடலுக்குப் புன்னாகவராளி, ஆதி (நிச்ரநடை) என இராகதாளம் குறிப்பிடப்பட்டுள்ளது. பாடலின் இசையமைதி வருமாறு.

சரிகாரீ	காக , க	காமாகா	ரீசாசா |
வில்லினை	யொத்தபு	ருவம்வ	ளைத்தனை |
ச்ார்ரிச்	நீ ; ; |	; ; ;	; காமா |
வேல	வா . . .	. . . . .	அங்கோர் ||
பா,தபா	பசபா,ப	பா,தபா	மமகமகா |
வெற்புநொ	றுங்கிப்பொ	டிப்பொடி	யான . து
மபதபமாபம	காரீரி |	சா ; ;	; ; ; ||
வே . ல . . .	வா . . . |	. . . . .	. . . . . ||

இப்பாடலுக்கான மூல இசை வேறொன்றுள்ளது. முதல் மூன்றடிகள் மேற்குறிப்பிட்ட இசையமைதியிலும் இறுதி அடி ஆனந்தபைரவி இராகத்திலும் அமைந்துள்ளது. இசையமைதி வருமாறு:

பதச்சா	தாபாபா	பதபாமா	கரிரிகாச |
பல்லினைக்	காட்டிவெண்	முத்தைப்	பழித் திடும்|
சரிகமபத	பமகாரி |	; ; ;	; சா சா ||
வள்ளியை	. . . . . |	. . . .	. . ஒரு ||
காகாகா	ரிமகாரி |	காகாகா	காரிகரிச |
பார்ப்பன	கோலம்த|	ரித்துக்க	ரம்தொட்ட|
சரிகமபத	பமகாரி |	சா ; ;	; ; ; ||
வேல வா	. . . . |	. . . . . .	. . . . . . ||

'தேடியுனைச் சரணடைந்தேன்' எனும் பாடல் முத்து மாரியம்மன் பாடல் என்றாலும் அதனையும் காவடிச்சிந்து எனக் கொண்டு சில பிரபல இசைக்கலைஞர்கள் பாடி வருகின்றனர். ஆனால் இப்பாடல் காவடிச்சிந்து அல்ல.

பாரதியாரின் ஈடுபாட்டிற்கான காரணம்

அண்ணாமலை ரெட்டியாருடைய காவடிச்சிந்துகள் அவருடைய காலத்திலேயே தொகுக்கப்பட்டு ஊற்றுமலை ஜமீன்தாரால் அச்சு நூல்களாக வெளிவந்தன. எனவே கடினமான சந்தம் முடுகுநடை, பழக்கத்திலல்லாத தூயதமிழ்ச் சொற்கள் ஆகியவற்றைக் கொண்டு படைக்கப்பட்டிருந்தாலும் பண்டிதர்களிடமட்டுமின்றிப் பாமர மக்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. மாடுமேய்க்கும் சிறுவன்கூட பொருள் புரியாமலேயே "வண்ணத் தாமரையைக் கண்டு வாயில் மதுர இராகம் பாடிக் கொண்டு" என்று பாடிக் கொண்டிருந்ததை அண்ணாமலை ரெட்டியார் வாழ்க்கைப் பின்னணியினின்று அறிய முடிகின்றது (1984:120). பாரதியார் காலத்திலும் அதற்கு முன்பும் காவடிச்சிந்துகள் இசை அரங்குகள்தோறும் பாடப்பட்டு வந்துள்ளன என்பதைப் பாரதியார் காலத் தமிழக இசைச்சூழல் மூலம் அறிய முடிகின்றது. நாட்டிய அரங்குகள், நாடக அரங்குகள் ஆகியவற்றிலும் காவடிச்சிந்துகள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன.

காவடிச் சிந்துகளின் அமைப்பும் இசையமைதியும் பாரதியாரைக் கவர்ந்தன என்றாலும் மக்களுக்கு அவற்றின் மீதான முழுமையான ஈடுபாடே பாரதியார் பலப் பாடல்களை இயற்றத் தூண்டியுள்ளது. காரணம் "பாடுற மாட்டைப் பாடிக்

கறக்கனும் ஆடுற மாட்டை ஆடிக்கறக்கனும்' எனும் பாமர மக்களிடையே நிலவிவரும் பழமொழிக்கேற்ப அன்னியரின் ஆளுமையை இந்திய மண்ணிலிருந்து அகற்ற மக்கள் மனதிலே சுதந்திர உணர்வை ஏற்படுத்த வேண்டும் எனும் அவரது தீராத வேட்கையினால் மக்கள் விரும்பிய, சுவைத்த, அவர்கள் மனதிலே பதிந்து நிலைத்த இசை வடிவிலும் இசையமைதியிலும் பாடல் இயற்றியுள்ளார் பாரதியார். எனவே அவரின் விருப்பத்தோடு நாட்டுமக்களுக்குத் தன் கருத்துச் சென்றடைய வேண்டும் என்னும் சிந்தனையினாலும் காவடிச் சிந்துப் பாடல்களிலே மிகுந்த ஈடுபாடு கொண்டு இயற்றியுள்ளார் எனும் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

முடிவுரை

இசை மிகச் சிறந்த ஓர் ஊடகம். வழிவழியாக இசை வடிவங்களைப் பயன்படுத்தி எக்கருத்தையும் மக்களிடம் விரைவாகப் பரப்பி வந்துள்ளனர் முன்னோர்கள். நாட்டு மக்கள் நலனில் உண்மையான அக்கரைக் கொண்டப் பாரதியார் அன்னியரின் அடிமை விலங்குகளிலிருந்து மக்களை விடுவிக்க அவர்கள் மனதிலே சுதந்திரக் கருத்துகளை ஆழப் பதிய வைக்க வேண்டும் என விரும்பினார். அதற்கென இசையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி நாட்டில் நன்கு அறிமுகமாயிருந்த இசை வடிவங்களிலும் இசையமைதிகளிலும் பாடலியற்றி யுள்ளார்.

பாரதியார் இயற்றியுள்ள பாடல்கள் காளி முருகன், தாய் ஆகியப் பெயர்களில் இருந்தாலும் நாட்டு ஒற்றுமை என்னும் உட்பொருளே கருவாக அமைந்துள்ளது. வழிவழியாகப் பாடப்பட்டு வரும் இராக தாளங்களிலே பாரதியாரின் காவடிச் சிந்துகளும் முறையாகப் பாடப்பட்டுள்ளன என்பது இவ்வாய் வின் மூலம் தெரிய வருகின்றது.

பாரதியாருக்கு இயற்கையிலேயே காவடிச் சிந்துப் பாடல் களின் மேல் ஏற்பட்ட ஈடுபாட்டோடு மக்களுக்கு அப்பாடல்களில் இருந்த ஈடுபாடும் அவரைப் பல பாடல்கள் இயற்ற வழி வகுத்துள்ளது எனும் முடிவும் இக்கட்டுரையின் மூலம் பெறப் பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் நாட்டுப்புறப் பண்பாடு

முனைவர் பெ. சுப்பிரமணியன்
தமிழ்த்துறை – உயர் ஆய்வுமையம்
அருள்மிகு பழனியாண்டவர் கலை & பண்பாட்டுக் கல்லூரி
பழனி

நாட்டுப்புறச் சமூகத்தில் தோன்றி வளர்ந்து வருவது நாட்டுப்புறப்பண்பாடு. இது காலம் காலமாக நாட்டுப்புற மக்களால் உருவாக்கப்பட்டு வருவது; பாதுகாக்கப்பட்டு வருவது. தொழில் மயமாக்கல் சமுதாயத்திற்கு முந்தியது நாட்டுபுறப் பண்பாடு. நாட்டுப்புறச் சமூக மக்கள் வாழ்கிற வாழ்வியல் முறைகளே நாட்டுப்புறப் பண்பாடு எனலாம். நாட்டுப்புற மக்களின் பேச்சு, உணவு, ஆடை அணிகலன்கள், பழக்க வழக்கம், பயன்படுத்தும் பொருட்கள் ஆகியன நாட்டுப்புறப் பண்பாட்டை வெளிப்படுத்துவன ஆகும். ''ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும், பல கிராம மக்களால் பின்பற்றப்பட்டு வரும் வாழ்க்கை முறைதான் நாட்டுப்புறப் பண்பாடு''.[1] இந்நாட்டு புறப் பண்பாடு வாய்மொழி மரபுடன் (Oral Tradition) நெருங்கிய தொடர்பு கொண்டது. நகர வாழ்க்கைக்கு மாறு பட்டது. நாட்டுப்புறப் பண்பாடு எனக் கருதுகின்றார் ரெட்பீல்ட் ''ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் நகர்ப்புறங்களில் உயர்ந்த நிலையில் வசிக்கும் மக்களால் உருவாக்கப்படுவது நகரப் பண்பாடு''. நகரப்பண்பாடு என்பது மிகவும் அமைப்பொழுங்கு ரீதியானது (More Systematic)......தனித்தன்மை பெற்றது. (Specialised)...நாட்டுப்புற மரபை விட தன்னுணர்வுமிக்கது (self – conscious) என்று கூறுவர்.[3] நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் நகர வாழ்க்கையில் இன்று பல நிலைகளில் ஊடுருவி யுள்ளன. இப்போக்கு பற்றி இங்கு ஆராயலாம்.

பண்பாட்டுத் தாக்கம் சமூக வாழ்க்கை முறைகளில் இரு நிலைகளில் அமைகின்றன. அவையாவன.

1. அறிவோர் பண்பாட்டு மரபுகள் பாமர மக்களிடம் பரவுவது (Direction of Culture Flow from Elite to Folk)

2. பாமர மக்களின் பண்பாடு அறிவோர் குழுவிடம் பரவுவது (Direction of Culture flow from Folk to Elite)[4]

இவ்விரு போக்குகளும் இன்று இந்திய சமூக வாழ்க்கையில் காணப்படுகின்றன எனலாம்.

நாட்டுப்புற பண்பாட்டு மரபுகளும், நகர்ப்புற பண்பாட்டு மரபுகளும், இந்தியப் பண்பாட்டின் இரு துணை அமைப்புகளாக விளங்குகின்றன. இவ்விரண்டு பண்பாடுகளும் ஒன்றையொன்று சார்ந்தும் உறவு கொண்டும் பின்னிப் பிணைந்தும் வளர்ந்து வருகின்றது. நாட்டுப்புற பண்பாட்டிற்கும் நகரப் பண்பாட்டிற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. எனினும் மிகப் பழங்காலத்திலிருந்தே நாட்டுப்புற பண்பாட்டிற்கும் நகரப் பண்பாட்டிற்கும் தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல்கள் இருந்துள்ளது.[5] இப்போக்கானது இன்றும் தொடர்கிறது. நாட்டுப்புற மரபுகளும், நகர்ப்புற மரபுகளும், ஒன்று சேர்த்து சுழலும்போது நாட்டுப்புற மரபுகள் மேலோங்கி நிலைத்து நிற்கின்றன என்று மானுடவியல் அறிஞர் மாக்கிம்மரியெட் கருதுகின்றார்.[6]

இன்று நகர்ப்புறங்களில் நாட்டுப்புற மரபுகளைப் பின் பற்றும் போக்கு பரவலாகக் காணப்படுகிறது எனலாம். நாட்டுப்புறக் கூத்து வகைகள், கதைகள், ஆடல் பாடல்கள் ஆகியன நகர்ப்புறங்களில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன என்று தூர்காதால் முகோபாத்யாயா குறிப்பிடு கின்றார். கிழக்கு இந்தியாவில் "Jatra" குழுவினர் நகர்ப்புறங் களில் தங்கள் கலைகளை நிகழ்த்தி பெரும் பொருள் ஈட்டி வருவதாகவும் அவர்குறிப்பிடுகின்றார்.[7] பொதுவாக நாட்டுப்புற மரபுகளுக்கு, நகர் மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கின்றது எனக் கூறலாம். நகர்ப் புறங்களில் இடம் பெற்று வரும் நாட்டுப்புறப் பண்பாட்டு கூறுகளைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. நாட்டுப்புறக் கூத்து
2. நாட்டுப்புற ஆட்டங்கள்
3. நாட்டுப்புறப் பாடல்கள்
4. நாட்டுப்புற இசை.

1. நாட்டுப்புறக் கூத்து

தெருக்கூத்து, கழைக்கூத்து ஆகியன நாட்டுப்புறக்கூத்து வகைகளாகும் இக்கூத்து வகைகள் இன்று நகர்ப்புறங்களில் நிகழ்த்தப் பெறுகின்றன சென்னை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் சமூக நிகழ்வுகளின் போதும், கோவில் விழாக்களின் போதும் ''தெருக்கூத்து'' நிகழ்வை ஏற்பாடு செய்து, நகரப் பார்வையாளர்கள் கண்டுகளிக்கின்றனர். கழைக்கூத்தாடிகள் நகர்புறங்களில் தங்கள் திறமைகளைக் காட்டுவதில் தயங்குவ தில்லை. நகரப் பார்வையாளர்கள் (City Audience) இதனைப் பார்த்து மகிழ்கின்றனர்.

2. நாட்டுப்புற ஆட்டங்கள்

கரகம், காவடி, கும்மி, ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், தேவராட்டம் முதலிய நாட்டுப்புற ஆட்டங்கள் நகர்ப் புறங்களில் இடம் பெறுகின்றன. கரகாட்டம் சமயவழி பாட்டோடு தொடர்புடைய ஆட்டம் ஆகும் இவ் ஆட்டம் இன்று நகர்ப்புறங்களில் சமூக விழாக்களிலும், ஊர்வலங்களிலும், முக்கியப்பொது நிகழ்வுகளின் போது இடம் பெறுகின்றன. நகர்ப்புறங்களில் உள்ள விளம்பர நிறுவனங்கள் கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டங்களை விளம்பரத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அரசியல் கட்சிப் பிரச்சாரத் திற்கும் இவ்வாட்டங்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்கின்றன. நகர்ப்புறப் பார்வையாளர்கள் நாட்டுப்புற ஆட்டங்களையும் கண்டுகளிக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

காவடியாட்டமும் இன்று நகர்ப்புறங்களில் தொழில் முறைக் கலைஞர்களால் ஆடப்பட்டு வருகின்றன. காவடியாட்டத்தில் புகழ் பெற்ற தொழில் முறை கலைஞர்கள் சிலர் மதுரையில் இருக்கின்றனர். சமூக விழாக்களின் போது நகர்ப்புறங்களில் காவடியாட்டம் தொழில்முறைக் கலைஞர்களால் நடத்தப் படுகிறது. இக்காவடியாட்டத்தில் வழிப்பாட்டுச் சூழல் இடம்

பெறுவது இல்லை. நகர்புறப் பார்வையாளர்கள் காவடியாட்டத்தை மிகவும் உற்சாகமாக கண்டுகளிக்கிறார்கள்.

3. நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்கள் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் இவற்றின் வாயிலாக இன்று நகர்ப்புறங்களில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. தொலைத்தொடர்பு சாதனங்கள் நாட்டுப்புறப்பாடல்களைப் படித்த மக்களிடம் பரவ பெரும் துணைபுரிந்து வருகின்றன.

வானொலி நிலையத்தினர் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி நாட்டுப்புறப் பாடல்களை ஒலிபரப்பி வருகிறார்கள். நாட்டுப் புறப் பாடகர்கள் மற்றும் கேட்போர் இதனால் பயன் பெறுகின்றனர். தமிழ்த் திரைப்படங்கள் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற ஆட்டங்கள், நாட்டுப்புற இசை ஆகிய வற்றைத் தேவையான அளவிற்குப் பயன்படுத்தி வருகின்றன. நாட்டுப்புற மரபுகள், நகர்ப்புற மக்களிடம் ஒன்று சேர்வதற்குத் தமிழ்த்திரைப்படங்கள் நல்ல கருவியாக அமைகின்றன.

கிராமப்புறங்களில் திருவிழாக்களின் போது வில்லுப் பாடல்கள் இடம்பெறும். இவ்வில்லுப்பாடல்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் பெருமளவில் விழாக்களில் இடம்பெறும். கிராமிய மக்கள் வில்லுப்பாடல்களைக் கேட்டு மகிழ்வர். இன்று நகர்ப் புறங்களில் வில்லுப்பாடல்கள் புதிய மெருகுடன் பாடப்பட்டு வருகின்றன. வியாபார நிறுவனங்கள் விளம்பரத்திற்காக வில்லுப்பாடல் இசை நிகழ்வுகளைப் பயன்படுத்திக் கொள் கின்றன.

உடுக்கையடிக் கதைப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடகர் களால் கிராமப்புறங்களில் பாடப்பட்டு வருகின்றன. அரசியல் தலைவர்கள் மீது கதைப் பாடலை இயற்றி உடுக்கையடித்துப் பாடும் வழக்கம் இன்று சில நகரங்களில் இடம்பெறுகிறது. இதனால் உடுக்கையடிப் பாடல்களை நகர்ப்புற மக்களும் கேட்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நாட்டுப்புறப் பாடல்களைப் ''பாடும் குழுவினர்'' இன்று நகர்ப்புறங்களில் உருவாகி வருகிறார்கள். இவர்கள் பொது அரங்குகளில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி வருகின்றனர்,

நகர்ப்புறங்களில் மெல்லிசை நிகழ்ச்சிகளின்போது நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும் போக்கும் இன்று காணப்படுகிறது. அறிவோர் குழுக்களும் (Elites) நாட்டுப்புறப்பாடல்களைப் பாடி கலை நிகழ்ச்சிகள் நடத்தும் போக்கு இன்று நகர்ப்புறங்களில் செல்வாக்கு பெற்று வருகின்றது. நாட்டுப்புறப் பாடகர்கள், நாட்டுப்புற இசைப் பின்னணியுடன் நாட்டுப்புறப்பாடல்களைப் பாடி ஒலிப்பதிவு செய்து ஒலி நாடாக்களை வெளியிடுகிறார்கள். இவ் ஒலி நாடாக்களை நகர்ப்புற மக்கள் பலர் வாங்கி நாட்டுப் புறப் பாடல்களைக் கேட்டு மகிழ்கிறார்கள். நாட்டுப் புறப் பாடல்கள் பலதரப்பட்ட மக்களிடம் சென்று சேர இவ் ஒலி நாடாக்கள் (Casettes) பெரிதும் துணைபுரிகின்றன. இந்தியத் தொலைக்காட்சி நாட்டுப்புற மரபுகள் நகர்ப்புறங்களில் பெருக நல்ல சாதனமாக அமைகிறது.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர் நாட்டுப் புறப்பாடல்கள், ஆட்டங்கள், இசை ஆகியவற்றைப் பொங்கல், தீபாவளி, தமிழ்ப் புத்தாண்டு முதலிய நாட்களில் ஒளிபரப்பு கிறார்கள். இதனால் நாட்டுப்புற மரபுகள் பல்லாயிரக்கணக் கான மக்களிடம் சென்று சேர்கின்றன. நாட்டுப்புறப் பாடல் களைப் பாடும் குழுக்களை அழைத்து அறிமுகம் செய்து தொலைக் காட்சியில் பாட வைக்கிறார்கள். ''வயலும் வாழ்வும்'' நிகழ்ச்சியின் போதும் பிற சந்தர்ப்பங்களிலும் நாட்டுப்புறப் பாடல்கள், இசை ஆகியன தொலைக்காட்சியில் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனங்கள் நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் பெருமளவில் பரவுவதற்கு ஒரு விதத்தில் உதவி செய்து வருகிறது எனலாம்.

இது தவிர, நகர்ப்புறங்களில் உள்ள கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தனியார் நிறுவனங்கள், நாட்டுப்புறக் கலை பற்றிய பயிலரங்குகளை நடத்துகிறார்கள். இதனால் நகர்ப்புற மாணவர்கள் ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தேவராட்டம் முதலிய ஆட்டங்களைப் பற்றிப் தெரிந்து கொள்கிறார்கள். இப்பயிலரங்குகள் நாட்டுப்புறக் கலைகள் அறிவோர் குழுக்களில் பரவ களமாக அமைகின்றன.

இவ்வாறு நகர்ப்புற மக்களின் சமூகப் பண்பாட்டு வாழ்க்கை முறைகளில், நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகள் (Conscious) ஆகவும் (Unconscious)... ஆகவும் கலந்து விடுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. Sahab Lal Srivastava, **Folk Culture and Oral trdition,** p.p. 10-11
2. Ibid, p. 10
3. Ibid, p. 286
4. Ibid, pp. 291
5. Ibid, pp. 286-287
6. Mckim Marriott, **Little communities in an Indigenous Civilization:** in Mckim Marriott (Ed.) Village India Studies in Little Community pp-191-196
7. Durga Das Mukhopadhyay, **Folk Arts and Socia Communication** p. 59
8. Ibid, p. 63.

சமயவிழாவில் சல்லிக்கட்டு

ஆ. சிவக்கொழுந்து
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

முன்னுரை

'சல்லிக்கட்டு' என்னும் வீர விளையாட்டு பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்களால் விளையாடப்பட்டு வருகின்றது. இவ்விளையாட்டு தற்பொழுது சமய வழிபாட்டோடு இடம் பெற்றுள்ளது. சமய வழிபாட்டில் இடம் பெற்றதற்கான காரணம் என்ன என்பதனை இக்கட்டுரை விளக்குகின்றது. மேலும் இவ்விளையாட்டில் இந்து, இசுலாம், கிறித்துவம் ஆகிய சமயங்களின் ஒற்றுமையினையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

சமயவிழா

நாட்டுப்புறமக்கள் ஊரின் பொது நன்மை கருதி ஊர்த் தெய்வங்களை வழிபடுகின்றனர். ஊர்த் தெய்வங்களை வழிபடும் பொழுது ஊர்மக்கள் முளைப்பாரி எடுத்தல், கரகம் எடுத்தல், குதிரை எடுத்தல், மாவிளக்கு எடுத்தல் போன்ற சடங்குகளைச் செய்கின்றனர். இதனோடு மதுரை மாவட்டத்தில் பல ஊர்களில் ஊர்த்தெய்வத்திற்குச் சல்லிக் கட்டும் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு ஊர்த்தெய்வங்களை வழிபடும் போது ஊர்மக்கள் ஊர்த்தெய்வத்திற்குப் பலியீட்டுச் சடங்காகச் சக்திகிடாய் வெட்டுதல், சேவல் வெட்டுதல் போன்ற சடங்குகளையும் செய்கின்றனர். இப்பலியீட்டுச் சடங்கு பண்டை மக்களிடம் இருந்த நரபலியின் பரிணாம வளர்ச்சியாகும்.

நரபலி

இறைவனுக்கு மனிதனை வெட்டிப் பலிகொடுப்பது நரபலி எனப்படுகின்றது. இவ்வாறு நரபலியிட்டால் இறைவனால் ஊரிலுள்ள மக்கள் அனைவருக்கும் நன்மை கிடைக்கும் என்றும் இறைவனுக்கு நரபலி கொடுக்கவில்லையென்றால் ஊர் மக்களுக்குத் தீமை ஏற்படும் எனவும் ஊர்மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கை உலகம் முழுவதும் இருந்து வருகின்றது. "ஆசுத்திரேலியாவில் தார்லிங்கு ஆற்றுப் பழங்குடியினர் வளை தடிகளால் ஒருவர் தலையை இன்னொருவர் காயப்படுத்தி வெளிப்படும் இரத்தத்தைச் சவக்குழிக் கருகில் கிடத்தப் பட்டுள்ள பிணத்தின் மேல் படுமாறு செய்கின்றனர். இதற்கு நடு ஆசுத்திரேலிய அருண்டா இனக் குழுவினரிடையே சவக் குழியின் மீது பெண்டிர் தமது தலைகளிலிருந்து இரத்தத்தைச் சிந்தும் வழக்கத்தைக் காணலாம். இவ்வாறு செய்வது இறந்த வர்களுக்கு வலிமையூட்டுவதும் அவர்கள் மறுஉலகிற்குச் செல்வ தற்குத் துணைபுரிவதும் ஆகும்"[1] நடு ஆசுத்திரேலியப் பகுதியினைப் போன்றே உலகில் பல இடங்களில் நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. "நல்ல விளைச்சலுக் காக மனிதப்பலி கொடுக்கும் வழக்கம் உலகின் பல்வேறு பகுதி களிலும் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக மேற்கு ஆப்பிரிக்காவில் நிலங்களில் விதையிடுவதற்கு முன்பாக ஓர் ஆணையும் பெண்ணையும் மண்வெட்டிகளாலும் களை கொத்தி களாலும் அடித்துக்கொன்று அவர்களின் பிணங்களைப் புதிதாக உழுத நிலத்தின் நடுவில் புதைப்பர். இதனால் அந்த நிலம் உயிர்ப்புச் சக்தி மிக்குற்று அதிக விளைச்சலை நல்கும் என உறுதியாக நம்பினர்"[2] இக்கருத்துக்களின் மூலம் இறந்த உயிர் மறுவுலகை அடைவதற்கும் விளை நிலங்களின் நல்ல விளைச்சல் விளைவதற்கும் அக்கால மக்கள் மனிதப் பலி கொடுத்திருத்தல் வேண்டும் என்பதனை ஒருவாறு அறிந்து கொள்ள முடிகின்றது. நரபலி கொடுக்கும் வழக்கம் உலக நாடுகளில் மட்டுமல்லாமல் தமிழக மக்களிடமும் இருந்துள்ளது. மாமல்லபுரத்திலுள்ள திரௌபதி ரதம் மற்றும் வராகமண்டபத்திலும் காணப்படுகின்ற சிற்பங்களில் துர்க்கை அம்மனுக்கு துர்க்கை அம்மனின் அடியவர்கள் தன் தலையை அரிந்து கொடுப்பதாக அமைந்துள்ள சிற்பமும் காணப்படுகின்றது. கி.பி.630-658)[3] மேலும் புள்ளமங்கை என்னும் இடத்திலுள்ள

பிரம்மபுரீசுவரர் கோயிலில் அர்த்த மண்டப வடக்குச் சுவரிலும் நவகண்டச் சிற்பம் காணப்படுகின்றது (கி.பி.925-951)[4] நவகண்டச் சிற்பங்கள் தவிர நவகண்டக் கல்வெட்டும் காணப் படுகின்றது. "முதல் குலோத்துங்கன் காலத்தில் அவனது படைத் தலைவன் வீமன் உதாரணான குலோத்துங்கச் சோழ மூவரைய தேவன் என்பவன் மல்லல் பகுதியில் இருந்தான். இவனுக்கு வந்த வியாதியைப் போக்குவதற்காக இவன் கீழ் பணிபுரிந்த வீரன் அம்பலக்கூத்தன் என்பவன் தன் தலையை அரிந்து காளிக்குப் பலி கொடுத்தான் இதற்காக இவனது மனைவிக்கு நிலம் அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது"[5] (கல்வெட்டுப் படியெடுத்தல், வேதாச்சலம்) கல்வெட்டுச் செய்தி மூலமாகவும் நவகண்டச் சிற்பங்களின் மூலமாகவும் பழங்கால மக்கள் இறைவனுக்கு நரபலி கொடுத்துள்ளனர் என்பது புலனாகின்றது. இறைவனுக்கு நரபலி கொடுப்பதன் மூலம் தங்களுக்கு ஏற்படு கின்ற இன்னல்கள் தீரும் என்று பழங்கால மக்கள் நம்பியுள்ளனர் எனக் கருதப்படுகின்றது. மேலும் தான் விரும்பியவற்றைப் பெறுவதற்கு இறைவனுக்கு நரபலியிட்டால் பெற்றுவிடலாம் என நாட்டுப்புறமக்கள் நம்புகின்றனர். இதற்குச் சான்றாக நாட்டுப்புறக் கதைப்பாடலும் உள்ளது. "திருடர்கள் காட்டாளம்மன் கோவில் கருவூலத்தைக் கொள்ளையடிப்பதற்கு அறுபத்தியொரு திருடர்கள் காட்டிலுள்ள காட்டாளம்மன் கோவில் பக்கம் வந்தனர். காட்டாளம்மன் கோவில் கருவூலத்தை எடுக்க நரபலி கொடுக்க வேண்டும் எனப் பேசினர். இதற்கு நிறைசூலி பொன்னிறத்தாளைப் பலியிட்டுக் காட்டாளம்மன் கோவில் கருவூலத்தைத் திருடர்கள் எடுத்துக் கொண்டனர்" எனப் பொன்னிறத்தாள் கதைப்பாடல் கூறுகிறது. இறைவனிட மிருந்து தான் விரும்பியவற்றைப் பெறுவதற்கும் இறைவனின் தாக்குதலிலிருந்து விடுபடவும் நரபலி கெடுக்கும் வழக்கம் தமிழக மக்களிடத்தில் இருந்துள்ளது என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இறைவனுக்கு நரபலி கொடுப்பதற்குப் பிற்காலத்தில் மக்கள் முன்வராமல் இருந்திருக்கலாம். நரபலி கொடுக்க விருப்ப மில்லாமல் இருக்கும் மக்களிடத்தில் வற்புறுத்தி இறைவனுக்கு நரபலி கொடுப்பது நல்லதல்ல என்ற நோக்கத்தின் காரணமாக 'ஏறுதழுவல்' என்றும் விளையாட்டு 'சல்லிக்கட்டு' எனப் பெயர்

பெற்று சமய விழாவில் இடம் பெற்றுள்ளது எனக் கருதப் படுகின்றது.

சல்லிக்கட்டு

'சல்லிக்கட்டு' என்பது முரட்டுக்காளையினை வீரன் ஒருவன் ஆயுதம் எதுவுமின்றி தான் ஒருவனாக நின்று அடக்கி வெற்றி கொண்டு அதற்கான பரிசுகளைப் பெறுவதாகும். இவ்விளை யாட்டு மாடு பிடிவீரனின் உடலுக்கும் ஊறுவிளைவிக்கும் விளையாட்டாகும். இதனால் இவ்விளையாட்டினைப் பண்டைத் தமிழர்கள் வீரவிளையாட்டு வகையில் சேர்த்துள்ளனர். இவ்விளை யாட்டு பின்னர் சமயவிழாவில் மதுரை மாவட்டம் முழுவதும் பரவலாக இடம் பெற்றுள்ளது. 'சல்லிக்கட்டு' என்னும் விளையாட்டில் காயப்படும் வீரனின் இரத்தத்தை இறைவனுக்குக் காணிக்கையாகுகிறது என மக்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் 'சல்லிக்கட்டு' கோவில் விழாவில் நடைபெறுகின்றது. ஊர்த் தெய்வங்களுக்குச் 'சல்லிக் கட்டு' நடத்தவில்லையெனில் காலரா பஞ்சம் அம்மை போன்ற நோய்கள் ஏற்படும் என ஊர்மக்கள் நம்புகின்றனர்.

சமயங்களின் ஒற்றுமையும் – சல்லிக்கட்டும்

'சல்லிக்கட்டு' என்னும் விளையாட்டினை இந்து இசுலாம் கிருத்துவம் ஆகிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாக இருந்து நடத்துகின்றனர். பொதுவாகச் 'சல்லிக்கட்டு என்னும் விளையாட்டு இந்துக்களின் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட் டோடு இணைந்து நடைபெற்று வருகின்றது. ஆனால் சில இடங்களில் இசுலாம் சாமாதிகளுக்கும் கிறித்துவக் கோயில் களுக்கும் இந்து சமய மக்களால் 'சல்லிக்கட்டு' நடத்தப்படு கின்றது. மேலும் மதுரைக்கு அருகிலுள்ள களிமங்கலம் என்னும் ஊரில் இசுலாமியச் சமயத்தைச் சேர்ந்த ராவுத்தர் முன்னின்று இந்துசமயப் பள்ளர் இனத்தினரோடு சேர்ந்து முனியாண்டி சாமிக்குச் 'சல்லிக்கட்டு' நடத்துகின்றார். மேலூர்க்கு அருகி லுள்ள சேக்கிபட்டி என்னும் ஊரிலுள்ள இந்து சமய மக்கள் அவ்வூரிலுள்ள ஒடுங்காக்குடி ஆண்டவர் என்னும் முஸ்லீம் சமாதிக்கு மஞ்சுவிரட்டு நடத்துகின்றனர் இதில் இசுலாம் இனத் தவர்களும் கலந்து கொள்கின்றனர். இதே போன்று மதுரைக்கு அருகிலுள்ள குலமங்கலம் என்னும் ஊரில் இந்து சமய மக்கள் மட்டுமே வாழ்கின்றனர் இவ்வூரில் 'ராவுத்தபட்டி' என்னும்

இசுலாம் சமாதி உள்ளது. இதற்கு அவ்வூர் மக்கள் அனைவரும் சிறப்பான முறையில் சல்லிக்கட்டு நடத்தி வருகின்றனர். மேலும், திண்டுக்கல்' என்னும் நகரத்திற்கு அருகிலுள்ள கொசவபட்டி என்னும் ஊரில் அந்தோணியார் ஆலயத்திற்குச் சல்லிக்கட்டு நடத்தப்படுகின்றது. இத்தகவல்களை வைத்துக் கொண்டு ஆராயும் பொழுது வேறு எந்த விழாவிலும் இல்லாத சமயங் களின் ஒற்றுமை சல்லிக்கட்டு என்னும் விளையாட்டில் உள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

முடிவுரை

இந்து சமய நாட்டுப்புற மக்கள் ஊர்த் தெய்வங்களுக்கு முளைப்பாரி எடுத்தல், கரகம் எடுத்தல், குதிரை எடுத்தல், மாவிளக்கு எடுத்தல் போன்ற சடங்குகளைச் செய்கின்றனர். இச்சடங்குகளோடு 'சல்லிக்கட்டு' என்னும் வீர விளையாட்டி னையும் ஊர் மக்கள் ஊர்த் தெய்வங்களுக்கு நடத்துகின்றனர். இவ்விளையாட்டு இறைவனுக்கு நரபலி கொடுக்க வேண்டும் என்பதற்காக ஊர்த் தெய்வங்களுக்கு நடத்தப்படுகின்றது. 'சல்லிக்கட்டு' என்னும் விளையாட்டில் ஏற்படும் மனித இரத்தத்தை இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்றனர். ஊர் மக்கள் சல்லிக்கட்டினை ஊர்த் தெய்வங்களுக்கு நடத்தவில்லை யென்றால் தீங்கு ஏற்படும் என மக்கள் நம்புகின்றனர்.

'சல்லிக்கட்டு' என்னும் விளையாட்டு இந்து நாட்டுப்புறத் தெய்வத்திற்கும் இசுலாமியர்களின் சமாதிக்கும் கிறிஸ்தவ ஆலயத்திற்கும் ஊர் மக்களால் நடத்தப்படுகின்றது. இக்கருத்தின் மூலம் 'சல்லிக்கட்டு' என்னும் விளையாட்டால் சமயங்களின் ஒற்றுமையை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

குறிப்புகள்

1. நா. பாலுச்சாமி (பதி. ஆ) வாழ்வியற்களஞ்சியம் தொகுதி எட்டு ப. 945.
2. மேலது ப. 947.
3. Susan L. Huntington, Art of Ancient India, weather hill New York p. 396.
4. மேலது p. 515.
5. கல்வெட்டுப் படியெடுத்தல், வேதாச்சலம், தொல்லியல் துறை மதுரை.

நாட்டுப்புற மகளிரின் ஏழாம் காய் விளையாட்டு

முனைவர் அரங்க. மு. முருகையன்
புதுச்சேரி

தமிழகத்தில் காணப்படுகின்ற நாட்டுப்புற மக்களுடைய விளையாட்டுக்கள் தத்தம் மக்களுடைய பண்பாட்டு வளர்ச்சியை வெளிக்காட்டுவனவாக உள்ளன. இத்தகைய விளையாட்டுகளில் வீரம், பொழுதுபோக்கு, அறிவுத்திறன் போன்றவை வெளிப்படு கின்றன. மனிதன் ஒரே இடத்திலேயே நிலைத்து வாழத் தொடங்கிய காலத்தே அவ்வச்சூழலுக்கேற்ப இவ்விளை யாட்டுகள் தோன்றலாயின. வீரம் சார்ந்த விளையாட்டுகள் போர், வேட்டை எனும் அடிப்படையோடு அமைகின்றன. பிற விளையாட்டுகள் பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டு உள்ளன.

நாட்டுப்புற விளையாட்டு வகைகள்

தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளை அகவிளையாட்டுகள் என்றும், புறவிளையாட்டுகள் என்றும் வகைப்பாடு செய்வர். இப் பிரிவில் மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அகவிளையாட்டு களாகவே அமைகின்றன. சிறுவர், சிறுமியர் பங்கு கொள்ளும் விளையாட்டுகள் புறவிளையாட்டுகளாக அமைகின்றன. தமிழகப் பண்பாட்டுச் சூழலில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வந்து விளையாட்டுகளில் பங்கு பெறுவது மிகக்குறைவு என்பதால் இவர்கள், வீடுகளில் தங்களுக்குள்ளாகவே பல விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.

இருவர் அல்லது இருவருக்கும் மேற்பட்டவர் ஆடுகின்ற இவ்விளையாட்டுகள் பல்லாங்குழி, காய், ஒற்றையா இரட்டையா எனுமாறு அமைகின்றன. சிறுமியர், பள்ளி மாணவியர் புற

நிலையில் இருந்து விளையாடக் கூடிய சில், நொண்டி, பாரி, கோ.கோ போன்ற விளையாட்டுகள் சிற்றூர்ப் பகுதியில் ஆடப் படும் விளையாட்டுகள் ஆகும்.

இவ்வெழுத்துரை பெண்கள் அகநிலையில் அதாவது வீட்டிற்குள்ளிருந்து நிகழ்த்தும் விளையாட்டாகிய ஏழாம்காய் விளையாட்டுப்பற்றி எடுத்துரைக்கின்றது.

தமிழகப் பண்பாட்டுச்சூழல் பெண்களுக்கென்று சில சமூக வரையறைகளைக் கொண்டு அமைவதால் ஆண்களுக்கு இணை யாக இவர்கள் புறநிலையில், விளையாட்டுகளில் பங்குபெறுவது தவிர்க்கப்படுகிறது. எனவே, பெண்கள் தங்களுடைய பொழுது போக்கிற்காக இருவர் அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்து அகநிலை விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். பெண்கள் பங்குபெறும் இவ்விளையாட்டுகள் பகல் நேரத்தில் மட்டுமே பெரும்பான்மையும் விளையாடப் படுகின்றன.

இவ்வாறு நாட்டுப்புற மக்களிடத்தே காணப்படும் விளையாட்டுகளைத் "தன்மை அடிப்படையில் நான்கு வகை யாகக் கொள்வார்." இரா. பாலசுப்ரமணியம். அவை

1. உடல்திறன் 2. அறிவுத்திறன்
3. வாய்ப்புநிலை 4. மனமகிழ்ச்சி

எனுமாறு வகைப்படும். இவற்றில் எழுத்துரையில் கூறப் படுகின்ற ஏழாம்காய் விளையாட்டு உடல் திறனையும் அறிவுத் திறனையும் சார்ந்த விளையாட்டு வகையில் அடக்கலாம்.

ஏழாம் காய் விளையாட்டு

கற்களைத் தூக்கிப் போட்டுப் பிடிக்கும் விளையாட்டினை 'காய்' விளையாட்டு அல்லது 'ஏழாங்காய்' என அழைக்கின்றனர். "கற்களைத் தூக்கிப் பிடிப்பதும் சேர்ந்திருக்கும் கற்களை அசைந்து விடாமல் எடுப்பதும் ஆகிய செய்கைகள் வாய்ப்பு நிலை விளையாட்டாகக் கொள்ளலாம் எனினும் ஓரளவு பயிற்சி (Practice) சார்ந்துள்ளது" எனக் கூறி இவ்விளையாட்டை வாய்ப்புநிலை விளையாட்டாகக் கருதுவார் இரா. பாலசுப்பிர மணியம். விளையாடும் நோக்கத்தினையும் சூழலையும் கொண்டு இவ்விளையாட்டை நோக்குமிடத்து ஏழாம்காய் விளையாட்டு பங்கு பெறுகின்ற பெண்களுடைய நினைவாற்றலையும் எண்

கணிதமுறையில் எண்ணிக்கையை அறியும் திறத்தையும் வளர்ப்பனவாக உள்ளமையை அறியமுடிகின்றது. வெறும் வாய்ப்பு நிலை விளையாட்டாக இதைக் கருத இயலாது.

விளையாட்டு முறை

விளையாடுபவர் ஒரே அளவுள்ள ஏழுகாய்களை (சிறிய அளவுள்ள கருங்கல் அல்லது கூழாங்கல்) எடுத்துக் கொண்டு, அவற்றை ஆடத்தேர்ந்தெடுத்த இடத்தின் மீது கலைத்தவாறு இடுவர். பின்னர் அவற்றில் ஒருகாயைக் கையில் எடுத்துக் கொண்டு மற்ற காய்களை ஒவ்வொன்றாகத் தொட்டு எடுப்பர். தமிழ் இலக்கியங்களில் கழங்காடுதல் எனச் சுட்டப்படுகின்ற இந்த ஆட்டம் தட்டாங்கல் எனவும் கழற்சிக்காய் ஆட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாட்டத்தினை ஆடுவதற்கு ஒரே அளவுள்ள சிறிய கூழாங்கற்கள் அல்லது கருங்கற்கள் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன. இவையல்லாது புளியங்கொட்டை, கலியாண முருங்கையின் விதை போன்றவற்றையும் இவ்வாட்டத்திற்குக் காய்களாகப் பயன்படுத்துகின்றனர்.

இவ்விளையாட்டைத் தொடங்கி ஆடுபவர் ஒரு காயை மேலேபோட்டு, பின்பு காயையோ அல்லது தரையையோ தட்டி இவ்விளையாட்டை ஆடத்தொடங்குவர். முதலில் ஆறு காய்களாகத் தரையில் இட்டுவிட்டு ஒரு கல்லை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு

'அல்லல்ல அரசல்ல
நீரோடு நிலம் பழுக்க
நிலம் பழுத்தால்
பலா சொல'

எனக்கூறி கீழே உள்ள காய்களில் ஒவ்வொன்றாக, சேர்த்து எடுப்பர். பின்னர்

ஈரு இருச்சிக்கோ
பூவப் பரிச்சிக்கோ
பெட்டிக்குள்ள வச்சிக்கோ

எனும் பாடலைப் பாடி கையில் உள்ள ஒரு காயை மேலே போட்டு கீழே உள்ள காய்களில் இரண்டு இரண்டாகச் சேர்த்து எடுப்பர். இதை அடுத்து

'முக்கோட்டு சிக்கோட்டு
மூணாம் படிக்கட்டு,

எனப் பாடி மூன்று மூன்று காய்களையும்

நான்கே நடந்துவா
பாம்பே படந்துவா,

எனப் பாடி நான்கு காய்களை ஒருமுறையும் இரண்டு காய்களை மறுமுறையும் சேர்த்து எடுப்பர்.

ஐவ்வால் அரக்கு
பம்பாய் சரக்கு

எனக் கூறி ஐந்து காய்களை ஒரு முறையும் ஒரு காயை மறு முறையும் எடுப்பர்.

கூறு நேரு
கும்பகர்த்தான் தேரு,

எனப்பாடி மூன்று மூன்று காய்களாக எடுப்பர்.

இதை அடுத்து ஆறுகாய்களையும் கீழே பரப்பி பின்பு மூன்று, இரண்டு, ஒன்று என்ற அளவீடுகளில்

ஏழை வெள்ளாடி
சூது வெள்ளாடி
துலுக்கன் பெண்டாட்டி

எனப் பாடி ஆறு காய்களையும் எடுப்பர்.

இரண்டாம் கட்டமாகத் திரும்பவும் ஆறு காய்களைக் கீழே பரப்பி கையில் உள்ள ஒரு காயை மேலே போட்டு கீழ் உள்ள காய்களில் ஐந்தையும் தொட்டு ஆறாவது காயைச் சேர்த்து எடுப்பர். மேலே கூறியபடி ஐந்து காய்களையும் தொடும்போது

'கீழ்காணி கீழ்காணி கீழே சுரப்பாணி, கண்ணரெண்டும் திறப்பான், கறந்ததைக் குடிப்பான், அறிவுள்ள ராஜன், செல்வ குமாரன் எனப்பாடி எடுப்பர்.

மூன்றாவது கட்டமாக அனைத்துக் காய்களையும் ஒவ்வொன்றாகச் சுங்கி எடுப்பர். அப்போது, கையேந்தி கையேந்தி, கடலை சுரப்பாணி, எந்தி எந்தி மாதா எம்பிரப்பு வாடா, பசும் பால் பிள்ளைக்கு, பால்தரவாடா பால்தரவாடா, எனப் பாடி கீழே உள்ள காய்களை எடுப்பர்.

இவ்வாறு முதல் காய்களில் இருந்து தொடர்ச்சியாக ஆறாவது காய் வரை எந்த நபர் தவறவிடாமல் விளையாடு கின்றாரோ, அவரே இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றவர் ஆவார் ஆட்டத்தின் நடுவே காய் தவறினாலோ அல்லது ஆட்டத்தில் காயைத் தொடும்போது காய் நகர்ந்தாலோ விளையாடியவர் தாம் தோற்றதாக ஒத்துக்கொண்டு எதிர் தரப்பில் உள்ளவரிடம் வாய்ப்பைத் தருதல் வேண்டும்.

இவ்வாட்டத்தால் தொடர்ந்து ஆடியப்பின்பு வெற்றி பெற்றவர் இறுதியாக ஆறு காய்களையும் உள்ளங்கையில் எடுத்து அதை மேலே தூக்கிப் போட்டு மேற்புறம் உள்ள மணிக்கட்டு விரல்களுக்கிடையில் நிறுத்துவர். அப்போது அக் கையில் எத்தனை காய்கள் நிற்கின்றதோ அத்தனை மதிப்பெண் அல்லது பழத்தினைப் பெற்றதாக இவ்விளையாட்டில் கணக் கிட்டுக் கொள்வர்.

இவ்வகையில் காய்களைச் சுங்கித் தெரிவுசெய்யும் முறை 'சுங்குதல்' என வழங்கப்படுகின்றது. எனவே, இவ்வாட்டம் சுங்கங்காய் அல்லது 'சுங்கரக்காய்' ஆட்டம் என அழைக்கப்படு கின்றது. ஆட்டத்தில் ஒருவர், மற்றொருவர் என மாறி ஆடிய பின்பு ஆட்டத்தின் மொத்த மதிப்பெண் கணிக்கப்பட்டு வெற்றித் தோல்வி தீர்மானிக்கப்படுகின்றது. ஏழாம் காய் ஆட்டத்தைப் பெண்கள் பெரிதும் பகலிலேயே விளையாடு கின்றனர்.

இரவில் ஆடினால் வீட்டில் உள்ள செல்வம் குறையும், வளமை குறையும் என மக்களிடையே நம்பிக்கை நிலவினாலும் வீட்டில் உள்ள பெண்களுக்குப் பகல் நேரமே சற்று ஒய்வு கிடைக்கப் பெறுவதால் இத்தகு விளையாட்டுகள் பகலிலேயே நடைபெறுகின்றது.

ஏழாம் காயும் எண் கணிதமும்

ஏழாம் காய் ஆட்டம் தொடங்கி முடியும் வரை ஆடுகின்ற நபர் பாடலுக்குத் தகுந்தவாறு தொடங்கி ஆடும்போது ஒவ்வொரு முறையும் அதற்கென்று வரையறை செய்யப் பட்டிருக்கும் காய் அடுக்கு முறையை மனதில் கொண்டு விளையாடவேண்டும். இவ்வாட்டம் எண்ணிக்கை. முறையில்

1. 1
2. 2. 2. 2
3. 3. 3
4. 4. 2
5. 5. 1
6. 3. 2. 1
7. 1. 1. 1. 1. 1. 1.
8. சுங்குதல்

எனுமாறு அமைகின்றது. எனவே இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து விளையாடவேண்டுமெனில் மேற்கண்ட எண்ணிக்கையை மனதில் கொள்ளவும் நினைவாற்றலைப் பெறவும் போதிய பயிற்சி வேண்டியதாகின்றது. பண்பாட்டு ஒடுக்கு முறையின் சூழல்களால் வீட்டிற்குள்ளே இருந்து கல்வியறிவு பெற இயலாத பெண்களுக்கு இத்தகைய விளையாட்டுகள் பொழுது போக்காக மட்டும் அமையாமல் அறிவாற்றலையும் நினைவாற்றலையும் வளர்க்கும் நோக்கில் அமைகின்றது என்பதை அறியமுடிகின்றது. எனவே, ஏழாம் காய் விளையாட்டில் நாட்டுப்புறப் பெண்களுடைய நினைவாற்றல் தன்மை வளர்க்கப்படுகின்றது. நாட்டுப்புற மகளிர் பெரும்பாலும் கல்வியறிவு பெறாதவர்களாக இருந்ததினால் இத்தகு விளையாட்டுகள் ஒன்று, இரண்டு எண்ணில் பழகவும், கணித நிலையில் வாய்மொழியாகப் பயிற்சிப் பெறும் களமாகவும் இவ்விளையாட்டு அமைகின்றது எனக் கருதலாம். எனவே, ஏழாம் காய் விளையாட்டு எண்ணிக்கைத் திறனை வளர்க்கும் அறிவுத்திறன் சார்ந்த விளையாட்டு எனக்கூறலாம்.

கோனார்களின் மரணச்சடங்கு ஓர் அறிமுகம்

பெ. உடையப்பன்
வெட்டன்விடுதி

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம் வெட்டன் விடுதி கிராமத்தில் வசிக்கும், கோனார்களின் நடைமுறையில் உள்ள மரணச் சடங்கினை இக்கட்டுரையில் விளக்குப்படுகிறது.

வெட்டன்விடுதி:–

புதுக்கோட்டையிலிருந்து 28 கிலோமீட்டர் தொலைவில் இவ்வூர் உள்ளது. இங்கு கோனார், அம்பலகாரர், பறையர், கள்ளர், செட்டியார், அம்பட்டர் வண்ணான், ஆசாரி, தாதுவர், பார்ப்பனர் ஆகியோர் வசிக்கின்றனர், அதிக அளவில் வசிக்கும் கோனார்கள், விவசாயத்தைப் பெருந்தொழிலாகச் செய்து வருகின்றனர், ஊடவே பால்வியாபாரமும் செய்து வருகின்றனர்.

மரணச்சடங்கு:–

இறந்தவரின் மரணச்சடங்கு இறுதி அடக்கம், காடாத்துதல் (பால் தெளித்தல்), கருமாதி (கர்மம்தீர்த்தல்), திவசம் என்பன வாக நடத்தப்படுகிறது. இச்சடங்கினை அவரவர் வசதிக்கேற்ப நடத்துவர்.

இறுதி அடக்கம்:–

இவ்வூரில் வாழும் கோனார்கள் முறையாக இறந்தவர்களை எரியூட்டவே (தகனம்) செய்கின்றனர். ஒருவர் இறக்கும் அறிகுறி தெரியுமேயானால், அவரது குடும்பத்தினர், உடனடியாக அவருக்குப் பாலோ அல்லது தண்ணீரோ வாயில் ஊற்றுவார்கள். இறந்துவிட்டால் பக்கத்துவீட்டு பங்காளியினர், இறந்தவரைக் குளிப்பாட்டி துணிமாற்றிவிட்டு சுவற்றிலோ அல்லது நாற் காலியிலோ பாதி சாய்த்தாற்போல வைத்து விடுகின்றனர்,

இருபுறமும் குத்துவிளக்கேற்றி, ஊதுபத்தி எரியவிட்டு, தேங்காய் உடைத்து. குங்குலியம் என்ற வாசனைத்திரவியத்தையும், பன்னீரையும் தெளித்து விடுவார்கள் பட்டிப்பூ மற்றும் விதவித மான மலர்களைக் கொண்ட மாலையினை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர். கைம்பெண் இறந்தால் துளசி மாலையினை அணிவிக்கின்றனர். ஒரு ஓரத்தில்நின்று பறையர் தப்படிப்பர், வசதியானவர் (குறவன், குறத்தி ஆட்டம் நடத்துவர்).

கேதம் சொல்லுதல்:-

பறையரின் மூலம் உள்ளூர் மற்றும் வெளியூரில் உள்ள உறவினர், மற்றும் பழக்கமுள்ளவர்களுக்குச் செய்தி தெரிவிக் கின்றனர். சிலர் ஊர்தியின் மூலம் ஒலிபெருக்கியின் மூலம் வெளியூர்க்குச் செய்தி தெரிவிப்பர். கேதம் சொல்லும் பறையருக்கு உறவினர் பணம் கொடுப்பார்கள்.

நிறைநாழி:-

குளிப்பாட்டியவுடன் இறந்தவரை வீட்டு வாசற்படியில் தெற்கில் தலை இருக்குமாறு படுக்க வைத்து, ஒரு படியில் (முகத்தளவை) நெல் நிரப்பி, ஒருவெற்றிலை செருகி அல்லது விளக்கேற்றி (தீபம்) இறந்தவரின் மகன்கள், மகள்கள், மனைவி ஆகியோர் மூன்று முறை சுற்றி வருவர்கள், சுற்றும்போது நான்கு இடங்களில் நிறைநாழியை வைத்து எடுப்பார்கள், அந்த இடங் களில் பரிகாரி தண்ணீர் தெளிப்பார்.

சந்திமார்க்கொட்டை:-

தெருவைத்தாண்டி உள்ள சந்திமார்க்கொட்டையில் பாடையை மூன்று சுற்று சுற்றி தெற்கில் தலைப்பகுதி இருக்கு மாறு இறக்கிவைப்பார்கள். மனைவி, மகள், மருமகள் மற்றும் பெண்கள் அனைவரும் இவ்விடம் வரை மட்டுமே வருவர். மனைவி, அல்லது மருமகளின் தோளில் தண்ணீர் கொண்ட மண்பானையைச் சுமக்கச் செய்து, சுற்றுக்கு ஒரு ஓட்டையிட்டு, மூன்று சுற்று சுற்றும்போது ஓட்டையிலிருந்து வரும் தண்ணீரை சொர்க்கலோகம், சுகலோகம் என்றவாறு பாடைமீது தெளிக்கச் செய்வார்கள், பெண்களால் போடப்படும் வாய்க்கரிசி, கொல்லிக் காசினை, வண்ணான் துணிவிரித்து, கூவி அழைத்துப் பெற்றுக் கொள்வார்.

எரியூட்டுதல்:-

சுடுகாட்டில் விராட்டி (காய்ந்தமாட்டுச் சாணம்) அல்லது மரக்கட்டையினை, இறந்தவரை படுக்க வைப்பதற்கு ஏதுவாக அடுக்கிவைப்பார்கள் பாடைவந்தவுடன் அடுக்கிவைக்கப் பட்டுள்ள விராட்டியை மூன்று சுற்று சுற்றி, ஊஞ்சல் ஆட்டுவது போல ஆட்டி. கீழே மேல்புறமாக இறக்கிவைப்பார்கள், இது 'பாய்ச்சல் காட்டுதல்' எனப்படும். பாடையின் மேல்பகுதியை வெட்டி கீழ்ப்புறமாக வைத்து விட்டு, இறந்தவரை விராட்டியின் மேல், தெற்கில் தலை இருக்குமாறு படுக்க வைப்பார்கள். ஆணாக இருந்தால் மல்லாக்கவும் ஒரு பக்கம் தலை சாய்த்தும், பெண்ணாக இருந்தால் குப்புறவும் படுக்க வைக்கப்படும். மேலும் விராட்டி கொண்டு உடலை மறைத்து, முறைப்படுத்தப்பட்டு வைக்கோலை அடுக்கி களிமண்ணால் பூசுவார்கள். அதில் கொல்லி வைக்க ஒரு ஓட்டையிடுவார்கள். வண்ணான் துணி விரிக்க, பரிகாரி வாய்க்கரிசி, கொல்லிக்காசினைக் கூவி அழைத்து பெற்றுக்கொள்வார்.

கொல்லி வைத்தல்

தாய் இறந்தால் தலைப் பிள்ளையும், தந்தை இறந்தால் கடைப்பிள்ளையும் கொல்லி வைப்பது மரபாகும், குழந்தை இல்லையெனில், இறந்தவர் விரும்பியவர் கொல்லி வைப்பர். கொல்லி வைப்பவரின் தோள் பட்டையில் தண்ணீர் நிரம்பிய மண்பானையை வைத்து, சகோதரர்கள் அல்லது பங்காளி களுடன் ஒற்றைப்படையில், மூன்று சுற்று சுற்றும்பொழுது சுற்றுக்கு ஒரு ஓட்டையாக மண்பானையில் மூன்று ஓட்டைகள் இட்டு அதிலிருந்து வரும் தண்ணீரை, மூடப்பட்டுள்ள இறந்தவர் மேல் சொர்க்கலோகம், சுகலோகம் என்றவாறு தெளிப்பார்கள். உடன் பரிகாரி தயாராக வைத்துள்ள கொல்லிக் கட்டையினை, கொல்லி வைப்பவரிடம் கொடுத்து. ஓட்டையில் வைத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் செல்லச் சொல்வார்கள். கொல்லி வைப்பதற்குச் சந்தனக்கட்டையைப் பயன்படுத்துவது மரபாகும். கொல்லி வைத்தவர்க்குப் பரிகாரி மொட்டை அடித்து விடுவார். சிலர் இறந்தவரின் ஆண் குழந்தைகள் அனைவருக்கும் மொட்டையடிப்பர். திருமணமாகாத ஆணோ, பெண்ணோ காதுகுத்தாமல் இறந்தால், சங்குமுள் கொண்டு, காதில் ஓட்டை யிட்டு எரியூட்டுவது மரபுப் பழக்கமாகும். நிறை மாத

கர்ப்பிணி இறந்தால், கத்தியால் வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து, தனித்தனியே அடக்கம் செய்வார்கள். தற்கொலை செய்து கொண்டோ, விசமருந்தியோ இறந்தால் நேரடியாக சுடுகாட்டில் வைத்து கொளுத்திவிடுவார்கள். எரியூட்டும்பொழுது வெட்டியான் அரிச்சந்திரன் பற்றிய பாடலைப் பாடுவார்.

இறந்த மறுநாள் அல்லது மூன்றாம் நாள் பரிகாரி மற்றும் உறவினர்களுடன் சுடுகாடு சென்று, எரியூட்டப்பட்டிருக்கும் சாம்பலில் தண்ணீர் தெளித்து, பிள்ளைகள் மற்றும் பங்காளி களுடன் ஒற்றை வரிசையில், சாம்பலைக் கூடையில் அள்ளி ஆறு அல்லது ஏரியில் கொட்டுவார்கள். சிறு சிறு எலும்புத்துண்டு களுடன் மண்ணில் உருவம் செய்து சூடம், பத்தி கொளுத்தி, சாம்பிராணி இட்டு, எலுமிச்சைப்பழம் வெட்டி நால்புறமும் வீசிவிட்டு, எண்ணெய், சீயக்காய் தொட்டு வைத்து இளநீரால் சுத்தம் செய்வார்கள். பின்பு வாழைப்பழம் பிசைந்து போட்டு பால் தெளிப்பார்கள். பிறகு அவைகளைப் பொறுக்கி ஒரு கலயத்தில் வைத்து ஆறு அல்லது கடலில் கலந்து விடுவார்கள். இதை அஸ்தி' என்பர். அந்த இடத்தில் நவதானியம், பொறிக் கடலையினைத் தூவிவிட்டு, நினைவிற்காக ஒரு செடியினை நட்டு விட்டு வீடு திரும்புவர்.

வீட்டில் தயாராக உள்ள குறிஞ்சிக்கீரை கலந்த கொள்ளுக் கஞ்சினை, பலா இலைத் தொண்ணையில் வாங்கிக் குடிப்பர். பின்பு பரிகாரி கொண்டு வந்துள்ள மொச்சி, பூவரசு, பூலாங்கம்பு மூன்று வகைக் கம்பினை (குச்சி) தூரத்தில் வீசிவிட்டு பார்க்காமல் திரும்புவார்கள்.

படைத்தழுவுதல்

படைத்தழுவுதலில் பெண்கள் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு, தண்ணீர் படைப்பின்போது தண்ணீரையும், பல காரப் படைப்பின்போது பலகாரத்தையும், சோற்றுப்படைப்பின் போது சோற்றையும் வைத்து அழுவார்கள். இறுதியில் 'தாலிப் படைப்பு' நடைபெறும். இப்படைப்பின்போது இறந்தவரின் மனைவிக்கு, புத்தாடை உடுத்தி, 'பூக்களையும், வளையல் களையும் அணிவித்து, நெற்றியில் குங்குமம், மஞ்சளிட்டு, பெண் சுற்றத்தார் ஆறுதல் கூறிட சில கைம்பெண்கள் 'பிலாக்கணம்' பாடிய வண்ணம் சுற்றிவரும்போது, வயதான ஒரு கைம்பெண்,

தாலியைக் கழற்றி பால் கிண்ணத்தில் போட்டுவிட்டு, வளையல் களை உடைத்து, பூக்களைப் பறித்து, நெற்றிப் பொட்டினை அழிப்பாள். இதனைத் 'தாலி அறுத்தல்' என்பர். அன்று இரவே, இறந்தவரின் ஆண்மக்கள் மற்றும் சில பங்காளிகள் கருமாதி நடைபெறும் குளத்தங்கரைக்குச் சென்று விடுவார்கள்.

புண்ணியாசனம் (புண்ணியாவசனம்)

16-வது நாள் காலையில் பிராமணர் இறந்தவரின் வீட்டிற்கு வந்து, ஒரு செம்பில் தண்ணீரெடுத்து, மாவிலையின் மூலம் வீட்டின் எல்லா இடத்திலும் தண்ணீரைத் தெளித்து விட்டு புண்ணியாசனம் நடத்துவார். இது முடிந்த உடனேயே கருமாதிக்குக் குளக்கரைக்குச் சென்று கருமாதி பூசை நடத்துவார்.

பூசை நடக்குமிடத்தினைச் சுத்தம் செய்து வைப்பர். நான்கு வாசற்படியினைக் கொண்ட, சதுரமான அமைப்பினை மண்ணில் செய்வர். இது 'கட்டளை' எனப்படும். கட்டளையின் நான்கு மூலைக்கும் இலையில் பச்சை அரிசி வைத்து மூலைக்கலயம் வைத்து, கட்டளைக்குள் ஆலம், அரசு, அத்தி, நாயிறஞ்சி ஆகியவற்றின் விறகு கொண்டு 'இக்கியம்' வளர்க்கப் படும். பிராமணர் இறந்தவரின் ஆண் வாரிசினை அமரச் செய்து, அவர்களுக்குத் தர்ப்பைப்புல் மோதிரம், பூநூல் அணிவித்து, இக்கியத்தில் நெய் ஊற்றி மந்திரம் ஓதி பூசை நடத்துவார். பூசைக்குச் செங்கல், சிகப்பு அல்லது வெள்ளைத்துணி, தேங்காய், நவதானியம், பால், பழம் போன்றவைகள் பயன்படுத்தப்படும். பூசையின்போது இடையிடையேவாரிசினைக் குளிக்கச் செய்வார். ஒரு கலயத்தில் கத்திரிக்காய் அல்லது வாழைக்காய் கலந்த சோறு தயாரிக்கப்பட்டு, பூசையின்போது 32 பிண்டங்களாகப் பிரிக்கப் பட்டு பின்பு ஒன்று சேர்க்கப்படும். இந்தச் சோற்றில் கொஞ்ச மாகக் காக்கைக்கு வைக்கப்படும். அப்பகுதிக்குக் காக்கை வரவில்லையெனில் பசு மாட்டிற்கு வைப்பார்கள். காக்கையோ அல்லது பசுமாடோ சோறு உண்டபிறகுதான் அனைவரும் குளிக்கச் செல்வார்கள். அவைகள் சாப்பிட்டால் இறந்தவர் மோட்சமடைந்ததாக நம்புகின்றனர். அம்பட்டன் தர்ப்பை கட்டுவார். இறந்தவர் மனைவியைக் கூட்டி வந்து கோயிலில் சாமி கும்பிடுவார்கள்.

கல்லுப்படைப்பு

கருமாதி முடிந்து வீடு வந்தவுடன், மாத்து விரித்து போடப் பட்டிருக்கும் நெல்லின் மேல் நடந்து சென்று வீட்டினுள் எரியும் நல்ல விளக்கினைப் பார்ப்பார்கள். செங்கல் ஒன்றில் உருவம் பொறித்து, அதற்குத் துணி உடுத்தி,துவைக்கப்பட்ட இறந்தவரின் பழைய துணியை வைத்து, கோழிக்கறி சமைத்து (பெட்டைக் கோழி), பலகாரம் செய்து வைத்து அனைவரும் கும்பிடுவார்கள். இறந்தவரின் வாரிசுகள் எண்ணெய்த் தேய்த்துக் குளித்துவிட்டு சாப்பிடுவார்கள். பின்பு அனைவருக்கும் சாப்பாடு நடைபெறும்.

கருத்து

இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளும் குடித்தொழிலாளி களான சக தொழிலாளிகள் பறையர், ஆசாரி ஆகியோர் இறந்த திலிருந்து எரியூட்டுவது வரை உள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். அம்பட்டன், வண்ணான் ஆகியோர் இறந்த திலிருந்து கல்லுப்படைப்பு வரையில் உள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். குடித்தொழிலைச் செய்து கொண்டும், இச் சடங்கில் முழுமையாகக் கலந்து கொண்டும், வருகின்ற இவர் களுக்குப் போதிய சம்பளம் கிடைப்பதில்லை என்பதைக் காணலாம்.

ஆனால் பிராமணர்கள் இறுதிச் சடங்கில் கருமாதிக்குப் பின் கலந்து கொண்டு எவ்வித உழைப்பும் இல்லாமல் அதிகப் படியான ஊதியம் பெறுவதை நேரில் காண முடிகிறது.

வரலாற்றுப் பார்வையில் வழக்குமன்றமும் தீர்ப்புக் கூறலும்

எஸ். ஜெயராணி
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி

முன்னுரை

வரலாற்றுப் பார்வையில் வழக்கு மன்றமும் தீர்ப்புக் கூறலும் எனும் இக்கட்டுரை வழக்குகள் நடைபெறும் வழக்கு மன்ற இடம், பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்வுசெய்தல், அவருக்கான தகுதிகள், பஞ்சாயத்துக் கூட்டுதல், வழக்குகளைக் கேட்டல், தீர்ப்புக் கூறல், நீதி முறையின் சிறப்பு ஆகியன பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. இக்கட்டுரையில் இவை தொடர்பான பழங்காலத்து முறைகளும் விவரிக்கப்படுகின்றன.

வழக்கு மன்றம்

சங்க காலத்தில் வழக்குகள் நடைபெற்ற இடம் அவை, மன்றம், அம்பலம், பொதியில் என்றிவ்வாறு அழைக்கப் பட்டுள்ளது. அரண்மனையின் ஒரு பகுதியில் அவைக்களம் அமைந்திருந்தது. இதில் மக்கள் சூழ அரசர் அமர்ந்து மக்களின் குறைகளைத் தீர்த்து வைத்தார். தற்காலத்தில் வழக்குகள் கிராமத்தின் பொது இடங்களான மந்தையிலோ, அரசமரத்தடி யிலோ, வாசகச் சாலையிலோ ஏதாவது ஓர் இடத்தில் நடை பெறும். இக்கட்டுரைக்கு உட்பட்ட நெய்வயலில் வாசக சாலை யிலும் அறவயல் மற்றும் பனங்குளத்தில் மந்தையிலும் திருமண வயல் மற்றும் பொன்னாழிக் கோட்டையில் அரசமரத்தடியிலும் வழக்குகள் நடைபெறுகின்றன.

பஞ்சாயத்துத் தலைவர்

நெய்வயல், பொன்னாழிக் கோட்டை மற்றும் பனங்குளம் ஆகிய ஊர்களில் பஞ்சாயத்துத் தேர்தல் வைத்து தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அறவயல் மற்றும் திருமணவயல் ஆகிய வற்றில் தேர்தல் இல்லாமல் தாமாகவே தம் பஞ்சாயத்து தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். இருபத்தியொரு வயதுக்கு மேற்பட்டவர்கள் ஓட்டுபோடத் தகுதியானவர்கள் ஆவர். இந்தப் பஞ்சாயத்து தேர்தல் ஓட்டுப்போட்டு அதிக எண்ணிக்கையான ஓட்டுகள் பெற்றவரைப் பஞ்சாயத்துத் தலைவ ராகவும், கிராமத் தலைவராகவும் தேர்ந்தெடுப்பார்கள். பஞ்சாயத்துத் தலைவர் தெரு வாரியாக சாதி வாரியாக ஊர் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்.

"பண்டைத்தமிழகத்தில் வரி செலுத்துவதற்கு ஏற்ற அரை வேலி நிலம் உடையவரும், சொந்தமனையில் குடியிருப்பவரும் முப்பது முதல் அறுபது வயதுக்கு உட்பட்டவரும் வேதத்திலும் சாஸ்திரத்திலும் பயிற்சி பெற்றவரும் பொதுக் காரியமாற்றும் ஆற்றல் உடையவரும் செல்வாக்கு உடையவரும் வழக்கு மன்றத் தலைவருக்குத் தகுதி உடையவராகக் கருதப்பட்டார். இதற்கு முன் மன்றத்தில் உறுப்பினராக இருந்து சரியாகக் கணக்குக் காட்டாதவர்கள் அவர்களின் சிற்றன்னை, பெரியன்னை மக்கள், தாய்மாமன், சிற்றப்பன் மக்கள், தாயுடன் பிறந்தோர், தந்தை யுடன் பிறந்தோர், தன்னுடன் பிறந்தோர், மாமனார் மனைவி யுடன் பிறந்தோர், உடன் பிறந்தாரின் கணவன், சகோதரியின் மக்கள், மருமகள், அவருடைய தந்தை, மக்கள் ஆகியோர் தகுதியற்றவர்களாகப் பல்லவர் காலத்தில் கருதப்பட்டனர்."[1]

"பொய், களவு, காமம், சூது, கொலை என்னும் ஐம்பெரும் பாவங்களைச் செய்தோரும், பாவங்களைச் செய்தவருடைய உறவினரும் தகுதியிழப்பர். பாவிகளோடு நட்புக் கொண்டோர் கள் கழுவாய்த் தேடும்வரையில் தகுதியிழப்பர். விலக்கப்பட்ட உணவினை உண்டவர்கள் கொதிக்கும் நெய்யில் கையிட்டுக் கழுவாய்த் தேடிய பிறகும் சாகும் வரையில் தகுதியிழந்தனர். கள்ளக் கையெழுத்திட்டவர்களும் பெண்களிடம் தவறாக நடந்துகொண்டவர்களும் தகுதியிழந்தனர். பாவம்செய்து கழுவாய்த் தேடியவர்களும் கிராமத் துரோகியானவர்களும் சாகும்வரையில் தகுதியிழந்தனர்".[2]

இக்காலத்தில் அவைச்சான்றோர்க்குரிய தகுதிகளும் உள்ளன. அவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலை, அழுக்காறின்மை, அவாவின்மை, அனுபவம் என்பனவே அத்தகுதிகள்

பஞ்சாயத்தைக் கூட்டல்

கிராமங்களில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தலைவர் தேவைப்படுகிறார். மக்கள் அனைவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் தலைவர் தான் நாட்டாண்மையாவர். இருவருக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையை ஊர்த் தலைவரிடமோ, ஊர்ப் பெரியவர்களிடமோ முதலில் வந்து ஒருவர் கூறுவார். அவர் வாதியாவார். மற்றொருவர் பிரதிவாதியாவார். ஊர்ப் பெரியவர்கள் தெருவில் உள்ள ஒருவரிடம் சென்று தோட்டியைக் கூட்டிவரச் சொல்லுவார்கள். தோட்டி வந்தவுடன் "இன்று இரவு தமுக்கு அடிக்கணும்" என்று ஊர்ப் பெரியவர் கூறுவார். "நாளை இரவு சரியாக 8 மணியளவில் மந்தையில் கூட்டம் நடைபெற உள்ளது, அதனால் ஊர்ப் பொது மக்கள் அனைவரும் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று தோட்டி தமுக்கு அடிப்பார்". பகலில் வயல் வேலைக்குச் சென்றுவிட்டு இரவில்தான் கூட்டம் நடைபெறும். கிராம வழக்குகளில் உடனே தீர்ப்புக் கூறிவிடுகிறார்கள். நீதிமன்றத்தைப் போல ஒத்திபோடமாட்டார்கள். கொலை வழக்கு என்றால் உடனே கூடிவிடுவார்கள். மற்ற பிரச்சினைகளுக்குத்தான் இரவில் கூட்டத்தைக் கூட்டுவார்கள்.[3]

மன்றத்தின் அமைப்பு

"நாட்டுப்புற வழக்குகள் அரசமரத்தடியிலும் ஊரில் உள்ள மந்தையிலும் பஞ்சாயத்து சபையிலும் வாசக சாலையிலும் நடைபெறுகின்றது. இவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் ஊர் மக்கள் சூழ்ந்து நிற்க, நாட்டாண்மை, தலையாரி, அம்பலக்காரர் என்று ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் நடக்கிற பஞ்சாயத்து 'கட்டைப் பஞ்சாயத்து' என்று அழைக்கப்படுகிறது[4]".

இக்கட்டுரையில் களப்பணிக்கு எடுத்துக்கொண்ட தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள அறவயல், நெய்வயல், பனங்குளம், பொன்னாழிக்கோட்டை, திருமணவயல் ஆகிய ஐந்து ஊர்களிலும் நாட்டாமை, தலையாரி, அம்பலக்காரர் ஆகிய

மூவரும் நாற்காலியில் அமர்ந்திருப்பார்கள். நாட்டாண்மை நடுவில் அமர்ந்திருப்பார். தலையாரி இடது புறமும் அம்பலக்காரர் வலது புறமும்அமர்ந்திருப்பார்கள். ஊரில் உள்ள பெரியோர்கள் இருவர் வயது முதிர்ந்தவராகவும், அனுபவம் உள்ளவராகவும் வசதி படைத்தவராகவும், உயர் குடியில் பிறந்தவராகவும் உள்ள இருவர் நாட்டாண்மைக்கும் தலையாரிக்கும் இடையில் அமர்ந் திருப்பார்கள்.

இக்கட்டுரைக்கு எடுத்துக்கொண்ட ஐந்து ஊர்களிலும் நாட்டுப்புற வழக்குகள் மந்தையிலும், கோயிலுக்கு முன்பாக உள்ள அரசமரத்தடியிலும் நாட்டாண்மை அமர்ந்திருக்க ஊர்ப் பொது மக்களும், பக்கத்து கிராம மக்களும் நிற்க, வாதியும், பிரதிவாதியும் நாட்டாண்மை முன்னால் வேட்டியை அவிழ்த்து விட்டு துண்டை எடுத்து இடுப்பில் கட்டி கும்பிட்டு விழுந்துவிட்டு கையைக் கட்டி முன்னால் நிற்க வழக்கு விசாரிப்பது தொடங்கும்.

வழக்கார் நடைமுறை

கிராமத் தலைவர் பஞ்சாயத்துக்குச் செல்லுமுன் தலைவரின் மனைவி தெய்வத்தை வழிபட்டு செம்பில் தண்ணீர் தருவாள். தலைவர் தண்ணீர் குடித்துவிட்டுத் துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுவார். மனைவி தண்ணீர் தருவதன் நோக்கம் நினைத்த காரியம், செல்கிற காரியம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகும். துண்டைத் தோளில் போடுவதன் நோக்கம் பஞ்சாயத்து செய்யும் பெரிய மனிதர் என்பதைத் தெரிவிப்பதற்காகும்.

தலைவர் மந்தையிலோ அரசமரத்தடியிலோ நாற்காலியில் அமர்ந்திருப்பார். வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருப்பார். வெள்ளைத் தூய்மையையும், உண்மையையும் உணர்த்தும். வெள்ளை உடையைப்போல மனதைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தீர்ப்பு உண்மையானதாக இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு வெள்ளை உடையை உடுத்துவர். நாட்டாண்மையை ஊர்ச் சபையார் அவைச் சான்றோர் என்று கூறுவர். ஊர்ச் சபையார் வழக்கைக் கேட்டறியும்போது வாதியின் குடும்பத்தினரை அழைத்து, 'இக்குடும்பத்திற்கு என்ன வழி காணலாம்' எனக் கேட்பது ஊர்ச்சபையாரின் மிக உயர்ந்த நீதி வழங்கும் பண்பைக் காட்டும்.

ஏனெனில் ஊர்ச்சபையிடம் வாதி எதிர்வாதியைத் தண்டிக்கவும் கோரலாம். இன்றைய நீதிமுறையில் கொலைக்குற்றம் சுமத்தப் பட்டவர் தண்டிக்கப்படும்போது சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்படுகிறார்.

வழக்குகளைக் கேட்கின்ற பஞ்சாயத்தார் கதைகள் மூலம் குறிப்பாகக் கேட்டுத் தீர்ப்பு வழங்குதல் உண்டு. ஊரில் உள்ள பெரிய மனிதரின் மகன் ஒரு பெண்ணைப் பலாத்காரம் செய்ததை ஊரில் உள்ளவர்கள் கிராமத் தலைவரிடம் முறையிட்டனர். பஞ்சாயத்துத் தலைவர் பையனைக் கூப்பிட்டு 'நீ தோப்புக் குள்ளே கோழி புடிச்சாயா' என்று கேட்பார். பிரதிவாதியான பையன் இல்லை என்பான். நாட்டாண்மை சாட்சிகள் மூலம் நிருபிப்பார். 'நீ தோப்புக்குள்ளே கோழி புடிச்சது உண்மை யானால் கோழியை புடிச்சுட்டுப்போய் உன் வீட்டிலே கட்டிவை' என்றுத் தீர்ப்புக் கூறுவார். உடனே பிரதிவாதி அந்தப் பெண்ணைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்வார் பிறகு கிராம முறைப்படி திருமணம் நடைபெறும். இந்தத் தீர்ப்புக் குறியீடாக அமைந்துள்ளது. ஒரு பெண்ணை அந்த ஊரில் உள்ள பெரிய மனிதரின் மகன் பலாத்காரம் செய்ததை நாட்டாண்மை மறைமுகமாக வழக்குக் கேட்டது சிறப்பாக அமைந்துள்ளது.

குற்றத்திற்குத் தண்டனை

"தொடக்கக் காலத்தில் கொலைக் குற்றத்திற்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் கொலைக் குற்றத்திற்குத் தண்டனையாக நந்தா விளக்கு எரிக்க வேண்டும் என்று நீதி வழங்கப்பட்டது. ஒருமுறை நாடாள்வான் என்பவர் வில்லியில் தலைவர் ஒருவனைக் கொலை செய்தான். அவ்வழக்கினை இரண்டாம் இராசேந்திரன் விசாரித்து (12-ம் நூற்றாண்டு) ஓர் ஆணையை ஊர்சபைக்கு அனுப்பி வைத்தான். அதன்படி குற்றம் இழைத்தவன் கோயிலில் விளக்கு எரிப்பதற் காகத் தொண்ணூற்றாறு செம்மறி ஆடுகளை அருகில் உள்ள கோயிலுக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும் என்று நீதி வழங்கப்பட்டது".[5]

"வட ஆற்காடு மாவட்டம் தாமரைக்குளம் என்ற ஊரில் உள்ள திரு அக்கீசுவரர் கோயிலில் படியெடுக்கப்பட்டுள்ள இதே அரசனுடைய கல்வெட்டு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன்

தம்பி இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொள்ள அதில் அண்ணன் இறந்துபட அவர்களின் தந்தை வழக்கிட, நாட்டாண்மை எடுத்த முடிவைக் குறிக்கின்றது.

'தாழிக்கோன்' என்பவன் வந்து வழக்குரைத்தான். அவன் உரைத்ததையும் நாட்டார் கேட்ட கேள்விகளையும் அவன் அளித்த பதில்களையும் கல்வெட்டு மேற்கோள் போலக் குறிக்கிறது. "என் மகன் பெரியானும் தடுபடுக்கிற இடத்தைத் தம்பியைத் தமையன் அரிசப்பட்டு அடிக்க தம்பியும் தமையனை எதிரே அடித்தான். தம்பி அடிச்ச அடியிலே தமையன் பட்டான்"[6] என்று அவர்கள் தந்தை எடுத்துரைத்தான். அப்பொழுது நாட்டார் அவனிடம் 'உனக்கு இவ்விருவரும் அல்லது மற்றும் மக்கள் உள்ளரோ? என்று கேட்டனர். மற்றும் மக்கள் யாரும் இல்லை. இவர்களின் தாயும் நானும் உள்ளோம்' என்று சொன்னான். அடுத்து உனக்கு அர்த்தம் உண்டோ? என்று வினவ அர்த்தமும்' இல்லை என்றான்.

ஒரு குடி கேடானதையம் இவர்களைக் காப்பார் இல்லாத தையும் பொருள் இல்லாததையும் கேட்டு நாட்டவர் ஒரு முடிவு எடுத்தனர். தம்பிக்கு இதற்காக மரணதண்டனை விதிக்க வேண்டாம். இவன் வயது முதிர்ந்த தாயையும், தந்தையையும் காக்க வேண்டும். இவனுக்கு நேர்ந்த பாவத்திற்காக இவ்வூர்க் கோவிலில் அரை விளக்கு எரிக்கப் பொருள் அளித்தல் வேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. அது கல்வெட்டில், "ஒரு குடி கேடானமையாலும் இவர்களை இரட்சிப்பார் இல்லாமை யாவார். அர்த்தம் இல்லாமையாலும், திருத்தாமரைப் பாக்கத்து திரு. அக்கினீசுவருடைய மகாதேவருக்கு நந்தா விளக்காக அரை விளக்கு வைத்து வயஸ்பரினதை சென்ற காதையும் தன் அப்பனையும் இரட்சிப்பானாகத் தர்மம் நோக்கி இவன் இதற்குப் படவேண்டா"[7] என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை 'சுத்தப் பட்டிகை' என்று கல்வெட்டு கூறுகிறது தவறு செய்த பாவத்திலிருந்து தூய்மைபெற எடுத்த தீர்ப்பாதலின் இது 'சுத்தப் பட்டிகை' என்று அழைக்கப்பட்டது.

அண்ணனைத் தம்பி கொலை செய்த குற்றத்திற்காக அன்னவாசல் கிராமத்தில் தம்பிக்குத் தண்டனையாக ஊரை விட்டுப் பத்து ஆண்டுகள் தள்ளி வைத்தார்கள். ஆலங்குளம் என்ற கிராமத்தில் மருமகளை மாமியார் கொலை செய்த

குற்றத்திற்காக ரூ. 2,000/– அபராதம் விதிக்கப்பட்டது. இடைக்காட்டூர் கிராமத்தில் பங்காளிகள் சொத்துப் பிரச்சினையில் நடந்த கொலைக்குத் தண்டனையாகப் பெரியப்பா மகன் மனைவிக்கு நிலம் எழுதி வைக்கப்பட்டது. மாறநாடு கிரர்மத்தில் காதல் பிரச்சினையில் மகளைக் கொன்ற தந்தைக்குத் தண்டனையாகப் பன்னிரண்டு ஆண்டுகள் ஊரைவிட்டுத் தள்ளி வைத்தார்கள். இதன் வாயிலாக நாட்டுப்புற வழக்குகளில் கொலைக் குற்றத்திற்குத் தண்டனை இருந்தது என்பதை அறிய முடிகிறது.

கி. பி. 1054–ஆம் ஆண்டு சோழர் காலத்தில் இராஜேந்திர தேவர் ஆட்சியில் சேந்தன் உமையாள் என்ற பெண்ணிற்கு ஏற்பட்ட கற்பழிப்பு அவமானமும், அதற்கு ஊர்க் கிராம சபை கூடி பழங்கூரன் குன்றன் என்பவனுக்குக் கொடுத்தத் தண்டனையும் இந்தக் குற்றவியல் பிரிவுக்குச் சான்றுகளாகக் கூறலாம்.

நரிப்பள்ளம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சேந்தன் உமையாளின் தந்தை சோழர் காலத்தில் நடைபெற்ற போரில் நாட்டுக்கு வெற்றியைத் தேடி தந்தான் பொருட்டுத் தென் பெண்ணை ஆற்றின் கரையோரம் பத்து வேலி நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. அந்த நிலம் இறையிலிக்குட்பட்டது. மேலும் பரம்பரையாய் வந்தவர்க்குச் சொந்தமானது என்றும் அறிவிக்கப்பட்டது. இதன்படி இந்தப் பத்துவேலி நிலமும் சேந்தன் உமையாளுக்கு உரியதாக்கப்பட்டது.

தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் தாலுகா ஜெம்பை என்கிற ஊரில் ஜெம்புநாதர் கோவில் உள்பிரகாரத்தில் தென்திசையில் உள்ள சுவரில் செதுக்கப்பட்டிருக்கும் சேந்தன் உமையாள் பற்றிய கல்வெட்டுச் செய்திகளைக் கீழே காணலாம்.

"இராஜேந்திர வளநாட்டு பெண்ணை தென்கரை நரிப்பள்ளி நாட்டு கூகுர் பாடியிருக்கும் மலையமான் காட்டு மேலூருடையான் பழங்கூரன் குன்றன் மேற்படி ஊரிலிருக்கும் வீரன் புத்திரன் தாய் சேந்தன் உமையாளை இறைகாட்ட அவன் இறைகடவேள் அல்லேள் என்று சொல்ல அவளைக் கோச்செய்விக்க (அவமானப்படுத்தி) அவள் நஞ்சு குடித்துச் சாவ நான்கு திசை பதினென் பூமி நாநாதேசியும் கூடி நிறைந்து இந்த பழங்கூரன் குன்றன்மேல் பழியாக்கி இவன்மேல் இந்தப் பழி

தீர கொண்ட நடையாவது வளையூராகிய ஜெகந்நாதபுரத்து நகரதோம் கொண்டோம். கொண்டு அருகமொழித்தேவன் மரக்காலோடு ஒக்கும் உழக்கால் நிசதம் உழக்கெண்ணை ஒட்டக் கடவோம். இவ்வெண்ணை வணிக கிராமத்தோம் இரு கூறும், சங்கரப்பாடியார் ஒரு கூறும் சந்திர ஆதித்தர் வரை இது மாதேஸ்வரர் ரட்சை''.

வழக்குகளைத் தனிப்பட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் ஊர்ச்சபையினரும் விசாரித்துள்ளனர். சில சமயங்களில் சமய சம்பந்தமான வழக்குகளைச் சமயத் தலைவர்களும் விசாரித்தனர்.

ஒருவன் குற்றம் செய்துவிட்டால் அவன் எந்த சமூகத்தைச் சார்ந்தவன் என்று விசாரித்து அந்த சமூகத்தாரே அவனுக்குத் தண்டனை வழங்கும்படிச் செய்துள்ளனர். சில சமயங்களில் ஒருவனைத் தவறாகத் தண்டித்துவிட்டால் அதற்கு நட்ட ஈடாக நிலமோ அல்லது பொருளோ அளிக்கப்பட்டது. சான்றாக, தென் ஆற்காடு மாவட்டம் திருநாமநல்லூர்க் கல்வெட்டு செங்கல் அடிகள் குட்டேறன் பேரிலும், காமன் எழுவன் பேரிலும் வீர சுந்தரப் பேரரையன் பேரிலும் தவறாகக் குற்றம் சுமத்தியதற்கு நட்ட ஈடாக அவியலூர் சபையார் திருத்தொண்டீசுவரமுடைய மகாதேவர் கோவிலுக்கு நந்தா விளக்குகள் பரிசாக அளித்ததைக் குறிக்கிறது. இதனால் குற்றம் இழைத்திடாது தண்டனை பெற்றவனுக்கு ஏதும் பயனில்லை என்பது தெளிவு. இன்றைய நிலையில் உண்மைக்கு மாறாகத் தீர்ப்புக்கூறி விட்டால் உயிரைத் துறந்தவர்களும் உண்டு. சாதி அடிப்படையில் பஞ்சாயத்து நடைபெறும். குற்றவாளி எந்த இனத்தைச் சார்ந்தவன் என்று விசாரித்து அந்த இனத்தவரே அவனுக்குத் தண்டனை வழங்கும் படிச் செய்துள்ளனர்.

வழக்கிற்கான தீர்ப்புகள்

நாட்டுப்புற பஞ்சாயத்துக்களில் வழக்குக்கேற்ப ஊரை விட்டுத் தள்ளிவைத்தல், தீர்த்துவிடுதல், அபராதமாகப் பணம் விதித்தல், சொத்தைப் பிரித்துக் கொடுத்தல், திருமணம் முடித்து வைத்தல், தம்பதிகளைச் சேர்த்து வைத்தல், சாட்சிகள் இல்லாததால் கண்டித்துமட்டும் விடுதல், பணமும் நிலமும் எழுதி வாங்கி கொள்ளுதல் அபராதம் விதித்து கணவன் மனைவி

இருவருக்கும் தொடர்பு இல்லாமல் பிரித்து வைத்தல், கடையில் பொருட்கள் தரக்கூடாது என்றும், கிணற்றில் பானையைத் தூக்கவிடக்கூடாது என்றும் தீர்ப்புக்கூறி வழக்கை முடித்துக் கொள்கின்றனர்.

முடிவுரை

மேற்கூறியவற்றிலிருந்து வரலாற்றுப் பார்வையில் நாட்டுப்புற வழக்குகளும் தீர்ப்புகளும் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது.

குறிப்புகள்

1. தட்சணாமூர்த்தி, அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும் ப. 291
2. மேலது, ப. 292.
3. தகவல்: அழகப்பன் பெரும்பச்சேரி: 5—10—96.
4. கே. சந்துரு, ஆனந்தவிகடன் ப. 6
5. மங்கள முருகேசன், ந. க., சோழர் ஆட்சிமுறை பக். 86-87.
6. மேலது, ப. 87.
7. மேலது, ப. 88.

தமிழரின் இசையும் நிலையும்

கே. ஏ. ஜோதிராணி
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 5

இசை மனிதனின் அடிமனக் கிடக்கையை வெளிப்படுத்தும் அர்த்தமுள்ள தேனீ. இவ்விசை மரபிசை என்ற தனித்தன்மை பெற்றது. தமிழரின் இசையான பழம்மரபு மாறாத கிராமங் களில் நிலைத்து வாழ்ந்து வளர்ந்து கொண்டுவரும் இந்த நாட்டுப்புற இசைக்கு நீண்டதொரு வரலாறு உண்டு.

ஆதிகாலத்து மனிதன் விலங்குகளோடும் வேட்டைத் தொழிலோடும் வாழ்ந்த போது இசை ஒலிக்குறிப்பாக மட்டும் இயங்கியது. அவர்களுடைய உழைப்போடு அது நேரடித் தொடர்பு கொண்டதாக இருந்தது. குறிப்பிட்ட ஒலியை இசைத்தால் வேட்டைப் பெருகும் என்ற நம்பிக்கை அம் மக்களிடம் உண்டு. வேட்டையில் பெற்ற பொருள்களைப் பகுத் துண்டு அவர்கள் வாழ்ந்தனர். தமது பங்களிப்பை ஆடலின் வாயிலாகவும் ஒலி எழுப்புவதன் வாயிலாகவும் இவ் இனக்குழு மக்கள் வெளிப்படுத்தினார்கள். வேட்டையாடும் இனக்குழு மக்கள் இசையைத் தங்களோடு இணைத்துக் கொண்டிருந்தனர்.

இனக்குழு சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட்டு நிலமும் நிலம் சார்ந்த வாழ்க்கையும் தோன்றிய பின்னர் இசையிலும், இசைச் சார்ந்த கருவிகளிலும் மாற்றம் விளைந்தது. சமுதாயத்தில் இரு வேறு உலகம் தோன்றியது. இனக்குழு வாழ்க்கை முறை மாறிய பின்பும் கிராமங்களில் இனக்குழு நிலையின் எச்சத்தோடு வாழ்ந்து கொண்டு உழைப்பில் ஈடுபட்டிருந்த மக்கள் பழைய இசையைப் பின்பற்றி தமது இசையையும் பாடல்களையும்

உருவாக்கினர். இது ஓர் உலகம் நில உடைமையும் சொத்து உடைமையும் வேலைப்பிரிவினையும் ஏற்பட்டுவிட்ட காலத்தில் இசை பொழுதுபோக்கு அம்சம் கொண்டதாய் மாறிற்று. பண்களும் பின்னாளில் ராகங்களும் அதனடிப்படையில் கீர்த்தனைகளும் தோன்றி செவ்வியலிசையாக (Classical music) வளர்ந்தது. இச்செவ்வியலிசையை உருவாக்கி வளர்த்தவர்கள் ஓய்வு மிகக் கொண்ட பகுதியினர். இவர்கள் இசையை மேலும் மேலும் நுண்மையாக்கி அதைத் தெய்வீகமான ஒன்றாக மாற்றி விட்டார்கள். இசையும் தெய்வமும் ஒன்று என்று சொல்லுகின்ற அளவுக்குச் செவ்விசை மதிப்புப் பெற்றதாயிற்று. அரசர்களாலும் அரசவைக் கவிஞர்களாலும் இது வளர்க்கப்பட்டது இவ்விசை பொது மக்களிடமிருந்து விலகிய ஒரு கலையாக மாறியது.

நாட்டுப்புறப் பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாகவும், ஏட்டுப்பாடல்கள் புலவர்களால் எழுதப்பட்ட பாடல்களாவும் இருபெரும் பிரிவுகளாக எவ்வாறு வளர்ந்ததோ அவ்வாறே நாட்டுப்புற இசை எழுதா இசையாகவும் செவ்வியல் இசை சுரப்படுத்தப்பட்ட இசையாகவும் மாறி அவைகளிடையே பெரும் பிளவு ஏற்பட்டது. நாட்டுப்புறப்பாடல் முதலில் அகவல் ஓசை யுடையதாக இருந்திருக்கிறது பின்னாளில் மாற்றங்கள் பெற்று இன்றைய நாட்டுப்புறப்பாடலும் பண்டைய கலிப்பாவும் ஒத்தனவாய் மாறின. உதாரணமாக

"கட்டுக் கலங்காணும்
கதிருலக்கு நெல்காணும் ..."

எனும் வரிகள் கலிப்பாவை ஒத்திருப்பவை. அதே போன்று நாட்டுப்புறப்பாடல் இசையும் செவ்விசைக்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்பதை அறிஞர் பலரும் ஏற்றுக் கொண்டிருக் கின்றனர்.

நாட்டுப்புறப் பாடல்களை நாட்டுப்புற இசைக்கலைஞர்களே பாடி வந்தனர். நாட்டுப்புற இசைக் கலைஞர்கள் பாட்டுக் கலைஞர்களாகவும், ஆட்டக்கலைஞர்களாகவும், நாடகக்கலைஞர் களாகவும் இருக்கின்றனர் என்பதைக் கள ஆய்வு தெளிவுபடுத்தும். பண்டைக் காலத்தில் பாணர் என்றும் பாடினி என்றும் அழைக்கப்பட்டனர் என இலக்கியங்கள் கூறுகின்றன.

நாட்டுப்புற இசையானது சிறு சிறு துண்டுப் பாடல்களில் இயங்கி வந்தது. இனக்குழுத்தலைவர், தலைவிகளைப் போற்றிப்

பாடுதலும் சிறு சிறு பரிசில்கள் பெறுவதுமான வாழ்க்கையில் அது இயங்கி வந்தது. பின்னாளில் சமுதாய வாழ்க்கை நிலைப் படுத்தப்பட்டு மன்னர் ஆட்சி தோன்றிய பின்னர் நாட்டுப்புறப் பாடல்களும் இசையும் கிராமங்களில் உழைக்கும் மக்களிடையே உலவவேண்டியதாயிற்று. அப்போது நிலத்தையே நம்பி வாழ்கின்ற அந்த சமுதாயத்தில், ஓராண்டில் பெரும்பகுதி வேலை வாய்ப்பின்றி இருக்கும்போது அவர்களிடையே கதைகளும், கூத்துக்களும் தோன்றி வளரலாயின. இவையே இசையை நீண்டநேரம் பயன்படுத்துவனவாக ஆக்கித் தந்தன.

முதலில் நாட்டுப்புற வீரர்களைப் பற்றிய இசையாகவே இருந்தது. காலப்போக்கில் அது புராணங்களில் தாக்கம் பெற்றது. புராணங்கள் நகர்ப்புற மக்களால் ஏற்கப்படுவ தில்லை. அப்புராணக் கதைகளும் கூட நாட்டுப்புற மக்களால் தன் வயப்படுத்தப்பட்டு அவர்களது வாழ்க்கையை ஒத்ததாகவே மாறுகிறது. நகரங்களில் இப்புராணங்களோடு சேர்ந்து இசைக்கப்படும் இசையும் நாட்டுப்புற மக்களைச் சென்றடையும் போது அது நாட்டுப்புற இசையாகவே மாறிவிடுகிறது. எனினும் செவ்வியலின் சில குணங்கள் அந்த மக்களால் அங்கீகரிக்கப்பட்டு நாட்டுப்புற இசையாகவே மாறுகிறது உதாரணமாக; தமிழ் நாட்டின் தென்பகுதிகளில் இசைக்கப்படுகிற வில்லிசையை குறிப்பிடலாம்.

செவ்வியல் இசையை நாட்டுப்புற மக்களால் எப்படிப் புரிந்து கொள்ள இயலவில்லையோ அவ்வாறே நகர்ப்புற மக்களால் அவர்களது இசையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிவதில்லை. எனவே இவ்விரு இசைகளுக்கிடையேயும் பெரும் பிளவு ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. இவ்வாறே நாட்டுப்புற இசைக்கருவிகளும் ஏழ்மையில் வாடும் கலைஞர்களால் உருவாக்கப்படுகிறது. இவை தோல்கருவிகள், திண்மக்கருவிகள், நரம்புக்கருவிகள், காற்றுக்கருவிகள் போன்றவை. இவ்விசைக் கருவிகள் அவர்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய மாட்டுத்தோல், அரளி, ஆவாரை, மூங்கில் போன்ற எளிய பொருள்களால் ஆக்கப்பட்டவை. வேறொரு வகையில் சொல்வதானால் நாட்டுப் புற இசையானது அவர்களின் வாழ்க்கையோடு நேரடித் தொடர்புடையவை. செவ்வியல் இசையோ மேலும் மேலும் நுண்மைப்படுத்தப்பட்ட கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. சில

கருவிகள் மேல்நாட்டிலிருந்துகூட பெறப்பட்டு பயன்படுத்தப் படுகின்றன. உதாரணமாக வயலினைக் குறிப்பிடலாம்.

நாட்டுப்புற இசைக்கும் சடங்குகளுக்கும் பிரிக்க முடியாத உறவுண்டு. அறிவியலே நெருங்கிடாத இம்மக்களிடம் செயற்கைக் கலப்பு என்பது இசையிலும் இசைக்கருவிகளிடமும் காண முடிவதில்லை. நாட்டுப்புற இசைகள் குழுமொழியாகவே இருந்தன. இவ்விசைக் கருவிகள் குறிப்பிட்ட இன மக்களாலேயே இசைக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாகப் பறை, பம்பை, தமுக்கு, தவில், உடுக்கை இவை கீழ்த்தட்டு மக்களுக்கு உரியவனாகப் பயன்பாட்டிலுள்ளன. இந்நிலையானது கிராமங்களில் சாதியத்தை அடையாளம் காட்டவும் அவர்களது நிலையை அடையாளப்படுத்துவனவாகவும் இருக்கின்றன. இது சமூகத்தில் கட்டாய நிலையாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

பல மைல்களைக் கடந்துவரும் ஒரு நாட்டுப்புற இசைக் கலைஞன் அதுவரை அறிமுகமில்லாத ஒரு மரபிசைக் கலைஞனைக் கண்டவுடன் இசையின் வகையையோ, ஒலிப்பு முறை விளக்கமோ கேட்டுக்கொள்வது கிடையாது. சூழலைத் தெரிந்துகொண்டு அந்நிகழ்வுக்கு ஏற்ப இசைக்கின்றான்.

தொழிலோடு இணைந்த இவ்விசைக்கு அதீத கற்பனையோ, சிந்தனையோ கிடையாது. அதனால் தொழிலையும் அந்தச் சூழலையும் நினைவுப்படுத்தும். உழைப்பை விட்டு விலகும்போது செவ்வியல் இசைப்போல் இனிமை, நயம் என்பது குறித்த சிந்தனை வளருகிறது. நாட்டுப்புற இசையானது தொழிலுக்குரியது. சமய வழிபாட்டிற்குரியது அறிவிப்புக்குரியது, பொழுது போக்குவதற்குரியது, துக்கத்திற்குரியது என மக்களின் மன உணர்வின் அடிப்படையில் அமைந்தது செவ்வியல் இசையைப் போல் மேற்கூறப்பட்டவற்றுள் ஒரு சிலவற்றுக்கென குறிப்பாக பொழுதுபோக்குக்கு என அமைவதல்ல.

குறிப்பிட்ட சடங்கிற்கோ, விழாவிற்கோ இன்ன அடி வகையே இசைக்க வேண்டும் என்பது கட்டாயமாகப் பின்பற்றப் படுகிறது. இம்முறையானது அச்சடங்குகளில் சூழலையே முன்னிறுத்திச் செல்ல வேண்டும் என்பதைக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் எருதுகட்டு அடி, பேயோட்டும் அடி, சாமி இரக்கும் அடி, அருளேற்றும் அடி, சாமி மலையேறுவதற்குரிய

அடி., மாரியாத்தா அடி, தமுக்கடி (அறிவிப்புக்குரிய அடி) இறப்புச் சடங்குகளில் அடிக்கப்படும் அடி எனப்பல அடிவகைகள் சூழலையும் தொழிலையும் நிர்ணயித்துக் கொள்கிறார்கள். இங்கு தாளமே அடித்தளமாக அமைகிறது. சாமி ஊர்வலம் வருகிறது என்பதும், எருதுக்கட்டு தொடங்கிவிட்டதென்பதையும், இறந்த சடலம் (பாடை) சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்புறப்படப் போகிறது என்பதையும், தாலிகட்டு நடக்கிறது என்பதையும் தொலைதூரத்திலுள்ளோர் இசைக் கருவியில் ஒலியைக் கேட்டவுடன் புரிந்து கொண்டு விடுகின்றனர். இவ்விசையானது அந்தந்த நிலப்பகுதியுடனும் பண்பாட்டுடனும் இணைந்துள்ளது.

நாட்டுப்புற இசைக் கருவிகள் பெரும்பாலும் தோல் கருவிகளால் உள்ளன. இவை ஆடு, மாடு, மான், புலி இவற்றின் தோல்களைப் பதப்படுத்தித் தாமே செய்து கொள்வதால் தலித் அல்லாதோரால் இழிவாகக் கருதப்பட்டிருந்தன. கருதப் பட்டிருக்கின்றன.

நாட்டுப்புற இசையில் தாளவகைகளுக்கும் உழைப்பிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலகில் தோல் கருவிகளும் காற்றுக் கருவிகளும் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படுகின்றன. இக் கருவிகள் திடீரெனத் தோன்றியிருக்க முடியாது. இதற்கான நீண்ட வரலாறு உண்டு. அதனை மரபிசைக் கருவிகள் குறித்த ஆய்வுகளின் மூலமே அறிந்து கொள்ள முடியும். பொருள் சாராப் பண்பாட்டின் ஒரு கூறாக இசை அமைகிறது. நாட்டுப் புற இசை பற்றிய ஆய்வு மேலை நாடுகளைப் போன்று தனியொரு புலமாக வளர்ச்சி பெறவில்லை. தமிழகத்தில் செவ்வியலிசைக்கு அளிக்கப்படும் கவனம் நாட்டுப்புற இசைக்கும் அளிக்கப்படுமேயானால் தமிழக நாட்டுப்புற இசை தன் உரிய பங்கைப் பெறும்.

கடல்சார் தொழிலாளர்கள் திசைகளையும் நேரத்தையும் கண்டறியும் மரபுவழி அறிவியல் முறை: (பாம்பன் வட்டாரம்)

இராம. பாண்டி

முன்னுரை:

கடல்சார் தொழிலாளர்களான பரதவர், வலையர் ஆகிய இரு இனத்தவரும் தங்கள் கடல் தொழிலின் அனுபவத்தினால் கடலில் இருந்து கொண்டு அலையின் மூலமும் வெள்ளியின் மூலமும் திசைகளைக் கண்டறியும் முறை, கடலில் இருந்து கொண்டே நேரத்தைத் தெரிந்து கொள்ளும் முறை ஆகிய மரபுவழி அறிவியல் முறைகள் குறித்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பரதவர்கள் அலையின் அடிப்படையில் திசையைக்கண்டு கொள்ளும் மரபுவழி அறிவியல் முறை:

கடலில் இரவு நேரம் மீன் பிடிக்கச் செல்லும் பரதவர்கள் வெகுதூரம் சென்று மீண்டும் கரைக்குத் திரும்பும்போது திசைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும் ஏனெனில் பாம்பனில் உள்ள கலங்கரை விளக்கின் (Light House) ஒளி பதினான்கு கிலோமீட்டர் வரை தான் தெரியும். இக்காலத்தில் இத்தகைய சூழல்களில் அறிவியல் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட திசை காட்டும் கருவி (காம்பஸ்) மூலம் திசைகளைப் பரதவர்கள் கண்டு கொள்கிறார்கள்.

ஆனால், திசைகாட்டும் கருவி (காம்பஸ்) இல்லாத நிலையில் தங்கள் அனுபவத்தின் மூலம் காற்று அடித்தாலும் அடிக்காவிட்டாலும் எப்பொழுதுமே தெற்கே இருந்து இயங்கிக் கொண்டு

இருக்கும் "தன் அலை" என்ற அலையின் மூலமாகத் திசைகளைக் கண்டு கொள்வதாகத் தகவலாளர் தெரிவிக்கின்றனர். (சே. கருணாகரன், பாம்பன். 13—1—97) பாம்பனுக்குத் தெற்கில் உள்ள கடற்பகுதியைத் தென் கடல் என்றும் வடக்கில் உள்ள கடற்பகுதியை வடகடல் என்றும் கூறுகின்றார்கள். தென்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றால் "தன் அலை" என்ற அலையின் மூலம் திசையைக் கண்டு கொள்கின்றார்கள். ஆனால், வடகடலுக்குச் சென்றால் அலையின் மூலம் திசையைக் கண்டு கொள்ள இயலாது. எனவே, அச்சமயங்களில் வெள்ளியின் மூலம் திசையைக் கண்டு கொள்கின்றார்கள். வடகடலில் "தன் அலை" கிடையாது என்று கூறுகின்றார்கள் தன் அலை என்பது தென்கடலின் தெற்குத் திசையிலிருந்து வடக்குத் திசையை நோக்கி எப்பொழுதுமே இயங்கிக் கொண்டு இருக்கும் எனக் கண்டறிந்திருக்கின்றனர். கடலில் உள்ள அலைகள் காற்றின் திசைகளுக்கு ஏற்ப மாறிக் கொண்டு இருக்கும் எத்திசையிலிருந்து காற்று வீசுகின்றதோ அத்திசையிலிருந்து அலைகள் வந்து கொண்டு இருக்கும் "தன் அலை" என்பது மாறாதது. இந்தத் தன் அலையின் மூலம் திசையைக் கண்டுபிடிக்கும் அறிவினைப் பரதவர்கள் மட்டுமே பெற்றிருக்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. வேறு கடல்சார் தொழிலாளர்கள் அலையின் மூலம் திசையைக் கண்டுகொள்ளும் அறிவுத் திறத்தினைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பரதவர்கள் வெள்ளியின் அடிப்படையில் திசையைக் கண்டு கொள்ளும் முறை:

பரதவர்கள் குருசு வெள்ளி, கப்பல் வெள்ளி என அழைக்கப்படுகின்ற வெள்ளிகள் மூலம் திசையைக் கண்டு கொள்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

குருசு வெள்ளி

குருசு வெள்ளி என்பது சிலுவை போன்று காணப்படும். குருசு என்றால் சிலுவை என்று பொருள் இந்த வெள்ளி எப்பொழுதுமே பாம்பனுக்குத் தெற்குத் திசையில் தான் தோன்றும் எனக் கண்டறிந்திருக்கிறார்கள். ஆதலால், இக்குருசு வெள்ளியை அடையாளங்கண்டு தெற்குத் திசையைக் கண்டு கொள்கின்றார்கள்.

கப்பல் வெள்ளி:

கப்பல் வெள்ளி என்பது கப்பல் போன்ற வடிவில் காணப் படும்.

இந்த வெள்ளி எப்பொழுதுமே பாம்பனுக்கு வடக்குத் திசையில் தோன்றும் எனக் கண்டறிந்துள்ளனர். இக்கப்பல் வெள்ளியை அடையாளம் கண்டு வடக்குத் திசையைக் கண்டு கொள்கிறார்கள். பரதவர்கள் குருசு வெள்ளியையும், கப்பல் வெள்ளியையும், வைத்து திசைகளை எவ்வாறு கண்டு கொள்கின்றார்களோ அவ்வாறே கடையர்களும் குருசு வெள்ளியையும், அடையாளங்கண்டு திசைகளைக் கண்டு கொள்கின்றார்கள். அம்பலகாரர்களும் இவ்விரு வெள்ளிகளையும் வைத்து திசைகளைக் கண்டு கொள்வதில்லை.

(சே. கருணாகரன், (பரதவர்) பாம்பன், 14.1 97).

அம்பலகாரர்கள் வெள்ளியின் அடிப்படையில் திசையைக் கண்டு கொள்ளும் மரபுவழி முறை:

கடல்சார் தொழிலைச் செய்யும் அம்பலகாரர்கள் ஆறாங்-கூட்டம் வெள்ளி, திராசு (தராசு) வெள்ளி என அழைக்கப்படும் இரு வெள்ளிகளை அடையாளங்கண்டு அவற்றின் உதவியுடன் திசைகளைக் கண்டு கொள்கின்றார்கள்.

ஆறாங்கூட்டம் வெள்ளி:

ஆறு வெள்ளிகள் கூட்டமாகக் காணப்படுவதால் இவ்வெள்ளிக் கூட்டம் ஆறாங்கூட்டம் என அழைக்கப்படுகின்றது, இந்த வெள்ளி இரவு ஒன்பது மணிக்கு வடக்குத் திசையில் தோன்றி காலையில் நான்கு மணிக்கு அதே திசையில் காணப்படும். ஆறாங்கூட்டம் வெள்ளியைப் பார்த்து வடக்குத் திசையை அறிந்து கொள்கின்றார்கள்.

திராசு (தராசு) வெள்ளி:

தராசு என்பது பேச்சு வழக்கில் திராசு என அழைக்கப் படுகின்றது. தராசு போன்ற வடிவத்தில் இவ்வெள்ளி காணப்படுவதால் தராசு வெள்ளி என அழைக்கப்படுகின்றது. தராசு வெள்ளி இரவு எட்டு மணிக்குக் கிழக்குத் திசையில் தோன்றி மேற்குத் திசையில் இரவு இரண்டு மணிக்கு மறைந்து விடும் என்று கூறுகின்றார்கள். இந்த வெள்ளியின் மூலம்

கிழக்குத் திசையையும், மேற்குத் திசையையும் அறிந்து கொள்கின்றார்கள். இவ்வாறு ஆறாங்கூட்டம் வெள்ளியையும், திராசு வெள்ளியையும் அடையாளங்கண்டு அம்பலகாரர்கள் (வலையர்கள்) திசைகளைக் கண்டறிந்து கொள்கின்றார்கள். இவ்விரு வெள்ளிகளையும் வைத்து அம்பலகாரர்கள் மட்டுமே திசைகளைக் கண்டு கொள்கின்றார்கள். பரதவர்கள், கடையர்கள் ஆகிய இரு பிரிவினரிடமும் இவ்விரு வெள்ளிகளையும் வைத்து திசைகளைக் கண்டறியும் முறை காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சி. துரைராஜ் (வலையர்) சின்னப்பாலம் 14-1-97).

பரதவர்கள் வெள்ளியின் அடிப்படையில் நேரத்தை அறியும் முறை:

பரதவர்கள் பகலில் மீன் பிடிக்கச் செல்லும்போது சூரியன் இருக்கும் இடத்தை வைத்து நேரத்தைக் கண்டு கொள்கின்றார்கள் இரவில் மீன் பிடிக்கச் செல்லும்போது குருசு வெள்ளி, திராசு வெள்ளி, ஆறாங் கூட்டம் வெள்ளி போன்ற வெள்ளிகள் மூலம் நேரத்தைக் கண்டு கொள்கின்றார்கள்.

குருசு வெள்ளி

குருசு வெள்ளியின் மூலம் திசையை மட்டும் கண்டு கொள்ளாமல் நேரத்தையும் கண்டு கொள்வதாகப் பரதவர்கள் கூறுகின்றார்கள். இக்குருசு வெள்ளி இரவு ஏழு மணிக்குத் தோன்றும் என்றும் காலை ஆறு மணிக்கு அடையும் என்றும் கூறுகின்றார்கள். இந்த வெள்ளி வானத்தில் பயணம் செய்யும் போது நிலை கொண்டிருக்கும் ஒவ்வோர் இடத்தையும் கவனத்தில் கொண்டு மற்ற நேரக் கூறுகளைக் கண்டு கொள்வ தாகப் பரதவர்கள் கூறுகின்றார்கள்.

பரதவர்கள் எவ்வாறு குருசு வெள்ளியை வைத்து நேரத்தைக் கணக்கிட்டுக் (கண்டு) கொள்கின்றார்களோ அதுபோன்று கடையர்களும் இந்தக் குருசு வெள்ளியை வைத்து நேரத்தைக் கண்டு கொள்கின்றார்கள்.

திராசு வெள்ளி

திராசு வெள்ளி இரவு எட்டு மணிக்குக் கிழக்குத் திசையில் தோன்றி மேற்குத் திசையில் இரவு இரண்டு மணிக்கு மறைந்து விடும் என்று கூறுகின்றார்கள். இந்த வெள்ளி வானத்தில் எவ்

விடங்களில் இருக்கின்றதோ அவ்விடங்களை அடிப்படையாகக் கொண்டு நேரக் கூறுகளைத் தோராயமாகக் கண்டறிகிறார்கள்.

பரதவர்கள் திராசு வெள்ளியை வைத்து எவ்வாறு நேரத்தைக் கண்டு கொள்கின்றார்களோ அதுபோன்று அம்பல காரர்களும் இத் திராசு வெள்ளியை வைத்து நேரங்களைக் கண்டு கொள்கின்றார்கள்.

ஆறாங்கூட்டம் வெள்ளி

ஆறாங்கூட்டம் வெள்ளி இரவு ஒன்பது மணிக்கு வடக்குத் திசையில் தோன்றி காலையில் நான்கு மணிக்கு அதே திசையில் மறையும் என்று கூறுகின்றார்கள். இந்த வெள்ளி வானத்தில் பயணம் செய்யும்போது எவ்விடங்களில் காணப்படுகின்றதோ அவ்வவ்விடங்களின் அடிப்படையில் நேரம் கண்டறியப்படு கின்றது.

பரதவர்கள் எவ்வாறு ஆறாங்கூட்டம் வெள்ளியை வைத்து நேரத்தைக் கணக்கிட்டுக் கொள்கின்றார்களோ அதுபோல அம்பலகாரர்களும் இந்த ஆறாங்கூட்டம் வெள்ளியை வைத்து நேரத்தைக் கண்டு கொள்கின்றார்கள்.

விடிவெள்ளி

விடிவெள்ளி என்பது மற்ற வெள்ளிகளை விட அளவில் பெரியதாக ஒளி அதிகமுடையதாகக் காணப்படும். இது காலை யில் நாலரை மணிக்கு வானத்தில் தோன்றுவதால் இதனை விடி வெள்ளி என அழைக்கின்றார்கள். விடிவெள்ளி காலையில் நாலரை மணிக்குத் தோன்றி ஆறேகால் மணிக்கு மறையும் எனக் கண்டறிந்து இதன் தோற்றத்தையும் மறைவையும் அடிப் படையாகக் கொண்டு பரதவர்களும், கடையர்களும், அம்பல காரர்களும் நேரத்தை அறிந்து கொள்கிறார்கள்.

இடையனை ஏச்ச வெள்ளி

இடையனை ஏச்ச வெள்ளி என்பது ,விடிவெள்ளி போன்று பிரகாசமாக இருக்கும். மற்ற வெள்ளிகளை விடச் சற்றுப் பெரியதாக இருக்கும் என்று கூறுகின்றார்கள்.

“இடையனை ஏச்ச வெள்ளி”, என்று பெயர் வந்ததற்குக் காரணமாக ஒரு நிகழ்ச்சி கூறப்படுகின்றது. இடையர்கள்

ஆடுகளை மேய்ப்பதற்காக அதிகாலைப் பொழுதில் ஓட்டிச் செல்ல வேண்டும் என எண்ணி "விடிவெள்ளி" என இரவு ஒன்றரை மணிக்குத் தோன்றும் ஒரு வகை வெள்ளியைக் கண்டு ஏமாந்து அந்நேரமே ஆடுகளை நீண்ட தூரம் ஓட்டிச் சென்ற தாகவும், இதனால் இரவு ஒன்றரை மணிக்குத் தோன்றும். அவ்வெள்ளி "இடையனை ஏச்ச வெள்ளி" என அழைக்கப் படுவதாகவும் கூறுகின்றார்கள். இந்த வெள்ளி இரவு ஒன்றரை மணிக்குத் தோன்றி காலையில் ஆறு மணிக்கு மறைந்துவிடும் என்று கூறுகின்றார்கள். இவ்வெள்ளியை வைத்து நேரத்தைக் கண்டு கொள்கின்றார்கள். இந்த வெள்ளி கிளம்பும்போது இரவு ஒன்றரை மணி என்றும் மறையும்போது காலை ஆறு மணி என்றும் நேரத்தைக் கணித்துக் கொள்கின்றார்கள்.

(அ. இராயப்பன் (பரதவர்) பாம்பன் 17—4—97)

பரதவர்கள் "இடையனை ஏச்ச வெள்ளி என்று கூறுவதை அம்பலக்காரர்களும், கடையர்களும் "செட்டியை ஏச்ச வெள்ளி" என்று கூறுகின்றார்கள். "இடையனை ஏச்ச வெள்ளியும்" "செட்டியை ஏச்ச வெள்ளியும்" ஒரே வெள்ளிதான். இவற்றிற்கு கதைகள் தான் மாறுபட்டுக் காணப்படுகின்றன.

செட்டியை ஏச்ச வெள்ளி என்ற பெயர் வந்ததற்குக் காரணமாக ஒரு நிகழ்ச்சி கூறப்படுகின்றது. ஒரு செட்டியார் ஜவுளி மூட்டையை விற்று வருவதற்காக வானத்துவெள்ளியைப் பார்க்கின்றார். அப்பொழுது செட்டியை ஏச்ச வெள்ளி ஒன்றரை மணிக்குக் கிளம்ப உள்ளது. அவர் அதனை நாலரை மணிக்குக் கிளம்பும் விடிவெள்ளி தான் என்று நினைத்து வீட்டை விட்டுப் புறப்படுகின்றார். இவர் சென்று கொண்டு இருக்கும்பொழுது வழியில் திருடர்கள் மறித்து ஜவுளி மூட்டையைப் பறித்துக் கொண்டு செல்கின்றார்கள். இவர் சோகத்தில் திரும்பி வரும் பொழுதுதான் விடிவெள்ளி கிளம்பு கிறது. அப்பொழுதுதான் செட்டியார் "ஆகா, இந்த வெள்ளி நம்மை ஏமாற்றி விட்டதே" என்று நினைத்து வருந்துகின்றார். அன்றிலிருந்து இந்த வெள்ளி "செட்டியை ஏச்ச வெள்ளி" என்றே பெயர் பெற்று விட்டது.

(சி. துரைராஜ் (வலையர்) சின்னப்பாலம், 18—3—97)

பரதவர்கள் நிலாவின் மூலம் நேரத்தைக் கண்டு கொள்ளும்முறை

நிலா, பௌர்ணமிக்குப் பின்னர் ஒவ்வொரு நாளும் நாற்பத்தைந்து நிமிடங்கள் தாமதமாக வானத்தில் தோன்றும் என்று பரதவர்கள் கூறுகின்றார்கள். இந்நேரத்தை அடிப் படையாகக் கொண்டு, வானத்தில் நிலா இருக்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டும் மற்ற நேரக் கூறுகளைத் தோராய மாகக் கண்டறிகிறார்கள். பரதவர்கள் மட்டும் தான் நிலாவின் அடிப்படையில் நேரத்தைக் கண்டு கொள்ளும் முறையை பின்பற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(சே. கருணாகரன் (பரதவர்) பாம்பன் 13—1—97).

முடிவுரை

கடல்சார் தொழிலாளர்கள் தங்கள் கடல் தொழிலின் அனுபவத்தினால் கடல் பயணத்தின்போது அலையின் அடிப் படையிலும், வெள்ளியின் அடிப்படையிலும், திசைகளை கண்டறிந்த முறை பற்றியும், வெள்ளியின் அடிப்படையிலும், நிலாவின் அடிப்படையிலும் நேரத்தை எவ்வாறு கண்டறிந் துள்ளார்கள் என்பது பற்றியும் இக்கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

Sabanayagam Printers, Chidambaram. © 23040